

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள்

ॐ

श्रीगुरुभ्यो नमः

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

## ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்

இரண்டாம் பாகம்

# சங்கர விஜயம்

மதராஸ் லா ஜர்னல் ஆபீஸ்

மயிலாப்பூர், சென்னை

1933

மதராஸ் லா ஜர்னல் பிரஸில் அச்சிடப்பட்டு
ஆர். நாராயணஸ்வாமி ஐயரால்
பிரசுரம் செய்யப்பட்டது
1933



## முகவுரை

ஏற்கனவே அச்சிட்டு வெளிவந்திருக்கின்ற நம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யரவர்கள் அநுக்கிரஹித்த நன்மொழிகளின் இரண்டாம் பாகமாக ஸ்ரீசங்கர பகவத் பாதர்களுடைய திவ்ய சரித்திரத்தைப்பற்றியுள்ள ஸ்ரீசங்கர விஜயம் என்கின்ற உபந்யாஸத் தொகுதிகள் இப்பொழுது அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்த உபந்யாஸங்களில் ஸ்ரீபகவத் பாதர்களுடைய திவ்ய சரித்திரத்தை ஸாதாரணமாக சங்கர விஜய புஸ்தகங்களிலும் சரித்திரச் சுருக்கங்களிலும் காணப்படாத புதிய வழியில் ஜகத்குரு ஸ்ரீஆசார்யரவர்கள் நன்கு உபதேசித்திருக்கிறார்கள். கீர்த்தி வாய்ந்த கவி சிரேஷ்டரான ராமபத்ர தீக்ஷிதரவர்களுடைய பதஞ்ஜலி விஜயக்கிரந்தத்தில் சொல்லியிருக்கும் சரித்திர ஸாரத்தையும் ஸ்ரீ ஹர்ஷரது நைஷதீய மஹாகாவியத்திற் காணப்படும் ஸூசனைகளையும், ஸதாசிவப் பிரஹ்மேந்திரர்களின் குருரத்ன மாலிகையில் சொல்லியிருக்கும் விசேஷங்களையும் ரஸமாகத் தொடுத்துக்கொண்டு சங்கரவிஜய புஸ்தகங்களிற் காணப்படும் முக்கியமான வரலாற்றையும் சேர்த்து ஸ்ரீஆசார்யர்கள் ஸ்ரீ பகவத் பாதர்களுடைய சரித்திரத்தை ஆராய்ச்சி முறைமையிற் சுருக்கமாகச் சொல்லி யிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியில் ருசியுள்ளவர்கள் நைஷதம் 12-வது ஸர்க்கம 38-வது சுலோகத்தில் योगेश्वरः என்று ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிஷ்டான தேவதையான ஸ்ரீசந்திர

மௌலீசுவரரைப் புகழ்ந்து சொல்லியிருப்பதைப் பார்த்து அந்த சுலோகத்தின் வியாக்கியானத்தில் பண்டித ரத்னமான மல்லிநாத ஸூரி அவர்கள் **स्फाटिकलिङ्गे योगेश्वर इति प्रसिद्धिः** என்று சொல்லியிருப்பதையும் கவனித்து நம் ஸ்ரீ ஜகத்குருவின் ஆராய்ச்சியின் நுட்பத்தை மெச்சுவார்களென்பதில் ஐயமில்லை.

நம்முடைய காஞ்சீ மடமானது மஹாகவியாகிய ஸ்ரீ ஹர்ஷருடைய காலத்திலேயே அதிகப்பிரஸித்தியையடைந்திருந்ததென்பது இந்த சுலோகத்திலிருந்து நன்கு விளங்குகிறது.

ஸ்ரீபகவத் பாதர்களின் மநீஷாபஞ்சகத்தின் தத்வார்த்தத்தையும், மண்டன மிச்ரருக்கும் ஸ்ரீபகவத் பாதர்களுக்கும் நடந்த வாக்வாதத்தில் பூர்வ மீமாம்ஸா சாஸ்திர கண்டன தாத்பரியத்தையும், சங்கர என்ற பதத்திலுள்ள எழுத்துக்களே கடபயாதி ஸங்கியா பிரகாரம் ஸ்ரீபகவத் பாதர்கள் அவதரித்த மாஸம், பக்ஷம், திதி இவைகளை நிர்ணயிப்பதற்கு ஆதாரமானவை என்பதைப்பற்றியும் நன்கு விளக்கும் உபந்யாஸங்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை.

இப்படியுள்ள அநேக அருமையான அபிப்பிராயங்களடங்கிய இவ்வழகிய உபந்யாஸங்களை நன்றாக அச்சிட்டுப் புஸ்தக ரூபமாக வெளியிட்ட மஹா-ள-ள-ஸ்ரீ ஆர். நாராயணஸ்வாமி ஐயரவர்களுக்கு எல்லோரும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆச்ரமம்,
மயிலாப்பூர்.
27—2—1933.

கே. பாலஸுப்ரஹ்மண்ய ஐயர்.

## விஷய அட்டவணை.


1. ஸம்ஸ்கிருத பாஷாப் பிரயோஜனம் ... 1
2. கௌடபாதர் வரலாறு ... 8
3. கோவிந்த பகவத் பாதர் வரலாறு ... 23
4. ஸ்ரீசங்கரர் அவதாரம் ... 39
5. பஞ்சலிங்கங்கள் ... 62
6. குமாரிலபட்டர் வரலாறு ... 83
7. ஈசுவராவதாரப் பிரமாணங்கள் ... 105
8. ஸ்ரீசங்கராசார்யர்களின் அவதாரம் ... 118
9. ஸ்ரீசங்கரரின் கால நிர்ணயம் ... 134
10. ஸ்ரீசங்கராசார்யர்களின் ஞானப்பிரசாரம் ... 153
11. மண்டனமிச்ரஜயம் ... 190
12. யந்த்ரஸ்தாபனம் ... 214
13. தோடகாசார்யர் செய்த குர்வஷ்டகம்

# दक्षिणामूर्तिस्तोत्रम्

मौनव्याख्याप्रकटितपरब्रह्मतत्त्वं युवानं
वर्षिष्ठान्ते वसदृषिगणैरावृतं ब्रह्मनिष्ठैः ।
आचार्येन्द्रं करकलितचिन्मुद्रमानन्दमूर्तिं
स्वात्मारामं मुदितवदनं दक्षिणामूर्तिमीडे ॥

विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।
य साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ १ ॥

बीजस्यान्तरिवाङ्कुरो जगदिदं प्राङ्निर्विकल्पं पुन-
र्मायाकल्पितदेशकालकलनावैचित्र्यचित्रीकृतम् ।
मायावीव विजृम्भयत्यपि महायोगीव यः स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २ ॥

यस्यैव स्फुरणं सदात्मकमसत्कल्पार्थकं भासते
साक्षात्तत्त्वमसीति वेदवचसा यो बोधयत्याश्रितान् ।
यत्साक्षात्करणाद्भवेन्न पुनरावृत्तिर्भवाम्भोनिधौ
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ३ ॥

नानाछिद्रघटोदरस्थितमहादीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहिः स्पन्दते ।
जानामीति तमेव भान्तमनुभात्येतत् समस्तं जग-
त्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४ ॥

देहं प्राणमपीन्द्रियाण्यपि चलां बुद्धिं च शून्यं विदुः
स्त्रीबालान्धजडोपमास्त्वहमिति भ्रान्ता भृशं वादिनः ।

मायाशक्तिविलासकल्पितमहाव्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५ ॥

राहुग्रस्तदिवाकरेन्दुसदृशो मायासमाच्छादना-
त्सन्मात्रः करणोपसंहरणतो योऽभूत् सुषुप्तः पुमान् ।
प्रागस्वाप्समिति प्रबोधसमये यः प्रत्यभिज्ञायते
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ६ ॥

बाल्यादिष्वपि जाग्रदादिषु तथा सर्वास्ववस्थास्वपि
व्यावृत्तास्वनुवर्तमानमहमित्यन्तः स्फुरन्तं सदा ।
स्वात्मानं प्रकटीकरोति भजतां यो मुद्रया भद्रया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७ ॥

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामितः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८ ॥

भूरम्भांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमान्
इत्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।
नान्यत्किंचन विद्यते विमृशतां यस्मात् परस्माद्विभो-
स्तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणार्मूते ॥ ९ ॥

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिन् स्तवे
तेनास्य श्रवणात्तदर्थमननाद्ध्यानाच्च संकीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिद्ध्येत्तत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥

ॐ

श्रीजगद्गुरुभ्यो नमः

# ஸ்ரீ சங்கரவிஜயம்

## I

### ஸம்ஸ்கிருதபாஷாப்பிரயோஜனம்

[29—10—1932]

ஸந்தியா காலத்தில் நடராஜர் நடனம் செய்து கொண்டு உடுக்கை அடித்தார். அதிலிருந்து அ, இ, உண் [अ इ उण्] முதலிய பதினான்கு ஸூத்திரங்கள் உண்டாயின. அவைகளைக்கொண்டு பாணினி வியாகரண ஸூத்திரங்களைச் செய்தார். அதற்கு வரருசி வார்த்திகம் செய்தார். அந்த வியாகரணத்திற்கே பதஞ்ஜலி பாஷ்யம் செய்தார். அது ஒன்றுக்கே மஹாபாஷ்யம் என்று பெயர். தர்க்கம், மீமாம்ஸை, அலங்காரம் முதலிய எல்லாச் சாஸ்திரங்களுக்கும் ஸூத்திரங்கள் இருக்கின்றன; பாஷ்யங்களும் இருக்கின்றன. இருந்தாலும் பதஞ்ஜலி எழுதிய பாஷ்யத்திற்கே மஹாபாஷ்யம் என்று பெயர். ஏனென்றால் இந்த வியாகரணம் தேவபாஷையின் லக்ஷணம். லக்ஷணம் என்பதை இலக்கணம் என்று தமிழில் சொல்லுவார்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு பாஷையும் ஒவ்வொரு தேசத்தில் பேசப்பட்டதாகத் தெரிகிறது. மற்ற தேசங்களிலும் நம் தேசத்திலும் ஒவ்வொரு பாஷையின் பெயரும் தேசத்தை ஒட்டியே அமைந்திருக்கிறது. அதற்குத் தகுந்த ஆதாரங்களும் இருக்கின்றன. நம் தேசத்திலேயே பேசப்படும் ஹிந்தியின் ஒரு பிரிவுக்கு விரஜபாஷை [व्रजभाषा]

என்று தேசத்தை யொட்டிப் பெயர் வழங்குவதை நாம் பார்க்கலாம். அப்படியே மற்ற தேசங்களிலுள்ள பாஷைகளைக் கவனித்தால் அவைகளுக்குத் தேசத்தை யொட்டிய பெயர் வந்திருப்பது நன்றாகத் தெரியும். ஸம்ஸ்கிருத பாஷையை தேவலோகத்தில் தேவர்கள் பேசுகிறார்கள். ஆகையால்தான் இதற்கு தேவபாஷை என்ற பெயர் வந்தது. தற்காலத்தில் இங்கிலீஷ் படித்தவர்கள் இப்படி எண்ணுவதில்லை. ஏதோ ஒரு காலத்தில் இது பேசப்பட்டதாகவே எண்ணுகிறார்கள். ஆனால் இப்பொழுது அது எங்கும் பேசப்படவில்லை. ஆகையால் அதை 'இறந்த பாஷை' என்று சொல்லுகிறார்கள். உண்மையில் அப்படியல்ல. நம் தேசத்தில் முன் பேசப்பட்ட பாஷைகள் பாலி, மாகதி முதலிய பாஷைகளே தவிர ஸம்ஸ்கிருதமல்ல. ஆனால் ஸம்ஸ்கிருதம் எல்லா பாஷைகளிலும் கலந்திருக்கிறது. எப்படி தேவாம்சமானது எல்லோரிடத்திலும் கலந்திருக்கிறதோ அப்படியே தேவர்கள் பேசும் பாஷையும் எல்லாப் பாஷைகளிலும் கலந்திருக்கிறது.

ஸம்ஸ்கிருதத்திலுள்ள 'ப்ராதா' என்ற பதம் இங்கிலீஷில் 'ப்ரதர்' என்றும் 'மாதா'='மதர்' 'பிதா'='பாதர் (father),' 'ஸ்வஸா'='ஸிஸ்டர்' என்றும் காணப்படுகிறது. இப்படி மேனாட்டிலுள்ள பாஷைகளிலும் நம் தேசத்திலுள்ள பற்பல தேச பாஷைகளிலும் ஸம்ஸ்கிருதம் கலந்திருப்பதை நன்றாகக் கவனித்தால் தெளிவாக விளங்கும். 'ஸப்தகோணம்' என்ற வார்த்தை 'ஹெப்தகன்' என்று மேனாட்டுப் பாஷைகளுள் வழங்குகிறது.

தற்காலம் நம்மை இங்லீஷ் அரசர் ஆளுகிறார். நாம் அவர்களோடு பேசவேண்டி ஆங்கில பாஷையைப் படிக்கிறோம். நாம் இறந்த பிறகு தேவலோகம் சென்றால்,



அவர்கள் பாஷையை நாம் படிக்காவிட்டால், எப்படி அவர்களுடன் பேசமுடியும்? ஆகையால் நாம் ஸம்ஸ்கிருதம் படித்தே ஆகவேண்டும். ஒரு வக்கீல் கோர்ட்டில் பேசுவதென்றால் நன்றாக இலக்கணத் தவறில்லாமல் இங்கிலீஷ் படித்திருந்தால்தான் முடியும். அப்படியே நாமும் எல்லா லோகங்களுக்கும் அதிபதிகளான தேவர்களோடு பேசவேண்டுமானால் வியாகரணம் படித்து நல்ல சப்தங்களையே பேசவேண்டும். இதற்காகத்தான் வியாகரண ஸூத்திரம், வார்த்திகம், பாஷ்யம் முதலியன எழுதப்பட்டன.

தேவர்களோடு ஸம்பந்தம் வைத்துக்கொள்ளும் பிராம்மணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலிய எல்லோரும் ஸம்ஸ்கிருத பாஷையைப் படிக்கவேண்டும். சூத்திரர்கள்கூட பிதிரு தேவகாரியங்களில் 'நம:', 'தர்ப்பயாமி' முதலிய ஸம்ஸ்கிருத வார்த்தைகளைச் சொல்லவேண்டியிருப்பதால் அவர்களும் நன்றாக இதைப் படிக்கவேண்டும்.

பக்திமார்க்கத்தில் செல்பவர்கள் எந்த பாஷையில் வேண்டுமானாலும் ஸ்தோத்திரம் செய்யலாம். ஆனால் கர்ம மார்க்கத்தில் செல்லுகிறவர்கள் ஸம்ஸ்கிருதம் படித்தே தீர வேண்டும். கர்மாக்களின் அநுஷ்டான முறையைச் சொல்லும் கிரந்தங்களும், மந்திரங்களும் ஸம்ஸ்கிருதத்திலேயே இருக்கின்றன.

வெகு நாளைக்கு முன் ஸௌர்யமான வருஷப் பிறப்பாகிய சித்திரை மாஸத்திற்குச் சரியான மார்ச்சு மாதமே மேனாடுகளிலும் முதல்மாதமாக இருந்திருக்கவேண்டுமென எண்ணச் சில ஆதாரங்கள் இருக்கின்றன. ஸப்த, அஷ்ட, நவ, தச என்ற சப்தங்கள் ஸெப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிஸம்பர் என்ற சப்தங்களோடு ஒத்திருக்கின்றன.

மார்ச்சு மாதம் முதல் மாஸமாக இருந்தால்தான் அவைகள் பொருத்தமாகும். ஆகையால்தான் மார்ச்சு மாஸம் முதல் மாஸமாக இருந்திருக்கவேண்டும் என்று ஊஹிக்க இடமுண்டாகிறது. மேலும், ஜனவரி மாஸம் மேனாட்டார்களுக்கு முதல் மாஸமாக இருக்கிறது. அது நம்முடைய மார்கழி மாஸ நடுவில் வருகிறது. மார்கழி மாஸத்திற்கு ஸம்ஸ்கிருதத்தில் 'ஆக்ரஹாயணிக:' என்று ஒரு பெயருண்டு. ஆக்ரஹாயணிக: என்பதற்கு வருஷத்தின் முதல் (மாதம்) என்று அர்த்தம். அக்ர என்றால் முதல் என்றும், ஹாயனம் என்றால் வருஷம் என்றும் அர்த்தம். இப்பொழுதுகூட தெலுங்கர்களின் அநுஷ்டானம் சாந்திரமானப்படியே நடந்துவருகின்றது. பக்ஷிதீர்த்தம் என்னும் இடத்தில் வஸிப்பவர்கள் யுகாதிப்பண்டிகையை முக்கியமாக வைத்துக்கொண்டிருப்பதையும் காணலாம்.

இவை எல்லாம் உலகத்திலுள்ள எல்லா பாஷைகளிலும் ஸம்ஸ்கிருதபாஷை கலந்திருக்கிறது என்பதைக் காட்டச் சொல்லப்பட்டது. எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் ஸம்ஸ்கிருதம் தேசபாஷையாக பேசப்படவில்லையென்று தெரிகிறது.

இங்கு ஒரு கதை சொல்லுகிறேன். ராமபத்ர தீக்ஷிதரென்று ஒரு மஹான் இருந்தார். அவர் பரம ரஸிகர். அவர் பதஞ்ஜலி விஜயம் என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அந்தக் கிரந்தத்தில் நடராஜா மஹாவிஷ்ணுவின் ஹிருதய கமலத்தில் நடனம் செய்வதாகச் சொல்லி இருக்கிறார்.

திருவாரூர்க் கோவிலில் பெரும்பாலும் விஷ்ணுவின் சின்னங்கள் காணப்படுவதால் 'அது முதலில் விஷ்ணு கோவிலாகத்தான் இருந்திருக்கவேண்டும். மேலும் ராஜா என்ற சொல்லோடு கூடிய பெயர்கள் பெரும்பாலும் விஷ்ணுவின்



பெயர்களாகவே காணப்படுகின்றன. சைவர்களுக்கு ஆதிக்யம் ஏற்பட்ட நாளில் அதைச் சிவன் கோவிலாக மாற்றிவிட்டார்கள்' என்றும், 'நாச்சியார் கோவில் முதலில் சிவன் கோவிலாய் இருந்திருக்கவேண்டும். வைஷ்ணவர்களுக்கு ஆதிக்யம் ஏற்பட்டகாலத்தில் அதை விஷ்ணு ஆலயமாக மாற்றிவிட்டார்கள்' என்றும் சிலர் சொல்லுகிறார்கள். அது பெரும் தவறு. இவைகள் இப்படியேதான் வெகு காலமாக இருக்கின்றன. திருவாரூர் கோவில் விஷ்ணுவின் ஸ்வரூபமாகவே கட்டப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் ஹிருதய கமலஸ்தானத்தில் சிவனுடைய நடனம் செய்யும் மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. பாம்பு விஷ்ணுவுக்குப் படுக்கை; சிவனுக்கு ஆபரணம். ஒரு ஸமயம் விஷ்ணு, ஸாயங்காலத்தில் சிவனுடைய நடராஜ மூர்த்தத்தைத் தியானம் செய்தார். அப்பொழுது சிவன் அவருடைய ஹிருதய கமலத்தில் பிரஸன்னரானார். விஷ்ணு அதனால் மிகவும் ஸந்தோஷமடைந்தார். விஷ்ணுவுக்குப் படுக்கையான ஆதிசேஷனால் அப்பொழுது அவரைத் தாங்க முடியவில்லை. ஆதிசேஷன், அப்பொழுது விஷ்ணுவைப் பார்த்து, 'தினந்தோறும் நான் உம்மை வஹிக்கிறேன்; இவ்வளவு பாரமாயில்லை; இன்றுமட்டும் இவ்வளவு பளுவாகத் தாங்கள் ஆனதற்கு காரணம் என்ன?' என்று கேட்டார். அதற்கு அவர், 'இன்று ஸாயங்காலம் என் ஹிருதயத்தில் சிவபெருமான் நர்த்தனம் செய்தார்; அதுதான் பாரத்திற்குக் காரணம்' என்று பதில் சொன்னார்.

சிவனுடைய நடனம் பலவகைப்பட்டது. அவை தாண்டவம், ஹம்ஸ நடனம், அஜபா நடனம் முதலியவை. இவைகளுள் திருவாரூரில் சிவன் செய்த நடனம் அஜபா நடனம். திருவாரூரில் அஜபாஜபத்தை விஷ்ணு எப்

பொழுதும் செய்துகொண்டிருக்கிறார். ஜபம் என்றால் நாம் உள்ளே இழுக்கும் மூச்சுக் காற்றையும் வெளியே விடும் மூச்சுக் காற்றையும் மந்திராக்ஷரங்களாகச் சொல்லுவது. அஜபாஜபம் அப்படிப்பட்டதன்று. சிறிதும் சலிக்காமல் மனதினுள்ளேயே தியானம் செய்வது.

அந்த மஹாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷனே வியாகரணத்திற்குப் பாஷ்யம் செய்த பதஞ்ஜலி. அவர் தான் எழுதிய பாஷ்யத்தைப் பாடஞ் சொல்லுவதற்காக ஆயிரம் சிஷ்யர்களைச் சேர்த்தார். ஆயிரம் சிஷ்யர்களையும் வெளியே உட்காரவைத்துத் தன்னைச் சுற்றி ஒரு திரையைப் போட்டுக்கொண்டு, தானும் ஆயிரம் தலையுள்ள பாம்பின் ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டார். எதற்காக ஆயிரம் தலையுள்ள ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டார் என்றால் எந்த சிஷ்யன் எந்தக் கேள்வி கேட்டாலும் தாமதமில்லாமல் பதில் சொல்வதற்கு. திரை ஏன் போட்டுக்கொண்டார் என்றால், அவர் எடுத்துக்கொண்ட பாம்பின் ஸ்வரூபம் கண்ணால் யாரையாவது பார்த்தால் கூட அவர்கள் உடனே பஸ்மாவாகக்கூடிய அவ்வளவு கொடுமையுடையது. இப்படிப் பாம்புகளுள் சில முகர்ந்தால் மனிதர்கள் இறந்துவிடுவார்கள். சில பார்த்தால் இறந்துவிடுவார்கள். இந்த அபிப்பிராயத்தை விளக்கக்கூடிய ஒரு சுலோகமும் இருக்கிறது:—

दृष्टिघ्राणविषान् फणाधरपतीन् अष्टापि दृष्ट्या स्वयं
रोद्धुं च्यावयितुं प्रमापयितुमप्यव्याहतप्रक्रमः ।
मार्जारान् नकुलांश्च किं खगपतिः साहाय्यकेऽपेक्षते
किं प्रत्यर्थिकुलस्य सत्त्वद इति प्रद्वेष्टि वा मारुतम् ॥



பார்வை, முகர்தல் முதலியவற்றால் பிறர்மேல் விஷவேகத்தைச் செலுத்துகின்ற எட்டுவகைப் பாம்புகளையும் எதிர்க்கவோ அன்றி அவற்றின் நிலையிலிருந்து இறக்கவோ அன்றிக் கொல்லவோ சிறிதும் தடைப்படாத பராக்கிரமத்தையுடைய கருடன், அவற்றை எதிர்ப்பதற்காக அவைகளின் இயற்கை விரோதியான பூனை கீரி முதலியவற்றின் உதவியை நாடுவதுமில்லை. அவற்றிற்கு உயிரைக் கொடுத்து வளர்க்கும் காற்றை வெறுப்பதுமில்லை.

ஸ்ரீமந் நாராயணனுடைய ஹிருதயகமலத்தில் சிவன் நடனம் செய்கிறார் என்பதை நாராயணோபநிஷத்திலுள்ள மந்திரங்களும் குறிக்கின்றன. அதில், सहस्रशीर्षं देवम् என்ற மந்திரத்தில் நாராயணனை விராட் ஸவரூபமாகச் சொல்லி அவருடைய ஹிருதயகமலத்தில் மேல் பாகத்திலிருக்கும் தஹராகாசத்தில் சிவோபாஸனம் சொல்லப்பட்டிருக்கிறது.

पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम्
तस्यान्ते सुषिरँ सूक्ष्मम्.....
तस्याः शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः
स ब्रह्म, स शिवः, स हरिः, सेन्द्रः, सोऽक्षरः परमः स्वराट्

இவை முதலிய மந்திரங்கள் மேற்சொன்ன விஷயத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லுகின்றன.

---

## II

## கௌடபாதர் வரலாறு

[30—10—1932]

ஸ்ரீ நடராஜமூர்த்தி நர்த்தனம் பண்ணும்பொழுது அவருடைய இரண்டு பக்கத்திலும் பதஞ்ஜலி வியாக்கிர பாதர்கள் நின்று ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். சித்திரங்களிலும் சிற்பங்களிலும் நடராஜமூர்த்திக்குப் பக்கத்தில் அவ்விருவர்களையும் காணலாம். வியாக்கிர பாதருக்குக் கீழே பாதி உடம்பு புலியாக இருக்கும். பதஞ்ஜலிக்கு கீழ்ப்பாதி பாம்பாக இருக்கும்.

பதஞ்ஜலி ஆதிசேஷனுடைய அவதாரம். அவர் எழுதியது வியாகரண மஹாபாஷ்யம். அவர் அத்திரியினுடைய பிள்ளையாதலால் ஆத்திரேயர் என்று அழைக்கப்படுவார். அவருடைய தாயின் பெயர் கோணிகா என்பது. அதனால் அவருக்கு கோணிகாபுத்திரர் என்றும் ஒரு பெயர் உண்டு. அவர் மூன்று சாஸ்திரங்கள் எழுதியிருக்கிறார். யோக சாஸ்திரத்திற்கு ஸூத்திரம் எழுதியிருக்கிறார். வியாகரணத்திற்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். உபவேதமாகிய ஆயுர்வேதத்திற்கு சரகம் என்னும் புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதற்கு ஆத்திரேயஸம்ஹிதை என்ற ஒரு பெயர் உண்டு. ஆத்திரேயர் பதஞ்ஜலிதான். இப்படி மனோ-வாக்-காயங்களுக்கு உபயோகமாகிய மூன்று சாஸ்திரங்களிலும் அவர் கிரந்தம் எழுதியிருக்கிறார். மனஸுக்கு உபகாரமாவது பாதஞ்ஜல யோகஸூத்திரம். மனஸை நிறுத்திச் சித்த



சுத்தி உண்டாகும் மார்க்கத்தை அது சொல்லுகிறது. வாக்கிற்கு உபகாரமாவது வியாகரணபாஷ்யம். அதனால் பிழையில்லாமற் பேசத் தெரிந்துகொள்ளுகிறோம். காய சிகித்ஸைக்கு சரகம் என்ற கிரந்தம் செய்திருக்கிறார். இப்படி மூன்று கரணங்களுக்கும் மூன்றைப் பண்ணி மூன்றையும் பரிசுத்தம் செய்தார்.

வியாகரண சாஸ்திரத்திற்கு இவர் செய்த பாஷ்யம் மஹாபாஷ்யம் என்று சொல்லப்படும். 'ஆயிரம் நாப்



பதஞ்ஜலி மஹாபாஷ்யத்தைச் சிஷ்யர்களுக்கு உபதேசித்தல்.

படைத்த ஆதிசேஷன்தான் சொல்லவேண்டும்' என்று ஒரு வசனம் உண்டு. அவர் எதையும் சொல்லுவார். அவர் வியாகரண பாஷ்யம் செய்ததை அறிந்து பாடங் கேட்கப் பல சிஷ்யர்கள் வந்து சேர்ந்தார்கள். ஆயிரம் சிஷ்யர்கள் வந்துவிட்டார்கள். சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் பதஞ்ஜலி இருந்தார். ஆயிரம் பேர்களுக்கும் சீக்கிரமாகப் பாடஞ் சொல்லவேண்டுமென்றெண்ணினர். எல்லாருடைய ஸந்தேஹங்களையும் சீக்கிரத்தில் போக்குவதற்கு ஒரு வாயால் முடியாது என்று நினைத்து ஆதிசேஷ ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு சொல்ல நிச்சயித்தார். ஆதிசேஷனுடைய திருஷ்டிபட்டாலும் மூச்சுக்காற்றுப்பட்டாலும் எல்லாரும் பஸ்மாவாய் விடுவார்கள். அதற்காக ஒருதிரை போட்டுக் கொண்டு ஆதிசேஷ ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு உள்ளே இருந்து சொல்ல ஆரம்பித்தார். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது யாராவது வெளியிலே போய்விட்டால் என்ன பண்ணுவது? அதற்காக 'யாராவது உத்தரவில்லாமல் வெளியே போனல் பிரம்மரக்ஷஸாகப் போய்விடுவார்' என்று ஆஜ்ஞை செய்தார்.

பிரம்மரக்ஷஸ் என்பது பிசாசைப் போன்ற ஒரு விதப் பிறவி. பிசாசுகளில் அநேகவிதம் இருக்கின்றன. தேவதைகளிலும் அநேகவிதம் உண்டு. இரண்டுவகையும் இல்லாமல் அநேகம் இருக்கின்றன. மனிதர்கள் பலவிதம். பக்ஷிகள் பலவிதம். ஊர்வன பல. புழுவாக இருப்பவை பல. புழுவுக்கும் நமக்கும் எவ்வளவோ வித்தியாஸம் இருக்கிறது. நம்மைப் புழுவாக நினைத்தால் அதேமாதிரி வித்தியாஸம் உள்ள ஸ்ருஷ்டிகள் தேவஸ்ருஷ்டியில் உண்டு. தேவர்கள் பிறவிலேயே உயர்வை அடைந்தவர்கள். எந்த லோகத்தில் யார் யார் இருக்கிறார்கள்? நாம் எங்கிருந்து வந்தோம்?



எப்படி நாம் ஸ்ருஷ்டியானோம் என்கிற விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோம். இவைகளையெல்லாம் வேதம் முதலியவற்றைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். சிலர் பிறவியிலேயே தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். நாமோ பிரயாஸைப்பட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். பிறவியிலேயே தெரிந்து கொண்டவர்கள் தேவதைகள். 'ஸ்வயம்பிரதிபாதவேதர்கள்' [स्वयंप्रतिभातवेदाः] என்று அவர்களுக்குப் பெயர்.

யஜ்ஞயாகங்களைப் பற்றிய விஷயங்கள் வேதத்தில் சொல்லப்படுகின்றன. மீமாம்ஸா சாஸ்திரம் வேதத்திற்கு அர்த்தம் சொல்லுகிறது. ஜைமினீ அதற்கு ஸூத்திரம் செய்திருக்கிறார். தேவதைகளுக்கு வேத அத்தியயனம், வைதிக தர்மாநுஷ்டானங்கள் முதலியவை கிடையா என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள். ஏன்? யஜ்ஞம் முதலியவைகளை நாம் தேவதைகளை உத்தேசித்துச் செய்கிறோம். அவர்கள் யாரை உத்தேசித்துச் செய்வார்கள்? உபநயனம் முதலியவைகளும் வேதாத்தியயனாதிகளும் அவர்களுக்கு இல்லை. அவைகளில் அதிகாரமே இல்லை. உபநயனமே இல்லாதபொழுது யஜ்ஞங்கள் முதலியவைகளும் இல்லை. அவர்கள் அதிகிருதாதிகாரிகள். ஸௌக்கியத்தை அநுபவிக்கிறவர்கள்.

வியாஸர் உத்தரமீமாம்ஸை செய்திருக்கிறார். தேவர்கள் ஜபம் பண்ணலாமா? உபாஸனமார்க்கம் அவர்களுக்கு உண்டா என்பதை விசாரித்திருக்கிறார். இந்திராதி தேவதைகளை உபாஸனை செய்கிறோம். ஸூர்யோபாஸனை இருக்கிறது. அந்த ஸூர்யன் யாரை உபாஸிப்பது? இந்திரன் இந்திரனை எப்படி உபாஸிப்பது? அதனல் தேவதைகளுக்கு உபாஸனை கிடையாது. அவர்களுக்கு ஞானத்தில்

அதிகாரம் உண்டா? என்று விசாரித்து ஜீவப்பிரம்மைக்கியம், சிரவணம், மனனம், நிதித்தியாஸனம் என்பவைகளில் அதிகாரம் உண்டு. நிச்சயமாய் உண்டு என்று ஸ்ரீ சங்கராசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஜைமினீயின் கொள்கைப்படி உபநயனம் இல்லாமல் அவர்களுக்கு வேதாத்தியயனம் முதலியவைகள் இல்லையென்று தெரிகிறது. உபநிஷத் ஏன் அதிகாரம் இல்லையென்று சொல்லுகிறது? அவர்கள் ஸ்வயம்ப்ரதிபாதவேதர்கள்; அதாவது பிறவியிலேயே ஸகல வேதமும் தெரிந்தவர்கள். அவர்களுக்கு உண்மை ஞானம் தானாகத் தெரியும். மீன்குஞ்சுக்குப் பிறவிலேயே நீந்தும் சக்தி உண்டாவது போலப் பிறவியிலேயே அவர்கள் ஞானத்தை அடைந்தவர்கள்.

புழுவுக்கும் நமக்கும் உள்ள வித்தியாஸத்தைப்போல நமக்கும் தேவதைகளுக்கும் இருக்கிறது. அவர்களில் கின்னரர், கிம்புருஷர், யக்ஷர், ஸித்தர், சாரணர் அநேக விதத்தினர் இருக்கிறார்கள். தேவதைகள் முப்பத்து மூன்று கோடி பேர்கள் என்று ஒரு கணக்கு உண்டு. ஒரு தெய்வந்தான் உண்டு; முப்பத்து மூன்றுகோடியாக்கியிருக்கிறார்கள் என்று சிலர் நம்மைப் பரிஹாஸம் செய்கிறார்கள். தேவதைகளை நாம் ஸ்வாமி என்று நினைத்து அவர்களைக்குறித்து யஜ்ஞம் முதலியவைகள் செய்யவில்லை. ஞானசக்தி கிரியாசக்திகள் அவர்களுக்கு நம்மைவிட நிரம்ப இருக்கின்றன என்றுதான் சொல்லுகிறோம். ஞானம், இச்சை, கிரியை என்று சக்திகள் மூன்று. கீழ் ஸ்ருஷ்டியில் போகப் போக கிரியையும் ஞானமும் குறைவாக இருக்கும். சில ஸ்ருஷ்டிகளில் கிரியை அதிகமாக இருக்கும்; ஞானம் குறைவாக இருக்கும். யானை, சிங்கம்



முதலியவைகளைப்போன்ற பலம் நமக்கு இல்லை. பக்ஷியைப் போலக் கூடுகட்ட நம்மால் முடியாது; தேன்கூடு கட்ட முடியாது. அவை கிரியா சக்தி. அந்த சக்திகள் நமக்கு அவைகளிலும் குறைவு. ஞானசக்தி அதிகம். இந்த இரண்டும் நம்மிலும் அதிகமாக உள்ளவர்கள் தேவதைகள். ஸ்வாமி ஒருவர்தான். தேவதைகள் ஸ்வாமியாகமாட்டார்கள்.

தேவதைகளிற் பல பிரிவுகள் இருப்பதுபோலக் கெடுதலான ஸ்ருஷ்டிகளிலும் பலவகை உண்டு. பூதம், பிசாசு, ரக்ஷஸ் என்பவை அவை.

पिशाचो गुह्यकः सिद्धो भूतोऽमी देवयोनयः [அமரம்.]

ரக்ஷஸிற்குள் பிரம்மரக்ஷஸ் என்பது ஒரு ஜாதி. வேதாத்தியயனம் நன்றாகப் பண்ணி அற்பாயுளில் இறந்துவிட்டவர்கள் அந்த வேத ஞாபகத்தோடே பிசாசாக இருப்பதுதான் பிரம்மரக்ஷஸ். அமரத்தில் முதலில்

विद्याधरोऽप्सरोयक्षरक्षोगन्धर्वकिन्नराः

என்று தேவயோனிகள் இன்னாரென்பது சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மரக்ஷஸ் அந்தத் தேவயோனியில் ஒரு ஜாதி.

உத்தரவில்லாமல் வெளியிற் போகிறவர்கள் பிரம்மரக்ஷஸாகப் போய்விடுவாரென்ற ஆஜ்ஞையை இட்டுவிட்டு ஆயிரமுகத்தோடு திரைக்குள்ளிருந்து பாடஞ் சொல்ல ஆரம்பித்தார். திரையைத் தூக்கி பார்க்கக்கூடாதென்றும் சொல்லியிருந்தார். ஒரு சிஷ்யனுக்கு, "எப்படி இவர் ஒருவராக இருந்து இவ்வளவு பேருக்கும் சொல்லித் தருகிறார்?" என்ற ஸந்தேஹம் உண்டாயிற்று. உடனே திரையைத் திறந்து பார்த்தான். ஆதிசேஷனுடைய திருஷ்டியும் விஷக்காற்றும் பட்டு அங்கேயிருந்தவர்கள் எல்லோரும்

எரிந்துபோய்விட்டார்கள். அப்படி எரிந்தவர்கள் 999 பேர். ஒருவர் மட்டும் வெளியிற் போயிருந்தார். அவர் கொஞ்சம் மந்த புத்தியுடையர். ஆதிசேஷன் சொல்லுவது நன்றாக அவருக்குப் புரியவில்லை. அதனால் வெளியிலே போய்விட்டு வரலாமென்றெண்ணிப் போயிருந்தார்.

999 சிஷ்யர்களும் இறந்து விட்டதை அறிந்த ஆதிசேஷன் பதஞ்ஜலி உருவத்தை எடுத்துக் கொண்டு சிஷ்யர்களெல்லாம் இறந்து விட்டதற்காகத் துக்கப்பட்டுக் கொண்டு இருக்கும்பொழுது வெளியில் போயிருந்த சிஷ்யர் வந்தார். அவர் 'நாம் சொல்லாமல் வந்து விட்டோமே. என்ன நேருமோ' என்று பயந்து கொண்டே வந்தார். அவரைக் கண்ட பதஞ்ஜலிக்குக் கொஞ்சம் ஸந்தோஷம் உண்டாயிற்று. மந்தனாக இருந்தாலும் இவனாவது தப்பினானே என்று ஆறுதலடைந்தார். அவருக்கு முழுவதும் பாடம் இனிமேற் சொல்லுவதற்குக் காலம் இல்லை. ஆகையால் அவருக்கு அநுக்கிரஹம் செய்து விடலாம் என்று எண்ணினார். அவரைப் பார்த்து, "எனக்குத் தெரிந்தவையெல்லாம் உனக்குத் தெரியட்டும். நீ சொல்லாமல் வெளியிலே போனதற்காகப் பிரம்மரக்ஷஸாகப் போகத்தான் வேண்டும். ஆனாலும் அதற்கு ஒரு நிவர்த்தி உண்டு. நான் கொடுத்த வித்தையை எப்பொழுது ஸரியான பாத்திரமறிந்து சொல்லிக் கொடுக்கிறாயோ அப்பொழுது உனக்குப் பிரம்மரக்ஷஸ் உருவம் நீங்கும்" என்று சொன்னார். இந்த விஷயமெல்லாம் 200 வருஷங்களுக்கு முந்தி ஜானகீபரிணயம் முதலிய கிரந்தங்களை எழுதிய ராமபத்திர தீக்ஷிதர் அவர்களால் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சிஷ்யர் கௌடபாதர். அதாவது கௌட தேசத்திலிருந்து வந்தவர்.



விந்தியமலைக்கு வடக்கே இருப்பது கௌட தேசம். தெற்கே இருப்பது திராவிட தேசம். கௌடர்களில் ஐந்து பிரிவுகளுண்டு. பஞ்சகௌடர்களென்பார்கள். அப்படியே பஞ்சதிராவிடர்கள் உண்டு. தெற்கேயிருந்து காசிக்குப் போயிருப்பவர்களுக்கு அங்கே திராவிடப் பிராம்மணர்கள் என்று பெயர். தமிழ்த் தேசத்தில் தெலுங்கர்கள் இருப்பது போல மஹாராஷ்டிர தேசத்தில் தமிழர்களும் தெலுங்கர்களும் இருக்கிறார்கள். அங்கே ஒவ்வொருவருக்கும், கேல்கர், திலகர், ஸவர்க்கார் என்பவை போன்ற வம்சப்பெயர் உண்டு. தெலுங்கு தேசத்திலிருந்து பழைய காலத்திற் போனவர்களுக்கு டிலாங்கென்னும் வம்சப்பெயர் இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது தெலுங்கு தெரியாது. தமிழ்த் தேசத்திலிருந்து போனவர்களுக்குத் திராவீட் (Dravid) என்ற வம்சப்பெயர் இருக்கிறது. இப்பொழுது எழுதப்படும் சரித்திரங்களில் ஆரியர்கள் திராவிடர்கள் என்று பிரிக்கிறார்கள். அதனால் வழக்கு உண்டாகிறது. கௌடர்கள், திராவிடர்கள் என்பதுதான் புராதன விபாகம். பஞ்சகௌடர்கள்—ஸாரஸ்வதர்கள், கான்யகுப்ஜர்கள், கௌடர்கள், உத்கலர்கள், மைதிலர்கள் என்பவர்கள். ஸாரஸ்வதர்கள் காஷ்மீர தேசத்தில் இருக்கிறார்கள். கான்யாகுப்ஜர்கள் பஞ்சாப் தேசத்தில் இருக்கிறார்கள். கௌடர்கள் வங்காளத்தில் இருக்கிறார்கள். உத்கலர்கள் ஒரிஸா தேசத்தில் இருக்கிறார்கள். மைதிலர்கள் நேபாளம், பீஹார் முதலிய இடங்களில் இருக்கிறார்கள். பஞ்சகௌடர்களிற் பிரதானமானவர்கள் கௌடர்கள். அது போலப் பஞ்சதிராவிடர்களுள் திராவிடர்கள் பிரதானமானவர்கள். இவ்விருவர்களும் இந்தக் காலத்தில் அதிகமாகக் குமாஸ்தாக்களாக இருக்கின்றார்கள். இரண்டு வகை

யாருக்கும் இங்கிலீஷ் அபிவிருத்தி சீக்கிரம் உண்டாகிறது. மைதிலர்களில் மிச்ரா என்னும் பட்டம் உடையவர்கள் அதிகம். மைதில தேசத்தில் தர்பங்கா (Durbanga), ஜனக்பூர் என்ற இரண்டு ஊர்கள் இருக்கின்றன. தர்பங்கா என்பது தனுர்பங்கம் என்பதிலிருந்து வந்தது. ராமர் தனுர்பங்கம் செய்த இடம் அது. ஜனக்பூர் என்பது ஜனகன் பெயரால் ஏற்பட்டது. ஜனகன் இருந்தது மிதிலாபுரி. அந்தத் தேசம் இப்பொழுது மைதிலா என்று வழங்குவது அந்த நகரத்தின் பெயரைக் கொண்டுதான்.

பஞ்ச திராவிடர்கள்—ஆந்திரர், கர்நாடகர், மஹாராஷ்டிரர், கூர்ஜரர், திராவிடர் என்பவர்கள்.

பதஞ்ஜலியினிடம் மஹாபாஷ்யம் வியாகரணம் கேட்க வந்த ஆயிரம் சிஷ்யர்களுள் தப்பின ஒருவர் கௌடர். அவர் கௌட தேசத் (Bengal)திலிருந்து வந்தவர். அவர் குருவினுடைய சாபத்தின்படி பிரம்மராக்ஷஸாக ஆகிவிட்டார். காற்றில் பறக்க ஆரம்பித்தார்.

பிரம்மராக்ஷஸ் தினந்தோறும் வேதம் தெரிந்த பிராம்மணன் ஒருவனைச் சாப்பிடும். அத்தியயனம் பண்ணினவர்களை ஒரு ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு நீள இழுத்துப் போய்ப் பல கேள்விகளைக் கேட்டுத் தெரியாதபொழுது அடித்துவிடும். 'பிரம்மராக்ஷஸையும் ஜயித்து விட்டவர். பிரம்மராக்ஷஸ் அடித்துப் போட்டு விட்டது' என்று கிராமாந்தரங்களிற் கதை சொல்லுவதுண்டு.

பிரம்மராக்ஷஸாகிய கௌடர் நர்மதை நதிக்கரைக்கு வந்து அங்கே இருந்து ஒரு பழைய அரசமரத்தில் உட்கார்ந்தார். பஞ்ச கௌட தேசங்களுக்கும் பஞ்ச திராவிட தேசங்களுக்கும் அந்த இடம் மத்தியில் உள்ளது. உத்தர



தேசத்திலிருந்து தக்ஷிண தேசத்திற்குப் போகிறவர்களும் தக்ஷிண தேசத்திலிருந்து உத்தர தேசத்துக்குப் போகிறவர்களும் அந்த வழியாகத்தான் போக வேண்டும். உத்தர தேசத்திலிருந்து தக்ஷிணத்தில் பிரசாரத்தில் இருந்த சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்ளப்போகிறவர்களும் அப்படியே உத்தர தேசத்திலுள்ள சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்ளத் தக்ஷிணத்திலிருந்து போகிறவர்களுமாகிய பலர் அந்த வழியாகத் தினந்தோறும் போய்க் கொண்டிருந்தார்கள். கௌடர் அவர்களை வியாகரணத்தில் ஒரு கேள்வி கேட்பார். அவர்கள் பதில் சொல்ல முடியாமல் விழிப்பார்கள். உடனே அவர்களை அடித்துச் சாப்பிட்டு விடுவது வழக்கம்.

ஒரே மாதிரியாக உள்ள பதங்களிற் சில உச்சரிப்பில் வேறுபடுவதுண்டு. அப்படி வேறுபடுபவைகளை வேகமாகக் கேட்டுக் கொண்டே வந்தால் உச்சாரணம் தப்பிவிடும். B,U,T என்ன என்றால், But பட் என்பார்கள். C,U,T கட், என்பார்கள். அந்த வேகத்திலேயே குழந்தைகளை P,U,T என்ன என்றால் பட் என்று சொல்லிவிடுவார்கள். வியாகரணத்தில் நிஷ்டை என்று ஒரு பிரத்தியயம் உண்டு. ஸம்ஸ்கிருதத்தில் பிரத்தியயம் என்றால் ஒரு சொல்லின் முடிவு. பிரத்தியயம் என்பது விகுதி. அந்தப் பிரத்தியயங்கள் பலவிதம். தத்திதம், கிருத், ஸுப், திங் என்பவை போன்ற பல இருக்கின்றன. நிஷ்டை என்பது ஒரு பிரத்தியயத்தின் பெயர். அந்தப் பிரத்தியயம் பிரகிருதியோடு சேர்க்கப்பட்டால் 'செய்யப்பட்டது' என்னும் அர்த்தத்தைத் தரும். புஜ (भुज्) என்பது ஒரு தாது. சாப்பிடு என்பது அதன் அர்த்தம். புக்தம் என்றால் சாப்பிடப்பட்டது என்று அர்த்தம். 'க்த' (क्त) என்பது

நிஷ்டாப்பிரத்தியயம். இந்தப் பிரத்தியயத்தோடு உள்ள வார்த்தைகளெல்லாம் செய்யப்பட்டது என்னும் அர்த்தத்தைத் தரும். அக்தம் = நனைக்கப்பட்டது. ஸிக்தம்= நனைக்கப்பட்டது. ரக்தம் = சிவப்பாக்கப்பட்டது. அநுராகம் என்பதோடு நிஷ்டாப்பிரத்தியயம் சேர்த்தால் அநுரக்தம் என்று ஆகும். சமையற் பண்ணு என்னும் அர்த்தத்தைத் தரும் பச் என்ற ஒரு தாது உண்டு. அதற்கு நிஷ்டாப்பிரத்தியயம் சேர்த்தால் பக்வம் என்று ஆகும்; பக்தம் என்று ஆகாது. இதற்கு ஒரு தனி ஸூத்திரமே இருக்கிறது.


पचो वः [பாணினி ஸூத்ரம், 8-2-52]

கௌடர் யாராவது வியாகரணம் தெரிந்தவன் வந்தால் "பச் தாதுவுக்கு நிஷ்டையில் ரூபம் என்ன?" என்று கேட்பார். அவன் அவஸரத்தில் பக்தம் என்று சொல்லி விடுவான். அந்தக் காலத்தில் வியாகரணத்திற்கு மஹா பாஷ்யம் செய்யப்படவில்லை. பச் என்ற தாது வழியாகப் பிறக்கும் நிஷ்டைக்கு விலக்கு இருப்பது பிரஸித்தமாகத் தெரியாத காலம். பக்தம் என்று பதில் சொன்னவுடன் "இல்லை; பக்வம் என்று வரும். நீயும் பக்வந்தான்" என்று சொல்லி அவனைச் சாப்பிட்டு விடுவார். இப்படி ஒவ்வொரு நாளும் பண்ணிக்கொண்டு வந்தார்.

இப்படி நடக்கும் காலத்தில் ஒரு நாள் ஓர் அழகான பிராம்மணப் பிள்ளை வந்தான். சிதம்பரத்தில் பதஞ்ஜலி மஹாபாஷ்யம் சொல்லுகிறார் என்று கேள்விப்பட்டுக் காஷ்மீர தேசத்திலிருந்து அவன் வந்தான். அவனைக் கண்டவுடன் கௌடப்பிரம்மராக்ஷஸ் மிகவும் ஸந்தோஷப்பட்டார். "என்ன அழகான ரூபம்! இன்றைக்கு நமக்கு நல்ல சாப்பாடு கிடைத்திருக்கிறது!" என்று நினைத்துக்கொண்டே



ஒரு பிராம்மண வேஷத்தை எடுத்துக்கொண்டு அந்தப் பிள்ளையின் முன் நின்றார். வழக்கம்போலக் கேள்வி கேட்டார். அவன் 'பக்வம்' என்று சொன்னான். உடனே கௌடப் பிரம்மராக்ஷஸுக்கு அளவில்லாத ஸந்தோஷம்



கௌட பிரம்மராக்ஷஸிடமிருந்து சந்திரசர்மா மஹாபாஷ்ய பாடம் கேட்டல்.

உண்டாயிற்று. "இவ்வளவு நாள் ஒருவனும் வரவில்லை. நீதான் சரியான சிஷ்யன். எங்கள் உபாத்தியாயர் எனக்குக் கொடுத்த வித்தைகளையெல்லாம் உனக்குக் கொடுக்கிறேன். இங்கே உட்கார். நீ எங்கே போகிறாய்?'' என்றார். அவன், "நான் சிதம்பரத்தில் பதஞ்ஜலியிடம் வியாகரண பாஷ்யபாடம் கேட்கப் போகிறேன்'' என்றான். இதைக் கேட்ட கௌடர், "சிதம்பரத்து ஸமாசாரமெல்லாம் மலையேறி விட்டது. அங்கே போய்த் தெரிந்து கொள்ள எண்ணியிருந்ததை இங்கேயே நான் கொடுக்கிறேன். அந்த மஹாபாஷ்யம் என்னுடன் வஸிக்கிறது. இப்படி உட்கார்'' என்றார். பிரம்மரக்ஷஸைக் குருவாகக் கட்டிக் கொண்டு யார் அழுவார்கள்? "நான் எத்தனை நாள் பாடஞ் சொல்லுகிறேனோ அவ்வளவு நாளும் இந்த மரத்தை விட்டுக் கீழே இறங்கக் கூடாது. தூங்கக் கூடாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க வேண்டும்'' என்று அவர் கண்டிப்பாக உத்தரவிட்டார். என்ன பண்ணுவது? வந்த பிராம்மணன். அப்படியே கேட்க உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது கேட்பதை யெல்லாம் எழுதிக் கொள்ளவேண்டுமென்று அவன் நினைத்தான். அந்தக் காலத்தில் மைக்கூடு ஏது? பேனா ஏது? ஏடு எழுத்தாணி கொண்டு வரத்தான் போது ஏது? அரசமரத்தை விட்டுக் கீழே இறங்கக் கூடாதே! அவன் உடனே துடையைக் கீறினான். ரத்தம் வந்தது. அரசிலைக் காம்பை ஒடித்துக் கொண்டு அந்த ரத்தத்தில் தோய்த்து அரசிலையில், கேட்டவைகளை எழுதிக் கொண்டே வந்தான். இராத்திரியும் பகலும் பிரம்மரக்ஷஸ் சொல்லி வந்தது. ஆஹாரம் நித்திரையில்லாமல் ஒன்பது நாள் தொடர்ச்சியாகக் கேட்டு எழுதி வந்தான் சிஷ்யன். கேட்டு விட்டு அரசிலைகளைக் கடைசியில் மூட்டையாகக் கட்டினார். அந்த அரசிலையில் இருந்ததைத்தான் நாம் இப்பொழுது மஹாபாஷ்யம் என்று படிக்கிறோம்.



அந்தச் சிஷ்யர் யார்? அவர் பெயர் சந்திர சர்மா என்பது. இந்தக் கதை பதஞ்ஜலி விஜயம் என்னும் ஒரு புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புஸ்தகம் சற்றேறக் குறைய 200 வருஷங்களுக்கு முன் இருந்த ராமபத்ர தீக்ஷிதர் என்பவராற் செய்யப்பட்டது. சந்திர சர்மா யார்? கௌட சிஷ்யருக்குச் சாபம் கொடுத்த பதஞ்ஜலி பார்த்தார். "இவனுக்கு யார் தக்க சிஷ்யன். வியாகரண பாஷ்யத்தைக் கற்றுக் கொண்டு இவர் சாபத்தை ஒழிக்கக் கூடியவன் எவன் அகப்படப் போகிறான்? நாமேதான் போக வேண்டும். அப்பொழுதுதான் இவனுக்குச் சாபம் போகும்'' என்று எண்ணிச் சந்திர சர்மாவாக வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சந்திர சர்மாவே பின் ஆசிரமத்தில் ஸ்ரீ சங்கராசாரியரவர்களுக்குக் குருவாகக் கோவிந்த பகவத்பதாசார்யர்கள் என்னும் பெயரோடு வந்தவர். கௌடர் கௌட பாதர்கள் என்று பின்னால் சொல்லப்பட்டவர்.

ஸ்ரீ சங்கராசார்ய குரு பரம்பரையில் இந்தக் கோவிந்த பகவத் பாதாசார்யர்களுடைய ஸ்துதி ஒன்று இருக்கிறது. அது பின் வருமாறு:—

हरितल्पहराङ्घ्रिनूपुरक्ष्माधरसौमित्रिबलात्रिपुत्रजन्मा ।
जयतादुपरेवमात्तधामा जयगोविन्दमुनिः स चन्द्रमनामा ॥

[குருரத்னமாலிகா]

கோவிந்த முனியென்பது கோவிந்த பகவத் பாதர்களுடைய பெயர். சந்திர நாமா என்பது பூர்வாசிரமப் பெயர். அவர் ஆதிசேஷாவதாரம். அவர் எவ்வளவோ வேஷம் போட்ட

வர். ஒரு ஸமயம் ஹரிக்குப் படுக்கையாக இருக்கிறவர்; பரமசிவனுக்குப் பாதஸரமாக இருப்பவர்; பூமியைத் தாங்குபவர். க்ஷ்மா என்பது பூமியின் பெயர். அது க்ஷ்மா என்பதிலிருந்து வந்தது. க்ஷமா என்பதற்குப் பொறுமை என்று அர்த்தம். பூமி மிகவும் பொறுமையுடையது. என்ன வெட்டினாலும், எவ்வளவு கீறினாலும் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளுகிறது. அதைத் தரிக்க எவ்வளவோ பொறுமை வேண்டும். ஸௌமித்ரியாக இருந்தவர். ஸௌமித்ரி என்பவர் லக்ஷ்மணர். பலராமராகவும், அத்ரிபுத்திரராகவும் வந்தவர். அத்ரிபுத்திரர் ஆத்திரேயர்; அதாவது பதஞ்ஜலி. இத்தகைய பல ரூபங்களைக் கொண்டவர் விஜயம் பண்ணட்டும் என்பது இந்த சுலோகத்தின் தாத்பர்யம்.

சந்திர சர்மா பின்பு ஸந்நியாஸ ஆசிரமத்தில் அந்த நர்மதா நதிக்கரையிலேயே, ஸ்ரீ ஆசார்யரவர்களுக்கு அநுக்கிரஹம் பண்ணுவதற்காக இருந்து விட்டார். சந்திர சர்மா எப்படி பல நாளாகத தூக்கம் இல்லாமல் சாப்பாடு இல்லாமல் கேட்டார்? இதற்கு முன் லக்ஷ்மணராக இருந்த பொழுது பதினான்கு வருஷம் தூக்கமில்லாமலிருந்து பழகினார். இப்பொழுது தூக்கமில்லாமல் இருப்பதற்காக முன்பே பழக்கம் பண்ணினார்.

---

# III

## கோவிந்த பகவத்பாதர் வரலாறு

[31—10—1932]

ஸம்ஸ்கிருதம் தேவபாஷை. கீர்வாணர்களுடைய பாஷை ஆதலால் கைர்வாணீ யென்று சொல்லப்படும். தண்டி என்பவர் செய்த காவ்யாதர்சத்தில்

**संस्कृतं नाम दैवी वाक्**

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கம்பராமாயணத்தில்

"தேவ பாஷையி லிக்கதை செய்தவர்
மூவ ரானவர்''

என்பதில் ஸம்ஸ்கிருதத்தைத் தேவபாஷை என்று கம்பர் சொல்லியிருக்கிறார். பதஞ்ஜலி செய்த வியாகரணமஹாபாஷ்யத்தில் இந்த பாஷை தேவலோகத்தில் நிறைய இருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்ஸ்கிருதம் என்பதற்கு ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது என்பது அர்த்தம். நவவியாகரணங்களால் அது ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது. அதற்கு உரிய பழைய பெயர் 'தேவவாக்கு' அல்லது 'தேவபாஷை' என்பதே. ஸம்ஸ்கிருதத்தில் எல்லோரும் பேச வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

**न म्लेच्छित वै, नापभाषित वै**

[மஹாபாஷ்யம்]

மிலேச்சபாஷை என்பது அவ்யக்தசப்தங்களையுடைய பாஷை. மற்ற எல்லா பாஷைகளும் ஸம்ஸ்கிருதபாஷையின் பேதங்களாகவே இருக்கின்றன. வியாகரணசுத்தி இல்லாமற் பல பாஷைகள் உள்ளன. குழந்தைகளும் ஸம்ஸ்கிருத அப்பியாஸம் செய்ய வேண்டும்.

அப்பாஷையைப் பேசக்கூடாது. பேசும் பாஷை வியாகரணம் உடையதாக இருக்கவேண்டும். அந்த வியாகரணத்தால் நன்றாக ஸம்ஸ்காரம் செய்யப்பட்டது ஸம்ஸ்கிருதம். அந்த வியாகரணத்துக்குப் பாஷ்யம் செய்தவர் பதஞ்ஜலி மஹாரிஷி. அந்தப் பதஞ்ஜலியிடத்திற் கௌடபாதர் சிஷ்யராக வந்து சாபத்தால் பிரம்மரக்ஷஸ் ஆனார். அவரிடத்தில் சந்திரசர்மா வந்து சேர்ந்தார். குருவினுடைய ஆஜ்ஞைப்படி நல்ல சிஷ்யரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கௌடபாதர் சந்திரசர்மாவுக்கு வியாகரணத்தை அர்ப்பணம்பண்ணினார். அவர் அதைக் கேட்டு அரசிலையில் எழுதிக்கொண்டார்.

வியாகரணம் முழுவதும் சொல்லியாயிற்று. கௌடருக்குப் பிரம்மரக்ஷஸ் ஜன்மமும் தீர்ந்துவிட்டது. "இனிமேல் நமக்கு வைராக்கியம் வேண்டும். ஆத்மத்தியானம் பண்ணவேண்டும். அதற்கு ஓர் உத்தம குருவைத் தேடவேண்டும்" என்று எண்ணினார். பிறவியிலேயே யார் ஜீவன் முக்தர் என்று விசாரித்தார். சுகாசாரியர் அத்தகையவர் என்பதை அறிந்தார். சுகர் பிறக்கும் பொழுதே ஆத்மஜ்ஞானியாகப் பிறந்தவர். யத்னமே கிடையாது. யஜ்ஞம் முதலிய அநுஷ்டானங்கள் அவர் செய்யவில்லை.

பிறப்பு கர்மசேஷத்தின் பலனாக ஏற்பட்டது. அப்படி ஏற்பட்ட ஜன்மத்தில் நல்ல கர்மாக்களைப் பண்ணிச் சித்தசுத்தி அடைந்து ஞானம் வரவேண்டும். இவை



களெல்லாம் இல்லாமல் பிறக்கும் பொழுதே ஞானியாக எப்படிச் சுகர் பிறந்தார்? ஞானிகளுக்குக் கூடப் பிராரப்த கர்மா இருக்கும் வரையில் தேஹம் இருக்கும். அப்புறம் விதேஹமுக்தி வருகிறது. அப்படியிருக்கப் பிறந்த பொழுதே முக்தராக எப்படி இவர் பிறந்தார்? இவரைப் போல வேறு யாராவது இருந்திருக்கிறார்களா?

வாமதேவர் என்பவர் கர்ப்பத்தில் இருந்தபொழுதே ஞானியாக இருந்தார் என்று தெரியவருகிறது. அவர் கர்ப்பத்தில் இருக்கும்பொழுதே,

गर्भे नु सन्नन्वेषामवेदमहं देवानां जनिमानि विश्वा ।
शतं मा पुर आयसीररक्षन्नधः श्येनो जवसा निरदीयम्
इति गर्भ एवैतच्छयानो वामदेव एवमुवाच ।

[ஐதரேயோபநிஷத், IV, 5.]

என்ற மந்திரத்தைச் சொன்னார். 'கர்ப்பத்திலிருந்து கொண்டே ஸமஸ்த தேவதைகளுடைய கோடிக்கணக்கான ஜன்மங்களை நான் தெரிந்து கொண்டேன்' என்று அவர் சொன்னார். 'இதற்கு முன் எப்படி இருந்தேன் தெரியுமா? இரும்புக் கோட்டைகளைப் போலக் கணக்கில்லாத ஜன்மங்கள் என்னைக் கட்டி இருந்தன. இப்பொழுது எனக்குச் சிறகு முளைத்துவிட்டது. பெரிய பருந்து, கருடனுக்கு முளைத்ததுபோல முளைத்துவிட்டது. நான் அந்தக் கட்டுக்களிலிருந்து கிளம்பி வந்துவிட்டேன். இப்பொழுது எனக்கு எல்லாவிதமான ஜன்மங்களும் தெரிகின்றன'; இது தான் அவர் சொல்லுவது. வியாஸர் கூட

शास्त्रदृष्ट्या तूपदेशो वामदेववत् ।

[பிரஹ்மஸூத்திரம், I, i, 30]

அதாவது 'வாமதேவரைப் போல' என்று திருஷ்டாந்தம் சொல்லியிருக்கிறது. முக்தர்களுக்கு உதாஹரணமாகச் சுகரும் வாமதேவரும் சொல்லப்படுகின்றனர். சுருதியே சொல்லுகின்றது. இவர்கள் பிறக்கும்பொழுதே முக்தர்களானவர்கள்.

நேற்றுச் சொன்ன கோவிந்தபகவத்பாத ஸ்துதி இருக்கும் குருபரம்பராஸ்தோத்திரத்தில் சுகருடைய ஸ்துதி ஒன்று இருக்கிறது.

जननीजठरादिव च्यवन् यो जगतो नाद्रवदात्मविद्विपद्भयः ।
अनहन्तमहं तमात्मवन्तं भगवन्तं शुकमाश्रये प्रशान्तम् ॥

[குருரத்னமாலிகா]

என்பது அது. இதில் அவர் தாயார் வயிற்றிலிருந்து நழுவும்பொழுதே இந்த ஜகத்திலுள்ள எந்த உபத்திரவத்தைப் பார்த்தும் உருகாதவர். அகந்தை யில்லாதவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாகவதத்தில் சுகரைப்பற்றிச் சொல்லப்பட்ட ஒரு சுலோகத்தைச் சொல்லுகிறேன்.

यं प्रव्रजन्तमनपेतमपेतकृत्यं
द्वैपायनो विरहकातर आजुहाव ।
पुत्रेति तन्मयतया तरवोऽभिनेदु-
स्तं सर्वभूतहृदयं मुनिमानतोऽस्मि ॥

[பாகவதம்]

நாம் ஓரிடத்திற்குப் போகிறோம். ஒரு காரியத்திற்காகப் போகிறோம். அந்தக் காரியம் முடிந்துவிட்டால்






வியாஸர் ஸ்ரீ சுகரைப் பின்தொடர்ந்து செல்லுதல்.

அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுவிடுகிறோம். சுகர் 'காரியம் ஆய்விட்டது' என்று பூணூல் போடுவதற்கு முன்பே புறப்பட்டுவிட்டார். குருபரம்பரைஸ்துதியில் உலகத்துக்குப் பயப்படாதவர் என்றிருக்கிறது. இங்கே புறப்பட்டாரென்று சொன்னபடியால் அதற்குத் தக்கபடி 'பூணூல் போடுவதற்கு முன்பு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. புறப்படுவதற்குக் கைகால் வளர்ந்து நடக்கும் சக்தி வரவேண்டுமல்லவா? த்வைபாயனர் என்பது வியாஸர் பெயர். அவருக்குப் பிறக்கும்பொழுதே ஆத்மஜ்ஞானம்

வரவில்லை. புத்திரவாத்ஸல்யம் உடையவராக இருந்தார். அந்தப் புத்திரருடைய பிரிவில் பயம் உடையவரானார். ஆகையால் அவர் புறப்பட்டவுடன் 'புத்ர!' என்று கூப்பிட்டார். சுகரோ வேலை ஒன்றும் இல்லை என்று புறப்பட்டுவிட்டார். ஏன் வேலை இல்லை?

வேலை என்பது என்ன? ஒன்றை ஸம்பாதிப்பது; ஒன்றைத் தள்ளுவது; இவைகளே வேலை. இல்லாததைக் கொண்டுவரவேண்டும்; வேண்டாமென்பதைத் தள்ளவேண்டும். போக்கிரி வேலைக்காரனை நீக்கவேண்டும்; நல்லவனைக் கொண்டுவரவேண்டும். சத்துருக்களைப் போக்கவேண்டும்; மித்திரர்களை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இப்படி உலகத்திலுள்ள ஸகல காரியங்களும் ஹான உபாதான ரூபமாகவே இருக்கின்றன. கிரஹணம், பரித்தியாகம் என்னும் ரூபத்திற் காணப்படுகின்றன. இப்படி இருப்பதுதான் வேலை. திரவியத்தைப் பெற வேலை செய்தாகவேண்டும். துக்கத்தை நீக்க வேலை செய்தாகவேண்டும். ஸுகப்பிராப்தி துக்க நிவர்த்திகளுக்காகவே வேலை செய்யப்படுகிறது. கொள்ளுவதும் தள்ளுவதுமாகிய இரண்டையும் பண்ண முடியாதது எது? அது நாம் என்பதுதான். நம்மைத் தள்ள முடியாது; கொண்டுவரவும் முடியாது. நாம் தள்ளப்படுவது இல்லை. இதைத் தவிர வேறாக இருப்பதைத் தள்ள முடியும்; கொள்ள முடியும். நம்மிலும் வேறு ஒன்று இருக்கிறது என்பவருக்குத்தான் வேலை உண்டு. அந்த வேறாக இருப்பவைகளைக் கொள்ளுவதற்கும் தள்ளுவதற்கும் அவர் வேலை செய்கிறார். காணுகின்ற எல்லாம் நாமாகத் தோன்றிவிட்டால் அப்புறம் நமக்கு வேலையே இல்லை. வேறு ஒன்றும் இல்லாதபொழுது எதைக் கொள்ளுவது? எதைத் தள்ளுவது? அப்பொழுது இரண்டும் இல்லை. காரியம்



இல்லை. உபத்திரவம், பசி, துக்கம், ஸந்தோஷம் எல்லாம் நாமாகத் தோன்றிவிட்டால் அப்புறம் காரியம் எது? இப்பொழுது தோல் நாம் என்று தோன்றுகிறதே. தோல் கறுப்பாக இருந்தால் 'நாம் கறுப்பு' என்று சொல்லுகிறோம். சிவப்பாக இருந்தால் 'நாம் சிவப்பாக இருக்கிறோம்' என்று கௌரவம் பாராட்டுகிறோம். நாம் நாம் என்று தோன்றுகிறதே. இவை நாம் என்று தோன்றும்பொழுது ஏன் எல்லாம் நாமாகத் தோன்றுதல் கூடாது? அப்படித் தான் நாம் இருக்கிறோம். நாம் எல்லாமாகவும் இருப்பதை அறிந்து கொள்ளுவதில்லை. அதை அறிந்து கொண்டால் அப்புறம் காரியம் எது? நம்மிலும் வேறே ஒன்று இருந்தால்தானே அதைத் தள்ளலாம்; இழுக்கலாம். எல்லாம் நாமாக—ஆத்மதத்துவமாக—மெய்ப்பொருளாக இருந்துவிட்டால் அப்பொழுது வேலை இல்லாமற் போகும்.

சுகர் 'எல்லாம் நாம்' என்று ஆனவர். அவர் எல்லாவற்றிலும் இருப்பவர் ஆகிவிட்டார். அவர் ஓடும்பொழுது வியாஸர் கூப்பிட்டார். யார் பதில் சொல்லுவது? அவர் தான் எல்லாமும் ஆகிவிட்டாரே. எல்லாமல்லவா பதில் சொல்லவேண்டும்? மரங்களெல்லாம் ஏன் என்று கேட்டன; மிருகங்களெல்லாம் ஏன் என்று கேட்டன. ஸர்வப் பிராணிகளாகவும் அவர் இருந்தார். எல்லாம் அவராய் இருந்தமையால்தான் வேலையில்லையென்று ஓடினார்.

அத்தகைய ஆசார்யரிடத்தில் போய் அநுக்கிரஹம் பெறவேண்டுமென்று கௌடர் எண்ணினார். அவர் ஹிமாசலத்தில் பதரிகாசிரமத்தில் இருப்பதாக அறிந்தார். அங்கே போய்ச்சேர்ந்தார். அவரிடம் ஸந்நியாஸம் வாங்கிக்

கொண்டார். கௌடபாதாசாரியர் என்று அவருக்குப் பெயர் உண்டாயிற்று. அவர் ஆசாரியபரம்பரையில் ஒருவர். ஆசார்ய பரம்பரை என்றால் என்ன?

உலகத்தில் உள்ள எல்லாம் நாம். அறிவாகிய ஒன்று தான் உண்மையில் உள்ளது. அதுவே நாம். ஒவ்வொரு தேஹத்திலும் அறிவு இருக்கிறது.

या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ।

[மநீஷாபஞ்சகம்]

விளக்கு இருக்கிறது. அது வஸ்துக்களைப் பார்க்க உபயோகப்படுகிறது. அந்த விளக்குகளெல்லாம், பார்க்கிற கண் ஒன்று இல்லாவிட்டால் பிரயோஜனமில்லாமற் போய் விடும். ஒரே இருட்டாகத்தான் இருக்கும். கண் நன்றாக இருக்கிறது. மனஸ் இல்லாவிட்டால் அந்தக் கண்ணால் பார்க்க முடியாது. மயக்கம் போட்டு விழுந்தபொழுது கண்ணைத் திறந்துகொண்டிருந்தாலும் பார்க்க முடிவதில்லை. ஆகவே மனஸ் இருந்தால்தான் கண் பிரயோஜனப் படும். அந்த மனஸ் மட்டும் இருந்தால் பிரயோஜனம் இல்லை. ஆத்மஜ்யோதிஸ் அதில் அடிக்கவேண்டும். ஆத்மஜ்யோதிஸ் அடித்தால் மனஸ் நினைக்கும்; மனஸ் நினைத்தால் கண் பார்க்கும்; கண் பார்த்தால் விளக்கு வெளிச்சம் தெரியும்; விளக்கு வெளிச்சத்தால் ஜடப்பொருள்கள் தெரியும். அந்த ஆத்மஜ்யோதிஸைத்தான் அறிவென்றும் சொல்லுகிறார்கள். அறிவு ஒரேவிதந்தான். எலக்ட்ரிக் வெளிச்சத்தில் வித்தியாஸம் இல்லை. ஒரு பொத்தானை அழுத்தினால் எல்லாம் எரிகின்றன. ஆனால் பல்பு(bulb)க்கேற்றபடி அவைகளில் வெளிச்சம் இருக்கிறது. அதுபோல அறிவு ஒரேவிதமாக இருந்தா



லும் பக்குவத்திற் கேற்றபடி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கிறது. அந்த அறிவாகிய ஆத்மஜ்யோதிஸைப் பூர்ணமாகப் பிரகாசிக்கச் செய்யவும் துக்கமில்லாமல் இருப்பதற்குரிய ஸாதனங்களைச் சொல்லவும் நமக்கு ஆசாரியபரம்பரை வேண்டும். ஒருவர், பிற்காலத்தில் அந்தக் காரியத்தைச் செய்ய மற்றொருவருக்கு அந்த அதிகாரம் கொடுக்கிறார். இப்படி வருபவர்கள் வரிசைதான் ஆசாரியபரம்பரை. அந்தப் பரம்பரை விஷயத்தில் நாம் நன்றியறிவுடையவர்களாக இருக்கவேண்டும். ஆத்மஜ்யோதிஸை அடையவேண்டிய மார்க்கமாகிய நிதியைக் காப்பாற்றித் தந்தவர்கள் அவர்களே. யார் யார் மூலமாக இந்த நிதியானது லோகத்தில் இன்று வரையில் வந்திருக்கிறதோ அவ்வளவு பேரையும் தியானித்தால் அதிக அநுக்கிரஹம் உண்டாகும். ஆகவே குருபரம்பராஜ்ஞானம் ஆத்மதத்துவத்தை அவலம்பித்தவர்களுக்கு அவசியம் இருக்கவேண்டும்.

நம்முடைய ஆசாரியபரம்பரையின் முதல் குரு ஸ்ரீமந் நாராயணன். அப்புறம், பிரஹ்மா, வஸிஷ்டர், சக்தி, பராசரர், வியாஸர், சுகர். சுகர் வரையில் இது புத்திரபரம்பரையாக வந்தது. சுகர் பிறந்தபொழுதே ஞானியானவர். ஆதலால் அப்புறம் அது சிஷ்யபரம்பரையாக வந்துவிட்டது.

கௌடபாதர் சுகாசாரியரிடத்தில் ஸந்நியாஸம் பெற்றுக்கொண்டு ஆத்மநிஷ்டையில் இருந்துவிட்டார்.

இங்கே நர்மதை நதிக்கரையில் இருந்த சந்திர சர்மா மரத்திலிருந்து இறங்கினார். கொஞ்சதூரம் போனார். சாப்பாடும் தூக்கமும் இல்லாமல் பல நாள் இருந்ததால் மிகவும் சிரமமாக இருந்தது. தம் கையில் இருந்த இலை

மூட்டையை அப்படியே ஓரிடத்தில் வைத்துவிட்டுப் போய்ப் படுத்து நன்றாகத் தூங்கிவிட்டார். ஓர் ஆடு வந்தது. இலை மூட்டையில் ஒரு பாகத்தைத் தின்று



மஹாபாஷ்யம் எழுதப்பட்ட ஆலிலைகளை ஆடு தின்ன வருதல்.

விட்டது. அது போகப் பாக்கிதான் இப்பொழுது இருக்கிறது. மஹாபாஷ்யத்தில் இல்லாத பாகத்திற்கு அஜபக்ஷித பாஷ்யம் என்று பெயர்வந்தது. சந்திர சர்மா எழுந்திருந்து பார்த்தார். மூட்டையிலிருந்த இலையில் ஒரு பாகத்தை ஆடு தின்றுவிட்டதைக் கண்டார். உடனே மிகுதியுள்ளதை எடுத்துக்கொண்டு உஜ்ஜயனீ வந்து சேர்ந்தார்.

வந்து, அங்கே இருந்த ஒரு வைசியனுடைய கிருஹத்திற்குப் போனார். அவர் வீட்டுத் திண்ணையில் போய்ப் படுத்துக்கொண்டு தூங்கினார். ஓரே யடியாக தூக்கத்தில்



ஆழ்ந்து விட்டார். இப்படிப் பல நாள் தூங்கினார். அந்த வைசியனுக்கு ஒரு புத்திரி இருந்தாள். அவள் அவரைப்



செட்டிப்பெண் சந்திரசர்மாவைப் பற்றி எண்ணமிடல்.

பார்த்தாள். எழுப்பினாள். எழுந்திருக்கவே இல்லை. ஆஹாரம், நித்திரை இல்லாமல் உணர்ச்சியற்று அவர் தூங்குகிறாரென்பதை உணர்ந்துகொண்டாள். "இவர் மஹா தேஜஸ்வியாக இருக்கிறார்; இவருடைய பிராணனை ரக்ஷிக்க வேண்டும்" என்று எண்ணினாள். உடனே வைத்திய சாஸ்திரப் பிரகாரம் தயிருஞ் சாதமும் பிசைந்து மேலே பூசினாள். தேய்த்தாள். ரோமகூபத்தின் வழியாக அன்ன ஸாரம் சரீரத்தில் இறங்கிற்று. தினந்தோறும் இப்படிச் செய்து வந்ததில் கொஞ்சநாள் கழித்து விழித்துக்கொண்டார். இந்தமாதிரி ஒரு சிகித்ஸை நம்முடைய வைத்திய

சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஊசி வழியாகக் குத்தி அன்னஸாரத்தை ஏற்றுகிறார்கள். அது ஹிம்ஸைப்படுத்திப் புதத்துவாரம் உண்டாக்கிச் செலுத்துவது. நம்முடைய சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட முறையோ ஸ்வபாவமாக உள்ள ரோமகூபத்தின் வழியாக அன்னஸாரத்தை இறக்குவது. மலையாள தேசத்தில் இதைப் போன்ற ஒரு சிகித்ஸை இப்பொழுதும் நடைபெற்று வருகிறது. அதற்கு நவரக்கிழி என்று பெயர் சொல்லுகிறார்கள்.

விழித்துக் கொண்ட சந்திர சர்மா முதலில் இலை மூட்டை ஜாக்கிரதையாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டார். அதை எடுத்துக்கொண்டு கிளம்பினார். உடனே அந்த வீட்டு வைசியன் அவரைத் தடுத்து, “என்னுடைய புத்திரி உம்முடைய பிராணனைக் காப்பாற்ற எவ்வளவோ சிரமப்பட்டாள். உம்மை விவாஹம் பண்ணிக் கொள்ளவேண்டும் என்று எண்ணியிருக்கிறாள். அதனால் தான் உம்மிடம் அவ்வளவுப் பிரியமாக இருந்து சிகித்ஸை செய்தாள்” என்றான். சந்திர சர்மா பார்த்தார். “இதற்குத்தானா நாம் உபதேசம் பெற்றுக் கொண்டோம்” என்று நினைத்தார். “நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன்” என்று சொல்லிவிட்டார். “பண்ணிக் கொள்ளத்தான் வேண்டும்” என்று வைசியன் பிடிவாதம் பண்ணி “அரசனிடம் போவோம்; வாரும். நம்முடைய வழக்கை அவரிடம் தீர்த்துக் கொள்ளலாம்” என்றான். இருவரும் அரசனிடம் போனார்கள்.

அரசன் சந்திர சர்மாவைப் பார்த்தான். வைசியன் தன்னுடைய ஸமாசாரத்தைச் சொல்லுவதற்கு முன்பே அவனுக்கு வேறு யோசனை தோன்றிற்று. “இவரைப்



பார்த்தால் மஹா தேஜஸ்வியாக இருக்கிறார். நம்முடைய பெண்ணுக்கு வரன் தேடிக்கொண்டிருக்கிறோமே! இவருக்கே கொடுத்து விடலாம்” என்று எண்ணி, வேறொன்றையும்பற்றிக் கேட்காமல் “உமக்கு விவாஹமாயிற்றா? என்னுடைய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறீரா?” என்று கேட்க ஆரம்பித்தான். “இதற்குத் தர்மசாஸ்திரம் இடங்கொடுக்கிறதா? மந்திரியைக் கூப்பிடு” என்றான். மந்திரி வந்தான். “ஓகோ! நம்முடைய பெண்ணுக்கு வரன் வேண்டுமென்று நம் அரசனுக்குத் தெரியும்போல் இருக்கிறது. இந்த வரனுக்குக் கொடுத்து விடலாம் என்று சொல்லுவதற்குக் கூப்பிடுகிறார் போல் இருக்கிறது. நல்ல காலம்” என்று எண்ணிக்கொண்டே அவன் வந்தான். இப்படி மூன்று பேரும் தங்கள் தங்கள் பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டுமென்று சந்திர சர்மாவைக் கேட்டுக்கொண்டார்கள். என்ன செய்வது? எல்லோரையும் கல்யாணம் பண்ணிக்கொண்டார். ஒவ்வொரு பத்தினியினிடமும் ஒவ்வொரு புத்திரன் ஜனிக்கும் வரையில் இருந்தார்.

முதலில் பிறக்கும் புத்திரன்தான் தர்மஜன். தர்மானுஷ்டானத்தைப் பரம்பரையாகக் காப்பாற்ற ஒரு பிள்ளையே போதும். பாக்கிப் பிள்ளைகளெல்லாம் காமஜர்கள், காமத்தால் உண்டானவர்கள். ஜ்யேஷ்ட புத்திரனுக்குத் தான் கர்மாதிகாரம் உண்டு. ஸொத்தும் அவனுக்குத்தான் உரியது. மலையாளத்தில் நம்பூத்திரிப் பிராம்மணர்களில் ஜ்யேஷ்ட புத்திரனுக்குத்தான் ஸொத்து உரிமை உண்டு. ஸொத்து தர்மானுஷ்டானத்துக்காக ஏற்பட்டது. அந்தத் தர்மானுஷ்டானம் செய்யும் யோக்கியதை ஜ்யேஷ்டனுக்குத் தான் உண்டு. அதனால் அவனுக்குத்தான் ஸொத்து

உரியது. பாக்கிப் புத்திரர்கள் பிறந்தால் அவர்களுடைய சரீர ஸம்ரக்ஷணமட்டும் செய்யவேண்டும். ராஜ்யாதிகாரம் மூத்த பிள்ளைக்குத்தானே கொடுக்கப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளுக்கும் தருவதில்லையே? அதுபோலக் குடும்ப ஸொத்தும் தர்மாநுஷ்டான யோக்கியதையும் ஒருவனுக்கே உரியவை. ஆகவே வேண்டியிருப்பவன் ஒரு புத்திரன் தான்.

ஒவ்வொரு பத்தினியினிடத்திலும், ஒவ்வொரு புத்திரன் பிறந்த உடன் சந்திர சர்மா புறப்பட்டுவிட்டார். பின்பு தமக்கு வியாகரணம் சொல்லிவைத்த ஆசாரியர் எங்கே இருக்கின்றார் என்று தேடிக் கொண்டுபோய் பதரிகாசிரமத்தில் அவரைக் கண்டார். அவர் ஸந்நியாஸி ஆகிவிட்டதை யறிந்தார். தாமும் அவரிடம் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டார். பின்பு 'கோவிந்த பகவத் பாதாசாரியர்கள்' என்னும் பெயரால் வழங்கப்பட்டார். சுகர் முதல் வருகிற ஆசாரியர்களுக்கு 'பரிவ்ராஜகர்கள்' என்னும் பெயர் உண்டு.

பதரிகாசிரமத்தில் 'கோவிந்த பகவத் பாதர்' இருந்து வருகையில் சுகருடைய குருவும் தகப்பனருமாகிய வியாஸர் ஒருமுறை அங்கே வந்தார். அங்கே இருந்த கோவிந்த பகவத் பாதாசாரியர் அவரைத் தரிசித்துப் பிரார்த்தித்தார். அப்பொழுது வியாஸர் "நாம் பண்ணின ஸூத்திரத்திற்குப் பாஷ்யம் செய்ய ஈசுவரனே அவதாரம் செய்து வரப்போகிறார். அவர் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளுவார். லோக ஸம்பிரதாயத்திற்காக அவருக்கு ஒருவர் உபதேசம் செய்ய வேண்டும். நீ நர்மதை நதிக்கரையிலுள்ள அரசமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு இரு. அவர் வந்த உடன் நீ



உபதேசம் செய்" என்று சொன்னார். இப்படி வியாஸர், சுகர், கௌடபாதர், கோவிந்தபகவத்பாதர்கள் என்னும் நான்கு பேர் கூடிய கூட்டத்தில் தீர்மானம் ஆயிற்று. கோவிந்த பகவத்பாதர்கள் நர்மதை நதிக்கரைக்குச் சென்றார்.

அவருக்குப் பூர்வாசிரமத்தில் எந்த குரு வியாகரண உபதேசம் செய்தாரோ அவரே உத்தராசிரமத்திலும் குருவாக ஏற்பட்டார். பூர்வாசிரமத்தில் எந்த மரத்தின் மேலிருந்து வியாகரணத்தைக் கேட்டாரோ அதே மரத்தின் அடியிலிருந்து சிஷ்யரை எதிர்பார்த்துக்கொண்டு நிஷ்டையிலிருந்தார்.

மஹாவிஷ்ணு ஹிருதயகமலத்தில் நடராஜா தரிசனத்தால் அதிக ஸந்தோஷத்தை யடைந்தார். அதனால் ஆதிசேஷன் அவரைத் தாங்கமுடியவில்லை என்பது முதல் இதுவரையில் ஸ்ரீசங்கராசாரியரவர்களுடைய பூர்வாசாரிய பரம்பரையைப்பற்றிப் பதஞ்ஜலிவிஜயம் மிக விரிவாய்ச் சொல்லுகிறது. அப்புறம் ஸ்ரீ சங்கராசாரியரவர்களின் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறது. ஸ்ரீசங்கராசாரிய சரித்திரத்தைச் சொல்லும் பாகத்தின் முதல் சுலோகம்

**अत्रान्तरे नक्रग्रहीतपादः**

என்பது. இந்த பாகத்தில் ஸ்ரீசங்கராசாரியரவர்களை முதலை பிடித்துக்கொண்டது, கோவிந்த பகவத்பாதாசாரியர்களிடம் வந்துசேர்ந்தது, அவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டது, பின்பு அவர் காசிக்குப் போனது, அவர் திக்விஜயம் பண்ணினது, அத்வைதபாஷ்யம் பண்ணினது முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் காவியத்திலுள்ள கடைசி சுலோகம்

गोविन्ददेशिकमुपास्य चिराय भक्त्या
तस्मिन् स्थिते निजमहिम्नि विदेहमुक्त्या ।
अद्वैतभाष्यमुपकल्प्य दिशो विजित्य
काञ्चीपुरे स्थितिमवाप स शंकरार्यः ।

[பதஞ்ஜலிசரிதம், VIII—71.]

---

# IV

## ஸ்ரீ சங்கரர் அவதாரம்

[1—11—1932]

ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணுங்காலத்தில் சித்தசுத்தியை அடைந்து பரமாத்மாவோடு ஏகீபாவம் அடைவதற்கு யோகம் என்று பெயர் கொடுத்தார். யோகம் என்றால் சேர்க்கை என்று அர்த்தம். 'அவனுக்கு நல்ல யோகம்' என்றால் உத்தம கிரஹங்களின் சேர்க்கை உண்டாயிருக்கிறது என்று அர்த்தம். உத்தம பதார்த்தத்தில் சேர்க்கை அடைவது உத்தம யோகம். உத்தம பதார்த்தம் எது? ஞானஸ்வரூபம். அதோடு சேர்வதுதான் உத்தம யோகம். அதற்கு ஸாதனம் நிஷ்காம்யகர்மா. அந்தக் கர்மாவைச் செய்து அடைவது கர்மயோகம் என்று சொல்லப்படுகிறது. யோகங்களெல்லாம் வேதத்தின் பரம தாத்பர்யம். வேதம் பரமாத்மாவோடு நிரந்தரமான சேர்க்கையைச் சொல்லுகிறது. அந்தரம் என்றால் பேதம். நிரந்தரம் என்றால் அபேதம். பேதமில்லாத சேர்க்கைதான் அந்தரங்க யோகம். அதாவது பேதமில்லாமல் பரமாத்ம ஸ்வரூபமாகிய ஞானத்துடன் சேர்க்கை. ஒன்றாக ஆகிவிட்டால் அப்புறம் பிரிவேற்படாது. கொஞ்சம் பிரிவு இருந்தாலும் அந்தச் சேர்க்கையானது நிரந்தரமாக இராது.

उदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति । तत्त्वेव भयं विदुषोऽमन्वानस्य ।

[தைத்திரீயோபநிஷத், ப்ரஹ்மவல்லீ]

கொஞ்சமாவது பேதம் இருந்தால் அந்தச்சேர்க்கை எப்பொழுது முடிந்துவிடுமோ என்ற பயம் இருக்கும். தன்மயமாகப் பேதமின்றி இருந்தால் எப்பொழுதும் சிறிதாவது பயமே இல்லை. அப்படிப்பட்ட சேர்க்கைக்கு ஸாதனமாகத்தான் வேதங்கள் இருக்கின்றன என்று கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குச் சொன்னார்.

इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान् मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥
एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परंतप ॥

[கீதை, IV, 1—2.]

"இந்த யோகத்தை இதற்கு முன் விவஸ்வானுக்குச் சொன்னேன். அது சொல்லி அதிக காலமாயிற்று. உத்தம அதிகாரியாக இருந்தால் எப்பொழுதும் காப்பாற்றுவான். பின்னாலே வந்தவர்களுக்குப் பக்குவம் குறையக் குறைய அது சைதில்யமடைந்துவிட்டது. பரம்பரையாக வந்த இந்த யோகமானது பின்னால் வந்தவர்கள் உத்தம அதிகாரிகளாக இல்லாமையால் ஜீர்ணமாய்க்கொண்டு வந்தது. அதைப் புனருத்தாரணம் பண்ண வந்தேன்" என்று சொன்னார்.

बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परंतप ॥

[கீதை, IV, 5.]

அர்ஜுனனுக்கு ஒரு ஸந்தேஹம் உண்டாயிற்று. "பல காலத்திற்கு முன் நீங்கள் சொன்னது எப்படித் தங்களுக்குத் தெரியும்?" என்று கேட்டான். "நானும் அநேக



ஜன்மங்களை எடுத்திருக்கிறேன். நீயும் அநேக ஜன்மங்களை அடைந்திருக்கிறாய். அது எனக்குத் தெரியும்; உனக்குத் தெரியாது. வேத ஸ்வரூபமாக இருந்து விவஸ்வானுக்கு அதைச் சொன்னேன்" என்றார் பகவான்.

பரமேசுவரன் வேறு, கிருஷ்ணன் வேறு இல்லை. இருவரும் ஒருவரே. ஸ்மார்த்தர்கள் பஸ்மதாரணம் செய்து கொள்ளுகிறார்கள். விஷ்ணு பக்தியும் பண்ணுகிறார்கள். அத்வைதப்படி இருவருக்கும் பேதம் இல்லை. சுருதி ஸ்மிருதி புராணங்களின் தாத்பர்யமும் அதுதான். நம்முடைய ஸ்ரீ ஆசாரியரவர்களுடைய தாத்பர்யமும் அதுதான். கீதையிலுங்கூட ஸ்ரீ கிருஷ்ணர் விஸ்வரூபத்தை அர்ஜுனனுக்குக் காட்டினார் என்று இருக்கிறது. அந்த விஸ்வரூபம் ஈசுவர ரூபந்தான்.

दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ।

[கீதை, XI, 8.]

என்று சொல்லுகிறார். "என்னுடைய ஈசுவரஸ்வரூபத்தைக் காட்டுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். ஈசுவர சப்தத்துக்குப் பரமசிவன் என்பதுதான் அர்த்தம். அமரகோசத்தில் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

ईश्वरः शर्व ईशानः

என்று அமரம் சொல்லுகிறது. விஷ்ணு முதலியவர்களைச் சொல்லும்பொழுது ஈசுவரனென்று சொல்லவில்லை. லௌகிகத்திலும் பரமசிவனுடைய கோயிலை ஈசுவரன் கோயிலென்றும் விஷ்ணு கோயிலைப் பெருமாள் கோயிலென்றும் சொல்லுகிறோம். த்ரிநேத்திரம் படைத்தவனுக்குத்தான்

ஈசுவரன் என்னும் பெயர் இருக்கிறது. காளிதாஸனுடைய வாக்கு உத்தமமான வியவஹாரம். அவர் ஓரிடத்தில்

हरिर्यथैकः पुरुषोत्तमः स्मृतः महेश्वरस्त्र्यम्बक एव नापरः ।

[ரகுவம்சம், III, 49.]

वेदान्तेषु यमाहुरेकपुरुषं व्याप्य स्थितं रोदसी
यस्मिन्नीश्वर इत्यनन्यविषयः शब्दो यथार्थाक्षरः ।
अन्तर्यश्च मुमुक्षुभिर्नियमितप्राणादिभिर्मृग्यते
स स्थाणुः स्थिरभक्तियोगसुलभो निःश्रेयसायास्तु नः ॥

[விக்ரமோர்வசீயம், I, 1.]

ஈசுவரன் என்னும் சப்தம் முழுவதும் பொருந்தி யாரிடம் இருக்கிறதோ அவர் பக்தி பண்ணுகிறவர்களுக்கு ஸுலப ராக வந்து கிருபை செய்கிறாரென்று இதிற் சொல்லு கிறார். புருஷோத்தமனென்றால் ஹரியைத்தான் குறிக்கும். ஈசுவரனென்றால் திரியம்பகனைத்தான் குறிக்கும் என்று அந்த மஹாகவி சொல்லுகிறார். இப்படி அமரகோசமும், லோக வியவஹாரமும், மஹாகவியின் வாக்கும் ஈசுவரன் என்பது பரமசிவனைக் குறிக்கும் என்று சொல்லுகின்றன. அந்த ஈசுவரஸ்வரூபந்தான் விஸ்வரூபம்.

कालोऽस्मि लोकक्षयकृत् प्रवृद्धः

[கீதை, XI, 32.]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. லோகத்தை ஸம்ஹாரம் செய்யும் ஸ்வரூபத்தை அவர் காட்டினார். "இவர்களெல் லோரும் என்னுடைய தெற்றுப் பற்களில் மாட்டிக்கொண் டிருக்கிறார்கள்" என்று அவர் சொல்லுகிறார். ஆகையால் அவர் எடுத்துக்கொண்டது பரமேசுவரரின் ஸ்வரூபம் என்று தெரிகிறது. அதனால் ஈசுவரனும் கிருஷ்ணனும் அபேதம் என்பதும் தெரிகின்றது. பின்னால் ஓரிடத்தில் பகவான் அர்ச்சுனனைப் பார்த்து,



ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥
तमव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥

[கீதை, XVIII, 61 62.]

என்று சொல்லியிருக்கிறார். 'அவனுடைய அநுக்கிரஹத் தால் பரம சாந்தி கிடைக்கும். மற்ற இடங்களில் அஹங் காரம் போகாது என்று சொல்லுகிறார். ஈசுவர சப்தத்தைச் சொல்லும்பொழுது அவன் என்கிறார். மற்ற இடங்களில் நான் என்றே சொல்லிவைத்திருக்கிறார். இப்படி விசுவ ரூபகாலத்திலும் பரம மோக்ஷத்தை அடைவதைச் சொல் லும்பொழுது ஈசுவரனைச் சொல்லுகின்றார். ஈசுவரன் தான் பரம சாந்தியைக் கொடுப்பவன். இந்த அபேதத்தை உணர்ந்து ஸ்மார்த்தர்கள் விஷ்ணு கோயிலுக்குப் போகிறார் கள். சிவன் கோயிலுக்கும் போகிறார்கள். விபூதி ருத்தி ராக்ஷம் தரித்துக்கொண்டிருப்பினும் பரம பக்தியுடன் விஷ்ணுகோயிலுக்குப் போகிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஈசுவராபேதமானவர். அவர், "முன்பு நான் இதை விவஸ்வானுக்குச் சொன்னேன். யோக மானது இப்பொழுது கிலமாகிவிட்டது. அதற்காக மறு படியும் வந்தேன்" என்றார்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

[கீதை, IV-7.]

என்று அவரே வேறோரிடத்திற் சொல்லியிருக்கிறார். 'எந்த எந்தக் காலத்தில் தர்மம் க்ஷீணித்து அதர்மம் தலையெடுக்கிறதோ அப்பொழுது நான் லோகத்தில் அவதாரம் செய்வேன்' என்று சொன்னார். 'அப்படி அநேக ஜன்மங்கள் எனக்கு ஆயின; உனக்கும் அநேக ஜன்மங்கள் ஆய்விட்டன. நான் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளுவேன். உனக்குத் தெரியாது. நீ நரன்; நான் நாராயணன்.' என்று சொல்லுகிறார். நர நாராயணர்கள் பதரி நாராயணத்தில் இருந்து தபஸ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தபஸைக் கெடுப்பதற்காகத் தேவதைகள் அநேக அப்ஸரஸுகளை அனுப்பினார்கள். அவர்கள் வந்து இவர்களுக்கு முன் நடனம் செய்து கலைக்க ஆரம்பித்தார்கள். அதைக் கண்ட நரன் ஹுங்காரஞ் செய்து கோபித்துக்கொண்டார். நாராயணர் தம்முடைய தொடையைத் தட்டினார். உடனே அதிலிருந்து முன்னே இருந்த அப்ஸரஸுகளைவிட அதிக லாவண்யத்தோடு ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் உதித்தார்கள். அவர்களுடைய அழகைக் கண்ட அப்ஸரஸுகள் வெட்கப்பட்டுப் போய்விட்டார்கள்.

இப்படி அநேக அவதாரங்களை எடுத்த ஸ்ரீகிருஷ்ணர் ஞானோபதேசம் செய்யும்பொழுது ஈசுவரனோடு அபேதமாக இருந்து விசுவரூப தரிசனத்தைக் காட்டினார். ஈசுவரனுடைய கிருபையால்தான் ஞானம் உண்டாக வேண்டும்.

आरोग्यं भास्करादिच्छेच्छ्रियमिच्छेद्धुताशनात् ।
ईश्वराज्ज्ञानमन्विच्छेज्ज्ञानदाता महेश्वरः ॥

என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஞானஸ்வரூபம் அவன்தான். மஹேசுவரனுக்குத்தான் ஸர்வஜ்ஞன் என்னும் பெயர் உண்டு. அமரகோசம் அப்படியே சொல்லுகிறது.



ईशानः सर्वविद्यानाम् ।

என்பது வேதம். லோக பரிபாலராகும்பொழுது ஈசுவரனாகவும் பரமாத்மா இருக்கிறார்.

ஜீவப் பிரம்ம அபேத யோகம் நஷ்டமாயிற்று. அதைப் புனருத்தாரணம் பண்ண ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம் பண்ணினார். அந்த அவதாரம் துவாபராந்தத்தில் நடந்தது. கலி தொடங்கிய பின்பு மறுபடியும் அந்த யோகத்திற்குக் குறைவு ஏற்பட்டது. எழுபத்திரண்டு துர்மதங்கள் உண்டாயின. அவை மிகவும் பயங்கரமாகக் கிளம்பின. இவைபோன்ற விஷயங்கள் எப்பொழுதும் ஆரம்பத்தில் பலமாகத்தான் உண்டாகும். அப்புறம் தாமே அடங்கிவிடும். ப்ரௌடா விவாஹம் செய்யவேண்டுமென்று சிலர் ஆரம்பித்தார்கள். முதலில் வெகு வேகமாக நடந்துவந்தது. இப்பொழுது அடங்கிவிட்டது. ஈசுவர சந்திரவித்யாஸாகரர் என்பவர் விதவா விவாஹம் பண்ணவேண்டுமென்று ஏற்பாடு பண்ணினார். முதலில் மிகவும் தீவிரமாக அவருடைய முயற்சி நடந்துவந்தது. இப்பொழுது வரவரக் குறைந்துகொண்டே வருகிறது. ஆரம்பத்தில் இந்தமாதிரி உண்டாகிறவை தடபுடலாகத்தான் இருக்கும். அப்புறம் சாந்தமடையும். அஸந்தர்ப்பங்களெல்லாம் இப்படிப்பட்டவையே. கலி அதர்மயுகம் ஆகையால் துர்மதங்கள் மிகவும் பலமாக எழுந்துவிட்டன. வேததாத்பர்யம் கருணாநிதியான ஸர்வேசுவரனிடத்திற் கலந்து நிற்கவேண்டுமென்பதே; கொஞ்சம் பேதம் இருந்தாலும் அங்கே பயம் உண்டு. அதுதான் அத்வைதம். அந்த அத்வைத நம்பிக்கை கலியுகத்தில் குறைவுபட்டது. கிருதயுகத்தில் அது நிறைந்து இருந்தது. அப்புறம் துவாபர யுகத்தில் கொஞ்சம் குறைவுபட்டது.

கலியிலோ தடபுடலாக அதர்மம் வந்தது. 72 மதங்கள் கிளேத்தன. ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குக் கொஞ்ச நேரம் ஞானோபதேசம் செய்தார். மற்ற ஸமயங்களிலெல்லாம் ராஜ்யபாரம் பண்ணினர். அதற்கு வேண்டிய யுக்திகளெல்லாம் செய்தார். பஞ்சபாண்டவர்களுக்காகத் தூது போனர். இப்படிப் பல காரியங்களை வைத்துக்கொண்டு ஒரு ஸமயத்தில் மட்டும் ஞானோபதேசம் செய்தார். கலி காலத்தில் அப்படிச் செய்வது உபயோகப்படாது. முழுவதும் அதே காரியமாக இருக்கவேண்டும். இருட்டில்தான் விளக்கு அதிகமாகப் போடவேண்டும்.

'கலியில்தான் அதர்மம் நடக்குமென்று புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றதே, பின்பு வேதாத்தியயனம் எதற்கு? அது கூடாது, இது கூடாது என்று சொல்லுகிறீர்களே' என்று சில பேர் ஆக்ஷேபிக்கிறார்கள்.

எதற்காகத்தான் இப்படி நடக்கவேண்டுமென்றெழுதினர்கள். கெட்டுத்தான் போகப்போகிறதே! இவைகளெல்லாம் எதற்கு?

ஜோஸ்யம் பார்ப்பது தப்பு என்பார்கள். துக்கம் வரப்போகிறதென்று பல நாட்களுக்கு முன்பே தெரிந்து எதிர்பார்த்துக் கஷ்டப்பட வேண்டாம். ஸந்தோஷம் வரப்போகிறதென்று பல நாட்களுக்கு முன் தெரிந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் ஸந்தோஷம் வந்த பொழுது அதனுடைய அருமை தெரியாது. திடீரென்று வந்தால்தான் அதிக ஸந்தோஷமாக இருக்கும். ஆகையால் கெட்ட பலன் நல்லபலன் ஆகிய இரண்டுக்கும் ஜோஸ்யம் வேண்டுவதில்லை. நாம் செய்வதைச் செய்யலாம். வந்தபின்பு பார்த்துக் கொள்ளலாம். ஆகையால் முன்பே பார்க்கவேண்டாம் என்று சொல்லுவதுண்டு.



அதுபோல, இப்படிக் கலி வரப்போகிறதென்று ஏன் சொல்ல வேண்டும்? என்று ஓர் ஆக்ஷேபனை உண்டு. முன்பு சொல்லி எச்சரிக்கை செய்வதனல் என்ன பிரயோஜனம்? என்று கேட்கிறார்கள். ஓர் ஊரில் திருட்டுப் பயம் அதிகமாக இருக்கிறது. 'போலீஸ்காரன் வந்து திருட்டுப் பயம் இருக்கிறது; எல்லாரும் ஜாக்கிறதையாக இருங்கள்' என்று சொல்லிவிட்டுப் போகிறவன் முன்பு சொன்னவர்களைப் போன்றவன். திருடன்தான் வரப்போகிறானே; நாம் எப்படி ஜாக்கிறதையாக இருக்க முடியும்? என்று சொல்லிச் சாமான்களையெல்லாம் வீதியிற் போட்டுவிடுகிறவர்களைப் போன்றவர்கள் இதை ஆக்ஷேபிப்பவர்கள். ஜாக்கிறதையாக இருந்தால் சில பேரையாவது ரக்ஷித்துக் கொள்ளலாம். அதர்மம் வரப்போகிறதென்று பயந்து இன்னும் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்தக் கலியுகத்தில் வரும் அதர்மப் பிரவாஹத்தை ஒருவன் எதிர்த்து நின்றால் மற்ற யுகத்திற் கிடைப்பதைவிடக் கோடிப்பங்கு பலன் உண்டாகும். எதிர்ப்புண்டான ஸமயத்தில் தடுத்து நின்றால்தான் பெருமை அதிகம். உலகம் பரிஹாஸம் செய்கிறதென்று நினைக்காமல் தைரியமாகத் தர்மாநுஷ்டானங்களைக் காப்பாற்றினல் சித்தசுத்தி உண்டாகும்.

## कलिः साधुः

என்று சொல்லப்படுகிறது. மற்ற யுகங்களில் பல காலம் தபஸ் செய்து அடையும் பலனை இந்தக் கலிகாலத்தில் சில காலம் செய்வதனல் அடையலாம். இந்த யுகத்தில் ஈசுவரன் தம்மிடம் வருபவர்கள் ஒருவரும் இல்லையே என்று காத்திருப்பார். யாராவது போனல் நன்றாக அநுக்கிரஹம்

செய்வார். அந்த யுகங்களிற் பலபேர்கள் அவரிடம் போவதால் நெருக்கத்தில் ஸாவகாசம் இருக்காது. அதனால் மிகவும் கருணையோடு அநுக்கிரஹம் பண்ணுவார். ஆகையால் நாம் ஜாக்கிரதையாக இருப்பதற்காக வேதங்கள் மார்க்கங்களைச் சொல்லுகின்றன. அவைகளில் கொஞ்சம் அநுஷ்டித்தாலும் பலன் அதிகம்.

வேகமான அதர்மப்பிரவாஹம் கலியுக ஆரம்பத்தில் வந்தது. அதைத் தடுக்கவேண்டுமென்று பரமேசுவரன் எண்ணினார். எண்ணிப் பிராம்மண வம்சத்தில் அவதாரம் பண்ணினார். யார் ஸர்வவித்தைகளுக்கும் தலைவரோ அந்த ஸதாசிவனே ஞானோபதேசம் செய்வதற்காக வந்தார். மற்றவர்களைவிடத் தாமே நேரில் போகவேண்டுமென்று எண்ணி ஞான காரியத்தைப் பிரதானமாக வைத்துக்கொண்டு வந்தார். விஷ்ணுவினுடைய அவதாரங்களில் க்ஷத்திரிய தர்மம் அதிகமாக இருக்கும்.

பிராம்மண வம்சத்தில் பரமேசுவரன் ஸ்ரீ ஆசாரியரவர்களாகப் பிறந்து மற்ற மதங்களை நிராகரணம் பண்ணினார். அந்தக் காலத்தில் 72 மதங்கள் இருந்தனவென்று சங்கர விஜயம் சொல்லுகிறது. புத்த மதம், ஸாங்கிய மதம், வைசேஷிகம் முதலிய மதங்களைப் பற்றித்தான் இப்பொழுது தெரிந்து கொள்ளமுடியும். புத்த மதம் தேசாந்தரங்களில் இருக்கின்றது. பிறந்த இடமாகிய பரதகண்டத்தில் இல்லை. மற்ற மதங்கள் புஸ்தகங்களில் இருக்கின்றன. இப்பொழுது பிரசாரத்தில் இல்லாத அந்த மதங்கள் சிலவற்றை தேசாந்தரங்களில் உள்ளதனாலும், புஸ்தகங்களாலும், இடிந்த கோயில்களாலும் முன்பு இருந்த மதங்கள் இவை என்று கண்டுபிடிக்கிறோம். ஸ்ரீபகவத்பாதரவர்கள் அவதாரம் பண்ணாமல் இருந்தால்



அவைகளைக் கண்டுபிடிக்க இவ்வளவு கஷ்டம் வேண்டியதில்லை. பரதகண்டத்தில் அந்த எழுபத்திரண்டு மதங்களில் ஒன்றாவது இல்லை. எல்லாவற்றையும் ஸ்ரீ ஆசார்யர்கள் நிராகரணம் பண்ணினார்கள். தர்மாநுஷ்டானம் உள்ள பரத கண்டத்தில் இல்லாமல் மற்றத் தேசங்களில் இருக்கலாமென்று சில மதங்களை விட்டுவைத்திருக்கிறார். நாஸ்திகத் தன்மையும் மிருகஸ்வபாவமும் உடையவர்களுக்கு, இருக்கிற மதங்களுக்குள் ஆத்மகுணங்களைச் சொல்லும் அந்த மதங்கள் இருக்கட்டும் என்று அவர் நினைத்தார்.

ஸ்ரீமத் சங்கராசார்யர்கள் அவதாரத்தின் பின்பு அதற்கு முன் இருந்த மதங்களெல்லாம் குறைந்துவிட்டன. இப்பொழுது இருக்கும் பலவகையான மதங்களெல்லாம் அவருடைய காலத்துக்குப் பின் ஏற்பட்டவை. ஸ்ரீமத் ஆசார்யர்கள் காலத்துக்கு முன்பு இருந்த எல்லா மதங்களும் போய்விட்டன. ஆனால் பின்பு வந்த ராமாநுஜாசாரியர், மத்வாசார்யர், கிருஷ்ணசைதன்யர் முதலியவர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்கள் ஒன்றாவது தனக்கு முன் இருந்த மதங்களை அழிக்கவில்லை. ராமாநுஜாசார்யர் அவதாரத்திற்குப் பின்பு அத்வைதம் இல்லை என்று சொல்ல முடியவில்லை; அப்படியே மத்வாசாரியர் அவதாரத்திற்குப் பின்பு அத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய இரண்டும் இல்லை என்றும் வரவில்லை. நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் காலத்திற்குப்பின் அவர் அவதாரத்திற்கு முன் இருந்தவை இல்லை என்று நன்றாகத் தெரிகின்றது. ஆகையால் தான் அவருக்கு ஜகதாசாரியர்கள் என்ற கௌரவம் உண்டாயிற்று. ஸ்ரீ ஆசார்யர்கள் இந்தக் கர்ம பூமி முழுவதையும் மற்ற மதங்களின் உபதேசம் இல்லாமற் செய்து பரிசுத்தம் செய்ய வேண்டு

மென்று நினைத்தார்; அப்படியே பண்ணினார். அந்தப்படி செய்யப் பின்னால் வந்தவர்களால் முடியவில்லை. சில சில பேர்கள் மட்டும் அவர்களுடைய அபிப்பிராயப்படி அநுஷ்டானம் செய்து வருகிறார்கள். ஆகையால் இப்பொழுது இங்கே இருக்கும் மதங்கள் எல்லாம் ஸ்ரீ ஆசார்யர்களுக்குப் பிற் காலத்தில் வந்தவைகளாகும்.

மற்றத் தேசங்களில் உள்ள மதங்கள் வேதத்தில் உள்ள ஏகதேச குணங்களை எடுத்துக்கொண்டன. ராமாநுஜாசார்யரும் மத்வாசார்யரும் விஷ்ணு ஸம்பந்தமான சப்தங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டார்கள். ஸ்ரீகண்டாசார்யர் சைவ சப்தங்களை மாத்திரம் கிரஹித்துங் கொண்டார். பௌத்தர்கள் இப்படியே சிலவற்றை எடுத்துங் கொண்டார்கள். நம் ஆசார்யர்கள் ஒருவர்தாம் எல்லாவற்றையும் ஒப்புங்கொண்டார். மற்றவர்கள் வேத முழுவதையும் ஒப்புகொள்ளவில்லை. நம் ஸ்ரீ ஆசார்யர்கள்தாம் எல்லாம் ஒன்றே என்று எல்லாவற்றையும் பிரமாணமாகக் கொண்டார்.

எல்லாம் ஸம்மதம் என்பதுதான் அத்வைதம். அந்த அத்வைத நிலை வருவதற்குக் கர்மாநுஷ்டானங்களை வேதம் சொல்லியிருக்கிறபடி செய்து வரவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாக நாம் அநுஷ்டானம் செய்து வருகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஸுலபமாக நமக்கு அத்வைத ஸித்தி உண்டாகும். இப்பொழுது பேதமாக இருந்து அநுஷ்டானம் பண்ணினால் பின்பு அபேதமான நிலை உண்டாகும். இங்கே பேதமாக இருந்தால் அங்கே பேதம்தான் உண்டாகும். இவைகளெல்லாம் என்ன கட்டு? இவை எதற்காக? என்று சிலர் நினைக்கலாம். நாம் பெரிய கட்டுக்குள் இருக்கிறோம். ஆசை, கோபம் முதலிய



வைகளால் பாபங்கள் செய்து கட்டை ஸம்பாதித்திருக்கிறோம். இந்தக் கட்டை நிவர்த்திப்பது எப்படி?

தம்பக்கூத்தாடியை ஒரு தூணிற் கட்டிவிட்டுத் திரைபோட்டுவிட்டால் கொஞ்ச நேரத்தில் மற்றொரு தூணில் அதேமாதிரி கட்டுடன் இருப்பான். அப்படிச் செய்வதற்குச் சிலவகையான தந்திரங்கள் இருக்கின்றன. முதலிற் கட்டும்பொழுது கைகளை ஒருவகையாக அகற்றி வைத்துக்கொள்ளுவான். திரைபோட்ட பின்பு கைகளை குறுக்கிங் கொள்ளுவான். அப்பொழுது அந்தக் கட்டுத் தளர்ந்துவிடும். அதை மாற்றி வேறொரு தூணில் அப்படியே வைத்துக்கொண்டு இருந்துவிடுவான். ஒரு கட்டை அவிழ்க்க வேண்டுமானால் இன்னும் இறுகிய கட்டைப் போட்டால் முதலில் இருந்த கட்டுத் தளர்ந்துவிடும். அதுபோல நமக்குள்ள பாபக் கட்டைத் தளர்த்த வர்ணாசிரம தர்மாநுஷ்டானங்களாகிய வேறொரு கட்டைப் போட வேண்டும்.

निस्त्रैगुण्ये पथि विचरतां को विधिः को निषेधः ।

அந்தக் கட்டு இல்லாவிட்டால் இந்தக் கட்டு வேண்டாம். அந்தக் கட்டு இல்லாத நிலை வரத்தான் இந்த அநுஷ்டானங்களைச் செய்யவேண்டும். எண்ணெய் சாப்பிடுவது கஷ்டமாக இருக்கிறது. ஆனால் அந்தக் கஷ்டத்தை எதற்காக ஏற்றுக் கொள்ளுகிறோம். நம்முடைய தேஹ அஸௌக்கியத்தைப் போக்கிங்கொள்ளத்தான் அப்படிச் செய்கிறோம். எத்தனைக் கெத்தனை இந்தக் கட்டுகளை இறுக்கிப் போடுகிறோமோ அத்தனைக் கத்தனை பெரிய கட்டுத் தளர்ந்துவிடும்.

இந்தமாதிரி கர்மாநுஷ்டானம் பண்ணிவந்தால் அத்வைத நிலைவரும் என்று நம் ஸ்ரீ ஆசார்யர்கள் அநுக்கிரஹம்

பண்ணினார். அவர் எதையும் தள்ளவில்லை. தர்மானுஷ்டானம், ஞானம், சிவ விஷ்ணு பக்தி எல்லாம் ஸம்மதம் என்பது அவருடைய கொள்கை. ஒவ்வொன்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றவர்கள் மதத்தைப் பிரசாரம் செய்தார்கள். அவர்களில் ஸ்ரீ ஆசார்யர்களுக்கு முன்பு இருந்தவர் ஒருவரும் இல்லை. பின்வந்தவர்கள் இருக்கிறார்கள். நம் ஸ்ரீ ஆசார்யர்களுக்கு முன்பு இருந்த மதஸ்தர்களில் எவ்வளவோ கடுமையான அனுஷ்டானங்கள் உடையவர்கள் இருந்தார்கள். பலவிதமான நிர்ப்பந்தங்கள் அவைகளில் இருந்தன. அவை வேதம் முழுவதையும் பிரமாணமாகக் கொள்ளாததனால் அழிந்தன. நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் சுருதிஸ்மிருதி புராணங்களில் எதையும் தள்ளாமல் எல்லாவற்றையும் அநுஸரித்தார்.

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।

[ச்வேதாச்வதரோபநிஷத்.]

त्रिधा हितं पणिभिर्गुह्यमानम् ।

[நாராயணோபநிஷத்.]

यो देवानां प्रथमं पुरस्ताद्विश्वाधिको रुद्रो महर्षिः ।

[ச்வேதாச்வதரோபநிஷத்.]

எந்த ஈசுவரன் வேதமாக இருந்தாரோ, முதல் பிரம்மாவுக்கு எந்த ஈசுவரன் வேதத்தைச் சொன்னாரோ, ஸமஸ்த தேவதைகளுக்கும் முன்பு யார் இருந்தாரோ அவர் பிராம்மணர்; அவர் பிரம்மாவை உண்டு பண்ணினார். அவர் பரம சுபத்தைக் கொடுத்தார். அந்த சுபம் ஞானம். அதைக் கொடுப்பவர்தாம் சிவன். மங்களமான அதை அநுக்கிரஹம் பண்ணுபவர் பரப்பிரம்மம். எல்லாம் அவரே.



अतिकल्याणरूपत्वान्नित्यकल्याणसंश्रयात् ।

[மங்கலபாட சுலோகம்]

சிவம், கல்யாணம், மங்கலம், சுபம் எல்லாம் அவரே. நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் பரமமங்கள ஸ்வரூபம். ஆதியில் இருந்த அத்வைதத்தை உபதேசிக்க ஈசுவராம்சமே ரூபமாக எடுத்து அவதாரம் செய்தது. கலியுகத்தில் அதர்மம் இருக்கத்தான் இருக்கும். ஆனாலும் அதிகமாகக் காக்க வேண்டும். 'இதரமதங்கள் அவரவர்களுடைய பக்குவத்திற்கேற்பப் பிரயோஜனந்தர இருக்கட்டும்.' என்று அவர் நினைத்தார். பல மதங்கள் எதற்காக இருக்கவேண்டும்? பரம மோக்ஷ மார்க்கத்துக்கு அநதிகாரிகளாக இருப்பவர்களுக்காக அவை இருக்கவேண்டும். ஆனாலும் பரமதத்துவமாக இருப்பது மறையாமல் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று அநுக்கிரஹம் பண்ணினார். நம்முடைய வீட்டில் பல இடங்களில் ஜலம் இருக்கிறது. எல்லாவிடங்களிலும் சுத்தமாக இருக்காது. கிணற்றில் சுத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் அசுத்தமாக்கக் கூடாது. சில ஜலம் அசுத்தமாக இருக்கத்தான் இருக்கும். அப்படியில்லாவிட்டால் எல்லாம் அசுத்தமாக ஆகிவிடும். அதைப் போலச் சில மதங்கள் இருக்கின்றன. அவைகளாலும் மெள்ள மெள்ள மோக்ஷம் அடையலாம். நேர் வழி இது. மற்றவைகள் கொஞ்சம் சிக்கலான வழிகள். ஸூதஸம்ஹிதையிலும் வைத்யநாத தீக்ஷிதீயத்திலும் இந்த விஷயம் சொல்லப் பட்டிருக்கிறது.

ஸகல அவைதிக மதங்களையும் நிராகரணம் பண்ணி உபாஸனா மார்க்கம், கர்ம மார்க்கம், ஞான மார்க்கம் ஆகிய எல்லாவற்றையும் தழுவிக் கொண்டு அத்வைத மார்க்கத்தை

ஸித்தாந்தம் பண்ணுவதற்காக ஸ்ரீமத்பகவத்பாதர்கள் அவதாரம் பண்ணினார். திக்விஜயம் செய்தார். வாஸ்தவத்தில் திக்விஜயம் பண்ணினவர் அவர்தாம். முப்பத்திரண்டு வயஸ் அவர் இங்கே இருந்தார். இளமையில் பத்து வயஸ் போக மிகுதியுள்ள இருபது வருஷங்களில் ஆஸேது ஹிமாசலம் மூன்று தடவை ஸஞ்சாரம் செய்து திக்விஜயம் செய்தார். பதரீநாராயணத்திற்குப் போனால் அங்கே ஸ்ரீஆசார்யர்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு ஒருவர் இருக்கிறார். ஸ்ரீஆசார்யர்கள் போனதற்கு அடையாளம் இருக்கிறது. இங்கே தெற்கே காலடியில் அப்படியே சில அடையாளங்கள் இருக்கின்றன. இந்த விதம் பல இடங்களில் அவர் போனதற்குரிய அறிகுறிகள் இருக்கின்றன. இவ்வளவு அல்ப காலத்தில் பல இடங்களுக்குச் சென்று அங்கங்கே பல காரியங்களைச் செய்து மற்ற மதங்களை நிராகரணம் பண்ணினதைப் பார்த்தால் அவர் அவதார புருஷராகத்தான் இருக்க வேண்டும் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஸகல வேதமும் ஸ்மிருதிகளும் பிரமாணம், ஸகல மூர்த்திகளும் ஸம்மதம், ஸகல மதத்திலும் உள்ள விஷயங்கள் அத்வைதத்தில் உண்டு. அத்வைத மதத்தை ஸ்தாபித்துத் திக்விஜயம் செய்தார். அதனால் ஸ்ரீ ஜகதாசார்யர்கள் என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று. வேதத்தைத் தவிர ஒன்றும் புதிதாக உண்டாகவில்லை. எல்லாம் அதிலுள்ள ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு சொல்பவைதாம். ஸ்ரீ ஆசார்யர்கள் ஷண்மதஸ்தாபனம் செய்திருக்கிறார். சிலர் அவைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு ஒன்றைத் தூஷிக்கிறார்கள். சிவானந்தலஹரீ, ஸௌந்தர்யலஹரீ என்பவைகளில் த்வைதமும் விசிஷ்டாத்வைதமும் சொல்லப்பட்டிருக்



கின்றன. ஆரம்பத்தில் பக்தி வேண்டும். அப்பொழுது பகவானுக்குத் தாஸராக நாம் இருக்கிறோம். அப்புறம் அவன் நமக்குள் அந்தர்யாமியாகக் கலக்கிறான். அதுதான் விசிஷ்டாத்வைதம். பின் வந்தவர்கள் ஒன்றை வைத்துக் கொண்டு மற்றவைகளைத் தள்ளுகிறார்கள். எல்லாம் ஒன்றுக்கே ஸாதனம் என்பதை அறிவதில்லை. எல்லாம் அத்வைதத்தில் முடிகின்றன. சரித்திரத்தின் உதவியினால் பார்த்தால் இப்படி உள்ள மதம் வேறொன்றும் காணப்படவில்லை. தத்வத்தினால் மாத்திரம் ஸ்வல்ப காலத்தில் மற்ற எல்லா மதங்களையும் ஜயித்து அத்வைத மதத்தை நிலைநாட்டினதைப் போல ஸ்வல்ப காலத்தில் தத்வத்தினால் மாத்திரம் ஒரு பெரிய காரியத்தைச் செய்தவர்கள் ஒருவரும் இல்லை.

ஸ்ரீ சங்கராசாரியர்களுடைய காலக்கணக்கில் சில பேதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நமக்கு அநுக்கிரஹந்தான் முக்கியமாக வேண்டும். அவர் திக்விஜயம் செய்வதற்கு முன் இருந்த ஸ்திதி, அப்புறம் இருக்கும் ஸ்திதி, நாம் இனி மேற் பெறவேண்டியது என்ன, அதற்கு என்ன மார்க்கம் என்பவைகளைப் பார்ப்பதே போதும்.

ஸ்ரீ சங்கராசாரியர்களுடைய சரித்திரம் அநேகர் எழுதியிருக்கிறார்கள். மாதவீய சங்கர விஜயம் என்று ஒன்று இருக்கிறது. ஆனந்த கிரீய சங்கர விஜயம், சித்விலாஸீய சங்கர விஜயம், கேரளீய சங்கர விஜயம், வியாஸாசலீய சங்கர விஜயம் என்பவைகளும் நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்களுடைய சரித்திரத்தைச் சொல்லுபவைகளே. கோவிந்தாசலர் என்பவர் செய்த சங்கரதிக்விஜயஸாரம் என்று ஒரு கிரந்தம் இருக்கிறது. பலவகை இராமாயணங்களுக்குள் பேதம் இருப்பது போல இவைகளுக்குள்

கதாபேதங்கள் ஸ்வல்பம் இருக்கும். எல்லாவற்றிலும் ஒரே விதமாகச் சொல்லியிருப்பவைகளை நாம் ஸத்தியமென்று எடுத்துக் கொள்ளவேண்டும். அதிகமாகச் சொல்லப் பட்டவைகளில் நல்லவைகளாக இருப்பவைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். விரோதம் இல்லாத வரையில் எல்லா வற்றையும் எடுத்துக் கொள்ளலாம்.

நேற்றுச் சொன்னது வேறு விஷயங்களைச் சொல்ல வந்த புஸ்தகங்களில் (External-evidence) ஸ்ரீ ஆசார்யரவர் களைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது என்பதைச் சொன் னேன். அந்த வகையில் பதஞ்ஜலி மஹாபாஷ்யம் செய் ததைச் சொல்ல வந்த பதஞ்ஜலி விஜயத்தில் உள்ள ஸ்ரீ ஆசார்யர்களுடைய வரலாற்றைச் சொன்னேன். சங்கர விஜயங்களைத் தவிர இன்னும் வேறு எந்த எந்தப் புஸ்தகங் களில் ஸ்ரீ ஆசார்யர்களுடைய சரித்திரம் வந்திருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

சிவரஹஸ்யம் என்ற ஒரு பெரிய புஸ்தகம் இருக் கிறது. அது இதிஹாஸம். இதிஹாஸம் என்பது பழைய கதை. இதி+ஹ+ஆஸ=இப்படி இருந்தானும் என்பது அதன் அர்த்தம். புராண வகைகளிற் சேர்ந்ததுதான் இது. ராமாயணமும் பாரதமும் இதிஹாஸங்கள். சிவ ரஹஸ்யமும் அவைகளைச் சேர்ந்ததே. ராமாயணம் 24,000 கிரந்தம் அடங்கியது. ஒரு கிரந்தமென்பது 32 எழுத் துக்கள் அடங்கியது. 'சுக்லாம்பரதரம் etc.' என்னும் அநுஷ்டுப் சுலோகம் ஒரு கிரந்தம். ஒவ்வொரு காயத்திரி எழுத்தையும் முதலில் வைத்து ஒவ்வோராயிரமாக 24,000 கிரந்தங்கள் செய்யப்பட்டன. பாரதம் லக்ஷம் கிரந்தம் உள் ளது. சிவரஹஸ்யமும் லக்ஷம் கிரந்தம் அடங்கினது; ஜைகீஷவ்யர் என்பவர் பண்ணியது. ஆக நம்முடைய



புராண இதிஹாஸங்களில் 3 புஸ்தகங்கள் லக்ஷம் கிரந்தம் உள்ளவை. அவை பாரதம், சிவரஹஸ்யம், ஸ்காந்தபுராணம் என்பவை.

சிவரஹஸ்யத்தில் 12 அம்சங்கள் இருக்கின்றன. முழுவதும் ஈசுவர ஸம்பந்தமான விஷயங்களைச் சொல்லு வது அது. அதில் 9-வது அம்சத்தில் பக்தர்களுடைய சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. 63 நாயன்மார்களு டைய சரித்திரமும், ஹரதத்தாசாரியர் முதலியவர்களுடைய சரித்திரமும் அதிற் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவாம்ச மாகவே வந்த ஸ்ரீ பகவத் பாதர்களுடைய சரித்திரமும் அதிற் சொல்லப்படுகிறது.

நம் ஸ்ரீ ஆசார்யர்கள் பக்தராக நடித்தார்கள். ராமர், கிருஷ்ணர் முதலியவர்கள் தங்கள் தங்கள் அவதாரத்துக்கு ஏற்றபடி நடந்துகொண்டார்கள். அதைப் போல ஸ்ரீ பகவத்பாதர்களும் பூஜை முதலிய அநுஷ்டானங்களைச் செய்து பக்தராக நடித்தார்கள்.

அவருடைய சரித்திரம் சிவரஹஸ்யத்தில் 9-ஆவது அம்சத்தில் 16-ஆவது அத்தியாயத்தில் முழுவதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவதாரம் முதல் ஸித்திபரியந் தம் சொல்லப் பட்டிருக்கிறது.

केरले शशलग्रामे विप्रपत्न्यां मदंशजः ।
भविष्यति महादेवि शङ्कराख्यो द्विजोत्तमः ॥

[சிவரஹஸ்யம்]

என்று அதில் இருக்கிறது. கலியின் ஆதியில் 2,000 வருஷங்களுக்கு மேலே என்று காணப்படுகிறது. அதில் கடைசியில் ஒரு விஷயம் சொல்லப்படுகிறது. ஸ்ரீ சங்கரா சாரியர்கள் கைலாஸத்துக்குப் போய், போக-யோக-வர- முக்தி-மோக்ஷ லிங்கங்களாகிய பஞ்ச லிங்கங்களைக் கொண்டு

வந்து ஆராதனை செய்து வந்தாரென்றும், அந்த ஆராதனையின் பலத்தினால் ஜயம் செய்தாரென்றும் அந்தப் புஸ்தகம் சொல்லுகிறது. சிவமாஹாத்மியத்தை எடுத்துச் சொல்ல வந்த புஸ்தகமானதால் ஸ்ரீ ஆசார்யர்களுடைய திக்விஜயத்துக்குக் காரணம் பஞ்ச லிங்க ஆராதனை யென்று சொல்லியிருக்கிறது.

நேற்றும் இன்றும் சொன்ன புஸ்தகங்களில் பதஞ்ஜலி விஜயம் அச்சிட்டு வெளி வந்திருக்கிறது. சிவரஹஸ்யம் இன்னும் வெளிவரவில்லை. சிவரஹஸ்யத்தை ஒருவர் அச்சிட வேண்டுமென்று பல ஏட்டுச்சுவடிகளை மடத்திற்குக் கொண்டுவந்தார். அந்த ஏட்டுச்சுவடிகள் எல்லாவற்றிலும் ஸ்ரீ சங்கராசார்யர்களின் சரித்திரம் இருந்தது. சங்கர விஜய புஸ்தகங்களுக்கு வியாக்கியானம் எழுதினவர்கள் இந்தச் சிவரஹஸ்யத்திலிருந்து சில சுலோகங்களை எடுத்து உதாஹரித்திருக்கிறார்கள். சிவரஹஸ்யம்-த்வைதாத்மகமான கிரந்தம். ஸ்ரீ சங்கராசாரியரவர்கள் புனருத்தாரணம் செய்த அத்வைத ஸித்தாந்தத்தை அந்த த்வைதமான கொள்கை யுடையவர்கள் ஆக்ஷேபிப்பவர்கள். அப்படி ஆக்ஷேபிப்பவர்களுக்குரிய புஸ்தகத்திலும் நம் ஸ்ரீ ஆசாரியர்களுடைய சரித்திரம் இருக்கிறது. கைலாஸத்தில் ஸ்ரீ ஆசாரியர்களுக்குப் பரமேசுவரன் பஞ்ச லிங்கங்களையும் கொடுக்கும் பொழுது 'மூன்று காலத்திலும் பில்வத்தால் அர்ச்சனை பண்ணு' என்று ஆஜ்ஞாபித்தாரென்று சிவரஹஸ்யம் சொல்லுகிறது.

அந்த ஆராதனம் நடந்து வரவேண்டுமென்றுதான் விவாஹகாலம் முதலியவைகளில் சந்திர மௌளீசுவர ஸம்பாவனை பண்ணுகிறார்கள். சில்லரைக் காரணங்களால் சிலர் அதை நிறுத்திவிடுகிறார்கள். பொது ஸொத்தான



ஒன்றை நாம் இழக்கக்கூடாது. கோயில் பூஜைசெய்யும் குருக்கள் ஸரியாக நடக்கவில்லை யென்றால், நாம் தினந்தோறும் சுவாமிதரிசனத்துக்குப் போனால் அவன் பயந்து நடப்பான். இல்லாவிட்டால் அவன் இஷ்டப்படி செய்வான். அவன் நன்றாக நடந்தாலும் நடக்காவிட்டாலும் நாம் போகவேண்டும். அநாதிகாலமாகப் பரம்பரையாக நடந்து வருகிற ஒன்றைத் தள்ளிவிட்டால் அப்புறம் புதிதாக ஒன்றை வைக்கமுடியாது. நன்றாக நடக்கவில்லை யென்று தள்ளிவிடக்கூடாது. எந்தவிதமான அபிப்பிராய பேதம் இருந்தாலும், நம்முடையது என்று நினைத்து நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்துவரவேண்டும். பணக்காரர்கள் தங்கள் வீட்டில் பூஜை செய்கிறார்கள். அதிகமான அபிஷேகத்திரவியங்கள், புஷ்பமாலைகள், ஊதுவத்தி, சந்தனம் முதலியவைகளைக் கொண்டு செய்வார்கள். ஓர் ஏழை செய்தால் பில்வதளத்தை வைத்துக்கொண்டு செய்துவிடுவான். சந்திரமௌளீசுவர பூஜை யாருடையது? இது சதுர்வர்ணத்தாருக்கும் நன்மை உண்டாக்கும் பொருட்டுச் செய்யப்படுவது. இது புதிதாக உண்டுபண்ணப் பட்டதன்று. வேதமார்க்கத்தின் வழியிற் கிடந்த முள்ளைப் பிடுங்கிச் சுத்தம் பண்ணித் தேசத்தையெல்லாம் ஒரு குடும்பமாக வைத்து அந்தக் குடும்பத்துக்கு உரிய ஒரு பூஜையாக இதை ஸ்ரீ ஆசார்யர்கள் வைத்தார்கள். சந்திரமௌளீசுவர பூஜை எல்லோருக்கும் ஸொந்தமானது. எல்லாருக்கும் சேர்ந்து ஒரு பூஜை பண்ணவேண்டுமென்றால் அது எவ்வளவு சிறப்பாக நடக்கவேண்டும்? இப்பொழுது நடப்பது போதாது. இந்தத் தேசத்தில் அரசர்களும், ஜமீன்தார்களும், பணக்காரர்களும், ஏழைகளும் இருக்கிறார்கள். ஓர் அரசனுடைய பூஜையே மிகவும் விசேஷமாக இருக்கும்.

பல அரசர்களுக்கும் வேறு பலருக்கும் ஆக செய்யப்படும் இந்தப் பூஜை மிகச் சிறப்பாக இருக்கவேண்டும் அல்லவா ? இந்தப் பூஜை இதுவரைக்கும் நடந்ததுபோல இனிமேலும் நடந்து வரவேண்டும்.

ஸ்ரீ ஆசாரியர்கள் பிரதிஷ்டை செய்து ஆராதிக்க வேண்டு மென்று ஆஜ்ஞாபித்த லிங்க ஆராதனை நடக்க வேண்டும். ஒரேயிடத்தில் இருந்தால் ஒரு பரம்பரை யோடே இந்த ஆராதனை நின்று போயிருக்கும். இது பரம்பரையாக நடக்கவேண்டுமானால் பெரிய அடையாளம் வேண்டும். மஹாவீரன் ஒருவன் தானாகப் புறப்பட்டால் எங்கே போனாலும் எவ்வளவோ காரியங்கள் நடக்கும். அப்படி ஸ்ரீ ஆசாரியர்கள் ஸர்வஜ்ஞராக இருந்தபடியால் எவ்வளவோ காரியங்களைச் செய்தார்கள். நாங்கள் உருவச் சின்னங்களைப் (Statue) போல வந்திருக்கிறோம். ஸ்ரீ ஆசார்யர்களுடைய நினைவு எல்லோருக்கும் மனதில் இருக்கவும், இல்லாதவர்களுக்கு, உண்டாக்கவும் நாங்கள் பிரயத்தினம் பண்ணுகிறோம் முத்துஸ்வாமி ஐயருடைய உருவச் சிலையைப் பார்த்தவர்கள் அவரை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதுபோல எங்கள் மூலமாக ஸ்ரீ ஆசார்யர்களுடைய ஞாபகம் எல்லோருக்கும் உண்டாக வேண்டு மென்பதுதான் எங்கள் ஆசை. இத்தனை யானை, ஒட்டகை, பரிவாரங்கள் முதலியவைகளை வைத்துக்கொண்டிருக்கிறோமே, இவைகளையெல்லாம் விட்டு விட்டுப் போய்விடலாமா என்று எனக்கே ஒரு ஸமயம் தோன்றிற்று. அடுத்தாற்போல் ஸ்ரீ சந்திரமௌலீசுவர ஆராதனையை யார் செய்வார்கள்? அவிச்சின்னமாக ஸ்ரீ ஆசார்யர்களுடைய ஆஜ்ஞையின் மேல் நடந்துவந்தது நின்று போய்விடுமே! என்ற யோசனை வந்தது? ஸ்ரீ சங்கராசார்யரவர்கள் இப்படித்தான் பரி



வாரங்களோடு இருந்தாரா? என்ற ஸந்தேஹம் ஒன்று உண்டாயிற்று. முத்துஸ்வாமி ஐயருடைய பிம்பத்தைப் பற்றிச் சொன்னேனல்லவா? சட்டை முதலிய உடைகளோடு அந்த பிம்பம் உட்கார்ந்திருக்கிறது. அதை அர்த்த ராத்திரியில் ஒரு நாள் பார்த்தால், அப்பொழுதும் சட்டை முதலியவற்றோடே இருப்பதைப் பார்க்கிறோம். முத்துஸ்வாமி ஐயர் அர்த்தராத்திரியிற் சட்டைபோட்டிருந்தாரா? என்று தோன்றியது. இந்த முத்துஸ்வாமி ஐயர் (பிம்பம்) இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தேன். அவருடைய பெயரைச் சிலை ரக்ஷிக்கிற தென்று மாத்திரம் கொள்ள வேண்டும். வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் சிலையைக் காப்பாற்ற ஒரு ஸமயம் காவல் போடவேண்டியிருந்தது. அவர் இருக்கும்போது காவல் அவசியமில்லை. அவர் இல்லாததால் காவல் அவசியமாயிற்று.

ஸ்ரீ ஆசார்யரவர்களின் பெயரை மாத்திரம் ரக்ஷிக்க நாங்கள் இருக்கிறோம். அத்தகைய பரம்பரையை ரக்ஷிக்கத் தக்க பெரிய அடையாளங்கள் வேண்டும். அதனால் பல்லைக் கடித்துக்கொண்டு இருக்கத்தான் வேண்டு மென்று தெளிந்தேன். ஸ்ரீமத் பகவத்பாதரவர்கள் செய்த ஆஜ்ஞையைப் பரம்பரையாக நிறைவேற்றுவதற்கு இவைகளெல்லாம் வேண்டி யிருக்கின்றன. அவர்களுக்குப் பகவான், மூன்று காலங்களிலும் பில்வதளத்தால் பூஜை பண்ணு என்று ஆஜ்ஞாபித்ததை எந்தக்காலத்திலும் நடத்திவருவதற்கு இவைகளெல்லாம் உபகரணங்களாக இருக்கின்றன. எல்லோருக்கும். ஸொந்தமான இந்தப்பூஜை அப்பொழுது தான் அவிச்சின்னமாக நடைபெற்று வரும்.

---

# V

# பஞ்சலிங்கங்கள்

[2—11—1932]

சங்கர விஜயங்களைத் தவிர வேறிடத்தில் ஸ்ரீமத் ஆசார்யர்களுடைய சரித்திரம் சொல்லப்படுகின்ற புஸ்தகங்களில் பதஞ்ஜலிவிஜயம், சிவரஹஸ்யம் என்னும் இரண்டைப் பற்றிச் சொன்னேன். அவ்விரண்டும் வேறு விஷயங்களைச் சொல்லுபவை. மத்தியில் ஸ்ரீ ஆசார்யர்கள் சரித்திரத்தைச் சொல்லுகின்றன. இவைகளைப் போல வேறு சில புஸ்தகங்கள் இருக்கின்றன.

பிரம்மாண்ட புராணத்தில் ஒரு பிரிவு மார்க்கண்டேய ஸம்ஹிதை என்பது. அதில் 3-வது பரிஸ்கந்தத்தில், ஸ்ரீ ஆசார்யார்களுடைய கதை சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒரு விசேஷம் அதிகமாக இருக்கிறது. சிவரஹஸ்யத்தில் ஸ்ரீ ஆசார்யர்களின் சரிதத்தைச் சொல்லும் இடத்தில் கடைசி சுலோகம் பஞ்சலிங்கங்களைப் பற்றியது. இந்த லிங்கங்களை எந்த எந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தாரென்பது அதிற் சொல்லப்படவில்லை. வேறு எங்கும் சொல்லப்படவில்லை. அந்த விஷயம் மார்க்கண்டேய ஸம்ஹிதையில் இருக்கிறது.

முக்திலிங்கம் பதரிகாசிரமத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. நேபாளத்தில் உள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தில் வரலிங்கம்



பிரதிஷ்டை செய்யப்பட்டது. மோக்ஷலிங்கத்தைச் சிதம்பரத்தில் பிரதிஷ்டை செய்தார். போகலிங்கம் சிருங்ககிரியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. யோகலிங்கத்தைக் காஞ்சீபுரத்தில் ஸ்தாபனம் செய்தார்.

शिवलिङ्गं प्रतिष्ठाप्य चिदम्बरसभातले ।
मोक्षदं सर्वजन्तूनां भुवनत्रयसुन्दरम् ॥
मुक्तिलिङ्गं तु केदारे नीलकण्ठे वरेश्वरम् ।
काञ्च्यां श्रीकामकोटौ तु योगलिङ्गमनुत्तमम् ।
श्रीशारदाख्यपीठे शिवलिङ्ग भोगनामकं चक्रे ॥

[மார்க்கண்டேயஸம்ஹிதை]

ஸ்ரீ ஆசார்யர்களுடைய பிரஸ்தாபமும் அத்வைத மதப்பிரஸ்தாபமும் சங்கரவிஜயங்களைத் தவிர வேறு பல கிரந்தங்களில் வந்திருக்கின்றன. ஸ்ரீ ஹர்ஷர் என்னும் ஒரு கவி நைஷதம் என்ற காவியத்தை எழுதியிருக்கிறார். அதில் ஸ்ரீ பகவத்பாதர்களைச் சொல்லுகிறார் என்று தோன்றும்படி ஓரிடத்தில் எழுதியிருக்கிறார். ஸ்ரீ ஹர்ஷகவிக்கு ஸ்ரீ சங்கராசார்யரவர்களிடத்தில் பக்தி அதிகம். அவர் தம்முடைய காவியத்தில், எத்தனை திறுஸாகப் புரட்டி முடிச்சுப் போடலாமோ அவ்வளவும் செய்திருக்கிறார். கவிசாதுர்யத்தில் உள்ள பலவகையும் நைஷதத்திற் காணப்படும்.

அவருடைய தகப்பனார் பெயர் ஸ்ரீஹீரன் என்பது; தாயார் பெயர் மாமல்லதேவி. இவர்களைப் பற்றி நைஷதத்தில் ஒவ்வொரு ஸர்க்கத்திலும் எழுதியிருக்கிறார்.

அவர் தகப்பனார் ஒரு ராஜ ஸதஸில் வித்துவானாக இருந்தார். ஒரு நாள் வேறு தேசத்திலிருந்து ஒரு கவி அந்த ராஜ ஸபைக்கு வந்தார். அவர் தம்முடைய திறமையினால்

ஸ்ரீஹர்ஷருடைய தகப்பனாரை ஜயித்தார். தோல்வியுற்ற ஏக்கத்தில் அவர் காலமானார். தாயார் மாத்திரம் இருந்தாள். ஸ்ரீஹர்ஷர் சிறு குழந்தையாயிருக்கையிலேயே அவர் தகப்பனார் இறந்து விட்டார். அவருடைய தயாருக்குச் சிந்தாமணி மந்திரத்தைத் தகப்பனார் உபதேசித்திருந்தார். அதை ஜபித்தவர்களுக்கு ஸரஸ்வதி கடாக்ஷம் உண்டாகும். அந்த மந்திரத்தைத் தன்னுடைய குழந்தைக்குச் சொல்லிவைத்தாள். அந்தக் குழந்தை அந்த மந்திரத்தை எப்பொழுதும் சொல்லிக்கொண்டே இருந்தது. ஒருநாள் அது தன் தாயார் படுத்திருக்கையில் மார்பின் மேல் ஏறி விளையாடிக்கொண்டிருந்தது. வாமாசாரப் பிரயோகங்களில் சவத்தின் மேலிருந்து கொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தால் அதிகப்பலன் உண்டாகும் என்பது தாயாருக்குத் தெரியும். அவள் உடனே தன் கழுத்தை வெட்டிக்கொண்டாள். 'எப்படியாவது இந்தக் குழந்தை அபிவிருத்தியடைந்து ஸமானமில்லாத வித்தையை அடைந்தால் போதும்; நம்முடைய உயிர் போனாலும் போகட்டும்' என்று நினைத்தாள். தன்னுடைய தாயார் இறந்து விட்டது அந்தக் குழந்தைக்குத் தெரியவில்லை. அது மந்திரத்தை ஜபித்துக்கொண்டேயிருந்தது. அதனால் ஸித்தி கிடைத்தது. பின்பு மஹாகவியாக ஆயிற்று.

ஸ்ரீஹர்ஷர் தாம் இயற்றிய நைஷத காவியத்தில் சிந்தாமணி மந்திரத்தைப்பற்றியும் அதன் பிரயோகங்களைப் பற்றியும் ஓரிடத்திற் சொல்லியிருக்கிறார். ஆங்காங்கே சிந்தாமணி மந்திர பலத்தால் தாம் வாக்வன்மையை அடைந்ததைச் சொல்லியிருக்கிறார்.

தமயந்தி ஸ்வயம்வரம் நடக்கும்பொழுது அவளுக்கு, ஸ்வயம்வரத்திற்காக வந்த அரசர்களைக் காட்டுவதற்கு





ஸரஸ்வதியே வந்தாள். கல்யாணம் ஆனபின்பு நளனுக்கும் தமயந்திக்கும் ஸரஸ்வதி அநுக்கிரஹம் பண்ணினாள். அங்கே சிந்தாமணி மந்திரத்தை அநுக்கிரஹம் பண்ணினாளென்று சொல்லி அதனுடைய மஹிமைகளையும் பிரயோகக் கிரமங்களையும் ஸ்ரீஹர்ஷர் எழுதியிருக்கிறார்.

சிந்தாமணிமந்திர பலத்தைப் பெற்றவர் ஆகையினால் அவர் நைஷத காவியத்தில் பலவிதமான கடினமான பிரயோகங்களையும் முடிச்சுக்களையும் வைத்திருக்கிறார். அப்படி வைத்திருப்பதை அவரே சொல்லியிருக்கிறார்.

ग्रन्थग्रन्थिरिह क्वचित् क्वचिदपि न्यासि प्रयत्नान्मया
प्राज्ञंमन्यमाना हठेन पठिती मास्मिन् खलः खेलतु ।
श्रद्धाराद्धगुरुश्लथीकृतदृढग्रन्थिः समासादय-
त्वेतत्काव्यरसोर्मिमज्जनसुखव्यासज्जनं सज्जनः ॥

[நைஷதகாவியம், XXII, (முடிவு. 3)]

'இந்தக் கிரந்தத்தில் பல கிரந்திகளை ஆங்காங்கே வேண்டுமென்று வைத்திருக்கிறேன். சிரத்தையினால் ஒரு குருவைத் தேடி அடைந்து அவர் அவிழ்த்துக் கொடுக்கத் தெரிந்து கொள்ளவேண்டுமே ஒழிய மற்றவர்களால் முடியாது. இதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் குருவை ஆராதித்துக் காவியாமிருதத்தில் ஸ்நானம் பண்ணட்டும். அஹங்காரி, கலன் முதலியவர்களால் இதை அறிந்து கொள்ளமுடியாது. ஹடமாக நான் படித்து விடுவேனென்பவனாலும் முடியாது. ஸாதுவாக இருப்பவன் குருபக்தி பண்ணி அவருடைய அநுக்கிரஹத்தால் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். அவருடைய காவியத்தில் இந்த ஒரு சுலோகந்தான் ஸுலபமாக இருக்

கிறது. மிகுதியுள்ளவைகளில் அநேகமாக எல்லாம் கடினமானவைகளே.

அவருக்கு ஆசார்யபக்தியும் அத்வைதத்தில் நம்பிக்கையும் உண்டு. கண்டனகண்டகாத்யம் என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அத்வைத ரஸத்தைத் தவிர வேறு இல்லை என்பதை நிரூபிப்பதற்காக அதை எழுதியிருக்கிறார். உண்மை என்பது ஒன்றாகத்தான் இருக்கும். இரண்டென்றால் அவை உண்மையாக இரா. அந்த ஒன்றுதான் தத்துவம் என்பதற்கு எத்தனை விதமான ஆக்ஷேபணைகள், குபுத்தியினாலும் குயுக்தியினாலும் சொல்ல முடியுமோ அவைகளையும் வேறுள்ள கடினமான ஆக்ஷேபணைகளையும் சொல்லி அவைகளையெல்லாம் தக்க காரணங்களைச் சொல்லி நிராகரணம் பண்ணி எழுதியிருக்கிறார்.

शब्दार्थनिर्वचनखण्डनया नयन्तः
सर्वत्र निर्वचनभावमखर्वगर्वान् ।
धीरा यथोक्तमपि कीरवदेतदुक्त्वा
लोकेषु दिग्विजयकौतुकमातनुध्वम् ॥

[கண்டனகண்டகாத்யம், I—3]

'தீரர்களாக இருப்பவர்கள் இதில் நான் சொல்லியிருப்பவற்றை கிளி போலச் சொன்னாலும் திக்விஜயம் செய்யலாம்' என்று அதிற் சொல்லியிருக்கிறார். வேதாந்த தேசிகர் என்னும் ஒரு பெரியவர் விசிஷ்டாத்வைதபரமாக சததூஷணி என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அத்வைத ஸித்தாந்தத்திலிருந்து 80 விஷயங்களையும் துவைதத்திலிருந்து 20 விஷயங்களையும் எடுத்துக் கொண்டு ஆக்ஷேபணை செய்திருக்கிறார். அவர் ஸ்ரீஹர்ஷர் செய்



துள்ள இந்த சுலோகத்தைப்போல தானும் கீழ்க்கண்ட சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்.

प्राचीमुपेत्य पदवीं यतिराजदृष्टां
तत्सन्निकृष्टमपि वामतयाश्रयन्तः ।
प्रज्ञा यथोदितमिदं शुकवत्पठन्तः
प्रच्छन्नबौद्धविजये परितो यतध्वम् ॥

'பிரச்சன்ன பௌத்தர்களை ஜயிப்பதற்கு இதிலுள்ளவைகளைக் கிளி போலே சொன்னாலே போதும்' என்று சொல்லியிருக்கிறார். பிரச்சன்ன பௌத்தர் என்பது அத்வைதிகளைக் குறிக்கும். அவர்களை ஜயிக்க மட்டும் அவர் விரும்பினார். ஸ்ரீ ஹர்ஷர், திக்விஜயமே பண்ணலாம் என்று சொல்லியிருக்கிறார். அவர் எழுதியதையே பின் வந்தவர்களும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொன்னேன்.

पुण्यश्लोको नलो राजा पुण्यश्लोको युधिष्ठिरः ।
पुण्यश्लोका च वैदेही पुण्यश्लोको जनार्दनः ॥

[பிராத:ஸ்மரணம்]

நளன் புண்ணிய சுலோகனென்று சொல்லப்படுவான். விடியற் காலையில் எழுந்து சொல்லும் சுலோகத்தில் அவன் பெயர் வருகிறது. அவனுடைய சரித்திரமாகிய நைஷதம் புண்ய சரித்திரம். பெரியவர்களை நாம் ஏன் நினைக்கவேண்டும்? பரிசுத்தர்களையும் தார்மிகர்களையும் நாம் நினைத்தால் நமக்குள்ள பயம், அதர்மசிந்தனை முதலியவை குறையும். அவர்களை நினைத்தால் அந்த க்ஷணத்திலாவது மனதுக்குச் சாந்தி ஏற்படும். அதிக நாழிகை நினைத்தால் அதிகமாகச் சாந்தி அடையலாம். நிறைய நினைத்தால் நிறைய சாந்தி

உண்டாகும். அந்த சாந்தி நிரந்தரமாக இருக்கும். புண்ணிய சுலோகர்கள் என்பவர்கள் அவர்கள்தாம். அவர்களை நினைத்தால் நம்முடைய புத்தியும் அந்த மார்க்கத்தில் பிரவர்த்திக்கும். அவர்களுடைய சரித்திரத்தைச் சிரவணம் செய்வதால் எவ்வளவோ நல்ல பலன் உண்டாகும். அதனால் அந்தப் புண்ணிய சுலோகனுடைய சரித்திரத்தை எழுதினர்.

தமயந்திக்கு ஸ்வயம்வரம் நடந்தது. அது தேவர்களுக்குத் தெரிந்தது. நளன்மேல் தமயந்திக்குப் பிரியம் இருந்ததென்று தெரிந்தது. தாங்கள் அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று விரும்பினர்கள். அவர்கள் நளனைத் தமயந்தியிடம் தூதனாக அனுப்பினர்கள். அப்பொழுது ஒன்றும் முடியவில்லை. பின்பு, அக்னி, யமன், வருணன், இந்திரன் ஆகிய நான்கு பேர்களும் நளனைப் போல வேஷம்போட்டுக்கொண்டார்கள். ஸ்வயம்வர மண்டபத்தில் நளனோடு சேர்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். மற்றத் தேசத்து அரசர்களும் வந்து உட்கார்ந்து இருந்தார்கள். அப்பொழுது ஸரஸ்வதியே வந்து தமயந்திக்கு ஒவ்வோர் அரசனைப்பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தாள். ஸ்வயம்வரம் என்பதைப் பற்றிச் சொல்லுகையில் ஒரு நினைவு வருகிறது.

ரகுவம்சத்தில் இந்துமதி ஸ்வயம்வரம் சொல்லப் படுகிறது. அஜமஹாராஜனை அவள் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். அவளுடைய ஸ்வயம்வரத்தைப்பற்றிக் காளிதாஸ மஹாகவி எழுதியிருக்கிறார். இந்துமதி ஒவ்வோர் அரசனையும் பார்த்துக்கொண்டே போனாள். அப்படிப் போகும் இந்துமதிக்கு ஓர் உபமானம் சொல்லியிருக்கிறார். தீபசிகைபோல அவள் இருந்தாள் என்று சொல்லுகிறார்.



संचारिणी दीपशिखेव रात्रौ यं यं व्यतीयाय पतिंवरा सा ।
नरेन्द्रमार्गाट्ट इव प्रपेदे विवर्णभावं स स भूमिपालः ॥

[ரகுவம்சம், IV, 67.]

பல மனிதர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். நாம் ஒரு விளக்கைக் கொண்டுபோகிறோம். ஒருவனைத் தாண்டி வந்தால் அந்த இடம் பின்பு இருட்டிப்போகும். விளக்கை வைத்துக்கொண்டு நின்ற இடம் பிரகாசமாக இருக்கும். அதைப்போல இந்துமதி பார்க்காத அரசர்கள் நம்பிக்கையோடும் பிரகாசமான முகத்தோடும் உட்கார்ந்திருந்தார்கள். ஓர் அரசனைத் தாண்டிப் போய்விட்டால் உடனே அவனுடைய முகம் வாடிவிடும். யாருடைய முன்பு நின்று கொண்டிருக்கிறாளோ அவனுடைய முகம் மிகவும் பிரகாசமாக இருக்கும். அதனால்தான் தீபசிகையை உபமானமாகச் சொன்னர்.

அவளைப்போலத் தமயந்தி ஒவ்வொரு அரசனையும் பார்த்துக்கொண்டே வந்தாள். ஸரஸ்வதி ஒவ்வொருவரையும் இன்னர் இன்னரென்று சொல்லிக்கொண்டே வந்தாள். தமயந்தி நளனையே மனவில் நினைத்துக்கொண்டிருந்தாள். அவனையே கல்யாணம் செய்துகொள்ள நிச்சயித்துக் கொண்டாள். மற்ற அரசர்களெல்லாம் தாமாக வந்திருந்தார்கள்.

தமயந்தி நளனைப்போல இருந்த தேவர்களிடம் வந்தாள். அங்கே தேவதைகளாகிய நான்கு நளமஹாராஜாக்களோடு நிஜநளனும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். அவர்களைப் பார்த்துத் தமயந்தி திகைத்து நின்றாள். யாருக்காவது மாலையைப் போட்டுவிட்டால் பாதிவிரத்தியம் கெட்டுவிடும். என்ன செய்வது? ஸரஸ்வதி உண்மையைச்

சொல்லவேண்டுமல்லவா? உள்ளதைத் தெரிவித்தால் மரியாதைக் குறைவு; தெரிவிக்காமல் இருந்தால் அது அஸத்தியமாகும். அதற்காக அந்த அந்தத் தேவருக்கும் நளனுக்கும் அர்த்தமாகும்படிச் சிலேஷையாகச் சொன்னாள். நிஜ நளனிடம் வந்தபொழுது ஐந்துபேருக்கும் பொருந்தும்படியாகச் சிலேஷையில் சொன்னாள். அது பஞ்சநளீயம் என்று சொல்லப்படும். அப்படிச் சொல்லுவது ஸரஸ்வதிக்கு ஒரு சிரமமா? அவளுடைய அநுக்கிரஹம் பெற்றவர்களுக்கே சிரமம் இல்லை.

அப்பொழுது தமயந்தி அந்த ஐந்துபேர்களில் யார் உண்மையான நளன் என்று தெரியாமல் திகைத்து நின்றாள். அங்கே ஒரு சுலோகம் சொல்லப்பட்டிருக்கிறது.

साप्तुं प्रयच्छति न पक्षचतुष्टये तां
तल्लाभशंसिनि न पञ्चमकोटिमात्रे ।
श्रद्धां दधे निषधराड्विमतौ मताना-
मद्वैततत्त्व इव सत्यतरेऽपि लोकः ॥

[நைஷதகாவியம், XIII, 36]

என்பது அந்த சுலோகம்.

பாரதத்தில் ஐந்து மதங்கள் முக்கியமானவைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை ஸாங்கியம், பாதஞ்ஜலம் அல்லது யோகம், பாஞ்சராத்ரம், வேதம், பாசுபதம் என்பவை.

ஸாங்கியம் என்பது இப்பொழுது பிரசாரத்தில் இல்லை. பாதஞ்ஜலமென்பது பதஞ்ஜலி மஹரிஷியால் பிரசாரம் செய்யப்பட்ட யோகமதம். பாஞ்சராத்ர மென்பது வைஷ்ணவம்; ராமாநுஜ மதம் அதில் அடங்கும்; வேதமென்பது ஸ்ரீமத் சங்கராசார்யர்கள் மதமாகிய அத்வைதம்;



பாசுபத மென்பது சைவம். புஷ்பதந்தர் ஈசுவரஸ்தோத்திரத்தில்,

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्यादृजुकुटिलनानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥

[சிவமஹிம்ந:ஸ்தோத்திரம், 7]

என்று சொல்லப்படுகிறது.

நம்முடைய வைதிக மார்க்கத்தில் விஷ்ணு ஆராதனமும் சிவாராதனமும் உண்டு. தந்திரமார்க்கத்தில் வைஷ்ணவத்தை மட்டும் ராமாநுஜர் எடுத்துக்கொண்டார்.

தமயந்தி உண்மையான நளனைக் கண்டுகொள்ள முடியாமல் மயங்கியது, உலகத்திலுள்ள பல மதங்களிலும் ஸத்யதரமாகிய அத்துவைதமதத்தைத் தெரிந்துகொள்ளாமல் மயங்குவதைப் போல இருந்தது என்று கவி சொல்லுகிறார்.

முன்பு கூறிய ஐந்து மதங்களுக்குள் எப்படி ஸத்யதரமான அத்துவைதம் இருக்கிறதோ அதைப்போல் ஐந்து நளர்களுக்குள் உண்மையான நளனும் இருக்கிறான். இங்கே ஸ்ரீஹர்ஷர் ஆசார்ய பக்தியையும் மதபக்தியையும் இந்த உபமானத்தால் வெளியிட்டிருக்கிறார்.

அத்வைத மதத்தை ஸத்யதரம் என்று சொல்லியிருக்கிறார். தரம் என்றால் மேற்பட்டது. மேற்பட்ட ஸத்தியம் அது. ஆகவே கீழ்ப்பட்ட ஸத்தியம் ஒன்று இருக்கிறது. இப்படி ஸத்தியங்களில் இரண்டுவிதம் உண்டு. மற்றமதங்களில் பரமேசுவர ஸத்தியத்துக்கும் வேறு ஸத்தியங்களுக்கும் வித்தியாஸமே கிடையாது. அவைகளுக்குள்

உயர்வு தாழ்வு இல்லை. நாம் என்று ஒன்று இல்லை. இங்கே ஸத்தியத்தைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம்.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் ஸத்தியத்தை மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார்கள். உபநிஷத் லோகத்திலுள்ள பதார்த்தங்களை நான்கு நிலைகளாகப் பிரித்திருக்கிறது என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள். (1) பார மார்த்திக ஸத்தியம், (2) வியாவஹாரிக ஸத்தியம், (3) பிராதிபாஸிக ஸத்தியம், (4) அஸத்தியம் என்பவை அவை. இவைகளுள் பாரமார்த்திகஸத்திய மென்பது சிவஸ்வரூபம்.

तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम्। [ஆசார்யதச ச்லோகீ]

என்பது அந்த ஸத்தியம். வியாவஹாரிக ஸத்தியம் நாம் பார்த்துக்கொண்டிருப்பது. தகரடப்பியின் மூடி கீழே கிடந்தால் அது ஒரு ரூபாயைப் போலத் தோன்றுகிறது. அது பிராதிபாஸிக ஸத்தியம். கொஞ்சநாழிகை அப்படித் தோன்றுகிறது. கனவும் அப்படியே. ஒரு நாளும் இல்லாதது அஸத்தியம். மலடிமகன், குதிரைக்கொம்பு முதலியவை ஒருநாளும் ஸம்பவிக்காதவை. இவை அஸத்தியம். இதை விகல்பமென்று யோக சாஸ்திரம் சொல்லும்.

शब्दज्ञानानुपाती वस्तुशून्यो विकल्पः

[பாதஞ்ஜலயோகஸூத்திரம்]

என்பது யோகஸூத்திரம். சப்தம் மாத்திரம் இருந்து வஸ்து இல்லாதது விகல்பம் என்று சொல்லப்படுகிறது. அஸத்தியத்தைத் துச்சமென்றும் அத்யந்த அஸத்தென்றும் சொல்லுவார்கள்.

வைக்கோலாற் செய்யப்பட்ட பழுதை ஸாயங்காலத்திற் பாம்பாகத் தோன்றுகிறது. அது பிராதிபாஸிக ஸத்தி



யம். வியாவஹாரிக ஸத்தியமும் பிராதிபாஸிக ஸத்தியமும் பொய். அஸத்தியம் பொய் அல்ல. அஸத்தியம் வேறு, பொய் வேறு. வேதாந்தத்தில் பொய்க்கு மித்யை என்று பெயர். மித்யை யென்று வியாவஹாரிக ஸத்தியத்தையும் பிராதிபாஸிக ஸத்தியத்தையும்தான் சொல்லுகிறோம்.

இந்த ஸத்தியங்களைத் தவிர ஸத்யதாம் ஒன்று இருக்கிறது. ஆகவே ஸத்தியமானது ஒன்று, அஸத்தியம் ஒன்று, பொய் இரண்டு உள்ளன. ஸத்தியமாவது ஸ்வாமி. அஸத்தியம் மலடிமகன். ஈசுவரன் ஒருநாளும் இல்லை யென்று போகமாட்டார். அவர் ஸத்தியம். சில பதார்த்தங்கள் முந்தி இல்லாமல் போகும்; பிந்தி வரும்; இப்பொழுது இல்லாமல் அப்புறம் உண்டாகும். அவைகள் எப்பொழுதாவது இல்லை என்ற ஒரு காலம் இருக்கும். எப்பொழுதும் இல்லை என்பதில்லாமல் இருக்கிறது ஸத்தியம். அப்படியிருப்பவர் பரமாத்மா. அஸத்தியம் முக்காலத்திலும் இருக்கிறது என்பது இல்லாதது - அதாவது ஒருநாளும் இல்லாதது. நடுவில் உள்ள இரண்டும் ஸத்திய அம்சம் கொஞ்சம் அஸத்திய அம்சம் கொஞ்சம் உள்ளவை. அவைதான் பொய். வியாவஹாரிகம், பிராதிபாஸிகம் என்பவை பொய். தோன்றாமல் இருப்பது பொய் அல்ல. தோற்றம் இருக்கவேண்டும். நாமெல்லாம் எப்படிப்பட்டவர்கள்? நம் தேஹம் கொஞ்ச நாளுக்கு முன்பு இல்லை, பின்பு இல்லை. ஆகையால் ஸத்தியம் இல்லை. கொஞ்சகாலம் இருப்பதால் அஸத்தியமும் இல்லை. ஸத்தியமாக இருந்தால் முக்காலத்தில் நாசம் அடையாமல் இருக்கவேண்டும். இது சுக்திரூப்யம் போன்றது. அதாவது கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுவதைப் போன்றது. ரூப்யம் என்பது வெள்ளி. அதிலிருந்து ரூபாய் (Rupee) என்ற வார்த்தை

வந்தது. கிளிஞ்சிலில் வெள்ளி தோன்றுவது ஸத்தியமா? அஸத்தியமா?

सच्चेन्न बाध्येत, असच्चेन्न प्रतीयेत ।

இது ஒரு நிமிஷமாவது இருக்கிறதென்று தோன்றுகிறது. மலடிமகன் தோன்றுவதுண்டோ? இல்லை. அதைப் போன்றதில்லை இது. இருக்கிறதென்னும் அம்சம் இதிற் கலக்கிறது. அது குதிரைக்கொம்பு என்பதிற் கலக்காது. அதை வார்த்தையாக மட்டும் சொல்லலாம். நம்பிக்கை தோன்ருது. வஸ்துவே கிடையாது. இதுவோ இருக்கிறதென்ற அம்சம்; கொஞ்சம் தோன்றுவதனுல் அஸத்தியம் அல்ல. ஸத்தியமானுல் இந்தத்தோற்றம் எப்பொழுதும் இருக்கவேண்டும். கிளிஞ்சிலென்று தெரிந்தால் வெள்ளியானது முந்தியும் இல்லை; பிந்தியும் இல்லாமற் போய்விடுகிறது. இப்பவும் இல்லை. தோற்றம் மட்டும் உண்டாயிற்று. பாம்பு என்ற ஒரு தோற்றம் அதற்குக் காரணமான வஸ்து-அதாவது பழுதை-தோன்றியவுடன் போய்விட்டது. அந்தத் தோற்றம் ஸத்தியமாக இருந்தால் பின்னுல் இல்லாமல் போகாது. ஆகையால் இது வேறு. அது தான் பொய். மாயை அப்படிப்பட்டது. அதை அநிர்வசனீயம் என்று சொல்லுவார்கள். அது ஸத்தும் அன்று. அஸத்தும் அன்று. இன்னதென்று சொல்ல முடியாது. உள்ளதென்றும் இல்லாததென்றும் சொல்லமுடியாது. ஒரு ஸமயம் தோன்றுகிறது. அப்புறம் இல்லாமலும் போகிறது. பழுதைப்பாம்புபோன்றது மாயை. கனவும் அப்படி உள்ளதுதான். மாயா என்பதற்கு மா=இல்லை, யா=எது, எது இல்லையோ அது மாயை. நாமெல்லாம் அப்படிப்பட்டவர்களே. "பொய்ம்மாயப் பெருங்கடலில்"



என்று தமிழ்ப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. மாயை பொய் என்று அது சொல்லுகிறது. ஸத்தியமும் இல்லாமல் அஸத்தியமும் இல்லாத மூன்ருவது பொருளாக இருக்கிறது அது. இல்லையென்று சொல்லிவிட்டால் தோன்றுகிறதே! அதற்கு என்ன செய்வது? இருக்கிறது என்ருல் போய்விடுகிறதே! இருக்கிறது என்றது ஸ்வாமியா? அல்லது ஸ்வாமி இல்லையா?

तत्त्वान्यत्वाभ्यामनिर्वचनीयम् [ஸூத்திரபாஷ்யம்.]

பரமாத்மஸ்வரூபம் என்று சொல்லலாமா?

பரமாத்மாவைவிட வேறு என்ருல் அப்படியும் சொல்ல முடியாது. பரமாத்மாவேதான் என்பதும் ஸரியல்ல. பௌத்தர்கள் சொல்லுகிற சூனியமும் அன்று; பரமாத்ம ஸத்தியமுமன்று. அதனுல்தான் அநிர்வசனீயம் என்று சொல்லுகிருர்கள். அது பொய்.

அந்தப் பொய் இரண்டுவிதம். நாம் பார்க்கும்போதே இல்லாமற் போய்விடுவது ஒன்று. அது பிராதிபாஸிக ஸத்தியம். நாமாகிற பொய் ஒன்று; இது வியாவஹாரிக ஸத்தியம். பழுதை தோன்றினுல் பாம்பு போய்விடும். பழுதை அதிஷ்டானம். பாம்பு ஆரோப்யம். அதிஷ்டான ஸாக்ஷாத்காரமானுல் ஆரோப்யம் போய்விடும். எதில் ஒரு தோற்றத்தை ஏற்றிவைத்திருக்கிருேமோ, அது தெரிந்தால் ஏற்றிவைத்திருந்த தோற்றம் போய்விடும். இது பிராதிபாஸிக ஸத்தியம். நாம் அடியோடு எப்பொழுது இல்லாமற் போவோம்? நம்மை எந்த வஸ்துவின்மேல் ஆரோபித்து வைத்திருக்கிருேமோ அது தெரிந்தால் 'நாம்' என்பது போய்விடும். ஸூர்யசந்திராதிகள், பஞ்சபூதங்கள், பிரபஞ்சம் முதலியவைகளை நாம் எதில் ஏற்றிவைத்திருக்கிருேமோ

அந்த ஸத்தியமான வஸ்து தெரிந்தால் இந்தப் பிரபஞ்ச மெல்லாம் போய்விடும்.

கம்பராமாயணத்தில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.

"அலங்கலிற் றோன்றும் பொய்மை
யரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்
அவரென்பர் கைவில் ஏந்தி
இலங்கையிற் பொருதார் அன்றே
மறைகளுக் கிறுதி யாவார்"

[சுந்தரகாண்டம்]

'புஷ்பமாலையில் தோன்றுகின்ற பொய்யான பாம்பைப் போல பஞ்சபூதங்களின் கலப்பில் தோன்றுகின்ற பேத உணர்ச்சியின் மிகுதியானது யாரைக் கண்டால் போய் விடுமோ அவரே இலங்கையில் யுத்தம் செய்த ஸ்ரீராமர், அவரே வேதாந்தங்களிற் சொல்லப்படுவர் என்பார்கள்' என்பது இதன் தாத்பரியம்.

கம்பர் பரம வைஷ்ணவர். சடகோபர் விஷயமாக ஓர் அந்தாதி பாடினவர். அவர் இந்த உலகத்தையும் நாம் என்று தோன்றுவதையும் பொய்மை அரவு போன்றது என்று சொல்லுகிறார். இப்படி உண்டாயிருக்கிற வீக்கம் நிஜமானதன்று. எவனிடத்தில் இவைகளெல்லாம் தோன்றியிருக்கின்றனவோ அவனைக் கண்டால் இந்த வீக்கம் போய் விடும். இந்தப் பிரபஞ்சமெல்லாம் பஞ்சபூத விகாரம்.



இவைகளுக்கு அதிஷ்டானம் ஸ்ரீராமர். இந்த வீக்கம் குறைந்தால் மிஞ்சிநிற்பது பரமாத்வதத்துவம் ஒன்றுதான், என்று கம்பர் சொல்லுகிறார். இப்படி உள்ளது வியவஹார ஸத்தியம். பரமாத்மாவைப் பார்த்தால் எது ஓடிப் போகிறதோ அதுதான் வியாவஹாரிக ஸத்தியம். அது பரமாத்மாவில் ஆரோபித்தது. வியவஹாரிகமும் பிராதிபாஸிகமும் மித்யை. அவை இரண்டும் ஸத்தியம். இந்த மாதிரி ஸ்ரீசங்கராசார்யரவர்கள் பிரித்தாரென்று பின்னால் வந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

सत्यं चानृतं च सत्यमभवत्

[தைத்திரீயோபநிஷத், பிரஹ்மவல்லீ.]

என்று உபநிஷத் சொல்லுகிறது. ஸத்தியம் ஸத்தியமாகவும் ஆயிற்று; பொய்யும் ஆயிற்று என்று சொல்லுகிறது. அநிருதம் என்றதுதான் பிராதிபாஸிகம். இவைகள் ஸத்தியம். நித்ய ஸத்தியம் ஒன்று இருக்கிறது. இந்த ஸத்தியங்களை ஸத்தியமாக ஒப்புக்கொண்டால் ஸத்யதரம் ஒன்று இருக்க வேண்டும். இந்த ஸத்தியங்கள் போனால் நித்தியஸத்தியம் ஒன்று நிற்கும். பொய்யை யெல்லாம் ஸத்திய ரூபமாக்குவது அத்வைதம். ஸத்தியதரம் எங்கும் நிறைந்திருக்கின்றது. எல்லாம் நிஜஸ்வரூபம். அந்த ஸத்தியந்தான் இப்படி ஆயிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது.

அந்த ஸத்யதரமான அத்வைதம் ஒன்று இருந்தும் லோகத்தார் விழிப்பதுபோலத் தமயந்தி விழித்தாள் என்று ஸ்ரீஹர்ஷர் சொல்லியிருக்கிறார்.

பொய் இரண்டு தினுஸு. இல்லை யென்பது ஒரு தினுஸு. உள்ளது ஒன்று. அது சிவம்; அதுதான் அத்வைதம். மாயைக்கடல் ஒன்று இருக்கிறது. அது இருக்

கிறதா இல்லையா என்று சொல்ல முடியாத வேடிக்கையாக இருக்கிறது. அதுதான் பிரபஞ்சம்.

எல்லாம் போய்க் கடைசியில் நிற்பது பரமாத்மாதான்

तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् । [தசசுலோகீ.]

என்றபடி கடைசியில் மிஞ்சி நிற்பது சிவம் ஒன்றுதான். எல்லாவற்றையு பஸ்மம் பண்ணினால் எல்லாம்போக நிற்பது சிவந்தான். மஹாபஸ்மா என்பது பரமேசுவரனுடைய பெயர்களில் ஒன்று. பல நிறங்களுள்ள வஸ்துக்கள் பஸ்மாவாகிவிட்டால் நிற்பது பஸ்மா ஒன்றுதான். அதனுடைய வெள்ளை நிறந்தான் நிற்கும். எல்லாம் நீற்றுப்போன பின்பு அப்புறம் ஒன்றும் இருப்பதில்லை. பரமேசுவரனுக்கு எல்லாம் வெளுப்பாக இருக்கின்றன. கைலாஸம் வெண்மை, விபூதி வெண்மை, தும்பை வெண்மை, கங்கை வெண்மை, எலும்பு வெண்மை எல்லாம் பஸ்மநிறம். எல்லாம் எந்த நிறத்தில் அடங்கிவிடுமோ, எந்த நிறம் கடைசியில் ஒன்றாக வேறுபாடில்லாமல் இருக்குமோ அந்த நிறந்தான் அது. எல்லாவிதமான வஸ்துக்களும் ஞானாக்கினியில் பஸ்மாவாக வேண்டும். அப்பொழுதும் பேதம் இராது. ஸத்யதரமாகிய அத்வைதம் உண்டாகும். அந்த அத்வைதஸ்வரூபம் என்பதற்கு அறிகுறியாகப் பரமேசுவரனுக்கு மூன்றாவது கண் இருக்கிறது. அது நெருப்புக்கண். அதை உடையவர் தாம் எல்லாம் போன பின்பு ஸத்தியமாக அத்வைதமாக இருப்பவர்.

பிரணவத்தின் அர்த்தத்தைச் சொல்லவந்த உபநிஷத் ஒன்று

शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते [மாண்டூக்யோபநிஷத்]

என்று சொல்லுகிறது. அத்வைதத்தைச் சிவமென்று



சொல்லியிருக்கிறது. பத்திரம் முதலியவை எழுதும் பொழுது நாம் சிவமதம் என்று எழுதுகிறோம். சிவமே அத்வைதம். அதுதான் ஸத்யதரம். அத்வைதத்தை ஸத்யதரம் என்று சொன்னதால் ஸ்ரீஹர்ஷருக்கு ஸ்ரீசங்கராசார்ய பக்தியும் அத்வைத பக்தியும் உண்டென்பது தெரிகிறது.

வேறோரிடத்தில் ஸ்ரீஹர்ஷர் சந்திரமௌளீசுவரரைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். ஸ்ரீசந்திரமௌளீசுவர ஸம்பந்தமான ஸ்தோத்திரங்களையும் மற்றவைகளையும் மடத்தில் குறித்துவைத்திருக்கிறார்கள்.

தமயந்தி ஸ்வயம்வரத்தை உத்தேசித்துப் பல தேசங்களிலிருந்து அரசர்கள் வந்ததைப்போலவே காஞ்சீபுரத்திலிருந்தும் ஓர் அரசன் வந்திருந்தான். ஸ்ரீஹர்ஷகவி எந்த அரசனைப்பற்றிச் சொன்னாலும் குளம் வெட்டினான் என்று சொல்லுவது வழக்கம். குளம் வெட்டுவதை ஒரு பெரிய காரியமாக அவர் நினைத்திருந்தார்போல் இருக்கிறது. அவர் ஜலம் இல்லாத இடத்தில் இருந்தவர் என்று தோன்றுகிறது. மார்வாட் தேசத்தில் இருப்பவர்கள் பணக்காரர்களாக இருப்பார்கள். நிலம் விளையாத இடத்தில் பணம் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்தத் தேசத்தில் உள்ளவர்கள் வெளியூருக்குப்போய்ப் பணம் சேகரித்து வருவார்கள். அதனால் அவர்களுக்குப் பணம் அதிகமாக இருக்கிறது. வெள்ளைக்காரர்களுக்கு அதிகமாகப் பணம் இருப்பதன் காரணம் என்ன? அவர்கள் தேசத்தில் சாக்கட்டியும் நிலக்கரியுந்தான் இருக்கின்றன. அதனால் மற்ற இடங்களுக்குப்போய் அவர்கள் ஸம்பாதித்து வருகிறார்கள். நம்முடைய தேசத்தில் மார்வாடிகளும் நாட்டுக்கோட்டையார்களும் செல்வவான்களாக

இருக்கிறார்கள். மார்வாடிகள் ராஜபுதனத்தில் உள்ள மருவாட் தேசத்தவர்கள். மருப்பிரதேசம் என்பது பாலைவனத்துக்குப்பெயர். மருவாட் தேசத்தில் பாலைவனம் இருக்கிறது. உழுநிலம் இல்லை. நாட்டுக்கோட்டை பூமியில் எல்லாம் ஜலமில்லாப்பொட்டல். இரண்டு இடங்களிலும் இருக்கின்றவர்கள் மற்ற தேசங்களுக்குப் போய்ப் பணம் ஸம்பாதிக்கிறார்கள். விளையும் பூமி உள்ள தேசத்தில் இருப்பவர்கள், 'நமக்கு என்ன குறைவு?' என்று இருந்து விடுவார்கள். தேச அமைப்புக்கு ஏற்றபடி மனுஷ்யர்களுடைய ஜீவியமும் ஸ்வபாவமும் மாறும் என்பதற்காக இவ்வளவும் சொன்னேன். பிராசீனலேகமாலையில் உள்ள ஸம்ஸ்கிருத சிலாசாஸனங்களிற் பல கிணற்றில் கிடந்த சிலையில் இருந்தவைகள் என்று தெரிகின்றது. குஜராத், மருவாட் முதலிய தேசங்களில் கிணறு வெட்டுவது, கோயில் கட்டுவதைப் போன்றது. வாபீப்ரசஸ்தி என்று பல சாஸனங்கள் காணப்படுகின்றன. அந்தத் தேசத்தில் ஸ்ரீஹர்ஷர் பிறந்தவர்போல் தோன்றுகிறது. அதனால் அரசர்களைப்பற்றிச் சொல்லும்பொழுது கிணற்றை வெட்டினாரென்று சொல்லுகிறார்.

उन्मीलल्लीलनीलोत्पलदलदलनामोदमेदस्विपूर-
क्रोडक्रीडद्द्विजालीगरुदुदितमरुत्स्फालवाचालवीचिः ।
एतेनाखानि शाखानिवहनवहरित्पर्णपूर्णद्रुमाली-
व्यालीढोपान्तशान्तव्यथपथिकदृशां दत्तरागस्तडागः ॥

[நைஷதகாவியம், XII, 103.]

'இவன் குளம் வெட்டினான். அந்தக் குளத்தில் நீலோத்பலங்கள் நிறைய இருக்கும். அலைகளால் அசைந்து



கொண்டிருக்கும் தாமரைப் புஷ்பங்களின் தளங்களின்மேல் அன்னப்பக்ஷிகள் விளையாடிக்கொண்டிருக்கும். குளத்தின் கரைமேல் பலவகையான விருக்ஷங்கள் இருக்கும். அவைகள் குளிர்ந்த நிழலைக் கொடுப்பதனால் பாதசாரிகள் அங்கே வந்து தங்கிச் சிரமபரிஹாரம் பண்ணிக்கொள்ளுவார்கள்', என்று ஓரிடத்திற் சொல்லுகிறார்.

காஞ்சீபுர அரசனைப் பற்றி ஒரு சுலோகம் இருக்கிறது. அதில்தான் ஸ்ரீசந்திரமௌளீசுவரரைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

सिन्धोर्जैत्रमयं पवित्रमसृजत्तत्कीर्तिपूर्ताद्भुतं
यत्र स्नान्ति जगन्ति सन्ति कवयः के वा न वाचंयमाः ।
यद्बिन्दुश्रियमिन्दुरञ्चति जलं चाविश्य दृश्येतरो
यस्यासौ जलदेवतास्फटिकभूर्जागर्ति योगेश्वरः ॥

[நைஷதகாவியம், XII, 38.]

'அந்த அரசனும் ஒரு குளம் வெட்டினான். அந்தக் குளம் ஸமுத்திரத்தை ஜயிக்கும் பரம பாவனமான குளம். அந்த அரசனின் கீர்த்தி நிறைந்திருப்பதுபோல அந்தக் குளத்தில் தீர்த்தம் நிறைந்து இருக்கிறது. கவிகளால் வருணிக்க முடியாதது. அதை வருணிக்க ஆரம்பித்தால் அவர்கள் மௌனிகளாய் விடுவார்கள். சந்திரன் அந்தக் குளத்திலிருந்து தெளித்த துளிதான்' என்று சொல்லியிருக்கிறது. பின்பு அந்த அரசனைப்பற்றி நிஜமான ஸ்தோத்திரம் வருகிறது. ஸாரஸ்வதி தமயந்திக்கு இந்தமாதிரி சொல்லிக்கொண்டுவருகிறாள்.

"இந்த அரசனுடைய ஊரில் ஒரு யோகேசுவரர் இருக்கிறார். அவர் ஸ்படிகமயமானவர். அவருக்கு இந்தத் தீர்த்

தம் உபயோகமாகிறது. அப்படி இந்தத் தீர்த்தத்தால் அபிஷேகம் பண்ணுகிறபொழுது அவர் தெரியாமல் போகிறார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்படிகம் ஜலத்தில் அகப்பட்டால் தெரியாது. ஸ்வாமி ஸ்படிக லிங்கமாகையால் அபிஷேகம் பண்ணுகையில் தெரியாமற் போகிறார். பரமேசுவரனுக்கு முதல் மூர்த்தி ஜலம். ஜல தேவதையாக இருந்தாலும் ஜலத்தில் தெரியாமல் இருப்பார். ஜலம் ஜலத்துக்குள் புகுந்தால் தெரியாது. பரமேசுவரன் ஜல மூர்த்தியாக இருப்பதனாலும் அபிஷேகம் பண்ணுகையில் தெரியாமற் போகிறார்.

இதில் 'யோகேஸ்வர:' என்று ஸ்வாமியின் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் யோக லிங்கம். சந்திரமௌளீசுவரர்தாம் யோகலிங்கம். யோகேசுவரர் அவரே. அவரைத்தான் ஸ்ரீஹர்ஷர் சொல்லியிருக்கிறார். இதனால் ஸ்ரீஆசாரியரவர்களால் ஆராதிக்கப்பட்ட யோக லிங்கத்தினிடத்திலும் பக்தி உடையவர் என்று தெரிகிறது. ஸ்ரீ ஆசாரயரவர்களிடத்தும் அத்துவைத ஸ்வரூபத்தினிடத்தும் பக்தி இருப்பதை முன்பு தெரிந்துகொண்டோம்.

ஸ்படிகலிங்கம் பரமபிரம்மத்துக்கு அடையாளம். அதில் எந்த நிறமும் பிரதிபலிக்கும். அது துரீய சிவத்துக்கு அடையாளம். மூன்று குணங்களும் கலந்தால் அந்த அந்த மூர்த்தியாகிறார். அத்தகைய சந்திரமௌளீசுவரருக்கு ஒரு கோயில் இருந்தால் போதாது. ஊருக்கெல்லாம் அவர் சொந்தமானவர். ஊருக்கெல்லாம் ஒரு கோயில் இருக்கவேண்டும். அது ஓர் ஊரிலேயே இருக்கக்கூடாது. அதனால்தான் ஊர் ஊராகச் சென்று உத்ஸவம் பண்ணுங்கள் என்று எங்களுக்கு ஸ்ரீ ஆசாரியரவர்கள் ஆஜ்ஞை செய்திருக்கிறார்கள்.

---

# VI

## குமாரிலபட்டர் வரலாறு

[3—11—1932]

இன்று ஸ்கந்தஷஷ்டி. இது ஸுப்ரஹ்மண்யருக்கு விசேஷ தினம். பக்தர்களுக்கு எல்லாம் விசேஷ தினங்களே. அவர்களுக்காகப் புண்ணியதினம் என்பது அவசியம் இல்லை. லௌகிகர்களுக்காகத்தான் புண்ணியதினங்கள் வேண்டும். புண்ணியதினம் அவர்களுக்கு ஸ்வாமியின் ஞாபகத்தை உண்டாக்குகிறது.

ஸ்வாமி என்பது ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்குத்தான் பெயர். மற்றத் தேவதைகள் இவருடைய பெயரைத்தான் கடன் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

देवसेनापतिः शूरः स्वमी गजमुखानुजः [அமரகோசம்.]

என்று அமரம் சொல்லுகிறது. திருப்பதியில் ஸ்வாமி புஷ்கரணி என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. குமாரதாரை என்று ஒன்று இருக்கிறது. ஹிந்துஸ்தானியில் வேங்கடரமண ஸ்வாமியைப் பாலாஜி என்று சொல்லுகிறார்கள். பாலன் என்பது ஸுப்ரஹ்மண்யருடைய பெயர். வடதேசத்தில் அவரை ஸுப்ரஹ்மண்யன் என்று சொல்லுவதில்லை. சிவகுமாரன், சிவபாலன் என்றுதான் சொல்லுவார்கள். தமிழில் அதிகமாகப் படித்தவர்களெல்லாம் இந்த ஸ்வாமியினிடத்தில் அதிக பக்தி உடையவர்களாக இருப்பார்கள். தமிழ்த் தெய்வம் என்று கொண்டாடுகிறார்கள். முருகன் என்ற தமிழ்ப் பெயரால் அவரை அழைக்கிறார்கள். தமிழுக்கே அதிஷ்டான தெய்வமாக இந்த ஸ்வாமியைச்

சொல்லுகிறார்கள். பிராஹ்மண்யத்துக்கேற்பட்ட கர்மாநுஷ்டானங்களை உடையவர்கள் இவரை நல்ல பிராஹ்மண்யத்துக்கு ஆதாரமானவர் என்று சொல்லி ஸுப்ரஹ்மண்யர் என்ற பெயரால் அழைக்கின்றார்கள். இப்படி, தமிழ்ப் பாஷை ஸம்பந்தமுடையவர்களும் இவரைக் கொண்டாடுகிறார்கள்; வேத அத்தியயனம், வைதிக ஆசார அநுஷ்டானம் உடையவர்களும் ஸுப்ரஹ்மண்யன் என்று கொண்டாடுகிறார்கள். இது இந்த ஸ்வாமியினிடத்தில் உள்ள விசேஷம். ஸுப்ரஹ்மண்யன் என்பதற்கு நல்ல ப்ரஹ்மண்யன் என்பது அர்த்தம். இந்த இரண்டு திறத்தாரும் பிரியம் வைப்பதோடன்றி வேறு இரண்டு பேர்கள் இந்த ஸ்வாமியிடம் பிரியம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பார்வதீ பரமேசுவரர்கள்.

லோகமாதா பார்வதி. லோகபிதா பரமேசுவரன்.

जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ [ரகுவம்சம், I-1.]

என்று காளிதாஸன் ரகுவம்சத்தில் சொல்லியிருக்கிறான். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவையார் சொல்லியிருக்கிறார். தாயார் தகப்பனாரைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டும். தெய்வமே தாயார் தகப்பனாராக இருக்கிறது. அவர்கள்தாம் பார்வதீ பரமேசுவரர்கள். அந்த இரண்டு பேர்களும் சேர்ந்து அநுக்கிரஹம் பண்ணினால் அது விசேஷமானது. தனித் தனியாக அநுக்கிரஹம் பண்ணினால் மட்டும் போதாது. இரண்டு பேரிடமும் ஒரேவிதமான பக்தி இருக்கவேண்டும். சூர்ப்பணகையும் ராவணனும் ராமனிடத்திலும் சீதையினிடத்திலும் ஒரேவிதமான பக்தி பண்ணாமல் விகாரப் பிரேமை கொண்டதனால் துன்பப்பட்டார்கள் என்று ஒரு கவி சாதுர்யமாகச்



சொல்லியிருக்கிறார். சூர்ப்பணகைக்கு இராமனிடத்தில் மாத்திரம் பிரேமை இருந்தது; சீதையினிடம் இல்லை. ராவணனுக்குச் சீதையினிடம் மட்டும் பிரேமை இருந்தது; ராமனிடம் விரோதம் இருந்தது. ஆகவே பரமேசுவரனையும் அம்பிகையையும் ஏகீபாவமாக பக்தி பண்ணினால் அதிக நன்மை உண்டாகும். இரண்டு பேரிடத்திலும் ஒரேவிதமான பிரீதி இருக்கவேண்டுமென்றால் அந்த இரண்டு பேரும் மாதா பிதாக்களாகத்தான் இருக்கவேண்டும். ஆதிதம்பதி லோக மாதாவும் லோக பிதாவுமே. அந்த இரண்டு பேரும் சேர்ந்து அநுக்கிரஹம் பண்ணவேண்டும். அந்த இரண்டு பேரிடத்திலும் ஒரே பிரேமைவேண்டும். பிரித்துப் பார்க்கக் கூடாது. பாகம்பிரியாளென்று தமிழில் அம்பிகைக்கு ஒரு பெயர் உண்டு. இரண்டு பேரும் சேர்ந்து அநுக்கிரஹம் செய்வதற்காகத்தான் அர்த்தநாரீசுவரராக ஆவிர்ப்பாவமானார்கள். திருச்செங்கோடு என்னும் ஸ்தலத்தில் அர்த்தநாரீசுவரமூர்த்தி இருக்கிறார். அர்த்தநாரீசுவரமூர்த்தி அநுக்கிரஹம் பண்ணினால் இருவருடைய அநுக்கிரஹமும் கிடைத்துவிட்டதாகும். இந்த அர்த்தநாரீசுவரர் விஷயமாக ஒரு கவி சில ஸ்துதி சொல்லியிருக்கிறார். அதில் ஒரு சுலோகத்தில் இரண்டு பேருக்கும் ஒரு சண்டை மூட்டிவிடுகிறார்.

साधारणे स्मरजये निटिलाक्षिसाध्ये
भागी शिवो भजतु नाम यशः समग्रम् ।
वामाङ्घ्रिमात्रकलिते जननि त्वदीये
का वा प्रसक्तिरिह कालजये पुरारेः ॥

[ஆநந்தஸாகரஸ்தவம்]

'பரமேசுவரன் மன்மதனை ஜயித்தார் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஜயித்தது எந்தக் கண்? நெற்றிக் கண். அர்த்தநாரீசுவர மூர்த்திக்கு ஒரு நெற்றிக் கண் இருக்கிறது. அது யாருக்குச் சொந்தம்? இரண்டு பேருக்கும் பாகம் உண்டு. ஆகையால் மன்மதனை ஜயித்த கீர்த்தியில் இரண்டு பேருக்கும் பாகம் உண்டு. ஆனால் ஸ்வாமிக்கு மாத்திரம் கீர்த்தி இருக்கிறது. அந்தப் பேராவது போகட்டும். ஒரு பாதியாவது ஸம்பந்தம் இருக்கிறது. கொஞ்சங்கூட ஸம்பந்தமே இல்லாத ஒரு பெயர் ஸ்வாமி வைத்துக்கொண்டிருக்கிறார். கால ஸம்ஹார மூர்த்தி அவர் என்று சொல்லுகிறார்கள். எந்தக் கால் அந்தக் காலனை உதைத்தது? இடது காலல்லவா? அது உன்னுடைய கால். அவருக்குப் பாகமே கிடையாது. அப்படி இருக்கும்பொழுது காலனை ஜயித்ததில் புராரிக்கு என்ன ஸம்பந்தம் இருக்கிறது' என்று அந்தக் கவி சொல்லுகிறார். அவரே வேறோரிடத்தில் ஒரு சுலோகம் சொல்லியிருக்கிறார். அது,

अशक्यमङ्गान्तरवद्विभक्तुमणुप्रमाणं करणं यदन्तः ।
सामान्यभूतं शिवयोस्तदेकं सानुग्रहं स्यान्मयि गर्भदासे ॥

[சிவலீலார்ணவம்.]

என்பது. இரண்டு பேருடைய அநுக்கிரஹமும் அர்த்தநாரீசுவரர் அநுக்கிரஹத்தால் வந்துவிடும். அந்த அர்த்தநாரீசுவரருடைய சரண அநுக்கிரஹம் பெறுவதா? கடாக்ஷ வீக்ஷண்யம் பெறுவதா? சரணாநுக்கிரஹம் என்றால் எந்தக் கால் என்றும் கடாக்ஷம் என்றால் எந்தக் கண் என்றும் ஸந்தேஹம் வந்துவிடுகிறது. ஆகையால் அந்த மூர்த்தியினிடத்தில் இரண்டு பேருக்கும் பொதுவான ஓர் இடம் இருந்தால் அந்த இடத்தின் அநுக்கிரஹம் பெற்றால் இரண்டுபேருடைய அநுக்கிரஹம் பெற்றவர்களாவோம்.



அப்படி ஓர் இடம் இருக்கிறதா? இருக்கிறது. அதுதான் அந்தக்கரணம்.

தர்க்கத்தில் ஏழு வகையாகப் பதார்த்தங்களைப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் திரவியம் என்பது ஒருவகை. அந்தத் திரவியத்தில் மனஸும் ஒன்று. அது அணுப் பிரமாணம். ஆத்மாவும் ஒரு திரவியம். அது விபு; அதாவது எங்கும் நிறைந்தது. மனஸ் பரமாணு. எதைக் காட்டிலும் கீழே சிறியது ஒன்று இல்லையோ அதுதான் அணு.

तच्च प्रतिशरीरं भिन्नम् [தர்க்கஸங்கிரஹம்.]

மனஸ் ஒவ்வொரு சரீரத்திலும் தனித்தனியாக இருக்கிறது. ஒவ்வொரு மனஸும் அணுப்பிரமாணமுள்ளது. அணு அவயவம் இல்லாதது. அவயவம் உள்ள பொருள் இரண்டு பிரிவாக இருக்கும். நிரவயவம் அணு. எதற்குக் கீழே அவயவப் பிரிவு இல்லையோ அதுதான் அணு. ஒரு கோலிக்குண்டு இருக்கிறது. அதில் எவ்வளவோ அவயவங்கள் இருக்கின்றன. அதை உடைத்துப் பிரித்துக் கொண்டே போனால் போய்க் கொண்டேயிருக்கும். அது அநந்தாவயவம் உடையது. குழவிக்கல்லிலும் அநந்தாவயவங்கள் இருக்கின்றன. கடுகிலும் மேருவிலும் அப்படியே இருக்கின்றன. அவயவம் இருக்கும் விஷயத்தில் மேருவும் கடுகும் ஒன்றுதான். மேருவைப் பிரித்துக்கொண்டே வந்து ஓர் இடத்தில் நிறுத்தியதுதான் கடுகு. இரண்டுக்கும் அளவில்தான் வித்தியாஸம் இருக்கிறது. இப்படி ஒரு வஸ்துவின் அவயவங்களைப் பிரித்துக்கொண்டே போனால் கணக்குக்கு எட்டாத பிரிவுக்குப் பின்பு மேலே பிரிக்க முடியாத ஓரிடத்தில் நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தும் ஸமயத்தில் இருப்பதுதான் அணு. அந்த அணுப்பிரமாணம்

மனஸ். ஒரு தேஹத்துக்குக் கண்கள் இரண்டு இருக்கின்றன; காது இரண்டு; மற்றவைகளில் அநேகமாக எல்லாம் இரண்டாகவாவது இரண்டு பிரிவுகளையுடையவைகளாகவாவது இருக்கின்றன. மனஸ் மட்டும் ஒன்று. அதைப் பிரிக்கமுடியாது. அவயவம் இல்லாத அணு அது. அதைத்தான் கவி சொல்லுகிறார். இதர அங்கங்களைப்போலப் பாகம் பண்ணமுடியாத ஓர் அங்கம் இருக்கிறது. அது அந்தக்கரணம். அது அணுமாத்திரமாகையாற் பிரிக்கமுடியாதது; இருவருக்கும் பொதுவானது; அதனுடைய அநுக்கிரஹம் இருந்தால் உங்கள் இருவருடைய அநுக்கிரஹமும் வந்தபடியாகும்' என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அந்த இரண்டுபேருடைய மனஸும் சேர்ந்து அடங்கும் இடம் எங்கே? சிவம் ஆனந்தரூபம்.

आनन्दो ब्रह्मेति व्यजानात् [தைத்திரீயோபநிஷத்]

அன்பே சிவமென்று தமிழில் சொல்லப்பட்டிருக்கிறது

அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந் திருந்தாரே

[திருமூலர் திருமந்திரம். 12]

அன்பும் சிவமே. மங்களமும் சிவமே. அம்பிகை ஸர்வ மங்களை. இந்த இருவருடைய மங்களகரமான அன்பும் சேருமிடம் எது? அந்த இடந்தான் ஸுப்ரஹ்மண்யர். இரண்டு பேருடைய அருளும் பெருகிக் கலந்த இடம் அவரே. அந்த ஸுப்ரஹ்மண்யருடைய அநுக்கிரஹத்தை அடைந்தால் பார்வதி பரமேசுவரர்களுடைய அநுக்கிரஹங்



களையும் அடைந்து விடுவோம். இன்றைய தினத்தை ஸுப்ரஹ்மண்ய ஷஷ்டி என்றும் சொல்லுவார்கள். ஆந்திர தேசத்தில் ஸுப்பராய ஷஷ்டி என்று சொல்லி இன்றைக்கு விரதம் அநுஷ்டிப்பார்கள்.

அவர் ஸுப்ரஹ்மண்யர் ஆகையால் பிராஹ்மண்யத்துக்கு லோபம் வரும் போதெல்லாம் அதை மறுபடியும் நிலைநாட்டவந்தார். தமிழ்நாட்டில் ஸம்பந்தஸ்வாமியாக அவர் அவதாரம் செய்தார். நாஸ்திகர்களைப் போக்கினார். வைதிகமார்க்கத்தை அழித்து நாஸ்திகவாதம் செய்த ஜைனர்களை அவர் ஜயித்தார். வைதிகானுஷ்டானமும் வேதத்தில் சொல்லப்பட்ட பரலோகநம்பிக்கையும் இல்லாதவர்கள் நாஸ்திகர்கள். "மறைவழக்க மிலாத மாபாவிகள்" என்று ஸம்பந்தரே அவர்களைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார். வைதிகாநுஷ்டானம் அவர்களிடம் இல்லை. வேதத்தையும் யஜ்ஞத்தையும் நிந்தித்தார்கள். "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்" என்று சொல்லியிருக்கிறார். வேதம் ஈசுவரனுடைய ஆஜ்ஞை. அதை அநுஸரித்தால் அவருடைய கருணை உண்டாகும். அதை ஒப்புக்கொள்ளாத ஜைனர்களை வாதம் செய்து ஜயிக்க எண்ணினார். வாதத்தினாலாவது புத்தி உண்டாகட்டுமென்று பார்த்தார். கடைசியில் "வாழ்க அந்தணர்" என்று வரும் பாசுரத்தைச் சொல்லி வைதிகமதத்தை நிறுத்தினார்.

அவர் குமாரருடைய அவதாரம். அதனால்தான் அம்பிகையுடைய க்ஷீரத்தை—அதாவது ஞானப்பாலை—உண்டதனால் அவருக்கு பூர்ணஜ்ஞானம் அடைந்து ஞானஸம்பந்தர் என்னும் பெயர் பெற்றார். அவர் ஸுப்ரஹ்மண்யராதலால் "வாழ்க அந்தணர்" என்று பிராஹ்மண்யத்தை ஸ்தாபித்தார்.

சமணர்களை ஞானஸம்பந்தர் கழுவேற்றினாரென்ற ஒரு கதை சொல்லப்படுகிறது. அது அவருக்கு ஒரு குறைவாகத் தோன்றுகிறது. நீலகண்ட தீக்ஷிதர் என்னும் மஹான் ஒருவர் சிவலீலார்ணவம் என்னும் ஒரு காவியம் எழுதியிருக்கிறார். அது மதுரையிலுள்ள சிவனுடைய லீலைகளைச் சொல்லுவது. அதில் ஞானஸம்பந்தர் சரித்திரம் இருக்கிறது. வாதம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பு சமணர்கள் தாங்கள் தோல்வியை யடைந்தால் சரீரத்தைத் தியாகம் பண்ணிவிடுவதாகப் பிரதிஜ்ஞைசெய்து கொண்டார்கள். அவர்கள் தோல்வியை அடைந்துவிட்டார்கள். நாஸ்திகர்களாக இருந்தாலும் சில குணங்கள் அவர்களிடம் உண்டு. ஸத்தியம் உண்டு. ஆகவே, நாங்கள் ஸத்தியத்தினின்றும் தவறமாட்டோமென்று சொல்லி அவர்களே கழுவில் ஏறிப் பிராணத்தியாகம் செய்து கொண்டார்கள் என்று அந்தக் காவியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கழுவிலேற ஆரம்பிக்கும் பொழுது ஸம்பந்தர் ஏறவேண்டாமென்று தடுத்தும் அவர்கள் ஏறினார்கள். வைதிக கர்மாநுஷ்டானங்களை நிந்தித்த தோஷத்திற்கு இது பரிகாரமாக இவர்களே ஏற்றுக்கொண்டார்களென்று மனவில் ஸமாதானம் செய்துகொண்டார் என்று அதிற் காணப்படுகிறது.

இப்படித் தென்தேசத்தில் அவதாரம் செய்து ஜைனர்களை ஜயித்த அதே ஸ்வாமி வட தேசத்தில் பௌத்தர்களின் ஆதிக்யம் இருந்தபொழுது பிரயாகையில் அவதாரம் செய்தார். அவருக்குக் குமாரிலபட்டர் என்பது பெயர் ஸ்ரீ சங்கரவிஜயத்தில் அவருடைய கதை வருகிறது. அவர் பௌத்தமத நாஸ்திக நிராகரணம் பண்ணும் பொழுது தம்முடைய தேஹத்தையே அக்கினிக்கு அர்ப்பணம் பண்ணினார். கர்மாநுஷ்டானத்தின் கௌரவத்தை அநுஷ்டானம் பண்ணிக் காட்டுவதற்காக அவ்வாறு செய்தார்.



இந்த *ஸம்ஸ்கிருத காலேஜுக்கு முக்கியமான கௌரவம் என்னவென்றால், இங்கே மீமாம்ஸாசாஸ்திரம் சொல்லிக்கொடுக்கப்படுவதே. அந்த மீமாம்ஸாசாஸ்திரத்தில் முக்கியமான புஸ்தகத்திற்குப் பாட்டதீபிகை என்று பெயர். மீமாம்ஸா மதத்தில் மூன்று விதம் உண்டு. பாட்டமதம் என்பது ஒன்று. அந்த மதஸ்தர்கள் குமாரிலபட்டரை அநுஸரித்தவர்கள். அந்த பாட்ட மதஸ்தர் ஒருவர் எழுதின கிரந்தம் பாட்டதீபிகை என்பது. அதற்கு அநேக வியாக்கியானங்கள் உண்டு. அந்த வியாக்கியானங்கள் செய்தவர்களுள் சம்புபட்டர் என்பவர் ஒருவர். பாட்டர்கள் என்றபெயர் குமாரிலபட்டருடைய நாமதேயத்திலிருந்து வந்தது.

சில சங்கரவிஜயங்களில் தேவர்களெல்லோரும் பரமேசுவரனிடம் போய் லோகத்தில் கர்மாநுஷ்டானங்கள் குறைந்துவிட்டன என்று முறையிட்டார்களென்றும், அதற்காகப் பரமேசுவரன் ஸ்ரீ சங்கராசரியர்களாக அவதாரம் செய்தாரென்றும், இன்ன இன்ன தேவர்கள் இன்னார் இன்னாராக அவதாரம் செய்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமாயணத்தில் முதலில் இப்படியே, தேவர்கள் முறையிட்டுக் கொண்டதால் மஹாவிஷ்ணு இராமராக அவதாரம் செய்தாரென்றும், தேவர்களும் பலபேர்களாக அவதரித்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கரவிஜயங்களில் அவ்வாறே சொல்லப்படுகின்றது. பிரம்மா மண்டனமிஸ்ரராக வந்தார். பிரம்மாவினுடைய பத்தினியாகிய ஸரஸ்வதி மண்டனமிஸ்ரருக்குப் பத்தினியாகிய ஸரஸவாணி

---

* The Madras Sanskrit College, Mylapore.

யாக வந்தாள். இந்திரன் ஸுதன்வா என்னும் அரசனாகப் பிறந்தான். மஹாவிஷ்ணு ஸ்ரீ சங்கருடைய சிஷ்யர்களில் ஒருவராகிய பத்மபாதாசார்யராக அவதாரம் செய்தார். ஸுப்ரஹ்மண்யர் குமாரிலபட்டராக அவதாரம் செய்தார். இன்றைக்கு ஸ்கந்தஷஷ்டி யாதலால் ஸ்ரீ சங்கராசார்ய விஜயத்தில் அவருடைய கதையைச் சொல்ல எண்ணினேன்.

குமாரிலபட்டர் பிராயாகை க்ஷேத்திரத்தில் அவதாரம் பண்ணினார். அந்தக் காலத்தில் பௌத்த மதத்தின் ஆதிக்கியம் அதிகமாக இருந்தது. பௌத்தர்கள் விசேஷமான யுக்தி புத்தி உடையவர்கள். அவர்கள், வேதாத்தியயனம், உபநயனம், யாகயஜ்ஞங்கள் முதலியவைகளிற் பிரியம் இல்லாமல் இருந்தார்கள். ஆகையால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து வைதிக மதத்தைக் கண்டனம் பண்ணித் தேசத்தில் உள்ளவர்களை நாஸ்திகர்களாக ஆக்கிக் கொண்டு வந்தார்கள்.

குமாரிலப்பட்டர் இதை அறிந்தார். எப்படியாவது இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்று விரும்பினார். புத்த மதத்தைக் கண்டிக்க எண்ணினார். ஒரு மதத்தைக் கண்டிக்க வேண்டுமென்றால், அந்த மதத்தை நன்றாகத் தெரிந்துக் கொள்ளவேண்டும். அதேமாதிரி எதைக் கண்டனம் பண்ண எண்ணினாலும் அதை நன்றாகத் தெரிந்து கொண்டபின்பே கண்டிக்க வேண்டும். சிலர் வேதம் தப்பு, தர்மசாஸ்திரம் தப்பு என்று கண்டனம் செய்யப் புறப்படுகிறார்கள்; அவைகள் ஏன் ஏற்பட்டன? அவைகளால் ஏதாவது பிரயோஜனம் உண்டா? இல்லையா? அவைகளால் முன்பு ஏதாவது சிரேயஸை அடைந்தார்களா? இல்லையா? இப்பொழுது அப்படிப்பட்ட சிரேயஸ் நமக்கு வேண்டுமா? வேண்டாமா?



இப்பொழுது அவைகளால் அந்தச் சிரேயஸ் கிடைக்குமா? கிடைக்காதா? என்பவைகளை நன்றாக ஆலோசிக்கவேண்டும். இப்பொழுதுள்ள நம்முடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக இருக்கிறதென்று ஒன்றைத் தப்பு என்று சொல்லிவிடுதல் மிகவும் தப்பான காரியம். அதை முற்றிலும் பார்த்து ஆலோசனை செய்து அதனால் பிரயோஜனம் இல்லையென்று நிச்சயமாகத் தெரிந்தால் தள்ளிவிடலாம். அப்படிச் செய்யாமல் தப்பென்று தோன்றியவுடன் ஒன்றை நிராகரிக்க ஆரம்பிப்பது நன்றாக இல்லை. அந்தக் காலத்திலும் இந்தக் காலத்திலும் அது ஒன்றுதான் நன்றாக இல்லை. ஒரு விஷயத்தைத் தள்ளிவிடவேண்டும் என்று தோன்றுகிறது. ஒரு பெரிய பிரயோஜனத்துக்காகத்தான் அப்படிச் செய்யத் தோன்றும். எதை நாம் தள்ளிவிட எண்ணுகிறோமோ, அது எந்தப் பிரயோஜனத்துக்காக ஏற்பட்டதென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு அப்புறம் இந்தப் பிரயோஜனம் பெரிதா, அது பெரிதா என்று அறிந்து பின்பு அதைத் தள்ளவேண்டும். பௌத்தர்களை நிராகரணம் பண்ணும்பொழுதுகூடக் குமாரிலபட்டருக்கு இந்த அபிப்பிராயம் உண்டாயிற்று. இந்தக் காலத்தில் எதையாவது ஆக்ஷேபிப்பவர்களிடம், 'கொஞ்சம் ஆலோசியுங்கள். இரண்டு பேரும் யோசிக்கலாம். எது உபயோகமானதென்பதைத் தெரிந்துகொள்ளலாம்' என்று சொன்னால், 'அதெல்லாம் சுத்த அர்த்தமில்லாதது (Non-sense)' என்று சொல்லிவிடுகிறார்கள்.

குமாரிலபட்டர் பௌத்தமதத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்காக அவர்களிடம் வித்தியாப்பியாஸம் பண்ணத் தீர்மானித்தார். அந்தப் பௌத்தர்கள் தங்கள் சாஸ்திரங்களைப் பிராம்மணர்களுக்குச் சொல்லமாட்டார்கள்.

இவரோ எப்படியாவது தெரிந்துகொண்டுதான் கண்டிக்க வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தார். மனுஷ்யராக இருந்து மனுஷ்யர்களுக்குத் தக்கபடி கண்டனம் பண்ண வேண்டும் என்று எண்ணினார். ஸுப்ரஹ்மண்யராக இருந்து ஜயிப்பது பிரயோஜனமில்லை. இந்த மனுஷ்ய சக்தியை வைத்துக்கொண்டு இதையே பெரிதாக்கவேண்டும். தெய்வ சக்தியினால் செய்வதானால் ஒன்றுமே வேண்டாம். நினைத்தால் எல்லோரையும் எரித்துவிடலாம். அப்புறம் ஸ்ருஷ்டியே வேண்டாம்.

குமாரிலபட்டர் பொய்யாக ஒரு பௌத்தர்போல வேஷம் போட்டுக்கொண்டார். ஒரு பெரிய விஹாரத்தில் (Vihara) இருந்த வித்தியாஸ்தானத்தைச் சேர்ந்தார். அந்த விஹாரத்தில் ஏழுமாடிகள் இருந்தன. அந்தரங்கமாக அவசியமான கர்மாநுஷ்டானங்களைச் செய்துவந்தார். பௌத்தர்களிடம் படித்துவந்தார். அப்படிப் படித்து வரும்போது அவர்கள் வேதத்தையும் வைதிக கர்மாநுஷ்டானங்களையும் தூஷிப்பார்கள். அப்பொழுது குமாரிலப்பட்டருக்கு வருத்தம் உண்டாகும். அதைத் தம்மால் ஆனமட்டும் வெளியில் காட்டாமல் அடக்கிக்கொள்ளுவார். ஆனாலும் சில ஸமயங்களில் கண்ணில் ஜலம் வந்துவிடும். பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள் பார்ப்பார்கள். “இவன் யாரோ ஒரு பார்ப்பான் போல இருக்கிறது” என்று நினைத்தார்கள். “ஏன் அழுகிறீர் ?” என்று கேட்டார்கள். இவர் ஸமாளித்துக் கொண்டார். “ஆஹா ! என்ன புத்தி ! என்ன அழகாகக் கண்டனம் பண்ணி இருக்கிறார்கள் ! இது மிகவும் நன்றாயிருக்கிறது. அதனால்தான் ஸந்தோஷத்தால் கண்ணில் ஜலம் வந்தது” என்பார். இப்படிச் சில முறை நடந்தது. அப்புறம் அவர்களுக்கு உண்மை தெரியவந்தது. ‘இவனை இங்கே



வைத்துக் கொள்ளக்கூடாது’ என்று எண்ணினார்கள். இவர் கொஞ்சமாகத் தெரிந்துகொண்டிருந்தால் வீட்டில் வைத்திருக்கக்கூடாது என்று துரத்திவிடுவார்கள். இவர் நிறையத் தெரிந்துக்கொண்டிருந்தார். அதனால், ‘இவனை லோகத்திலேயே வைத்திருக்கக்கூடாது’ என்று எண்ணினார்கள். ஹிதவஞ்சனையாக ஏழாவது மாடிக்குக் கூட்டிக் கொண்டுபோனார்கள். அங்கிருந்து கீழே தள்ளிவிட்டார்கள். இவர் கீழே விழுந்தார். அப்படி விழும்பொழுதே ஒரு சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே விழுந்தார். வேதம் பிரமாணமாக இருந்தால் எனக்கு ஒரு துன்பமும் இல்லாமல் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு விழுந்தார். விழுந்தபொழுது ஒன்றும் அதிகமாகத் துன்பம் உண்டாகவில்லை. ஆனால் ஒரு கண்ணில் ஒரு கல்மட்டும் குத்திவிட்டது. உடனே இவருக்குக் கோபம் வந்துவிட்டது.

पतन् पतन् सौधतलान्यरोरुहं यदि प्रमाणं श्रुतयो भवन्ति ।
जीवेयमस्मिन् पतितोऽसमस्थले मज्जीवने तच्छ्रुतिमानता गतिः ॥

यदीति संदेहपदप्रयोगाद्व्याजेन शास्त्रश्रवणाच्च हेतोः ।
ममोच्चदेशात् पततो व्यनङ्क्षीत् तदेकचक्षुर्विधिकल्पना सा ॥

[மாதவசங்கரவிஜயம், VII, 98-99.]

அவதார புருஷர்களுக்கு எல்லாம் வரும். கோபம் வரும் ; பயம் உண்டாகும் ; துக்கம் உண்டாகும். ராமனுக்கு உண்டாயின. இவைகளெல்லாம் மனோவிருத்திகள்: கை கால் ஆடுவதுபோல மனஸும் ஆடட்டுமென்று விட்டுவிடுவார்கள். அதனால் அவர்களுக்கு ஒரு துக்கமும் இல்லை. நமக்கோ இவைகளை வரவிட்டால் துக்கம் உண்டாகிறது. அதற்காக அவைகளை வராமல் அடக்கவேண்டும். ஞானி

கள் அவதார புருஷர்களைவிட விசேஷமானவர்கள் என்பார்கள். அவதார புருஷர்கள் எவ்வளவோ காரியங்களைச் செய்து மற்றவர்களைப் போலவே ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறார்கள். ஞானியோ மனதை அடக்கி ஏகீபாவமாக மௌனமாக இருந்துவிடுகிறான்.

குமாரிலபட்டருக்குக் கோபம் வந்தது, ‘வேதத்தை எவ்வளவு தூரம் நம்பியிருந்தேன்; இப்படி வந்துவிட்டதே’ என்று எண்ணினார். அப்பொழுது ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. ‘வேதம் பிரமாணமாக இருந்தால் என்று சொன்னதன் அடையாளம் இது’ என்று அது சொல்லிற்று. ‘இருந்தால்’ என்றதனால் இருப்பதில் கொஞ்சம் ஸந்தேஹம் உண்டென்று தோற்றுகின்றதல்லவா?

பின்பு குமாரிலபட்டர் மீமாம்ஸகமதத்தைப் பிரசாரம் பண்ண ஆரம்பித்தார். அதில் கர்மமார்க்கமே பிரதானமானது. கர்மாவும் கிடையாது ஸ்வாமியும் இல்லை என்று சொல்லுவது புத்த மதம். அந்தப் புத்த மதத்தை இவர் நிராகரணம் பண்ணினார். ஸ்வாமியைப்பற்றிக் கவனிக்க வேண்டாம்; கர்மாதான் பலனைத் தரும்; கர்மாக்களைச் சரியாகச் செய்துகொண்டு வந்தால் நல்ல பலனை அனுபவிப்போம்; கர்மாவினால்தான் எல்லாம் ஏற்படுகிறது என்பது இவருடைய மதம். ஸ்ரீ ஆசார்யரவர்கள் அதிகமாகப் புத்தமத நிராகரணம் பண்ணவில்லை. அவருக்கு முன்பு மீமாம்ஸகர்கள் பௌத்தர்களை அடக்கிவிட்டார்கள். ஆகையினால் ஸ்ரீ ஆசாரியரவர்களுக்கு அதிகமாகப் புத்தமத நிராகரணம் பண்ணவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பாஷ்யத்தில்மட்டும் புத்தமதத்தைக் கண்டித்திருக்கிறார். அவர் அதிகமாக வாதம் செய்தது மீமாம்ஸகர்களோடுதான்.



ஸ்வாமி கிடையாது; கர்மா உண்டென்பவர்கள் மீமாம்ஸகர்கள். இரண்டும் இல்லை என்பவர்கள் பௌத்தர்கள். ஸ்ரீ ஆசார்யரவர்களுடைய அவதாரத்துக்கு முன்பு எங்கும் கர்மப் பிரதானமாக இருந்தது. பௌத்தமத நாஸ்திகம் போய் மீமாம்ஸக மதம் தலைதூக்கிக்கொண்டு நின்றது.



ஸ்ரீ சங்கராசாரியரவர்கள் குமாரிலபட்டரைச் சந்தித்தல்.

ஸ்ரீசங்கராசார்யரவர்கள் கோவிந்த பகவத்பாதாசார்யர்களுடைய உபதேசம் பெற்றுக்கொண்டு காசீ க்ஷேத்திரத்துக்கு வந்து ஸூத்திர பாஷ்யம் செய்தார்கள். பின்பு

திக்விஜயம் செய்யப் புறப்பட்டுக் கிழக்கு முகமாகப் போகத் தொடங்கினார். குமாரிலபட்டர் அப்பொழுது உமிக்காந்தல் அக்கினியில் இறங்கிவிட்டாரென்று கேள்விப்பட்டார். உமிக்காந்தல் அக்கினி கொஞ்சங் கொஞ்சமாகச் சரீரத்தை வேகச் செய்யும் மிகவும் கஷ்டமானது. துஷாக்கினிப் பிரவேசம் என்று சொல்லுவார்கள். குமாரிலபட்டரைச் சேர்ந்தவர்கள் கர்மா மாத்திரம் போதும் என்று இருப்பவர்கள். 'கர்மா மாத்திரம் சிரேயஸைக் கொடுக்காது. காரியம் கணக்கில் அகப்பட்டது. அதனுடைய பலனும் கணக்கில் அகப்பட்டது. கணக்கில்லாத காலம் ஸௌக்கியத்தை அடைவதற்குக் கர்மாக்கள்மட்டும் போதாது. அது நித்திய சிரேயஸுக்குக் காரணமாகாது. ஈசுவர அநுக்கிரஹத்தால்தான் நித்திய சிரேயஸ் உண்டாகும். கர்மகாண்டத்தை மாத்திரம் அநுஷ்டிக்கக்கூடாது. அதனுடைய பலன் ஞானகாண்டத்தில் இருக்கிறது. வேதாந்தம் அதுதான்' என்று குமாரிலபட்டரிடம் போய் ஸ்தாபிக்க ஸ்ரீ ஆசார்யர்கள் விரும்பினார்கள். அவரைத் திருப்பிவிட்டால் அப்புறம் லோகம் கேட்கும் என்றெண்ணினார். ஆகையால் அவர் துஷாக்கினிப் பிரவேசம் பண்ணிவிட்டாரென்பதைக் கேட்டவுடன் அவரிடம் ஓடினார். அவர் எரிந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்து "எதற்காக உமிக்காந்தல் அக்கினியில் இறங்கினீர்?" என்று ஸ்ரீ ஆசார்யர்கள் கேட்டார்கள். "நான் பௌத்த குருவிடம் பொய் சொல்லி அவர்கள் மதவிஷயங்களைத் தெரிந்துகொண்டேன். ஓர் அக்ஷரத்தை ஒருவரிடம் தெரிந்துகொண்டாலும் அவர் குருவாவார். ஆகையால் நான் குருத்துரோஹம் செய்தவனாய்விட்டேன். கர்மாநுஷ்டானத்தை ஸ்தாபிக்கவந்த நானே இப்படிச் செய்யலாமா? இதற்கு என்ன பிராயச்சித்தம் என்று தர்மசாஸ்திரங்களைப் பார்த்



தேன். மிகவும் கஷ்டமான மரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்தது. அதற்காக இப்படிச் செய்தேன்" என்றார். நாம் அப்படி ஒரு புஸ்தகத்தில் தேடும்பொழுது அப்படிக் கிடைத்தால் உடனே புஸ்தகத்தை அக்கினியிற் போட்டுவிடுவோம். குமாரிலபட்டருக்கோ பிராயச்சித்தம் கிடைத்ததே என்ற ஸந்தோஷம் உண்டாயிற்று.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யரவர்கள் குமாரிலபட்டர் சொன்னதைக் கேட்டார். ஞானமார்க்கத்தை அவரிடம் சொன்னார். கர்மமார்க்கம்மட்டும் உபயோகமில்லை என்று காரணங்களுடன் எடுத்துக்காட்டினார். அவர் எல்லாவற்றையும் அறிந்து "எனக்குத் தங்களுடைய தரிசனம் ஆயிற்று. நான் கிருதார்த்தனானேன். தாங்கள் சொன்னவைகளையெல்லாம் உலகம் தெரிந்துகொண்டால் நன்மை உண்டாகும். நான் உலகத்திற்குச் சொல்ல இப்பொழுது அசக்தனாக இருக்கிறேன். எனக்கு அநுக்கிரஹம் பண்ணவேண்டும். என்னைக்காட்டிலும் பரமமீமாம்ஸகர் ஒருவர் இருக்கிறார். மாஹிஷ்மதி நகரத்தில் அவர் இருக்கிறார். அவர் பெயர் மண்டனமிஶ்ரர் என்பது. அவர் கர்மமார்க்கத்தில் மிகவும் தீர்மானமான புத்தி உடையவர். அவர் திரும்பினால் உலகம் திரும்பும். அவரிடத்தில் போய் ஆக்ஷேபணைகள் பண்ணி அவரைத் திருப்பவேண்டும்" என்று சொல்லிவிட்டு அப்படியே சரீரத்தைப் பரித்தியாகம் பண்ணிவிட்டார். கர்மாக்களை ஈசுவரார்ப்பணமாகச் செய்யவேண்டுமென்பதை நம் ஸ்ரீ ஆசார்யரவர்கள் பட்டருடைய மதஸ்தர்களுக்குப் பின்பு எடுத்துக்காட்டினார். அந்தக் காலம் முதற்கொண்டு நாம் செய்யும் கர்மாக்களில் முன்பு 'பரமேசுவரப்ரீத்யர்த்தம்' என்று ஸங்கல்பம் செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

அந்த ஸங்கல்பம் நம் ஸ்ரீ ஆசார்யரவர்கள் செய்து கொடுத்தது. அதற்கு முன் அப்படி இல்லை. யாகயஜ்ஞங்களிலும் அப்படியே பரமேசுவரார்ப்பணம் பண்ணும் வழக்கம் பின் ஏற்பட்டது.

குமாரிலபட்டர் பிராஹ்மண்யத்துக்காகச் சரீரபரித்தியாகம் பண்ணினார். தர்மசாஸ்திரத்தில் சொன்னபடி நடக்கவேண்டும் என்பதற்காக அப்படிச் செய்தார். அப்படிப்பட்டவர்கள் போட்டுவைத்த அஸ்திவாரம் நம்முடைய மதத்திற்கு இருக்கிறது. அதனால் பயமே இல்லை. பிராஹ்மண்யம் இன்னும் உலகத்தில் இருந்து வருமென்ற நம்பிக்கைக்குக் குறைவே வராது. உயர்ந்த பரித்தியாகங்கள் பண்ணின மஹான்களால்தான் தர்ம சாஸ்திரங்கள் ஜீவித்திருக்கின்றன.

குமாரிலபட்டர் அக்கினிப் பிரவேசம் செய்தது போலவே ஞானஸம்பந்தரும் கடைசியில் அக்கினிப் பிரவேசந்தான் செய்தார். பரமேசுவரனே அந்த அக்கினி ரூபமாக இருந்தார்.

सेनानीरग्निभूर्गुहः [அமரகோசம்.]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸுப்ரஹ்மண்யர் அக்கினியில் உண்டானவர். ஆகையால் அதில் போவது அவருக்கு ஸுலபம். அக்கினியில் உண்டானதால் அவருக்கு 'அக்னிபூ:' என்ற பெயர் ஏற்பட்டது. சரவணப்பொய்கை தாயாக இருந்ததால் சரவணபவன், சரவணப்பெருமாள் என்று சொல்லப்படுகிறார். அவருக்கு ஆறு கார்த்திகைப் பெண்கள் தாயாராக இருந்தார்கள். அதனால் கார்த்திகேயர் என்ற ஒரு பெயர் அவருக்கு வந்தது. கங்கை ஒரு தாயார்.



அதனால் காங்கேயர் என்ற பெயர் வந்தது. எல்லாரும் அவருக்கு மாத்ருஸ்தானம். எல்லோரும் ரக்ஷித்துத் தேவதைகளுடைய கஷ்டங்களையெல்லாம் போக்குவதற்காக ஸ்கந்தராகக் கொண்டுவந்துவிட்டார்கள்.

கார்த்திகை ஆறு நக்ஷத்திரங்கள். அந்த ஆறுக்கும் வேதத்தில் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. நக்ஷத்திரத்தில் ஆறாக இருப்பது கிருத்திகை. திதியில் ஆறாவது ஷஷ்டி. இந்த மாஸம் சாந்திரமானப்படி கார்த்திகை. இன்றைய திதி ஷஷ்டி. இரண்டும் சேர்ந்து ஆறுமுகப் பெருமானுக்கு உரிய நாளாக இருக்கிறது.

குமாரிலபட்டரும் ஞானஸம்பந்தரும் ஸ்ரீஸுப்ரஹ்மண்யாவதாரம். இரண்டு பேரும் வைதிக கர்மாநுஷ்டானங்களை ஸ்தாபித்தார்கள். ஒருவர் வடக்கே ஸ்தாபித்தார். மற்றொருவர் தெற்கே ஸ்தாபித்தார். அவர் வேதத்தைப் பிரசாரம் பண்ணினார். இவர் தமிழ் வேதத்தைப் பாடினார். இருவரும் வேதம் முழுவதும் தெரிந்தவர்கள். "நான்மறை ஞானசம்பந்தன்" என்று தம்மைச் சொல்லிக் கொள்ளுகிறார். அம்பாளுடைய க்ஷீரத்தைச் சாப்பிட்டதால் இவருக்கு வேதம் முழுவதும் தெரியவந்தது. இவர் தமிழ்த் தேசம் முழுவதும் வைதிக தர்மத்தை நிலைநிறுத்த பன்னிரண்டு வயதே போதுமானதாக இருந்தது. ஒரே ஆசிரமத்தில் இருந்து அப்படிச் செய்தார். நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் முப்பத்திரண்டு வயது இருந்தார்கள். மற்றொரு ஆசிரமம் பெற வேண்டியிருந்தது. ஆஸேது ஹிமாசலம் திக்விஜயம் செய்வதற்காகக் கொஞ்சங்கூட இருந்தார். பிள்ளை அப்படி, அப்பா இப்படி.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் ஸௌந்தர்ய லஹரியில் ஓரிடத்தில்

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

[ஸௌந்தர்யலஹரீ, சுலோகம் 75.]

என்று சொல்லியிருக்கிறார். "உன்னுடைய அநுக்கிரஹத்தோடுள்ள க்ஷீரமானது பிரவாஹமாக வருகிறது. அது ஸாரஸ்வதமான அமிர்தம். வாக் அமிருதம். நீ அதைத் தமிழ்க் குழந்தைக்குப் பரமகிருபையோடு கொடுத்தாய்" என்று ஞானசம்பந்தரைப்பற்றிச் சொல்லுகிறார். முருகக் கடவுள் சங்கப்புலவர்களுள் ஒருவராக இருந்திருக்கிறார்.

ஸ்ரீ ஆசார்யர்கள் திக்விஜயம் செய்யும்பொழுது குமாரிலபட்டருக்குத் தரிசனம் கொடுத்து அவருடைய பிரார்த்தனையின்படி மண்டனமிச்ரரிடம் போய் கர்மானுஷ்டானப் பிரதானமென்ற அவருடைய மதத்தை நிராகரித்து வேதாந்தமார்க்கத்தைப் போதித்தார்.

குமாரிலபட்டருடைய கதையும் ஞானஸம்பந்தருடைய கதையும் ஆசார்ய ஸம்பந்தமுடையவைகளாகவே இருக்கின்றன. ஒருவர் கதை ஸ்ரீ ஆசார்யர்கள் கதையிலேயே வருகிறது. மற்றொருவர் கதை ஸ்ரீ ஆசார்யர்களுடைய வாக்கில் வருகிறது. இரண்டுபேரும் இரண்டுவிதமான நாஸ்திக மதங்களை நிராகரணம்பண்ணினவர்கள். இரண்டு பேரும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் அவதாரம்.

தகப்பனாராகிய பரமேசுவரன் தம் குமாரனை நமஸ்காரம் பண்ணினார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

उमाकोमलहस्ताभ्यां संभावितललाटकम् ।
हिरण्यकुण्डलं वन्दे कुमारं पुष्करस्रजम् ॥



ருக்வேதத்தில் பஞ்சருத்திரம் என்று ஐந்து இடங்களில் இருக்கின்றன. அவைகளில் ஒன்றில் இந்த மந்திரம் வருகிறது. வேதபாதஸ்தவம் என்று ஒரு ஸ்தோத்திரக் கிரந்தம் இருக்கிறது. அதில் ஒவ்வொரு சுலோகத்திலும் ஒருபாதம் வேத வாக்கியத்தை உடையதாக இருக்கும் அதிலுள்ள ஒரு சுலோகம் சொல்லுகிறேன்.

இதில் நாலாவதுபாதத்தில் வேதவாக்கியம் அமைந்திருக்கிறது. அம்பாள் தன்னுடைய அழகான கையால் நெற்றிக்கு அலங்காரம் பண்ணும் குமாரஸ்வாமி என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்று ஸ்கந்தஷஷ்டி யானையால் ஸுப்ரஹ்மண்யரைப் பற்றியும் அவருடைய அவதாரமாகிய குமாரிலபட்டரைப் பற்றி ஸ்ரீ சங்கரவிஜயத்தில் வந்திருக்கிற கதையையும் சொன்னேன்.

சங்கரவிஜயங்களில் முக்கியமாக இருப்பவை ஐந்து. அவை மாதவீயம், சித்விலாஸீயம், ஆநந்தகிரீயம், வியாஸாசலீயம், கேரளீயம் என்பவை. இவைகளுக்கு முன்பும் சில சங்கரவிஜயங்கள் இருந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. வியாஸாசலீயத்தைத் தவிர மற்ற சங்கர விஜயங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. மாதவீயத்தைப் பல வருஷங்களுக்குமுன்பு ராயல் ஏஷியாடிக் ஸொஸைடியில் (Royal Asiatic Society) அச்சிட்டிருக்கிறார்கள். கேரளீயசங்கரவிஜயம் மலையாளத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. மாதவீயசங்கரவிஜயக்காரர் பிராசீன சங்கரவிஜயத்தில் உள்ளதை ஸங்கிரஹித்துச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதனால் அதற்கு முன்பு ஒரு பழைய சங்கரவிஜயம் இருந்ததென்று தெரிகிறது. மாதவீயசங்கரவிஜயத்திற்கு டிண்டிமம் என்று ஒரு

வியாக்கியானம் இருக்கிறது. ஸ்ரீ சங்கராசார்யரவர்கள் கைலாஸத்துக்குப் போனாரென்று மட்டும் மாதவீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் வியாக்கியானக் காரர் சிவரஹஸ்யத்திலிருந்து சில சுலோகங்களை எடுத்துக் காட்டி இந்தக் கதைகளெல்லாம் பிருஹத்சங்கரவிஜயத்தில் விரிவாக இருக்கின்றனவென்று எழுதியிருக்கிறார். மாதவீயம் ஸங்க்ஷேபசங்கரவிஜயம் என்று சொல்லப்படும்.

கேரளீயசங்கரவிஜயத்தில் வியாஸாசலசங்கரவிஜயத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. வியாஸாசலீயம் பழமையானது என்று அதில் சொல்லப்படுகிறது.

अत्युन्नतस्य काव्यद्रुव्यासाचलमहीरुहः ।
अर्थप्रसूनान्यादातुमसमर्थोऽहमद्भुतम् ॥

"வியாஸாசலமாகிய பூமியில் சங்கரவிஜய காவியமென்னும் விருக்ஷம் உண்டாயிற்று. அசலத்தில் முளைத்ததாகையால் மிகவும் உயர்ந்தமரம் அது. அதன் அர்த்தமாகிய புஷ்பத்தை ஸாமான்யனாகிய நான் அறிந்துகொள்ள முடியுமா?" என்று அந்த விஜயக்காரர் எழுதியிருக்கிறார். வியாஸாசலத்தை அறிந்தவர்கள்தாம் யார்? என்று அவர் சொல்லுகிறார். அந்தப் புஸ்தகத்துக்கு வியாக்கியானம் செய்தவர் இதில் தம்மையே அவர்சொல்லியிருக்கிறாரென்று எழுதியிருக்கிறார். அது தப்பு. அதில் வியாஸாசலீயமென்னும் பழைய சங்கர விஜயத்தைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்.

சங்கரவிஜயங்களைத் தவிர சங்கராப்யுதயம் என்ற ஒரு புஸ்தகம் உண்டு. அதை ராஜசூடாமணி தீக்ஷிதரென்பவர் எழுதினார். அதில் ஆறு ஸர்க்கங்கள் இருக்கின்றன.

---

# VII

## ஈசுவராவதாரப்பிரமாணங்கள்

[4—11—32]

அம்பாளுக்கு நாம் ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்கிறோம். அந்த லலிதாஸஹஸ்ரநாமார்ச்சனையை விசேஷமாக வெள்ளிக்கிழமைகளில் பண்ணுகிறோம். எல்லா ஸஹஸ்ரநாமத்தையும்விட அம்பிகையின் ஸஹஸ்ரநாமாக்களுக்கு மஹிமை அதிகம். வாசித்துக்கொண்டு போகும் பொழுதே மனஸுக்கு ஓர் ஆனந்தம் உண்டாகும். நாமாவளியாக இருந்தாலும் ஆனந்தமாக இருக்கும். அதில் ஒருதரம் சொன்னது திரும்பவும் வராது. ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கு அந்த ஸஹஸ்ரநாமாவின் கௌரவம் நன்றாகத் தெரியும்.

அந்த ஸஹஸ்ரநாமத்திற்கு ஒருவர் பாஷ்யம் செய்திருக்கிறார். அவருக்குப் பாஸ்கரராயர் என்று பெயர். அம்பிகை பக்தி அவருக்கு அதிகம். அவருடைய குரு அவருக்கு, பாஸுராநந்தநாதர் என்ற ஒரு பெயர் கொடுத்தார். ஸௌபாக்யபாஸ்கரம் என்று அந்த பாஷ்யத்துக்குப் பெயர். அம்பாள் உபாஸனாமார்க்கத்தில் உள்ள எல்லாவற்றையும் தெரிந்து அவர் அந்த பாஷ்யத்தை எழுதியிருக்கிறார். மந்திர சாஸ்திரத்தில் இப்பொழுது நமக்குக் கிடைக்கும் விஷயங்களில் அநேகம் அவர் தெரிந்து எழுதியிருப்பவைகளே.

அவர் மகாராஷ்டிர தேசத்தில் இருந்தவர். தக்ஷிண தேசத்துக்கு வந்தார். தஞ்சாவூர் அரசன் அவருடைய பெருமையை அறிந்தவர். காவேரி தீரத்தில் ஒரு கிராமத்தில் இருக்கச் செய்தார். அந்தக் கிராமம் பாஸ்கரராஜபுரம் என்று அவர் பெயரால் வழங்குகிறது. பாஸ்கரராஜபுரம் காவேரியின் வடகரையில் இருக்கிறது. அதன் தென் கரையில் திருவாலங்காடு என்னும் ஊர் இருக்கிறது. இந்தப் பக்கத்தில் மோசூருக்கு அருகில் ஒரு திருவாலங்காடு இருக்கிறது. இது பரமேசுவரன் ஊர்த்துவதாண்டவம் செய்த ஸ்தலம். இங்கே இருந்து சில பிராம்மணர்கள் அந்தத் திருவாலங்காட்டுக்குப் போய் இங்கேயுள்ள ஆலயம், மூர்த்தி முதலியவைகளைப்போல அங்கே ஸ்தாபித்தார்கள். இந்த இரண்டு கிராமங்களிலும் புத்திமான்களாகிய வித்வான்கள் இருந்தார்கள். இந்தத் திருவாலங்காட்டிலுள்ளவர்களிலும் அந்தத் திருவாலங்காட்டிலுள்ளவர்களிலும் பலர் ஒருவருக்கொருவர் ஞாதிகளாக இருக்கிறார்கள். பாஸ்கரராஜபுரமும் பல வித்வான்கள் இருந்த இடம்.

பாஸ்கரராயர் மந்திர சாஸ்திரத்திற்குப் பிரமாணபூதரானவர். அவர் கம்பீரமான ஸ்வபாவம் உடையவர். பாஷ்யம் எழுதுவதற்குமுன் எதற்காக அந்தப் பிரயத்தனம் செய்தார் என்பதைச் சொல்லியிருக்கிறார். “எல்லோருக்கும் ஆனந்தமுண்டாகவேண்டுமென்று இந்தப் பிரயத்தனம் செய்தேன்” என்று அவர் சொல்லுகிறார். அவர் நான்கு எல்லை கட்டி அதற்குட்பட்ட எல்லோருக்கும் பிரயோஜனம் உண்டாகட்டும் என்கிறார். நம்முடைய தேசத்தில் கங்கை ஸிந்து பிரஹ்மபுத்ரா முதலிய நதிகள் இருக்கின்றன. இவைகளுள் பிரஹ்மபுத்ரா என்ற நதியின் பெயர் சாஸ்திரங்களிற் காணப்படவில்லை. பாஸ்கரராயர் அதைச் சொல்லியிருக்கிறார்.



आप्राचः कामरूपाद्द्रुहिणसुतनदप्लावितादाप्रतीचो
गान्धारात् सिन्धुसार्द्राद्रघुवरचरितादा च सेतोरवाचः ।
आकेदारादुदीचस्तुहिनगहनतः पुण्यदेशानशेषां-
स्तीर्थान्यग्र्याणि पीठन्यपि च दिविषदां सैष साक्षादकार्षीत् ॥

[லலிதாஸஹஸ்ரநாமபாஷ்யம், முகவுரை]

காமரூபம் என்பது அஸ்ஸாம் (Assam). அந்தத் தேசத்தில் பிரஸித்தமான காமாக்ஷியின் ஆலயம் இருக்கிறது. அந்தத் தேசத்தைச் சொல்லுகையில் ப்ரஹ்மபுத்ரா நதியாயும் காமரூபம் என்று சொல்லியிருக்கிறார். கிழக்கே காமரூப தேசத்திற்கும், மேற்கே ஸிந்து நதிக்கும், தெற்கே ஜனகனுக்குப் புத்திரியாக அவதாரம் பண்ணின ஸீதை தன் பாதத்தால் பரிசுத்தப்படுத்திய ஸேதுவுக்கும், வடக்கே பார்வதிதேவி அவதாரம் பண்ணிப் பரிசுத்தம் பண்ணின ஹிமவத்பர்வதத்திற்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தில் எவ்வளவு வித்வத்ஸமூஹங்கள் இருக்கின்றனவோ அவைகளிலுள்ளவர்கள் யாவருக்கும் என் பிரயத்தனம் ஸந்தோஷத்தை உண்டாக்கட்டும்”. ஸமாஜங்கள் இதனால் திருப்தியடைகின்றன. ‘ஸமஜத்தைத் திருப்திபண்ண முடியாது’ என்று சொல்லியிருக்கிறார். ஸமஜமென்பது ஆட்டுக்கூட்டம்; அறிவில்லாதவர்களை அது குறிக்கின்றது.

அந்தப் பாஸ்கரராயர் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளை ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார். அவர் பண்ணிய அநேக சுலோகங்கள் அவர் எழுதிய லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்தோடு அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஸ்ரீசங்கராசார்ய ஸ்தோத்திரமும் இருக்கிறது.

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளவர்களின் சரித்திரமானது சங்கர விஜயங்களைத் தவிர பதஞ்ஜலிவிஜயம் முதலியவைகளில் உள்ளதென்பதை முன்பு சொன்னேன். இதிஹாஸபுராணங் களில் இருக்கின்றதென்றும் சொன்னேன். சிவரஹஸ்ய மென்னும் இதிஹாஸத்திலும் பிரம்மாண்ட புராணத்திலும் ஸ்ரீபகவத்பாதரவர்களின் சரித்திரம் உள்ளதென்பதையும் சொன்னேன். ஸ்ரீ வித்யையின் தாத்பர்யத்தையும் மந்திர சாஸ்திர ரஹஸ்யங்களையும் எழுதின மஹானாகிய பாஸ்கர ராயர் தாம் செய்த ஸ்ரீசங்கராசார்ய ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளைப்பற்றிய விஷயம் இன்ன இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார். அதனால் ஸ்ரீ ஆசார்யர்களைப் பற்றிச் சொல்லும் வேறொரு புஸ்தகம் தெரியவருகிறது.

விஷ்ணுதர்மோத்திரம் என்பது ஒரு புஸ்தகம். விஷ்ணுபுராணபரிசிஷ்டமானது. புஷ்கரன் என்னும் யக்ஷன் ஒருவன் ஸ்ரீராமனுக்கு உபதேசம் செய்தது அது. யக்ஷர்கள் தேவஜாதி. அவர்களுக்கு அரசன் குபேரன். அந்தப் புஷ்கரன் என்னும் யக்ஷன் மூன்று வேதங்களிலு முள்ள ருக்குக்களுக்கும் இன்ன அர்த்தம் என்று ஸ்ரீராம னுக்கு உபதேசித்தான். இவ்வாறு கர்மகாண்டத்தை அவன் உபதேசித்தான். ஞான உபதேசத்தை வசிஷ்டர் செய்தார். விஷ்ணுதர்மோத்தரம் என்பது வேதத்துக்குப் பாஷ்யமே ஆகிறது. ருக்வேதத்தில் ஒரு ருக் இருக்கிறது.

श्रीरामं प्रतिपुष्कराभिधमहायक्षेण वेदत्रय-
व्याख्यानावसरे विशिष्य कथितं श्रीविष्णुधर्मोत्तरे ।



एतां धेनुमुपह्वयामि सुदुघामित्यृग्गतं शङ्करा-
चार्यं शिष्यचतुष्टयेन सहितं वन्दे गुरूणां गुरुम् ॥

[லலிதாஸஹஸ்ரநாமபாஷ்யம், முகவுரை]

அதற்கு அர்த்தம் சொல்லுகையில், பூலோகத்தில் அத்வைததத்வம் மறந்துபோனபோது பரமசிவன், கன்றுக்குப் பால் கொடுத்து ரக்ஷிக்கப் பசு வருவதுபோல உலகத்திற்கு அத்வைத உபதேசம் செய்து அநுக்கிரஹம் பண்ண அவதாரம் பண்ணப்போகிறாரென்று இருக்கிறது. இப்படி அதில் இருக்கிறதென்று பாஸ்கரராயர் சொல்லி யிருக்கிறார். வேதத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளைப்பற்றிய விஷயம் இருக்கிறது. அதை பாஸ்கராசார்யார் சொன்னாலே போதும். புராணம் சொன்னாலே போதும். வேதத்தி லிருக்கிறதென்று புராணம் சொல்லுவதை

वर्षेष्वतीतेषु शकेषु षट्सु तिष्येऽवतीर्णं भुवि शंकरार्यम् ।
शिष्यैश्चतुर्भिः सहितं शिवादिपारंपरीकावधिमानमामः ॥

என்று பாஸ்கராசார்யர் எடுத்துச் சொல்லுகிறார். அந்த அர்த்தத்துக்கு அதிக கௌரவம் உண்டாய்விட்டது. ஸ்ரீராமருக்குயக்ஷன் உபதேசம் செய்கையில் வேதருக்குக்கு அர்த்தம் சொல்லும்பொழுது பரமசிவன் நான்கு சிஷ் யர்களோடு வரப்போகிறாரென்றும் எல்லா ஆசார்யர்களுக் கும் ஆசார்யரும் ஆகியவர் என்றும் அந்தச் சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்.

வேதத்தில் வேறோரிடத்திலும் ஆசார்ய ஸ்வாமிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறதென்று இன்னமொரு புஸ்தகத் தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீருத்திரம் என்பது ஒன்று. அது வேதத்தில் ஒரு பாகம். மிகவும் உயர்ந்தது. அதை எல்லோரும் நித்தியம்

பாராயணம் பண்ணவேண்டும். பதினொருதரம் செய்வது விசேஷம். அதை ஏகாசருத்திரபாராயணம் என்று சொல்லுவார்கள். ஸ்ரீருத்திரம் சொல்லி அபிஷேகம் செய்துவிட்டு அப்புறம் பூஜை செய்வது வழக்கம். ஏகாதசருத்திராபிஷேகம் செய்வது விசேஷம். 121 தரம் சொல்லுவது ருத்ரைகாதசீயம் என்று சொல்லப்படும். மலையாளத்தில் ஜன்ம நக்ஷத்திரத்துக்கு 121 தரம் ருத்திர பாராயணம் செய்து அந்தத் தீர்த்தத்தை அபிஷேகம் செய்துகொள்ளுவார்கள். ருத்ரைகாதசீயம் 11 செய்வது மஹாருத்திரம் என்றுசொல்லப்படும். அப்படி 11 தடவை செய்வது அதிருத்திரம். ஸந்நியாஸிகளுக்குக்கூட ருத்திரபாராயணம் சொல்லப்பட்டிருக்கிறது.

स्वशाखोपनिषद्गीता विष्णोर्नामसहस्रकम् ।
श्रीरुद्रं पौरुषं सूक्तं नित्यमावर्तयेद्यतिः ॥

பூர்வாசிரமத்தில் எந்த வேதசாகையை உடையவனோ அந்த சாகையின் உபநிஷத்தைப் பாராயணம் பண்ணவேண்டும். பின்பு பகவத்கீதையைப் பாராயணம் செய்யவேண்டும்.

गङ्गाजललवकणिका पीता भगवद्गीता किंचिदधीता ।
[சர்படபஞ்ஜரிகாஸ்தோத்திரம்.]

பகவத்கீதையைச் சிறிது பாராயணம் பண்ணினாலும் போதும். அப்புறம் விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணம் பண்ணவேண்டும். பின்பு ஸ்ரீருத்திரம் பாராயணம் பண்ணவேண்டும். அதன் பின்பு புருஷஸூக்த பாராயணம் பண்ணவேண்டும். இப்படி ஒரு யதி நித்தியம் ஆவிருத்தி



பண்ணிக்கொண்டு வரவேண்டும். ருத்திரஜபம் பஞ்சமாபாதகநிவர்த்தியைச்செய்யும்.

14 வித்யைகளில் முக்கியமானது வேதம். மற்றவைகளெல்லாம் அதற்கு அங்கங்கள். அந்த வேதங்களில் முக்கியமானவை மூன்று. அவைகளின் மத்தியில் இருப்பது யஜுர்வேதம். அது 7 காண்டம் உள்ளது. அதன் மத்தியில் 4-வது காண்டத்தின் மத்தியில் ஸ்ரீருத்திரம் இருக்கிறது. அதன் மத்தியில் பஞ்சாக்ஷரம் இருக்கிறது. அதன் மத்தியில் சிவ என்னும் இரண்டு அக்ஷரங்கள் இருக்கின்றன. கோயிலுக்குள் மஹாலிங்கம் இருப்பதுபோல ஸகல வித்யைகளுக்கும் மத்தியில் சிவ என்னும் அக்ஷரங்கள் இருக்கின்றன.

विद्यासु श्रुतिरुत्कृष्टा रुद्रैकादशिनी श्रुतौ ।
तत्र पञ्चाक्षरी तस्यां शिव इत्यक्षरद्वयम् ॥

இரண்டு எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் ஜீவகளையாக இருக்கின்றன. அவை உள்ளது ஸ்ரீ ருத்திரம். அந்த ஸ்ரீ ருத்திரத்திலும் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் இருக்கிறார்கள். ஸ்ரீ ருத்திரத்திற்கு மாத்திரம் ஒருவர் பாஷ்யம் செய்திருக்கிறார். ருத்திரத்தில் பரமசிவனுக்கு அநேகம் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குயவன், கம்மாளன், திருடன், குறவன் முதலிய பெயர்களும் இருக்கின்றன. திருடர்களிற் பக்காத் திருடன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

निषङ्गिण इषुधिमते तस्कराणां पतये नमो नमः ।
[ஸ்ரீருத்திரம்.]

அவர் இல்லாதது ஒன்றுமில்லை என்று அர்த்தங்கொண்டு இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. நீதான் கபர்த்தி, நீதான் வியுப்தகேசன்

नमः कपर्दिने च व्युप्तकेशाय च

என்று ஓரிடத்தில் இருக்கிறது. கபர்த்தத்தை உடையவன் கபர்த்தி. கபர்த்தம்—ஜடாமுடி, பரமசிவனுடைய ஜடா முடிக்குமட்டும் கபர்த்தம் என்று பெயர். வ்யுப்தகேசன் என்பதற்கு க்ஷவரம் பண்ணின மயிரை உடையவன் என்பது அர்த்தம். வ்யுப்தம்—வபனம். பரமசிவன் ஜடாதாரியாக இருக்கும் ஸ்வரூபத்தை எங்கும் பார்த்திருக்கிறோம். வ்யுப்தகேசராக எங்கே இருக்கிறார்? தக்ஷிணாமூர்த்தி, நடராஜர் முதலிய எல்லா ஸ்வரூபங்களிலும் ஜடாமுடி இருக்கிறது. ஜடாமுடி இல்லாத ஸ்வரூபம் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் ஸ்ரீ ருத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. பாஷ்யகாரர் எங்கே இருக்கிறது என்று பார்த்தார். கபர்த்தி என்பது பரமசிவனையே குறிக்கும் பெயர். அவருக்கு விசேஷமான பெயர் அது. அதற்கு அடுத்தபடி சொல்லப்பட்ட பெயரும் அப்படியே விசேஷமாக இருக்க வேண்டும். ஆனால் அது விரோதமான பெயராக இருக்கின்றது.

இதிஹாஸ புராணங்களைக்கொண்டு வேதத்துக்கு அர்த்தம் காணவேண்டும்.

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।
बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति ॥

வேதத்துக்குப் பூதகண்ணாடி போன்றது புராணம். இதிஹாஸ புராணங்களைத் தெரிந்துகொள்ளாமல் அர்த்தம் சொல்ல வந்தால் அவனைக் கண்டு வேதம் நடுங்குமாம். ஏன்? கண்ட இடமெல்லாம் அதை இழுப்பான். வேதம்



சொல்லும்படி அவன் நடக்கமாட்டான். தான் சொல்லும் அர்த்தத்தைத் தீர்மானம் பண்ணுவதற்கு அநுகூலமாக வேதம் சொன்னால் அவனுக்கு ஸந்தோஷம் உண்டாகும். வேதத்தின் நிஜமான அர்த்தமாக இருந்தாலும் தான்நினைத்த அர்த்தத்தைச் சொன்னதற்காகப் பரிசு கொடுப்பான்.

வேதத்துக்கு அர்த்தம் தெரியாவிட்டால் இதிஹாஸ புராணங்களைப் பார்க்கவேண்டும். பாஷ்யகாரர் இதிஹாஸ புராணங்களைப் பார்த்தார்.

चतुर्भिः सह शिष्यैस्तु शङ्करोऽवतरिष्यति,

[வாயுபுராணம்]

என்று வாயுபுராணத்தில் இருந்தது. ஈசுவரன் நான்கு சிஷ்யர்களுடன் குருவாக வருவார் என்று அதில் எழுதியிருந்தது. சிவரஹஸ்யத்தையும் பார்த்தார். அவருக்கு அர்த்தம் தெரிந்துவிட்டது. பாஷ்யத்தில் இந்தப் பிரமாணங்களை எடுத்துக்காட்டி, 'இந்த சங்கராசார்யாவதாரத்தைத்தான் இதற்கு அர்த்தமாகக் கொள்ளவேண்டும், வேறு அவஸரம் ஒன்றும் வ்யுப்தகேசராக இல்லை. முதலில் சிறப்பான கபர்த்தத்தைச் சொல்லி அடுத்தபடியாக இதைச் சொன்னதால் இதுவும் சிறப்பான அவஸரமாக இருக்க வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்.

ஸௌரபுராணம் என்பது ஒன்று. சூரியனே பரமாத்மா என்று சொல்வது அது. அதில்

व्याकुर्वन् व्याससूत्रार्थं श्रुतेरर्थं यथोचिवान् ।
श्रुतेर्न्याय्यः सः एवार्थः शङ्करः सवितानना ॥

என்று இருக்கிறது. ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளவர்கள் மனுஷ்யர் இல்லை, ஸூர்ய மூர்த்திதான் அப்படி அவதாரம் செய்தாரென்று அது சொல்லுகிறது. ஆகவே ஸ்ரீ சங்கராசார்ய

ஸ்வாமிகள் பரமாத்மா என்பது அதன் அர்த்தமென்று தெரிகிறது.

करिष्यत्यवताराणि शङ्करो नीललोहितः ।
श्रौतस्मार्तप्रतिष्ठार्थं भूतानां हितकाम्यया ॥

[சிவரஹஸ்யம்]

என்று ஒரு புராணம் சொல்லுகிறது.

ஸ்ரீ ருத்திர பாஷ்யத்தில் சொல்லப்படாத ஒரு விஷயம் எனக்குத் தோன்றுகிறது. ஸ்ரீ ருத்திரத்தில் பஞ்சாட்சரத்துக்கு முன்பு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளவர்கள் பெயர் சொல்லப்படுகிறது. முதலில் சங்கரஸ்வரூபமும் அப்புறம் சிவஸ்வரூபமும் சொல்லப்படுகின்றன. ஆசார்யர் மூலமாகப் பஞ்சாக்ஷரம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதை அநுஸரித்து அவ்வாறு சொல்லப்படுகிறது என்று தோன்றுகிறது. சம்பு என்று முதலில் இருக்கிறது. அப்புறம் சங்கர என்றும் பின்பு பஞ்சாக்ஷரமும் இருக்கின்றன. குரு மூலமாகத்தான் சிவஸ்ரூபத்தை அறிந்துகொள்ள வேண்டும். சிவனைவிடக் குரு சிரேஷ்டமானவர்.

शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन ।

[ஸூதஸம்ஹிதை]

சிவனுக்கு அபசாரம் செய்தால் அந்த அபசாரத்தைக் குரு மன்னிப்பார். ஆனால் குருவுக்குச் செய்த அபசாரத்தை யாரும் மன்னிக்கமாட்டார்கள். ஆகையால் எந்தக்காரியத்தைச் செய்தாலும் "ஸ்ரீ குருப்யோ நம:" என்று சொல்லி ஆரம்பிக்கவேண்டும். அதனால் "நம: சங்கராயச" என்று சொல்லி அப்புறம் பஞ்சாக்ஷரம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் ஒரு காரணம் இருக்கிறது.

மாதவீய சங்கரவிஜயத்தில்



अज्ञानान्तर्गहनपतितानात्मविद्योपदेशै-
स्त्रातुं लोकान् भवदवशिखातापपाच्यमानान् ।
मुक्त्वा मौनं वटविटपिनो मूलतो निष्पतन्ती
शम्भोर्मूर्तिश्चरति भुवने शङ्कराचार्यरूपा ॥

என்று ஒரு சுலோகம் இருக்கிறது. ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளை நேரே பார்த்தவர்களுக்கெல்லாம் ஆனந்தம் அடங்காமல் பொங்கிவருகிறது. அவர் யார் தெரியுமா? பரமசிவனுடைய மூர்த்தியே. அந்த மூர்த்தியே ஸ்ரீசங்கராசார்யரூபமாக ஸஞ்சரிக்கிறது. இந்த மூர்த்தி ஆலமரத்து வேரில் தக்ஷிணாமூர்த்தியாக அசையாமல் இருந்தது. கண் பார்ப்பதில்லை. வாய் பேசுவதில்லை. இந்த மாதிரி இருப்பது கலியில் பிரயோசனப்படாது என்று ஸ்வாமி பார்த்தார்.

ஒரு பதிவிரதை இருக்கிறாள். அவளுடைய குரல்கூட வெளியில் கேட்கக்கூடாது. அடுத்த வீட்டுக்குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டது. அப்பொழுது கத்தித்தானே ஆகவேண்டும். அதைப்போலக் கலிகாலத்தில் இந்த மௌனமெல்லாம் உபயோகப்படாது என்று எண்ணினார். மற்ற காலங்களிலெல்லாம் அசுரர்கள் வருவார்கள். அவர்களை ஸம்ஹாரம் செய்ய விஷ்ணு ஆயுதங்களுடன் வருவார். எல்லோரையும் ஸம்ஹாரம் செய்வார். கலியில் ராட்சஸர்கள் தனியாக இல்லை. நம்முடைய புத்திக்குள்ளே புகுந்துகொண்டுவிட்டார்கள். விசுவாமித்திருடைய யாகத்தைக் கெடுக்கத் தனியாகச் ஸுபாகு மாரீசர்கள் வந்தார்கள். அவருடைய மூளையிலேயே அந்த ராட்சஸர்கள் புகுந்துகொண்டால் அவரே யாகம் பண்ணமாட்டார். அதைப்போல இந்தக்காலத்தில் இருக்கிறது. அசுரன் நம்முடைய மூளையில்

புகுந்துவிட்டபடியால் அசுரன் செய்வதெல்லாம் நாம் செய்கிறோம். ஆகையால் இந்த அசுரனை ஸம்ஹாரம் செய்யும் காரியத்தை விஷ்ணுவிடம் கொடுக்கமுடியாது. இத்தனைநாள் உட்கார்ந்ததுபோல இருக்கமுடியாது; இனிமேல் நடக்க வேண்டும் என்றெண்ணி அவர் மௌனத்தை விட்டார். ஆலமரத்தடியில் உட்கார்ந்திருக்கும் விரதத்தை விட்டார். எவ்வளவுக்கெவ்வளவு மௌனமாக இருந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு பேசினார், பாஷ்யம் செய்தார், ஸ்தோத்திரங்கள் செய்தார் என்று மாதவீய சங்கரவிஜயம் சொல்லுகிறது. சம்புவினுடைய நடக்கும் மூர்த்தியே ஸ்ரீ சங்கராசார்யர்கள். சம் என்பதற்கு நித்யசுகம் என்பது அர்த்தம். ஸ—உற்பத்தியாகிற இடம். ஊற்று உற்பத்தியாகிறது என்றால் ஜலம் வேண்டியவர்கள் அங்கே போய் எடுத்துக் கொள்ளவேண்டும். சம்பு சம் உண்டாகிற இடம். சம்புவாக இருத்தல் இந்த யுகத்திற்குப் போதாது. அந்த சுகத்தைக் கையில் எடுத்து எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். சம்மைச் செய்யவேண்டும். கையிலெடுத்துக் கொடுத்தாற்கூட வேண்டாமென்பவர்கள் இருக்கிறார்கள். அதனால் சம்புவாகிய உட்கார்ந்த மூர்த்தி கூடாது. சங்கரர் சுற்றும் மூர்த்தி. அதுதான் இப்பொழுது வேண்டும். இந்தக் கணக்கே ஸ்ரீ ருத்திரமும் சொல்லுகிறது.

**नमः शम्भवे च मयोभवे च नमः शङ्कराय च मयस्कराय च**

[ஸ்ரீருத்திரம்]

சம்புவே தக்ஷிணாமூர்த்தி; அப்புரம் ஸ்ரீ சங்கராகிய ஆசார்யஸ்வாமிகள்; அப்புறம் பஞ்சாக்ஷரம். இந்த



அமைப்பு முன்கூறிய எல்லாவற்றுக்கும் பொருத்தமுடையதாக இருக்கிறது.

ஸ்ரீ சங்கராசார்யர்களின் அவதாரம், ருக்வேத மந்திரத்திலும் விஷ்ணு தர்மோத்திரத்திலும் பாஸ்கரராயர் வாக்கிலும் ஸ்ரீ ருத்திரத்தில் இரண்டு இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதென்று இன்று சொன்னேன்.

---

# VIII.

## ஸ்ரீசங்கராசார்யரவர்களின் அவதாரம்

[5—11—1932]

வைசாக சுத்த சுக்ல பஞ்சமி ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவதாரதினம். அப்பொழுது நக்ஷத்திரம் ஆருத்திரா அல்லது புனர்வஸுவாக வரும். ஸ்ரீபகவத்பாதரவர்களுடைய அவதார தினமானது பெரிய புண்ணிய காலமென்று நான் நினைப்பது வழக்கம். புண்ணிய காலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. சிவராத்திரி, கோகுலாஷ்டமி, ஸ்ரீராமநவமி, நரஸிம்ம ஜயந்தி, உத்தராயண புண்ணிய காலம், தக்ஷிணாயன புண்ணிய காலம் முதலிய பல உண்டு. இவைகளைப் போலப் புராணங்களிற் பல புண்ணியகாலங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும்விட நம்முடைய ஸ்ரீ ஆசார்ய ஜயந்தி ஸர்வோத்கிருஷ்டமானது. அப்படி நான் சொல்லுவதற்கு இரண்டு விதமான காரணங்கள் உங்களுக்குத் தோற்றலாம். நம்முடையது என்னும் ஓர் அபிமானம். ஸ்ரீ ஆசார்யரவர்கள் அவதாரத்தைச்சொல்ல ஆரம்பித்ததனால்அதை உயர்வாகவே சொல்லவேண்டுமென்ற ஓரபிப்பிராயம். ஆகிய இரண்டையும் காரணங்களாக நீங்கள் எண்ணலாம். இந்த இரண்டு காரணங்களைத் தவிர வேறு முக்கியமான ஒரு காரணத்தினால் இதுதான் உத்கிருஷ்டமான புண்ணிய காலமென்று சொல்லவேண்டியிருக்கிறது. மற்றப் புண்ணிய காலங்களைவிட



இந்தப் புண்ணியகாலத்தை அதிக சிரத்தையோடு கொண்டாடவேண்டுமென்று தோற்றுகிறது. எல்லாவற்றையும் விட உயர்வானது என்று சொல்லலாமா காரணம் ஒன்றுமில்லையே, என்றால் ஒரு காரணம் எனக்குத் தோன்றுகிறது, சொல்லுகிறேன்.

பூலோகத்தில் கலியுகம் ஆரம்பித்து இரண்டாயிரம் வருஷங்களுக்குமேல், வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள் முதலியவைகளில் அநாதிகாலமாக இருந்துவந்த நம்பிக்கைக்குக் குறைவு ஏற்பட்டு அதுவரை பரம்பரையாக இருந்துவந்த அநுஷ்டானம் பக்தி முதலியவைகளெல்லாம் மாறிப் புத்தர் என்ற ஒருவர் சொல்லுவதில் நம்பிக்கை ஏற்பட்டுச் சில மதங்கள் உண்டானதால் அதுபரியந்தம் வேதம் முதலியவைகளால் விஹிதமான புண்ணியகாலங்களெல்லாம் தத்தளிக்கிறபொழுது இந்தப் புண்ணியகாலம் ஏற்பட்டு மற்றப் புண்ணியகாலங்களையெல்லாம் நிலைநிறுத்தியது. அதனால் சிவராத்திரி, கோகுலாஷ்டமி, ஸ்ரீராம நவமி முதலிய புண்ணிய காலங்கள் புண்ணியகாலங்களாக ஆயின. ஆகையினால் இந்தப் புண்ணியகாலத்தில் அதிகசிரத்தை வேண்டும்.

அந்தப்புண்ணியகாலம் எந்தக்காலத்தில் எந்ததேசத்தில் எந்த ஊரில் எந்தபுண்ணிய புருஷர்கள் கிருஹத்தில் ஏற்பட்டது? மலையாள தேசத்தில் காலடியென்ற ஊரில் சிவகுரு ஆர்யாம்பாள் என்னும் இருவருக்குமுரிய வீட்டில் அது ஏற்பட்டது என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

விருஷாசலம் என்று ஒருக்ஷேத்திரம் மலையாளத்தில் இருக்கிறது. அது மஹாசிவ க்ஷேத்திரம். விருஷம் என்றால் நந்திகேசுவரருக்குப் பெயர். அந்தமலை சமமாக விருத்தா

காரமாக இருக்கும். மண் வெட்டிக் கொட்டிப்பண்ணின தைப்போல அழகாக அருக்கும். அதன் உச்சியிலே மஹா சிவாலயம் ஒன்று இருக்கிறது. சிவராத்திரி அந்தஸ்தலத்தில் மிகவும் விசேஷமானது. அந்த ஆலயத்தில் ஒருபெரிய ரிஷபம் இருக்கிறது. சுத்தவெள்ளையாக அது இருக்கிறது. அங்கே பஜனம் இருக்கிறது என்று ஒரு வழக்கம் உண்டு.

भज सेवायाम्

பஜனம் என்பதற்கு ஸேவை என்பதுதான் அர்த்தம். ஸ்வாமி ஸந்நிதியில் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் இருந்து புண்ணியதீர்த்த ஸ்நாநம் செய்து கிடைக்ககூடிய பிரஸாதத்தைப் போஜனம் செய்து கொண்டு அங்கேயே நித்திரை பண்ணிக்கொண்டு வரப் பிரஸாதத்திற்குக் காத்திருப்பதற்குப் பஜனம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுதும் அந்த க்ஷேத்திரத்தில் அந்தமாதிரி ஸேவை நடந்துவருகிறது. சிவப் பேரூரென்பது அந்த ஊரின் பெயர். அதோடு திரு என்னும் பதத்தை சேர்த்துத் திருச்சிவப்பேரூர் என்று வழங்குகிறது. புண்ணிய க்ஷேத்திரங்களின் பெயருடன் 'திரு' என்றபதத்தை முந்திச் சேர்ப்பது வழக்கம். அல்லிக்கேணியைத் திருவல்லிக் கேணி யென்றும், ஒற்றியூரைத் திருவொற்றியூரென்றும் சொல்லுவதைப் போலத் திருச்சிவப்பேரூர் என்று அதைச் சொல்லுகிறார்கள். திருச்சூர் என்பது அதுதான். அந்த க்ஷேத்திரத்தில் சிவகுருவென்பவரும் ஆர்யாம்பிகையும் பஜனம் இருந்தார்கள். தங்களுக்கு ஒரு ஸத் புத்திரன் பிறக்கவேண்டுமென்பது அவர்களுடைய பிரார்த்தனை. சிவகுருவின் தகப்பனார் பெயர் வித்தியாதிராஜரென்று தெரிகிறது.



அந்த விருஷாசல க்ஷேத்திரத்தில் பரமேசுவரனுக்குப் பசுவின் நெய் அபிஷேகம் எப்பொழுதும் செய்வார்கள். அப்படிப்பண்ணிப்பண்ணி நெய்யே மலைபோலக் குவிந்திருக்கும். மஹாலிங்கத்தைப் பார்க்கமுடியாது. மலையாளத்தில் ஆயுர்வேத சாஸ்திராப்பியாஸமும், ஆயுர்வேதவைத்தியமும் அதிகம். ஆயுர்வேதத்தில் புராதனகிருதம் பல வியாதிகளைப் போக்க உபயோகப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் வருஷமாக இருக்கிற பழைய நெய் அந்த க்ஷேத்திரத்தில் இருக்கிறது. அங்கே உள்ள வைத்தியர்கள் புராதனகிருதம் வேண்டுமென்றால் அந்த க்ஷேத்திரத்திலிருந்து வாங்கிக் கொண்டு போவார்கள். இங்கேகூட வருவிப்பதுண்டு.

அந்த மலையாள தேசத்துப் பிராமணர்கள் நம்பூத்திரிகள். ஒவ்வொரு நம்பூத்திரியும் அத்தியயனம் பண்ணியிருப்பான். கிருஷ்ணாஜினம், தண்டம் முதலியவைகளோடு பிரம்மசர்யாசிரமத்தில் வேதாத்தியயனம் பண்ணிவிட்டு அப்புறந்தான் இங்கிலீஷ் முதலியவைகளைப் படிப்பதாயிருந்தால் படிப்பான். இன்றுவரை இப்படியே நடந்து கொண்டே வருகிறது. இப்போழுதுதான் கொஞ்சம் மாற ஆரம்பித்திருக்கிறது. கலியுகத்தில் ஈசுரவன் அவதாரம் பண்ண வேண்டு மென்னும் அபிப்பிராயம் இருந்தால் இருக்கிற இடங்களுக்குள் எங்கே வேதாத்தியயனமும் வைதிககர்மாநுஷ்டானங்களும் நன்றாக நடக்கின்றனவோ அங்கேதான் அவதரிக்க வேண்டும். நம்முடைய தேசத்தில் ஆயிரத்தில் ஒருவர்தான் அத்தியயனம் பண்ணியிருக்கிறார். அந்தத்தேசத்துப் பிராம்மணர்கள் எல்லோரும் அத்தியயனம் பண்ணியிருக்கிறார்கள். இங்கே அத்தியயனத்தை மறந்து விட்டவர்கள்தான் அதிகம். இப்பொழுதே அந்தத் தேசத்தில் எல்லோரும் வேதாத்தியயனம் பண்ணியிருக்கிறார்

களென்றால் இரண்டாயிரம் மூவாயிரம் வருஷங்களுக்குமுன் மற்றத் தேசங்களைவிட மிகவும் நன்றாய் இருந்திருக்குமல்லவா? ஆகையினால் அந்தத் தேசத்தில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவதரித்தார்கள் என்று நினைக்கிறேன்.

சங்கரவிஜயத்தில் பரமேசுவரனிடம் தேவர்களெல்லாம் போய் ஜகத்தில் கர்மாநுஷ்டானங்களெல்லாம் லோபித்துப் போய்விட்டன, அவைகளை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டும் என்று பிரார்த்தித்ததாகவும், ஈசுவரன் மற்ற அவதாரங்களிற் செய்வதைப் போல, இன்னார் இன்னார், இன்னார் இன்னாராகப் போய்பிறக்க வேண்டும் என்று, ஆஜ்ஞாபித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற அவதாரங்களில் தேவர்கள் அஸுரர்களால் கஷ்டப்பட்டு அவர்களை ஸம்ஹாரம் செய்ய வேண்டுமென்று பிராத்தித்ததாகப் படித்திருக்கிறோம். இந்த அவதாரத்தில் கர்மாநுஷ்டானங்கள் குறைந்து விட்டன, அந்த நிலையைப் போக்க வேண்டுமென்று பிராத்தித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவர்கள் யார்? கர்மாநுஷ்டானங்கள் குறைந்தால் அவர்களுக்கு என்ன கஷ்டம்?

தேவதைகள் முப்பத்து மூன்று கோடி என்று புராணங்கள் சொல்லுகின்றன. மற்ற மதஸ்தர்களெல்லாம் ஈசுவரன் ஒருவன்தானே; அப்படியிருக்க இவர்கள் பல தேவர்கள் உண்டென்று சொல்லுகிறார்களே யென்று நம்மைப் பரிஹாஸம் செய்கிறார்கள். ஸாமான்யமாக நாம் வாசித்த முறையில் தேவதைகள் யாரென்றால் புரியவில்லை. வாசிக்காதவர்களுக்கு, 'அவர்கள் யாராக இருந்தால் என்ன? நாம் வணங்க வேண்டும்' என்ற பக்தி மாத்திரம் இருக்கிறது. அந்தப் பக்திகூட வாசித்தவர்களுக்குக் கிடையாது. தேவதைகள்,



அவர்களைப்பற்றிச் சொல்லும் புராணங்கள் எல்லாம் பொய் என்று சொல்லும் புஸ்தகங்களைத்தான் நாம் அதிகமாக வாசித்திருக்கிறோம். நம்முடைய மதத்துக்குரிய புஸ்தகங்களில் எங்கேபார்த்தாலும் தேவதைகளைப் பற்றியே சொல்லப் பட்டிருக்கிறது. இராமாயணம் முதலியவைகளில் இந்திரன் வந்தான், வருணன் வந்தான், தசரதன் தேவலோகம் போனான் என்பதைப் போன்ற பல விஷயங்கள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. நமக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன்? தெரியாததனால் புரியவில்லை. இல்லையென்று நாம் சொல்லுவதற்குக் காரணம் நம்முடைய தெரியாத்தனந்தான். இல்லை என்று எதிர்மறை (Negative) யாக எதையும் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. புஸ்தகங்களில் அவர்களைப் பற்றி எந்தவிதம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு அப்புறம் தீர்மானம் பண்ணவேண்டும். காற்று நமது கண்ணுக்குத் தெரியவில்லை. காற்று இல்லையென்று முதலில் தோன்றுகிறது. அப்புறம் உடம்புக்குத் தெரிகிறது. அப்பொழுது காற்று இருக்கிறதென்று தெரிகிறது. அதுபோல முதலில் தெரியாவிட்டால் இல்லையென்று சொல்லிவிடாமல் சாஸ்திரங்களைப் பார்க்கவேண்டும்.

சாஸ்திரங்கள், பரமேசுவரன் ஒருவரே தம்மை மூன்றாகப்பண்ணிக்கொள்ளுகிறார் என்று சொல்லுகின்றன. மூன்று காலங்களில் மூன்றுவிதமான வேஷங்களை எடுத்துக் கொள்ளுகிறார். ஒருவர் கோர்ட்டுக்குப் போனால் ஒருவிதமான அலங்காரம் செய்துகொள்ளுகிறார். அவரே பூஜை பண்ண ஆரம்பித்தால் ஒருவகை அலங்காரம் செய்துகொள்ளுகிறார். சமையல்பண்ண வேண்டுமென்றால் அப்பொழுது ஒருவித அலங்காரம் இருக்கிறது. ஒரு தாசில்தார் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு விபூதியைப்

பட்டை பட்டையாகப் போட்டுக்கொண்டு காதில் வில்
வத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந் திருந்தால் யாராவது
வந்தால் "சாஸ்திரிகளே, ஐயர்வாள் எப்பொழுது வரு
வார்கள்?" என்று கேட்பார். ஆகையால் ஒவ்வோர்
உத்தியோகத்துக்கும் ஒவ்வொருவேஷம் இருக்கிறது.
பரமேசுவரனும் ஸ்ருஷ்டிக்கு ஒருவேஷம் போட்டுகொள்ளு
வார், ஸ்திதிக்கு ஒருவேஷம் உண்டு, ஸம்ஹாரத்துக்கு
ஒன்று உண்டு. இப்படியே இந்த மூன்றோடு திரோபாவம்,
அநுக்கிரஹம் என்று இரண்டும்சேர்த்து ஐந்துமூர்த்திகளாக
இருக்கிறார் என்று சொல்லுவது உண்டு, சாஸ்திரிகளிடத்
தில் ஐயரவர்களைப்பற்றிக் கேட்டவன் ஓர் அசடு. அவன்
இரண்டு பேரும் ஒருவர்தான் என்று தெரிந்துகொள்ள
வில்லை. விஷ்ணுவே பெரியவர் என்று வேறாக நினைக்கும்
வைஷ்ணவனும், சிவனே பெரியவர் விஷ்ணு வேறு என்று
சண்டையிடும் சைவனும் அந்த அசட்டைச் சேர்ந்தவர்களே.
இரண்டு இருக்கின்றன என்று தீர்மானம் செய்துகொண்டு
அவைகளுக்குள் உயர்ச்சி தாழ்ச்சி கற்பித்துக்கொண்டு
வழக்குச் செய்வது தப்பு. காரியத்துக்குத் தகுந்தபடி
வேஷங்கள் இருக்கின்றன. நமக்கு வெவ்வேறு காரியத்தில்
வெவ்வேறு வேஷங்கள் ஏற்படுவதில்லையா? நமக்கு வெவ்
வேறுகாலத்தில் வெவ்வேறு வேஷங்கள் இருக்கின்றன.
அவருக்கு நம்மைவிடச் சக்தி அதிகம். ஆகையால் ஒரே
காலத்தில் பல காரியபேதங்களும் வேஷபேதங்களும் அவ
ருக்கு இருக்கின்றன.

அப்படி ஒரு ஸ்வாமிதான் இருக்கிறார். அவர் பல
அண்டங்களையும் ஸ்ருஷ்டிபண்ணிக் காப்பாற்றிவருகிறார்.
இப்பொழுதுதான் ஸையன்ஸ் ஆராய்ச்சி செய்கிறவர்கள்
ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியனென்றும்,



ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் சூரியனுக்கு இருப்பது
போலக் கிரகங்கள் இருக்கின்றன வென்றும் கண்டுபிடித்
திருக்கிறார்கள். நம்முடைய புராணங்கள் எவ்வளவோகாலங்
களுக்கு முன்பே பல அண்டங்கள் இருக்கின்றனவென்று
சொல்லுகின்றன. இவ்வளவு அண்டங்களிலுள்ள பிராணி
களுக்கும் ஆஹாரம் வேண்டும், இருக்க இடம் வேண்டும்.
இவைகளெல்லாம் பஞ்சபூதங்கள் என்று சொல்லுகிறோம்.
தேஹமே பாஞ்சபௌதிகமானதுதான். பூமியில் விருத்தி
பண்ணுகிற பதார்த்தங்களும் அப்படிப் பட்டவைகளே.
இந்த ஐந்து பூதங்களே பலவிதமாகக் கலந்து பலவித
பதார்த்தங்களாக ஆகின்றன. ஷட்ரஸங்களில் பலவிதமான
கலப்பு ஏற்பட்டுப் பலவகையான ஆஹாரருசிகள் ஏற்படுவது
போல மூலமாகிய இந்த ஐந்து பூதங்களால் எல்லாம்
ஆகின்றன. இந்தக்காலத்தில் ஸையன்ஸ் தெரிந்தவர்கள்
வஸ்துக்களையெல்லாம் பிரித்துப் பார்த்து இவைகளுக்கெல்
லாம் மூலம் சில தாதுக்களே (Elements) என்று கண்டு
பிடித்திருக்கிறார்கள். நமது சாஸ்திரம் ஐந்து பூதங்களையே
தாதுக்களாகச் சொல்லுகின்றது.

இந்தப் பஞ்ச பூதங்களும் பிராணிகளுக்கு ஹிதமாக
இருக்கவேண்டும். பிராணிகளை ரக்ஷிக்கவேண்டும். அரசன்
ஒருவன் இருக்கிறான். அவன் பஞ்ச பூதங்களையும் சொந்த
மாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறான்,
பூமியை ஜயிக்க விரும்புகிறான். ஸமுத்திர பாகத்தில் இவ்
வளவு தூரம் நம்முடைய அதிகாரம் செல்லவேண்டுமென்று
முயலுகிறான். ஆகாசமார்க்கத்தில் மற்ற அரசர்கள் விமானம்
வரக்கூடாது என்று தடுக்கிறான். இந்தமாதிரி ஈசுவரன்
அவைகளைச் சொந்தமாக ஆக்கிக்கொண்டு அந்தந்தப் பொரு
ளுக்குத் தனித்தனியாக அதிகாரிகளை நியமிக்கிறார். ஜலம்

பாய்வது முதலியவைகளைக் கவனிக்க ஓர் அதிகாரி இருக்கிறான். பயிர் விளைவு முதலியவைகளைப் பாதுகாக்க ஓர் அதிகாரி யிருக்கிறான். ஸமுத்திரத்தில் கப்பல் விடுவது முதலியவற்றைக் கவனிக்க ஒருவன் இருக்கிறான். ஆகாச விமான ஸமாசாரங்களைக்கவனிக்க ஓர் அதிகாரி இருக்கிறான். இப்படி ஒவ்வொரு விதமான காரியத்திற்கு ஒவ்வோரதிகாரி யிருக்கிறார். அவர்கள் எதற்காக இருக்கிறார்கள்? ஜன க்ஷேமத்தை உத்தேசித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜனங்கள் ஆஹாரம் கொடுக்கவேண்டும். அதற்காகத்தான் வரி கொடுக்கிறார்கள். அந்த அதிகாரிகளுக்கெல்லாம் மேலே அரசன் இருக்கிறான். அதிகாரிகளைப் போலத்தான் தேவர்கள் இருக்கிறார்கள். அரசன் அதிகாரிகளுக்குச் சில வித அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறான். அதைப்போலப் பரமேசுவரன் தேவதைகளுக்குச் சில சக்திகளைக் கொடுத்திருக்கிறார். த்ரிலோகத்துக்கும் அதிபதி இந்திரன். அவன் ஒரு பெரிய அதிகாரி. அவனுக்குக் கீழ்த் தேவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பூமியைப் பரிபாலனம் பண்ணவேண்டும். அதற்காக அவர்களுக்குச் சில சக்திகள் (Powers) கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசன் அதிகாரிகளுக்குச் சில அதிகாரங்களையும் துப்பாக்கி முதலியவைகளையும் கொடுத்திருக்கிறான் அல்லவா. லோகத்திலுள்ள அதிகாரிகள் வெளியிலுள்ள பொருள்களைக் கொண்டு சக்தியை அடைந்திருக்கிறார்கள். பரமேசுவரன் தேவர்களுக்கு உள்ளேயே சக்தியைக் கொடுத்திருக்கிறார். நிறைய ஞான சக்தியையும் கிரியா சக்தியையும் கொடுத்திருக்கிறார்.

தேவர்களுக்கு மூன்று ரூபங்கள் உண்டு. அவை (1) ஆத்யாத்மிகம்; (2) ஆதிபௌதிகம்; (3) ஆதிதைவிகம் என்பவை. ஒவ்வொரு பிராணியினுடைய ஒவ்வொரு அங்



கத்திலும் ஒவ்வொரு தேவதை உண்டு. அந்த ஸ்வரூபத்திற்குத்தான் ஆத்யாத்மிகம் என்று பெயர். அவர்கள் அந்த அந்த அங்கங்களில் இருந்து பிராணிகளை ரக்ஷிக்கிறார்கள். நாம் அங்கந்யாஸம் செய்வது அந்தத் தேவதைகளை உத்தேசித்தே. இந்த உலகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு ஒரு விஷயத்தைத் தெரிவித்தால்தான் அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். இவர்களுக்குத் தெரிவிக்காமலே தெரியும். தாமே தெரிந்துகொள்ளுவார்கள். ஒவ்வொரு பிராணியின் சரீரத்திலும் தேவதைகளுக்கு இடம் இருக்கும். அதைத் தவிர ஆதிபூதம் என்பது ஒரு ஸ்தானம். சரீரத்தைத் தவிர வெளியே யுள்ள பதார்த்தங்களில் தேவர்கள் இருக்கிறார்கள். அவை அசுத்தமாக இருந்தால் அதற்காக அவர்கள் சிக்ஷை செய்கிறார்கள். அவர்கள் இன்ன இன்ன இடங்களில் இருக்கிறார்களென்பதை உபநிஷத்து பிரித்துச் சொல்லுகிறது. இந்த இரண்டு இடங்களைத் தவிரத் தேவதைகளுக்கு மூன்றாவதாக ஒரு ஸ்தானம் இருக்கிறது. அதுதான் தேவலோகம். அங்கே ஒவ்வொரு தேவதையும் ஒவ்வொரு சரீரத்துடன் இருக்கிறார்கள். இந்த லோகத்தில் ஜலத்தைப்பற்றிய விஷயங்களைக் கவனிக்க எஞ்ஜினீயர்கள் இருக்கிறார்கள். ஜலம் அதிகமாக வராமலும் குறைவாக இராமலும் அவர்கள் கவனித்துக்கொள்ளுகிறார்கள். அதிகம் ஆனால் ஆபத்து உண்டாகிறது. அதைத் தடுக்கவேண்டும். குறைவாக இருந்தால் எங்கே இருந்தாவது அணைபோட்டுக் கொண்டு வரவேண்டும். இந்த எஞ்ஜினீயர்களுக்கெல்லாம் பெரிய எஞ்ஜினீயர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் வருணன். இந்த எஞ்ஜினீயர்களுக்கு ஏதாவது ஸமாசாரம் தெரிவிக்க வேண்டுமானால் அவஸரமாகத் தந்தி கொடுக்கிறோம். ஆனால் வருணனுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசி

யமே யில்லை. நம் தேஹத்தில் எங்கே கிள்ளினாலும் நமக்குத் தெரிகிறது. எல்லாத் தீர்த்தமும் வருணன் தேஹம். அதனால் எங்கே அசுத்தம் பண்ணினாலும் வருணனுக்குத் தெரியும். அப்படி நாம் பண்ணும் குற்றங்களை யெல்லாம் பதிவுபண்ண சித்திரகுப்தன் என்று ஓர் அதிகாரி யிருக்கிறான். ஜலமெல்லாம் வருணன் சரீரம். ஒவ்வொரு சரீரத்திலும் இடத்திலும் தேவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள் பரமேசுவரன் இருக்கிறார். அவர் இருப்பது அவர்களுக்கும் தெரியாது. ஜலத்தையெல்லாம் சரீரமாகக் கொண்டு ஒரு தேவதை இருக்கிறான். அவனே தேவலோகத்தில் தனி சரீரத்துடனும் இருக்கிறான். இப்படி உடம்போடுள்ள 33 கோடி தேவர்கள் இருப்பது தேவலோகம்.

எஞ்ஜினீயர் ஜலத்தைக் கொண்டு வருவதும் அடைப்பதும் அணைகட்டுவதும் ஆகிய எல்லாம் மழை பெய்தால் தான் நடக்கின்றன. ஜல ஸம்பந்தமாக ஒரு தனி இலாகாவே இருக்கிறது. அது நடைபெற வரி கொடுக்கிறோம். அதுபோல மேலே உள்ள எஞ்ஜினீயருக்கும் கொடுக்க வேண்டுமல்லவா? அவன் தான் தானே ஜலம் கொடுத்துக் கொண்டு இருக்கிறானே என்று சொல்லுவது தப்பு. அவனும் ஓர் உயிர். அவனுக்கும் பரமேசுவரனைத் தெரியாது. நம்முடைய ஊர் அதிகாரி நம்முடைய சக்கரவர்த்தியைப் பார்த்திருக்கிறானா? இல்லை. அதைப்போல இந்த அதிகாரிகளும் பரமேசுவரனை அறியமாட்டார்கள். இந்த அதிகாரிகளுக்குக் கொடுக்கும் வரிதான் கர்மாநுஷ்டானம். ஒரு காரியம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் நமக்கிருக்கும் வரையில் தேவதைகளுக்கும் நாம் ஒன்று செய்யவேண்டும். இல்லாவிட்டால் கஷ்டம் உண்டாகும்.




दुर्भिक्षं देवलोकेषु । मनूनामुदक गृहं । [அருணப்ரச்னம்]

தேவலோகம் துர்பிக்ஷமுள்ளது. மனுஷர்களுக்குத்தான் எல்லாம் நிறைய இருக்கின்றன. இங்கே இருந்துதான் அவர்களுக்கு ஆஹாரம் கொடுக்கவேண்டும். கர்மாநுஷ்டானங்களால் அவர்கள் ஆனந்தமடைகிறார்கள். அவை குறைந்துவிட்டால் அவர்களுக்குக் கஷ்டம். அதனால்தான் பூலோகத்தில் கர்மாநுஷ்டானங்கள் குறைந்துவிட்டனவென்றும், அந்த நிலைமையைப் போக்கவேண்டுமென்றும் அவர்கள் பரமேசுவரனைப் பிரார்த்தித்தார்கள்.

பரமேசுவரன் அவதாரம் பண்ணவேண்டுமானால் எவ்வளவு புண்ணிய காலங்கள் சேரவேண்டும்! அவரைப் பெறுவதற்குப் புண்ணியம் பண்ணியிருக்கிறவர்கள் பிறந்திருக்க வேண்டும். அவருடைய தரிசனத்தைப்பெறும் புண்ணியம் செய்தவர்களுக்கு அதைப் பெறுங் காலம் வந்திருக்கவேண்டும். அவருடைய ஸேவை செய்பவர்கள் பிறந்திருக்க வேண்டும். கிரஹயோகங்கள் சேர்ந்திருக்க வேண்டும். இப்படி எல்லாம் சேர்ந்து பொருந்தியிருக்கிற ஒரு புண்ணிய காலத்தில் அவர் அவதாரம் செய்யவேண்டும்.

சிவகுருவும் ஆர்யாம்பிகையும் விருஷாசலத்தில் புத்திரனை உத்தேசித்து ஸேவை செய்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் சிவகுருவினுடைய ஸ்வப்பனத்தில் ஸ்வாமி தோன்றி 'உனக்கு நூறு பிள்ளை வேண்டுமா? ஒரு பிள்ளை வேண்டுமா? நூறு பிள்ளைகளானால் அவர்கள் தீர்க்காயுளுடன் இருப்பார்கள். ஒரு பிள்ளையானால் அல்பாயுளுடன் இருப்பான். அந்த நூறு பிள்ளைகளும் மூடர்களாக இருப்பார்கள், ஒரு பிள்ளை ஸர்வஜ்ஞனாக இருப்பான்' என்று கேட்டார். அவர் "என்னுடைய பத்தினியின்



சிவபெருமான் சிவகுருவிற்குக் கனவில் காட்சி யளித்தல்.

விருப்பத்தையும் தெரிந்துகொண்டு சொல்லவேண்டும்'' என்று சொன்னார். விழித்துக்கொண்டவுடன் ஆர்யாம்பிகையிடம் விஷயத்தைச் சொன்னார். அந்த அம்மாள் "தாமும் அப்படியே ஸ்வப்னம் கண்டதாகச் சொன்னாள்." எங்களைப் பரீக்ஷிக்கக்கூடாது. ஸ்வாமிக்கு எப்படி தாத்பர்யமோ அப்படியே செய்யவேண்டும்'' என்று அவர்கள் இருவர்களும் பிரார்த்தித்தார்கள். "நானே உங்களுக்குப் பிள்ளையாக வருகிறேன். ஆனால் சில வருஷங்களே இருப்பேன்'' என்று பரமேசுவரன் ஆஜ்ஞை பண்ணினார்.



அதைக்கேட்டுச் சந்தோஷத்துடன் இருவரும் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். பஜனம் ஆனவுடன் ஸமாராதனம் பண்ணுவது வழக்கம். அது அன்னதானமன்று; அதுவும் ஸ்வாமி பூஜையே. ஸமாராதனம் பண்ணிப் பிராம்மண சேஷத்தை ஆர்யாம்பிகை புஜிக்கும் பொழுது ஐசுவரமான தேஜஸ் ஒன்று அவளுடைய வயிற்றிற் புகுந்தது. அதற்கப்புறம் கர்ப்பம் உண்டாகி ஸ்ரீ ஆசார்யர்கள் அவதாரம் செய்தார்கள். ஜாதகர்மா நடந்தது. பதினோராவது நாள் நாமகரணம் செய்ய எண்ணினார்கள். மலையாளத்தில் பிறந்த நக்ஷத்திரத்தையே பெயராக வைக்கும் ஒரு ஸம்பிரதாயம் உண்டு. திருவாங்கூர் மஹாராஜாக்களுக்கு மூலந்திருநாள், விசாகந் திருநாள் என்ற பெயர் இப்பொழுதும் வழங்கி வருகின்றது. அப்படி வைக்கலாம் என்று யோசனை பண்ணினார்கள். பழைய நாளில் உண்டான கணித சாஸ்திரங்களில் எல்லா விஷயங்களும் சுலோக ரூபமாக இருக்கின்றன. எல்லாச் சாஸ்திரங்களுஞ் சுலோகங்களாகத்தான் உள்ளன. கணக்கு ஸங்கீதம், வைத்தியம் முதலிய எல்லாம் சுலோகங்களாகவே இருக்கின்றன. ஏன் அப்படி உள்ளன? ஒரு விஷயத்தைப் படித்தாலும், பேசினாலும் சொன்னாலும் புஸ்தகம் இருக்கக்கூடாது. அடிக்கடி புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் விஷயங்கள் மனன யோக்யமாக இருக்க வேண்டும். பழையகாலத்தில் சாஸ்திரஜ்ஞர்களெல்லாம் நடக்கும் புத்தகசாலை (Walking libraries) களாக இருந்தார்கள். சுலோகமாக இருந்தால் சீக்கிரம் மனனம் செய்யலாம். அகராதி (Dictionary), எண் சுவடி முதலிய எல்லாம் சுலோகங்களே. இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் அப்படிச் செய்வதென்பது மிகவும் கஷ்டமான காரியம்.

கணக்கைச் சுலோகமாகச் செய்ய வேண்டுமே. எண்களை எப்படி அமைப்பது? அதற்காகச் சில ஸங்கேதங்கள் இருக்கின்றன. கடபயாதி சங்கியை என்பது ஒன்று. 'க' முதல் ஒன்பது, 'ட' முதல் ஒன்பது, 'ப' முதல் ஐந்து, 'ய' முதல் எட்டு எழுத்துக்களில் எந்த எழுத்தைச் சொல்லுகிறோமோ அது இந்த நான்கு வகையில் எந்த வகையில் எத்தனாவது எழுத்தாக அமைந்திருக்கிறதோ அத்தனாவது எண்ணை அந்த எழுத்துக் குறிப்பதாக வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு பதம் ஒரு பெரிய எண்ணைக் குறிப்பதாயிருந்தால் அந்தப் பதத்திலுள்ள எழுத்துக்களைத் தலை கீழாகப் பார்த்து வருவது வழக்கம். शरचराब्दे என்று ஒரு வருஷத்தின் எண் ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 'शरचर' என்ற பதத்தைக் கொண்டு தலை கீழாகக் கணக்குப் பண்ணவேண்டும். அதில் கடைசி எழுத்து 'र' அது 'யாத்யஷ்ட் என்ற வகையில் இரண்டாவது எழுத்து; அதனால் அது இரண்டைக் குறிக்கும். மூன்றாவது எழுத்தாகிய 'च' என்பது 'கதிநவ' என்ற வகையில் ஆறாவது எழுத்தாதலால் ஆறைக் குறிக்கும். இரண்டாவது எழுத்து 'र' என்பது முன் சொன்னபடி இரண்டைக் குறிக்கும். முதல் எழுத்தாகிய 'श' என்பது ய முதல் எட்டு எழுத்துக்களில் ஐந்தாவது எழுத்தாதலின் ஐந்தைக் குறிக்கும். இப்படி शरचर என்பது 2625 என்னும் எண்ணைக் குறிக்கின்றது.

நம் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளுக்குப் பிறந்த நாளை அநுஸரித்துப் பெயர் வைக்கலாமென்று நினைத்தார்கள். வேதத்தில் சங்கரர் என்று சொல்லி இருப்பதைப் பார்த்து வைக்கவில்லை. அவர்கள் எண்ணின கணக்குப்படி அது அமைந்துவிட்டது. பகவத்பாதர் அவதார தினம் வைசாக சுக்ல



பஞ்சமி. மாஸம், பக்ஷம், திதி ஆகிய மூன்றையும் திருப்பிப்பார்த்தால் ஐந்தாவது திதி முதல் பக்ஷம் இரண்டாவது மாஸம் அது. ஐந்தாவதைக் குறிக்க 'शं' என்பதை வைத்தார்கள். ஒன்றைக் குறிக்க 'क' என்பதை வைத்தார்கள். இரண்டை 'र' என்பதால் குறித்தார்கள். ஆகவே திதி பக்ஷம் மாஸம் ஆகிய மூன்றினுடைய கணக்குக்கும் ஸங்கேதமாக शंकर என்னும் பெயர் வந்தது. அதையே ஸ்ரீ ஆசார்யர்களுடைய நாமாவாகச் சூட்டினார்கள்.

# IX

## ஸ்ரீசங்கரரின் காலநிர்ணயம்

[6—11—1933]

வைசாக சுத்த பஞ்சமியில் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் அவதாரம் செய்தார்களென்று சொன்னேன். அவர் அவதாரம் செய்த வருஷம் நந்தன வருஷமென்றும் நக்ஷத்திரம் திருவாதிரை யென்றும் ஒரு புஸ்தகத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. அது எந்த நந்தன வருஷம் என்பது ஸ்ரீ ஆசார் யர்களுடைய காலந்தெரிந்து கொண்டு சொல்லவேண்டும்.

நம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுடைய காலத்தைப் பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. ஒவ்வொன்றிற்கும் அதிக காலம் வித்தியாஸம் இருக்கிறது. கி. பி. 800 என்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் கி. பி. முதலாவது நூற்றாண்டு என்று சொல்லுகிறார்கள். கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு என்று ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. இந்த அபிப்பிராயத்திற்கும் மற்றவைகளுக்கும் 1000 வருஷ வித்தியாஸம் இருக்கிறது. தியாஸபிஸ்ட் (Theosophist) என்னும் பத்திரிகையில் காலஞ்சென்ற ஸர் சுப்பிரமணிய ஐயரவர்கள் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு தான் என்று சில காரணங்களை எடுத்துக்காட்டி எழுதியிருக்கிறார். அதற்கு ஆதாரமாக த்வாரகாமடத்தில் பிரமாணம் (Record) இருக்கிறதென்று எழுதியிருந்தார். சிருங்ககிரி மடத்திலுள்ள சாஸனங்கள் கி. பி. முதல் நூற்றாண்டு என்று நினைக்கும்படி அமைந்திருக்கின்றன. இங்கிலீஷ்காரர்களில் கீழ்த்திசை விஷயங்களில் ஆராய்ச்சி



செய்பவர்கள் (Orientalists) கி. பி. ஏழு அல்லது எட்டாவது நூற்றாண்டு என்று இரண்டு விதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்கள் சரித்திர ஆராய்ச்சி (Research) மூலமாகச் சொல்லுகிறார்கள். கர்ணபரம்பரையாக வந்தவை கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு என்பதும், கி. பி. முதல் நூற்றாண்டு என்பதும். கி. மு. ஐந்தாவது நூற்றாண்டாக வைத்துக் கொள்ளுவோமானால் சில சங்கடங்கள் உண்டாகின்றன. புத்தர் கி. மு. 477-இல் இருந்தார் என்று ஒரு கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது நம் ஸ்ரீ ஆசாரியரவர்களும் அவரும் ஸமகாலத்தவர்களாக இருக்கவேண்டும். பௌத்த மதம் அதிக காலம் இந்தத் தேசத்திற் பரவி வைதிக தர்மங்களை மாற்றிவிட்டது. அப்புறம் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வைதிக தர்மத்தைப் புனருத்தாரணம் பண்ணினார் என்பதற்கு இது பொருந்தாமல் இருக்கிறது.

குமாரிலபட்டரும் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளும் ஸமகாலத்தில் இருந்தவர்கள். குமாரிலபட்டர் பௌத்த மதத்தை நிராகரணம் பண்ணிக் கர்மாவே பிரதானம் என்று கர்மமார்க்கத்தை ஸ்தாபித்தார். நம் ஸ்ரீ ஆசார்யரவர்கள் அந்தக் கர்மமார்க்கத்தை நிராகரணம் பண்ணி கர்மாக்களை யெல்லாம் ஈசுவரார்ப்பணம் பண்ணவேண்டும்என்று சொல்லி அத்வைத மதத்தை ஸ்தாபித்தார். குமாரில பட்டர் ஜைமினியினுடைய ஸூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். அதில் காளிதாஸனுடைய வாக்கைப் பிரமாணமாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். அதனால் குமாரிலபட்டர் காளிதாஸனுக்குப் பிற்காலத்தில் இருந்தவர் என்று தெரிகிறது. குமாரிலபட்டர் காலமே ஸ்ரீ ஆசார்

யர்கள் காலம். ஆகையால் காளிதாஸனுயை காலம் தெரிய வேண்டும்.

குமாரிலபட்டர் காளிதாஸனுடைய

सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः

[சாகுந்தல நாடகம்.]

என்னும் சுலோகத்தைத் தம்முடைய பாஷ்யத்திலே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

குமாரிலபட்டர் எதற்காக அதை எழுதினார்? இங்கே ஒரு நினைவு உண்டாகிறது.

தர்மம் நம் க்ஷேமத்துக்காகச் செய்யவேண்டியது. தர்மப்பிரமாணம் என்று நான் முன்பு சொல்லி வந்த 14 சாஸ்திரங்கள் இன்னது தர்மம் என்று தீர்மானம் பண்ணுபவை. ரூபத்தை அறிவதற்குப் பிரமாணம் கண். சப்தத்தை அறிவதற்குப் பிரமாணம் காது. தர்மப்பிரமாணம் என்ன என்று விசாரிக்கும்பொழுது தர்மசாஸ்திரப் பிரகாரம் கணக்குப் பண்ணிப்பார்த்தார்.

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥ [மநுஸ்ம்ருதி]

ஸகலதர்மத்துக்கும் மூலம் வேதம். அப்புறம் ஸ்மிருதி. அது வேதத்தின் விஷயங்களை நினைத்துக்கொண்டு குறித்த குறிப்பு (Note). அந்த ஸ்மிருதிக்கு அப்புறம் பிரமாணமாக இருப்பது பெரியவர்களுடைய நடத்தை. அது புராணங்களால் தெரியவருகிறது. அதற்கப்புறம் நமக்குத் தெரிந்து சிஷ்டராக இருப்பவர்களின் நடத்தை. சிஷ்டா



சாரம் என்று அதைச் சொல்லுவார்கள். எல்லோருடைய நடத்தையும் பிரமாணமாகாது. சாஸ்திர நம்பிக்கை இருக்க வேண்டும். சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஆசாரங்களை அநுஷ்டிக்க வேண்டும். காமக்குரோதம் இல்லாதவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சிஷ்டர்களுடைய ஆசாரம் ஒரு பிரமாணம். அதற்கப்புறம் நம்முடைய மனச்சாக்ஷி (Conscience). நம்முடைய மனஸ் நிஷ்களங்கமாக எப்படி ஆலோசிக்கிறதோ அது ஒரு பிரமாணம். கடைசியிலே சொன்ன மனச்சாக்ஷிப் பிரமாணத்தைக் குமாரில பட்டர் விசாரணை செய்தார். தன் மனஸில் தோன்றுவது தர்மமாக ஆகுமோ என்ற ஸந்தேஹம் வந்தபொழுது அதுவும் ஒரு பிரமாணமாகும் என்று காளிதாஸன் சொல்லியிருக்கிறானென்று எழுதியிருக்கிறார்.

ஆகவே, பிரமாணங்களைக் கொள்ளும் முறையில் முதலில் வேதத்தைத்தான் கொள்ளவேண்டும். அப்புறந்தான் தர்மசாஸ்திரத்தைக் கொள்ளவேண்டும். அப்புறம் ரிஷிகள் முதலியவர்களின் நடத்தை, பின்பு இப்பொழுதுள்ள சிஷ்டர்களின் ஆசாரம் என்பவைகளைக்கொள்ளவேண்டும். இவைகளுக்கெல்லாம் அப்புறம் கடைசிபக்ஷமாக மனச்சாக்ஷியை வைத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. முதலில் மனச்சாக்ஷியைத்தான் பார்க்கிறார்கள். கடைசியில்தான் வேதத்தைக் கவனிக்கிறார்கள். வேறு ஒருமார்க்கமும் இல்லாதபோது தான் மனச்சாக்ஷியை அநுஸரிக்கவேண்டும். மனச்சாக்ஷி என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது? அது ஸாக்ஷி சொல்லத்தான் யோக்கியதை உடையது; நியாயாதிபதியாக (Judge) இருக்க அதற்கு யோக்கியதை இல்லை. ஸாக்ஷியாக

வந்தவன் வாயால் பொய்யைச் சொல்லுவான். அதனால் வாய்ச்சாக்ஷியை நம்புவதற்கில்லை. ஆனால் மனம் பொய் சொல்லாது. மனஸுக்கு எல்லாம் நிஜமாகத்தெரியும்.* ஆகவே அதை ஸாக்ஷியாக மட்டும் வைக்கலாம். இப்பொழுது மனச்சாக்ஷியை ஜட்ஜாகவே வைத்துவிடுகிறார்கள். இன்னது நடந்தது என்பதை நிஜமாக அது சொல்லும். இதுதான் நியாயம் என்று சொல்ல முடியாது. மனச்சாக்ஷிக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய்கிறேன் என்று சொல்லுவது தப்பு. எடுத்தவுடன் அதற்கு ஜட்ஜ் ஸ்தானம் கொடுத்துவிடக்கூடாது. ஒருவித வழியும் இல்லாமற்போனால் 'நீதான் ஸாக்ஷியாக இருந்து எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாயே. இப்பொழுது ஸாக்ஷி சொல்' என்று சொல்லவேண்டும். அப்பொழுதுகூட அது ஸாக்ஷி ஸ்தானத்தில்தான் இருக்கிறது. எந்தக் காலத்திலும் அதற்கு ஜட்ஜ் ஸ்தானம் கொடுப்பது தப்பு. நம்முடைய கொள்கை அது அல்ல என்று சாஸ்திரங்களால் தெரியவருகிறது.

இந்த விஷயத்துக்காகக் காளிதாஸன் வாக்கைக் குமாரிலபட்டர் உதாஹரணமாகக் காட்டியிருக்கிறார். அதனால் அவனுக்குப் பின்னால்தான் ஸ்ரீ சங்கராசாரியரவர்கள் இருந்திருக்க வேண்டும். ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் சரித்திரத்தைச் சொல்லும் புஸ்தகங்களில் சிவரஹஸ்யம் ஒன்றுதான் காலத்தைச்சொல்லுகிறது. அதில் கலி 2000-க்குமேல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிவரஹஸ்யத்தை மட்டும் பார்த்தால் கலியுகாதி 2000-க்குமேல் 3000-க்குள் என்று தெரிகிறது. அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முந்தியகாலம்

* "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" [ஔவை.]



(கி. மு.) என்று தெரிய வருகிறது. இந்த மடம், துவாரகை மடம், ஜகந்நாதத்திலுள்ள மடம் என்னும் இந்த மூன்றிலும் உள்ள கணக்கைப் பார்த்தால் 2500 வருஷங்களுக்கு முன்பு என்று தெரிகிறது. சிருங்ககிரி மடத்துக் கணக்கு 1900 வருஷங்களுக்குள் என்று இருக்கிறது. இப்படிச் சொல்லுவதில் ஒரு அஸந்தர்ப்பம் இருக்கிறது.

புத்தர் காலம் கி. மு. 477 என்று ஒருவகையாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் செய்த பிரம்மஸூத்திரபாஷ்யத்தில் புத்தமதகண்டனம் செய்திருக்கிறார்கள். அதனால் புத்தமதம் விசேஷமாக இருந்த காலம் ஸ்ரீ சங்கராசார்யரவர்களுடைய ஸமகாலமாகவாவது முற்காலமாகவாவது இருக்கவேண்டும். புத்தமத கண்டனத்தைக்கொண்டு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளும் புத்தரும் ஸமகாலத்தவர்கள் என்றால் பிரம்மஸூத்திர காலமே புத்தருடைய காலமாகும். அதில் புத்தமதத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. பிரம்மஸூத்திர காலம் புத்தர் காலமானால் கீதையும் அந்தக் காலத்ததாகவேண்டும். கீதையில் பகவான்,

ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ।
ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ॥

[கீதை, XIII-4.]

என்று பிரம்மஸூத்திரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆகவே புத்தர், வியாஸர், கிருஷ்ணர் என்பவர்கள் ஸமகாலத்தவர்களாக இருக்கவேண்டும். ஆனால் கிருஷ்ணர் இருந்த காலமும் பாரத காலமும் துவாபராந்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புத்தர் காலமோ கி. மு. 477

என்று சொல்லுகிறார்கள். இவைகளை யெல்லாம் பார்த்தால் ஒரே குழறலாக இருக்கின்றன.

இதற்கு இரண்டு விதத்தில் ஸமாதானம் சொல்லலாம். புத்த மதஸ்தர்களும் ஜைன மதஸ்தர்களும் தங்களுடைய மதம் மிகப் பழைய காலந் தொடங்கி இருந்து வருகின்றன வென்று சொல்லுகிறார்கள். பள்ளிக்கூடத்துச் சரித்திர புஸ்தகத்தில் சுத்தோதனர் பிள்ளையாகிய கௌதம புத்தரைப் புத்தர் என்று சொல்லியிருக்கிறது. பௌத்தர்கள் அந்தப் புத்தரை 24-ஆவது புத்தர் என்று சொல்லுகிறார்கள். 'அவருக்கு முன்பு பல புத்தர்கள் இருந்தார்கள். எங்கள் மதம் அநாதியானது' என்று சொல்லுகிறார்கள். ராமாயணத்ில்கூட முதலில் ததாகதனை விரட்டிவிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதனால் வால்மீகியின் காலத்திலும் புத்த மதம் இருந்ததாகக் கொள்ளவேண்டும். புராணங்களிலும் புத்தரைப் பற்றிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே அப்படிப் பல புத்தர்கள் இருந்து புத்த மதம் பழையதாக இருந்ததானால் பிரம்ம ஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருப்பது ஸரி. ஆனால் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ததாகத புத்தருக்கு ஸமகாலத்தவர் என்று சொல்லுவது உசிதமாகத் தோன்றவில்லை. புத்தர் அவதாரம் செய்து அவர் மதம் மிகவும்சிறப்பாகத் தலையெடுத்து மறுபடியும் குமாரிலபட்டரால் அடங்குவதற்குக் கொஞ்சகாலமாவது ஆகவேண்டும்.

புத்தர் கி. மு. 477-ல் நிர்யாணமானரென்று இந்தக் காலத்தில் ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட சரித்திரத்தில் இருக்கிறது. அப்படி மற்ற தேசத்தார்கள் ஆராய்ந்து தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அது எப்படி தெரியும்? நம்முடைய பிள்ளைகளுக்குக் குழந்தைப் பருவத்தில் அந்தச்சரித்திரத்தைச் சொல்லிக்கொடுப்பதால் அதை அவர்கள் அப்படியே நம்பிவிடுகிறார்கள். பின்பு பெரியவர்களான போதும் அந்த நம்பிக்கை போவதில்லை. அவர்கள் நம்முடைய புராணத்திற் சொல்லியிருக்கும் காலம் முதலியவைகளெல்லாம் தப்பென்று சொல்லித் தாங்கள் சொல்லும் காலந்தான் சரி என்கிறார்கள். 'எதைக்கொண்டு புராணத்தைத் தப்பென்று சொல்லுகிறார்கள்? எதைக்கொண்டு இந்தக் காலத்தை நிர்ணயித்தார்கள்?' என்பவற்றை நன்றாக அறிந்துகொண்டு பிறகுதான் அவைகளை அங்கீகரிக்க வேண்டும். ஒரே அடியாக நம்பிவிடக்கூடாது.



அவர்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஒன்றை வைத்துக்கொண்டு அதன்மேல் கணக்குப் பண்ணிக்கொண்டு போகிறார்கள். கிரீஸ் தேசத்திலிருந்து மெகஸ்தனிஸ் (Megasthenes) என்ற ஒரு தூதர் சந்திரகுப்தன் காலத்தில் இந்த தேசத்துக்கு வந்தார். அந்தத் தூதர் வந்த காலத்தை அவர் குறித்து வைத்திருக்கிறார். அதிலிருந்து சந்திரகுப்தன் காலத்தையும் அதிலிருந்து மற்றவர்கள் காலத்தையும் கணக்குப் பண்ணுகிறார்கள். ஆகவே மெகஸ்தனிஸ் எழுதிவைத்திருப்பது அவர்களுடைய கணக்குக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. சந்திரகுப்தன் மகதவம்சத்து அரசன். மகதவம்சத்து அரசர்களுடைய காலம் நம்முடைய புஸ்தகங்களிலும் இருக்கிறது. அதை அவர்கள் கொள்ளுவதில்லை. எல்லாம் தப்பு என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்களுடைய கணக்குக்கு அஸ்திவாரம் மாறிவிட்டால் அப்புறம் எல்லாமே மாறிவிடும்.

நம்முடைய புஸ்தகங்களில் இருப்பதும் மெகஸ்தனிஸ் சொல்லுவதற்கும் பொருத்தமான ஒரு ஸமாதானம் உண்

டானல் இப்பொழுது அவர்கள் சொல்லுகிற காலக்கணக்கெல்லாம் மாறிவிடும்.

மெகஸ்தனிஸ் என்ன எழுதியிருக்கிறார்? சண்ட்ர கோடஸ் (Chandra Kotus) என்றுதான் அவர் எழுதியிருக்கிறார். அதைச் சந்திரகுப்தன் என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் வாசிக்கிறார்கள். மகதவம்சத்தில் ஸமுத்ரகுப்தன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் பெயரையே அப்படி எழுதினானென்றும் சொல்லலாம். இப்படிச் சில பேர் அபிப்பிராயப்படுகிறார்கள். சந்திரகுப்தன் ஸமுத்ரகுப்தனுக்குப் பல வருஷங்கள் முந்தி இருந்தவன். அந்த சந்திரகுப்தனுடைய பிள்ளைதான் அசோகன். அந்த அசோகன் காலத்தில் புத்தர் இருந்தார். ஆகையால் புத்தர் காலம் இன்னதென்று கணக்குப் பண்ணுகிறார்கள்.

சண்ட்ரா கோடஸ் என்று மெகஸ்தனிஸ் குறித்த அரசன் ஸமுத்ரகுப்தனானால் 1000 வருஷம் காலக்கணக்கு முந்திப் போய்விடும். இந்த விஷயத்தில் நான் சரியாக ஆராய்ச்சி பண்ணவில்லை. சரித்திரம் தெரிந்தவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். அந்த அபிப்பிராயம் சரியாய்விட்டால் எல்லாக் கணக்கும் 1000 வருஷம் முன் போய்விடும். கிரீக் வார்த்தை எப்படியிருக்கிறது? அதை எதனால் சந்திரகுப்தனென்று கொண்டார்கள்? ஸமுத்திரகுப்தனென்று ஏன் கொள்ளக்கூடாது? என்பவற்றை எல்லாம் ஆலோசிக்கவேண்டும்.

ஆரம்பத்தில் மெகஸ்தனிஸ் சந்திரகுப்தனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார் என்று சொன்னவர் வில்ஸன் (Wilson) என்பவர். அவர் கண்டு பிடித்தது தப்பானால் அவரை வையக்கூடாது. அவர் செய்த காரியம்பெரியது. மெகஸ்



தனிஸ் சொல்லியிருப்பதைக் கண்டு பிடித்துச் சொன்னதே ஓர் உபகாரமல்லவா? ஆகையால் அவர் செய்தது தப்பு என்று சொல்லக்கூடாது. காரணங் கேட்காமல் நம்பிவிடுகிற நாம் அசடாயிருப்பதுதான் தப்பு. 'நம் தேச ஸமாசாரத்தை ஒருவன் சொல்லுகிறானே எதைக்கொண்டு சொல்லுகிறான்' என்று ஆலோசிக்க வேண்டும்.

சீர்திருத்தம் (Reform) பண்ணுகிறவர்கள் தர்ம சாஸ்திரத்தை அலக்ஷியம் பண்ணுவது போலச் சரித்திரக்காரர்கள் நம்முடைய கணக்கையெல்லாம் அலக்ஷியம் செய்கிறார்கள். எல்லாம் போக்கிரித்தனம், அசட்டுத்தனம் என்று சொல்லுகிறார்கள். சீர்திருத்தக்காரர்கள் இஹலோகத்துக்கு மட்டும் சுகம் போதுமா? பரலோகசுகம் அவசியம் இல்லையா? என்பதை அறிந்துகொள்ளுவதில்லை. பரலோக சுகம் தர்மசாஸ்திரங்களுடைய பரமோத்தேசம் என்பதையும் கவனிப்பதில்லை. இஹலோக செளகரியங்கள் மட்டும் நமக்குப் போதா என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளுவதில்லை. தர்ம சாஸ்திரம் தப்பு. அதில் சொல்லியிருப்பவை வெறும் குருட்டு நம்பிக்கை என்று முன்னாலேயே தீர்மானம் பண்ணிக்கொண்டு அதைப்பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள். ஆஸ்திக புத்தியும், பாப புண்ணிய ஞானமும், சிஷ்டர்களுடைய பழக்கமும், நம்முடைய கிரந்தங்களில் அறிவும் சிறுபிராயத் திலிருந்தே இருந்திருந்தால் இவ்வளவு சீக்கிரத்தில் எல்லாம் தப்பு என்று தீர்மானிக்கமாட்டார்கள். தர்ம சாஸ்திரத்தைப் போலத்தான் சரித்திர விஷயமும் இருக்கிறது.

போனவருஷம் சீமையில் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களும் கூடினார்கள். அப்பொழுது, 'இந்தியாவில் சீர்திருத்தம் (Reform) வந்து

இந்தியக் கலைகள் (Indian culture) நஷ்டமாகின்றன. அதன் வேகத்தைக் குறைக்கவேண்டும்' என்று ஒரு தீர்மானம் பண்ணினார்களாம். நமக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வளவு தாழ்ந்த நிலையில் அப்படி அவர்கள் தீர்மானம் பண்ணியது ஓர் ஆச்சரியம். நம்முடைய சரித்திரம், தர்ம சாஸ்திரம், என்னும் இரண்டையும் நாம் கவனிக்காமல் போனால் நம்முடையவைகளில் ஏதாவது பிரயோஜனம் இருந்ததானால் அதை நாம் இழந்துவிடுகிறோம். மேல்நாட்டார்கூட நம்முடைய கலைகளைக் காப்பாற்றவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

யாராவது சீர்திருத்தம் பண்ண ஆரம்பித்தால் வைதிகர்களுக்குத் திண்டாட்டம் வந்துவிடுகிறது. எல்லோரும் இவர்கள் தலையில் கையை வைத்துவிடுகிறார்கள். சில பேருக்குத் திருப்தி யுண்டுபண்ண வேண்டிச் சாரதா சட்டம் கொண்டுவந்தார்கள். சர்க்கார் கொடுத்த முதற்பலி அது. இப்பொழுது சர்க்கார் நமக்குள் பேதம் பண்ணுகிறதென்று வேறொரு பலியைத் தேசத்திலுள்ளவர்கள் கொடுக்க எண்ணுகிறார்கள். வைதிகன் முத்தண்ணாவாக வாயைத் திறக்காமல் இருக்கிறான்.

சரித்திரம் (History) காலத்துக்குத் தக்கபடி மாறுவதைப் போலச் சுருதி ஸ்மிருதி புராணங்களும் காலத்துக்குத் தகுந்தபடி மாறுமென்று சீர்திருத்தக்காரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவை ஸமூஹ வாழ்வு ஸம்பந்தமாக (Social) மட்டும் இருந்தால் அப்படி மாறும், மாற்றலாம். ஆத்மார்த்தமாக (Spiritual) இருந்தால் மாற்ற முடியாது. ஆத்ம ஸம்பந்தமானவை எப்பொழுதும் மாறா. லௌகிகத்துக்குமட்டும் இவை பிரயோஜனம் என்று இருந்தால் மாற்றலாம். ஆத்மாவுக்காகத்தான் இவை இருக்கின்றன



அது பொய் என்று நிமிஷத்தில் சொல்லிவிடுகிறார்கள். வேதத்தைச் சரித்திர ரீதியாகப் பார்த்து மாறியிருக்கிறதென்று சொல்லிவிடுகிறார்கள். தர்மத்தைப் பார்க்க வேண்டும். சரித்திரத்தில் தப்பாக எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை அப்படியே நம்பிவிடுகிறோம்.

இந்தமாதிரி நம்பிக்கையினால் எதைவேண்டுமானாலும் சட்டம் செய்கிறார்கள். இவ்வளவு அனர்த்தமும் இங்கிலீஷ் பள்ளிக்கூட மூலம் வந்தவை. தர்மசாஸ்திரத்தைப் படித்தார்களா? அநுஷ்டானம் பண்ணிப் பார்த்தார்களா? ஆசாரம் இருக்கிறதா? ஒன்றும் இல்லை. ஆனால் ஒரேயடியாகத் தப்பு என்று மட்டும் சொல்லிவிடுகிறார்கள். மற்ற தேச வித்தைகளையும் மற்ற தேச அநுஷ்டானங்களையும்தான் எல்லோரும் அநுஸரிக்கிறார்கள். ஜீவனத்துக்காக அந்தப் படிப்பைப் படிக்கிறார்கள். தத்துவ ஆலோசனை செய்வதில்லை. ஆகையால் கடினமான விஷயங்களெல்லாம் அவர்களுக்கு இலேசாகப்படுகின்றன. ஆகையால் நமது விஷயங்களை நன்றாக ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஸமுத்ரகுப்தனையே சந்த்ரகோடஸ் என்று சொல்லியிருந்தால் காலக் கணக்கில் எவ்வளவோ வித்திபாஸம் உண்டாகும். நம்முடைய கணக்குக்கு அது கொஞ்சம் பொருந்தும் ஆகையால் இந்த விஷயத்தில் சரித்திரம் தெரிந்தவர்கள் ஆலோசிக்க வேண்டும்.

சிவரஹஸ்யத்தையும் மடத்துப் பரம்பரைக் கணக்கையும் பார்த்தால் 2000 வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ ஆசார்யரவர்களின் காலம் என்று தெரிகிறது. காளிதாஸனுடைய காலம்தெரிந்தால் ஸ்ரீ ஆசார்யரவர்கள் காலத்தைச் சொல்லலாம் என்று முன்பு சொன்னேன். காளிதாஸனுடைய காலத்தை ஒரு வகையாகக் கணக்குப்பண்ணியிருக்கிறார்கள்.

ரவிகீர்த்தி என்னும் அரசன் காலத்தில் ஏற்பட்ட சாஸன மொன்றில் பாரவி, காளிதாஸன் என்னும் இருவர் பெயரும் வருகின்றன. அந்த ரவிகீர்த்தி ஒரு கவி. அவன் காளி தாஸன் பாரவி இவர்களின் கீர்த்தியை அடைந்தான் என்று சாஸன சுலோகம் சொல்லுகிறது.

स विजयतां रविकीर्तिः कविताश्रितकालिदासभारविकीर्तिः ।

என்பது அந்த சுலோகம். இனிமேல் ஸ்ரீ ஆசார்ய ரவர்களைப்பற்றிச் சொல்லுகிறேன்.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அவதாரம் செய்தார். ஐந்தாவது வயதில் உபநயனம் ஆயிற்று. உபநயனத்தில் காம்யோபநயனம், நித்தியோபநயனம் என்று இரண்டுவகை உண்டு. ஏழாவது வயதில் உபநயனம் செய்யவேண்டும். பிரம்ம தேஜஸை விரும்பினால் ஐந்தாவது வயதில் பண்ணலாம். மூன்றாவது வயது வரையில் தேச பாஷைகளைக் கற்றுக் கொண்டார். ஐந்தாவது வயது வரையில் ஸம்ஸ்கிருத பாஷையை அப்பியஸித்து நன்றாகத் தெரிந்துகொண்டார். அப்புறம் ஐந்தாவது வயதில் உபநயனம் ஆனபின்பு வேத சாஸ்திரங்களை எட்டு வயஸுக்குள் தெரிந்துகொண்டார். உபநயனத்துக்கு அப்புறம் குருகுலவாஸம் செய்து வேதாத் தியயனம் செய்து எட்டாவது வயஸில் வீட்டுக்கு வந்தார். தகப்பனார் காலமாய்விட்டார். 'நாம் வீட்டில் இருக்க வரவில்லை. லோக கைங்கர்யம் செய்வதற்கு வந்தோம்' என்று அவர் எண்ணினார். அதற்காக ஸந்நியாஸம் பண்ணிக்கொள்ள நினைத்தார். அவருடைய தாயாரோ தன்னுடைய ஒரு பிள்ளைக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆசையுடையவளாக இருந்தாள். 'ஆகையால் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளுகிறேனென்று



சொன்னால் அவளுக்கு மிகவும் துக்கமாயிருக்குமே' என்று எண்ணினார்.

ஒருநாள் தாயாருக்கு உடம்பு மிகவும் அஸௌகர்ய மாக இருந்தது. அந்த ஊரில் சூர்ணாநதி என்று ஒரு நதி யிருக்கிறது. ஆல்வாய்ப்புழை என்று அதை இப்பொழுது சொல்லுகிறார்கள். தயாருக்கு மிகவும் அசக்தமாயிருந்தது. 'நான் ஸ்நானம் பண்ணவேண்டும்; அசக்தமாயிருக்கிறது' என்று சொன்னாள். நதி தூரத்தில் இருந்தது. அது வீட்



ஸ்ரீசங்கர பகவத் பாதரவர்களை முதலை கௌவல்

டுக்குப் பக்கத்தில் வரவேண்டுமென்று பிரார்த்தித்தார். அது அப்படியே வந்தது. வழியில் ஒரு கிருஷ்ணன் கோவில் இருந்தது. நதி வந்த பொழுது அது இடிந்துவிட்டது.

பின்பு அது ஸ்ரீஆசார்யஸ்வாமிகளின் ஆஜ்ஞையின்படி அந்தத் தேசத்து அரசனால் உத்தாரணம் பண்ணப்பட்டது.

நதியில் தாயாரை ஸ்நானம் பண்ணுவித்தார். தாமும் ஸ்நானம் பண்ண இறங்கினர். அப்பொழுது ஒரு முதலை அவர் காலைப் பிடித்துக்கொண்டது. அந்த நதியில் இப்பொழுதும் முதலைகள் அதிகமாக இருக்கின்றன. முதலை பிடித்துக்கொண்டவுடன் தாயாரைப்பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார் :—"இப்பொழுது முதலை பிடித்துக்கொண்டது. இனி, பிராணன் போவது நிச்சயம். மனவிலே யாவது ஸந்நியாஸாசிரமத்தை வாங்கிக்கொண்டால் வேறு ஜன்மம் வந்தது போல ஆகும். அப்பொழுது பிராரப்தம் மாறிவிடும். இந்தப் பிராரப்தத்தால் வந்த மரணமும் மாறிவிடலாம். ஸந்நியாஸம் தாயார் அநுமதியில்லாமல் எடுத்துக் கொள்ளக் கூடாது. நான் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டால் ஒருகால் பிழைத்தாலும் பிழைப்பேன். வாங்கிக் கொள்ளாவிட்டால் பிழைக்க மாட்டேனென்பது நிச்சயம். எனக்குத் துர்மரணம் ஏற்படும். உனக்குப் புத்திரன் கையால் பண்ணும் கிருத்யம் கிடைக்காது. ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டால் எனக்கு மோக்ஷம் கிடைக்கும். உனக்கும் நல்லகதி கிடைக்கும். இருபத்தொரு வம்சங்கள் உத்தாரணமாகும்; ஸந்நியாஸம் பண்ணிக்கொண்டாலும் உனக்குக் கிருத்தியம் செய்துவிடுகிறேன்" என்று அவர் சொன்னர்.

வித்தியாரணியர் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டதைப் பற்றி ஒரு கதை உண்டு. அவர் பூர்வாசிரமத்தில் லக்ஷ்மியைக் குறித்துத் தபஸ் பண்ணினர். "இந்த ஜன்மத்தில் உனக்கு அநுக்கிரஹம் இல்லை" என்று லக்ஷ்மி பிரஸன்னமாகிச் சொல்லிவிட்டாள். உடனே ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டார். அப்பொழுது வேறு ஜன்மம் வந்ததுபோலாயிற்று. லக்ஷ்மியின் அநுக்கிரஹம் கிடைத்தது. நிறைய திரவியம் கிடைத்தது. ஸந்நியாஸிக்குத் திரவியம் எதற்கு? அதைக்கொண்டு அவர் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபனம் பண்ணினர். அவர் ஸ்தாபித்ததுதான் ஹம்பி. கிருஷ்ண தேவ ராயர் முதலியவர்களுக்கு அவரால் பெரியபுகழ் ஏற்பட்டது. விஜயநகர வம்சம் சிதைந்து போன பின்பு மதுரை நாயக்கர்கள் ஏற்பட்டார்கள். மைஸூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் அந்த வம்சத்திலிருந்து பிரிந்தவர்கள் அரசர்களாக இருந்தனர். வித்தியாரணியர் சிதிலமான பழைய மடங்களை உத்தாரணம் பண்ணினர். சில புதிய மடங்களையும் ஸ்தாபித்தார். மைஸூரில் அவரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்மார்த்த மடங்கள் சில இருக்கின்றன. ஆந்திர தேசத்திலும் சில உண்டு. அப்பொழுது மத்வாசாரியர் அவதாரம் செய்தார். துவைதமதம் அத்துவைதத்தைக் கபளீகாரம் பண்ணவந்தது. மிலேச்ச ராஜ்யம் இருந்தது. இந்த இரண்டு இடையூறுகளையும் நீக்கச் சாஸ்திர பிரயோகம் சஸ்திரப்ரயோகம் என்னும் இரண்டும் செய்ய வேண்டியிருந்தது. அதற்காக மடஸ்தாபனமும் ராஜ்ய ஸ்தாபனமும் செய்தார். வித்தியா ஸ்தாபனமும் செய்திருக்கிறார். பஞ்சதசப்ரகரணம், ஜீவன்முக்திவிவேகம், வையாஸிகந்யாயமாலை முதலிய பல அநுபவக்ரந்தங்களை அவர் எழுதியிருக்கிறார். நான்கு வேதத்துக்குப் பாஷ்யம் எழுதினர். அந்த வித்தியாரணியர் ஸந்நியாஸாசிரமம் பெற்றுக்கொண்ட பிறகு வேறு ஜன்மம் வந்து லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றுத் திரவியத்தைத் தமக்கென்று வைத்துக்கொள்ளாமல் லோகோபகாரத்துக்காக வைத்தார். ஸந்நியாஸாசிரமத்

தால் மறு ஜன்மம் வந்ததுபோலாகும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் சொன்னதைத் தாயார் கேட்டாள். தாயார் என்ன பண்ணுவாள்? "உனக்குத் தோன்றியதைச் செய்" என்று சொன்னாள். பிள்ளை வரம் கேட்டபொழுது "தங்களுக்கு எப்படி எண்ணமோ அப்படிச் செய்யவேண்டும்" என்று ஸ்வாமியிடம் சொன்னது போலவே இப்பொழுதும் சொன்னாள். அந்த ஸ்வாமி தானே இப்பொது பிள்ளையாக வந்திருக்கிறார்? உடனே ஜலத்திலிருந்துகொண்டே ஸந்நியாஸாசிரமம் எடுத்துக் கொள்ள தீர்மானித்தார் உடனே முதலை விட்டுவிட்டது. உடனே ஆகாசத்தில் ரதத்தில் ஒரு கந்தர்வன் தென்பட்டான். காலில் விழுந்து நமஸ்கரித்தான். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. "நான் ஒரு கந்தர்வன்" என்று அவன் சொன்னான்.

கந்தர்வர்கள் திவ்ய சக்ஷுஸ் உடையவர்கள். தேவ ஜாதியில் ஒரு வகையினர். நம்முடைய கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள் ரேடியோ லைட் வைத்துப்பார்த்தால் தெரிகின்றன. அதைப்போல அவர்கள் கண்களில் ஒருவித ரேடியோ லைட் இருக்கிறது. அதனால் அவர்கள் மனிதர்களுக்குத் தெரியாதவைகளையும் தெரிந்துகொள்ளுவார்கள். இவைகளெல்லாம் குருட்டு நம்பிக்கை (Superstition), புராணக்கதை (Mythology) என்று இக்காலத்தவர்கள் சொல்லுகிறார்கள். இவைகளைப் போலச் சில வார்த்தைகளை எதற்கும் சொல்லிவிடுகிறார்கள்.

கந்தர்வர்கள் எப்பொழுதும் உத்ஸாகமாக இருப்பவர்கள். குடி, ஸங்கீதம் முதலியவைகளில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். அதனால் ஸங்கீதம் முதலியவைகளுக்குக் காந்தர்வவேதம் என்னும் பெயர் ஏற்பட்டது.



அந்தக் கந்தர்வன், "நான் குடித்துக்கொண்டும் ஸங்கீதம் கேட்டுக்கொண்டும் மதோன்மத்தனாக இருந்தேன். ஒரு நாள் தூர்வாஸஸ் வந்தார். அவர் இந்த விஷயங்களுக்கெல்லாம் நேர் விரோதமானவர். அவர் வருவது தெரியாமல் நான் கிடந்தேன். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. 'முதலை போலக் கிடக்கிறாயே. உனக்கு முதலை ஜன்மம் வரட்டும்' என்று சபித்தார். அப்புறம் எப்படியாவது க்ஷமிக்க வேண்டும் என்று காலில் விழுந்து வேண்டிக்கொண்டேன். 'நான் கொடுத்த சாபம் தப்பாது. ஆனால் அந்த முதலை ஜன்மம் ஒருவகையில் பிரயோஜனப்படும். ஈசுவரன் லோகத்தில் அவதாரம் செய்யப்போகிறார். அவர் காலைப்பிடித்தால் உனக்கு முதலை ஜன்மம்போய்விடும். அவர் காலைப் பிடிக்கக் காலடியிற் போய் இரு' என்று சொன்னார். இதுதான் என் வரலாறு" என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

முதலை விட்டுப்போனவுடன் தாயாருக்கு அதிக ஸந்தோஷம் உண்டாயிற்று. "வா அப்பா, இனிமேல் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்" என்று சொல்ல ஆரம்பித்தாள். இதைக் கேட்ட ஸ்ரீ ஆசார்யர்கள், இனிமேல் நான் ஓர் அகத்துக் குழந்தை இல்லை. எல்லா அகத்துக்கும் குழந்தை. எல்லா அகமும் எனக்குச் சொந்தம். நீ ஸந்நியாஸம் செய்துகொள்ள உத்தரவு கொடுத்ததை மறந்துவிட்டாயே" என்று சொன்னார். "நான் போகவேண்டும்" என்று நமஸ்காரம் பண்ணினார்.

सर्ववन्द्येन यतिना प्रसूर्वन्द्या हि सादरम् ।

ஸந்நியாஸியை எல்லோரும் நமஸ்காரம் பண்ணினாலும் தாயாரை ஸந்நியாஸி நமஸ்காரம் பண்ணவேண்டும்.

"இனி எனக்குத் தாயார் தகப்பனார் பிள்ளையெல்லாம் வேறே.

भिक्षाप्रदा जनन्यः पितरो गुरुवः कुमारकाः शिष्याः ।
एकान्तरमणहेतुः शान्तिर्दयिता विरक्तस्य ॥

[ஸ்ரீ வைராக்ய சதகம்]

ஒரு அம்மா இல்லை. பிக்ஷை போடுகிறவர்கள் யாவரும் என்னுடைய தாய்மார். ஞானோபதேசம் பண்ணுபவர்தான் பிதா. நம்மிடம் பாடங்கேட்கவரும் சிஷ்யர்களே குழந்தைகள். இப்படி ஒரு பெரிய குடும்பம் உண்டாகப்போகிறது. நான் போய் வருகிறேன். ஆனாலும் நீ எப்பொழுது என்னை ஸ்மரிக்கிறாயோ அப்பொழுது வந்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டுக் கிரமமாகச் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளக் குருவைத் தேடிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.



ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதீசுவர ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள்

# X

## ஸ்ரீ ஆசாரியரவர்களின் ஞானப்பிரசாரம்

[7—11—1932]

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸந்நியாஸச்ரமம் வாங்கிக் கொள்ளுவதற்கு முன்பு பிரம்மசர்ய ஆச்ரமத்தில் பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டு வந்தார். அப்படி இருக்கும்போது ஒரு துவாதசியன்று ஒரு தரித்திரன் வீட்டுக்குப் பிக்ஷைக்குப்போனார். அவனுக்கு அநுக்கிரஹம்பண்ண எண்ணிப் போனார். அவன் பரம தரித்திரன். தினந்தோறும் உஞ்ச விருத்தி செய்து சாப்பிடுபவன். இவர் போனபொழுது அவன் வெளியில் போயிருந்தான். அவனுடைய பத்தினி மட்டும் வீட்டில் இருந்தாள். இவரைப் பார்த்தவுடன், "இவர் மஹாதேஜஸ்வியாக இருக்கிறார், இவருக்குப் பிக்ஷையிட்டால் எவ்வளவோ நல்ல பலன் உண்டாகும்" என்று அவள் நினைத்தாள். இவரைப் பார்க்கும்பொழுதே இவரிடத்தில் எல்லோருக்கும் ஒரு கௌரவபுத்தி உண்டாயிற்று. அந்தப் பிராம்மணனுடைய பத்தினி "இவருக்குப் பிக்ஷையிட என்ன இருக்கிறது" என்று தேடிப்பார்த்தாள். ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் துவாதசி பாரணைக்காக அந்த வீட்டுப் பிராம்மணன் ஒரு நெல்லிக்காயை வைத்திருந்தான். அதுவும் அழுகலாக இருந்தது. "இதையா போடுகிறது" என்று எண்ணி மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு அதைப் போட்டாள். அதைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீ ஆசார்யரவர்கள் அவளுடைய உண்மை



பிராமண ஸ்திரீ ஸ்ரீ சங்கரருக்கு நெல்லிக்கனி ஈதல்

பக்தியை அறிந்து அவர்களுக்கு இருந்த தாரித்திரியத்தைப் போக்க எண்ணினார். உடனே லக்ஷ்மியை எண்ணி 'கனகதாராஸ்தவம்' என்ற ஒரு ஸ்தோத்திரத்தைச் செய்து அவர்களுக்கு நிறைய ஐசுவரியம் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். "இவர்கள் எத்தனையோ ஜன்மங்கள் பாபம் செய்தவர்கள். இவர்களுக்குப் பலகாலம் தாரித்திரியம் இருக்கும். அப்படி இல்லாவிட்டால் பாபம் தொலையாது" என்று ஓர் அசரீரி கேட்டது. "இப்படி அன்புடன் எனக்குப் பிக்ஷை கொடுத்த புண்ணிய பலமானது, இதை விட அதிகமான பாபம் இருந்தாலும் சாப்பிட்டுவிடுமே" என்று இவர் சொன்னார். உடனே அவர்கள் வீட்டில்



ஸகல ஐசுவரியங்களும் நிரம்பிவிட்டன. இது ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பிரம்மசாரியாக இருந்தபோது நடந்த வரலாறு.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் தாயாரைவிட்டுப் பிரிந்து கிரமமாக ஒரு குருவிடம் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றெண்ணிப் புறப்பட்டார். ஈசுவராவதாரமாகிய ஸ்ரீ ஆசார்யரவர்களுக்கு வேறொரு குரு அவசியமில்லை. ஆனாலும் உலகத்தில் அவதாரம் செய்ததனால் எல்லோருக்கும் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே நடக்க வேண்டும். இவரே குருவை ஆசிரயிக்காவிட்டால் மற்றவர்களும் ஆசிரயிக்காமல் இருந்துவிடுவார்கள். அதற்காக, லோகத்திற்கு நடத்திக்காட்டும் பொருட்டுக் குருவைத் தேடிக் கொண்டு புறப்பட்டார். சில கிரந்தங்கள் நர்மதா தீரத்தில் குருவைக்கண்டாரென்றும் வேறு சில பதரிகாசிரமத்தில் கண்டாரென்றும் சொல்லுகின்றன.

இவர் கோவிந்த பகவத்பாதர்களிடம் கிரமமாக ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டார். அவர் பிரம்மஸூத்திரத்திற்குப் பாஷ்யம் செய்ய வேண்டுமென்று சொல்லி அநுக்கிரஹம் செய்தார். உடனே அங்கிருந்து காசிக்ஷேத்திரத்துக்குப் போனார். அங்கே இருந்துகொண்டு பாஷ்யம் செய்ய ஆரம்பித்தார். மணிகர்ணிகா கட்டத்தில் முக்தி மண்டபத்தில் இருந்துகொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

காசி மஹா க்ஷேத்திரம். அங்கே விசுவேசுவரர், இறந்துபோகும் ஒவ்வொரு பிராணிக்கும் ஞானோபதேசம் செய்து முக்தி கொடுக்கிறார். இந்த வகையில் அல்லாமல் வேறு விதத்திலும் காசிக்ஷேத்திரத்திற்கு விசேஷமிருக்கிறது. நம்முடைய தேசத்தில் அநேக மதங்களிருக்கின்

றன. எல்லா மதங்களுடைய பிரதிநிதிகளும் காசி க்ஷேத்திரத்தில் இருப்பார்கள். அந்தக் காலத்தில் மஹாபண்டிதர்கள் இருந்த ஸ்தானமாக அது இருந்தது. யாத்திரை பண்ணிக்கொண்டே பலபேர்கள் அங்குவந்து தங்கி இருப்பார்கள். நம்முடைய தேசத்தில் எத்தனை ஜாதி, எத்தனை மதங்கள், எத்தனை பாஷைகள் இருக்கின்றனவோ அவ்வளவையும் அங்கே பார்க்கலாம். ஆகையால் அங்கே போய்ப் பிரசாரம் செய்தால் லோகமுழுதும் பிரசாரமாகும் என்று ஸ்ரீஆசார்யரவர்கள் நினைத்தார்கள். பல தேசங்களில் உள்ள வைதிகர்கள் அங்கே இருந்தார்கள்: அதனால் காசியில் பாஷ்யம் பண்ணினது லோகப்பிரசாரத்திற்கு ஏதுவாயிற்று. அங்கே பல மதஸ்தர்களுடைய கொள்கைகளை நிராகரணம் பண்ணி ஔபநிஷதமான மதத்தை ஸ்தாபித்தார்.



ஸ்ரீ சங்கரரும் வேதவியாஸரும்.



ஒரு நாள் வியாஸாசாரியர் ஸ்ரீசங்கரருக்கு நேரே வந்து அநுக்கிரஹம் பண்ணவேண்டுமென்று நினைத்தார். அவர்தாம் கோவிந்த பகவத்பாதாசாரியருக்கு, ‘நீ ஈசுவர அவதாரமாகிய ஸ்ரீசங்கரருக்கு உபதேசம் செய்யவேண்டும்’ என்று ஆஜ்ஞாபித்தவர். அவர் ஸ்ரீசங்கரர் செய்த பாஷ்யம்தான் லோகத்துக்கு உபயோகமானது என்பதை லோகமெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்றெண்ணினார். பல விதமான ஆக்ஷேபணைகள் சொல்லி ஸமாதானம் சொல்லச் செய்யவேண்டுமென்று நினைத்து ஒரு வயோதிகப் பிராம்மணராக வந்தார். வந்து நிரம்பவாதம் பண்ணினார். லோகத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் அந்த பாஷ்யத்தின் விசேஷம் தெரிய வேண்டுமென்றுதான் அப்படிச் செய்தார். வாதம் மிகவும் கடுமையாகப் போயிற்று. பக்கத்திலிருப்பவர்களெல்லோரும் மிகவும் பயந்தார்கள். அங்கே இருந்த ஸ்ரீஆசார்யாரவர்களுடைய சிஷ்யராகிய பத்மபாதாசாரியார் ஞானதிருஷ்டியால் பார்த்தார். வந்திருப்பவர் வியாஸாசாரியர் என்பதைத் தெரிந்துகொண்டார்.

शंकरः शंकरः सक्षाद्यासो नारायणः स्वयम् ।
तयोर्विवादे संप्राप्ते किंकरः किं करोम्यहम् ॥


வியாஸர் நாராயணாவதாரம். ஸ்ரீஆசார்யரோ சங்கர ஸ்வரூபம். இந்த இரண்டு பேரும் இப்படி வாதம் பண்ணினால் கிங்கரராகிய நாம் என்ன பண்ணுவது என்று அவர் நினைத்தார். உடனே வாஸ்தவமாக இந்த பாஷ்யமானது தங்களுடைய ஹ்ருதயத்திலுள்ள அபிப்பிராயத்தையே அநுஸரித்ததாக இருந்தால் ஸ்வஸ்வரூபத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தார். உடனே வியாஸர் தம்முடைய ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டார்.

அப்பொழுது ஸ்ரீசங்கரர் 'நான் வந்த காரியம் ஆயிற்று; பதினாறு வருஷம் பூர்த்தியாயிற்று; இனி நான் போகவேண்டும்; அனுக்கிரஹம் செய்ய வேண்டும்'' என்றார். வியாஸர் "நான் இன்னும் பதினாறு வருஷங்கள் தருகின்றேன். பாஷ்யம் பண்ணினது மட்டும் போதாது. அதிலே ஸ்தாபிக்கப்பட்ட கொள்கைகளைப் பல தேசங்களுக்குச் சென்று ஸஞ்சாரம் செய்து அங்கங்கே ஆக்ஷேபணைகள் செய்பவர்களைப் பார்த்து அவரவர்களுடைய கொள்கைகளை நிராகரித்து ஸித்தாந்தம் பண்ண வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அந்தப் பிரகாரமே ஸ்ரீசங்கராசார்யரவர்கள் திக்விஜயம் பண்ணினார்கள்.

பத்மபாதாசாரியர் என்பவரைப்பற்றி இந்த விவரம் சொன்னேன். அவர் ஸ்ரீஆசார்யரவர்கள் காசியில் இருக்கும் பொழுது சிஷ்யராக வந்து சேர்ந்தார். அவருக்குப் பத்மபாதர் என்ற பெயர் வந்ததற்குக் காரணத்தைச் சொல்லும் ஒரு கதை உண்டு.

ஒரு நாள் கங்காதீரத்தில் பத்மபாதர் அக்கரையில் இருந்தார். ஸ்ரீசங்கரர் இக்கரையில் இருந்தார். பத்மபாதர் வஸ்திரங்களைக் கையில் வைத்துக்கொண்டிருந்தார். ஸ்ரீசங்கரர் ஈரவேஷ்டியுடன் இருந்தார். கங்கையில் நிறைய பிரவாஹமாக இருந்தது. அப்பொழுது ஸ்ரீசங்கரர் பத்மபாதாசார்யருடைய பக்தியை ஒரு சோதனை மூலம் உலகத்திற்கு அறிவிப்பதற்காகக் கரையிலிருந்தகொண்டே, 'அந்த வஸ்திரத்தைக் கொண்டுவா' என்று சொன்னார். ஸ்ரீஆசார்யர்களுடைய ஆஜ்ஞையைத் தட்டாமல் செய்ய வேண்டுவது சிஷ்யன் கடமை. பத்மபாதருக்கு, கங்கை ஆழமாக இருக்கிறதே என்ற நினைவே இல்லை. மறந்து





பத்மபாதர் கங்கைநீரில் நடந்து வருதல்

போயிற்று. நடக்க ஆரம்பித்தார். கங்காதேவி ஒவ்வோரடியிலும் ஒவ்வொரு பத்மம் புஷ்பிக்கச் செய்து தாங்கினாள். அவர் ஸ்ரீஆசார்யர்களிடம் வந்து வஸ்திரத்தைக் கொடுத்தார். எல்லோரும் அவருடைய குரு பக்தி விசேஷத்தை அறிந்து கொண்டாடினார்கள். பத்மங்களால் தாங்கப் பெற்ற பாதத்தை உடையவராதலின் பத்மபாதரென்னும் பெயர் வந்தது. எல்லோரும் 'நீ எப்படி கங்கையைத் தாண்டினாய்?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டார்கள். 'எந்த ஸ்ரீஆசார்யரை ஸ்மரித்தால் ஸம்ஸாரமாகிய ஸாகரமே முழங்காலளவு ஆய்விடுகிறதோ, அந்த ஸ்ரீஆசார்யருடைய ஆஜ்ஞைக்கு

இந்தக் கங்காபிரவாஹம் என்ன பிரமாதம்!' என்று அவர் சொன்னார்.

பத்மபாதருடைய பூர்விக வரலாறு ஒன்று உண்டு. அவர் சோழதேசத்தில் பிறந்தவர். அங்கே அவருக்கு நரஸிம்ம மந்திர உபதேசத்தை ஒரு பெரியவர் பண்ணினார். அந்த மந்திரத்தை நன்றாக ஜபித்து ஸித்திபெற்று நரஸிம்ம மூர்த்தியைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. தனியாக இருந்து ஜபம் பண்ணவேண்டுமென்று அவர் நினைத்தார். ஒரு மலைக்குப் போனார். அதன் மேலே ஏறி ஓரிடத்தில் தபஸ் பண்ணலாமென்று உட்கார்ந்தார்.

அப்பொழுது அங்கே வஸிக்கும் ஒரு வேடன் வந்தான். 'இவன் யாரோ ஒரு பிராம்மணனன் இங்கே வந்திருக்கிறானே! எதற்கு வந்தான்?' என்று அவன் எண்ணினான். அவன் அவரிடம் வந்து, 'நாங்கள்தான் இங்கே உள்ள மிருகங்களை வேட்டையாடிக்கொண்டு காலங்கழிக்கிறோம். நீ எதற்கு இங்கே வந்தாய்? இங்கே இருந்தால் அதிகக்கஷ்டமாக இருக்குமே' என்று கேட்டான். 'நான் நரஸிம்மமூர்த்தியைக் காணவந்திருக்கிறேன். இந்த இடத்தில் தனியாக இருந்து தபஸ் பண்ணப்போகிறேன்' என்றால் அவனுக்குப் புரியாது. 'நான் நரஸிம்மத்தைக் காணவந்திருக்கிறேன். இந்த மாதிரி உள்ள இடங்களில் அது இருக்கும்' என்று அவர் சொன்னார். 'என்ன அது? நரஸிம்மமா? அது சிங்கமா? புதிதாய் இருக்கின்றதே! அது எப்படி இருக்கும்?' என்று வேடன் கேட்டான். 'இடுப்புக்குக்கீழே மனிதனைப்போல இருக்கும். இடுப்புக்கு மேல் சிங்கரூபமாக இருக்கும்' என்றார். 'எப்படி? நன்றாகச் சொல்லு' என்று வேடன்



அந்த நரஸிம்ம ஸ்வரூபத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்டுக்கொண்டான். "ஒரு வார்த்தைமட்டும் உன்னைக் கேட்கிறேன். ஸத்தியமாகச் சொல்ல வேண்டும். இந்தக் காட்டுக்குள் அது இருக்கிறதோ என்று மறுபடியும் கேட்டான். இருக்கிறது என்றார். "இந்தக் காட்டுக்குள் ஒரு இடம் விடாமல் நான் பார்த்திருக்கிறேன். எல்லா இடங்களும் எனக்குத் தெரியும். இங்கே உள்ள ஒரு மிருகத்தை யாவது நான் பாராமல் இருக்கவில்லை. என்னைக்காட்டிலும் கெட்டிக்காரன் இந்த இடத்தில் இல்லை. ஸத்தியமாகச் சொல். நீ அந்த மிருகத்தைத்தான் பார்க்க வந்தாயா? அப்படியானால் நீ கஷ்டப்படாதே. உனக்கோ மிருகத்தைப் பிடிக்கத் தெரியாது. நான் பிடித்துக் காட்டுகிறேன். இருக்கிறதா என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிந்தால் நான் காட்டுகிறேன். நீ ஊருக்குப் போகலாம்" என்றான். அதைக் கேட்டு அவர் சிரித்தார். "சிரிக்காதே. இருக்கிறதா வென்பதை மட்டும் நிச்சயமாகச் சொல்" என்று கேட்டான். "நிச்சயமாக இருக்கிறது. ஆனால் உன்னால் பார்க்க முடியாது" என்றார். "நாளைக்குள் காட்டிவிடுகிறேன் பார். நாளை ஸாயங்காலத்துக்குள் அதை உனக்குக் காட்டாவிட்டால் நான் இந்த உடம்பை வைத்துக்கொள்ளுவதில்லை. இவ்வளவு கஷ்டப்பட்டு அதைத் தேடிக்கொண்டு இவ்வளவு தூரம் வந்த உனக்கு அதைக் காட்டுவதைவிட வேறு என்ன நல்ல காரியம் இருக்கிறது? நான் இங்கே வேடனாக இருப்பதற்குத்தான் என்ன பிரயோஜனம்" என்றான் வேடன். "ஸரி. நான் என்ன சொல்லுவேன்? நீ இப்படி சொல்லுகிறாய்" என்று சொல்லி பத்மபாதர் சும்மா இருந்தார்.

வேடன் நரஸிம்மத்தைப் பார்க்க புறப்பட்டான். காடு முழுவதும் சுற்றினான். மனஸில் நரஸிம்மத்தைப்பற்றி

நினைவு மறக்காமல் ஸதா அதேஸ்மரணையுடன் அலைந்து கொண்டிருந்தான். ஆஹார மில்லாமற் சுற்றி அலைந்தான். எங்கும் அகப்படவேயில்லை. ஒரு நாள் ஆயிற்று. மறு நாள் ஸாயங்காலமும் வந்து விட்டது. "ஸரி; நம் உத்தேசம் பூர்த்தியாக வில்லை. இனிமேல் இந்தத் தேஹம் இருந்து பிரயோஜனம் இல்லை. அந்தப் பிராம்மணன் பொய் சொல்லமாட்டான். நாமோ அவனுக்கு இன்று ஸாயங்காலத்துக்குள் காட்டுவதாகச் சொல்லி விட்.டோம். நம்மால் முடியவில்லை. இனிமேல் உயிரை விட்டுவிட வேண்டியது தான்" என்று எண்ணினான். அங்கேயிருந்த கொடிகளை யறுத்து ஒருமரத்திற் கட்டித் தானும் அந்த மரத்திற் சாய்ந்து தன்னையும் கட்டிக்கொண்டான். அப்படியே பிராணனை விட்டு விடுவதென்று தீர்மானித்தான்.

ஸந்தியா காலம் ஆயிற்று. ஒரு மிருகம் அவனுக்கு முன்னாலே வந்தது. நரஸிம்ம மூர்த்தி அந்த வேடனுடைய ஏகாக்கிரசித்தத்தை யறிந்து தரிசனம் கொடுக்க வந்தார். அவரைக் கண்டான் வேடன். பிராம்மணன் சொன்னபடி அந்த மிருகம் இருந்தது. நிரம்ப ஸந்தோஷம் வந்துவிட்டது. "பாழும் மிருகமே! நீ வருவதற்கு இவ்வளவு நாழிகையா? இவ்வளவு உபத்திரவமா பண்ணினாய்? உன்னை இனிமேல் விடமாட்டேன்" என்று சொல்லி அந்தக் கொடியை அவிழ்த்து அந்த சிங்கத்தைக் கட்டினான். கரகர வென்று அதை இழுத்துக் கொண்டு பிராம்மணர் இருந்த இடத்திற்கு வந்தான். "ஓய்! இங்கே பார். இதுதானே நீர் சொன்ன மிருகம்?" என்று கேட்டான் வேடன். அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. கொடிதான் தெரிந்தது. சத்தம் மட்டும் கேட்டது. "இந்த நரசிங்கத்தை வாங்கிக்கொள்.



இனிமேல் சுகமாக எழுந்து ஊருக்குப்போ" என்று வேடன் சொன்னான். பத்மபாதருக்கு அதிக துக்கம் உண்டாய் விட்டது. "உபயோக மற்ற வேடன் கண்ணுக்குத் தெரிகிறீர். எனக்கு தெரியவில்லையே" என்று கதறினார். அப்பொழுது ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. "கோடி வருஷங்கள் ஸ்வரூபத்தியானம் பண்ணினால் எவ்வளவு சித்த ஐகாக்கிரியம் ஏற்படுமோ அவ்வளவு ஐகாக்கிரியம் என்னைத் தேடுவதால் ஒரு நாளில் இந்த வேடனுக்கு உண்டாயிற்று. பிராணனைப் பந்தயம் வைத்து விட்டு, எங்கே சுற்றினாலும் அதே தியானமாக பசி நித்திரை யில்லாமல் இருந்தவர் எந்த ரிஷியும் இல்லை. அப்படிப்பட்ட மஹா பக்தனாகிய இந்த வேடனுடைய ஸங்கம் உனக்கு ஏற்பட்டதால் ஸ்வரூபம் தெரியா விட்டாலும் சப்தத்தை யாவது கேட்கும் பாக்கியம் கிடைத்தது. உனக்கு மந்திரஸித்தி ஆகிவிட்டது. இனிமேல் உனக்கு எப்பொழுது அவசியமோ அப்பொழுது உன்னிடம் வருகிறேன்" என்று அந்த வாக்குச் சொல்லிற்று.

இந்த ஸமாசாரம் நடந்த பிறகுதான் அந்த பிராம்மணர் ஸ்ரீ ஆசார்யரவர்களிடத்தில் சிஷ்யராக வந்து சேர்ந்தார். ஒரு நாள் ஸ்ரீ ஆசார்யரவர்களிடத்தில் ஒரு காபாலிகன் வந்தான். ஸ்வாமியைப் போலக் கபாலம் எலும்பு மாலை முதலியவைகளைக் காபாலிகர்கள் அணிந்துக் கொள்ளுவார்கள். ஶ்மசானத்தில் இருப்பார்கள். மாம்ஸம் மஜ்ஜை முதலியவைகளைச் சாப்பிடுவார்கள். இப்படி உபாஸனை பண்ணுவது வாமாசாரத்தைச் சேர்ந்தது. அதை ஸ்ரீசங்கரர் கண்டனம் பண்ணினார். கண்டனம் பண்ணப் பண்ண அந்தக் காபாலிகன் விடைசொல்ல முடியாமல் மயங்கினான். இவரை எந்தவிதத்தில் தொலைக்கலாம் என்று பார்த்தார்

இவர் மஹாகருணையுடையவர். ஆகையால் இவரிடத்திலே போய்ப் பிரார்த்திப்போம்'' என்று எண்ணினான். அவர் தனியாக இருக்கிறபொழுது போய் நமஸ்காரம் பண்ணினான் "நான் கபாலியை உபாஸிக்கிறவன். இதுவரையில் எவ்வளவோ விதமான பலிகளைக் கொடுத்துப்பார்த்தேன். ஸ்வாமி பிரத்தியக்ஷமாகவில்லை. பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்ட ஒரு அரசன் தலையையாவது ஒரு அஷ்டமஹாஸித்திகளையுடைய ஆத்மஞானியின் தலையையாவது பலிகொடுத்தால் பிரத்தியக்ஷமாவேன் என்றார். அரசனிடம் போய் ஸமாசாரம் சொன்னால் முதலில் என் தலையை வாங்கிவிடுவான். தாங்கள் பரம கருணாமூர்த்தியாக இருப்பதால் தங்களிடம் வந்தால் என் மனோரதம் பூர்த்தியாகுமென்று வந்தேன்'' என்றான். ஸ்ரீ ஆசார்யரவர்களுக்குப் பரம ஸந்தோஷம் உண்டாயிற்று. "அடே! இந்தத் தேஹம் கூடவா பிரயோஜனப்படுகிறது? ஒன்றுக்கும் உதவாதது அல்லவா இது? மரம் பட்டுப் போனாலும் விறகுக்கு உதவும். மாட்டுக் கொம்பு உபயோகப் படுகிறது. யானைக் கொம்பு எவ்வளவோ காரியங்களுக்கு உபயோகப்படுகிறது. மானினுடைய தோல் ஆஸனத்துக்கு உபயோகமாக இருக்கிறது. ஒன்றுக்கும் உதவாதது இந்தச் சரீரந்தான். இதை ஒருவன் கேட்டுப் பெற்று ஒரு காரியம் செய்ய உபயோகப் படுகிறதா?'' என்று அதிக ஸந்தோஷப் பட்டார். "ஸரி. என்னுடன்கூட இருக்கும் சிஷ்யர்களுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம். அவர்கள் பொல்லாதவர்கள். இது தெரிந்தால் ஏதாவது கஷ்டம் முண்டாக்குவார்கள். நான் தனியே உட்கார்ந்து தியானம் பண்ணிக்கொண்டிருப்பேன். அப்பொழுது வந்து சட்டென்று எடுத்துக்கொண்டு போய்விடு'' என்று சொன்னார். அவன்கேட்டு மிகவும்



ஸந்தோஷப்பட்டுக்கொண்டு போய்விட்டான். பின்பு ஒரு ஸமயம் ஸ்ரீ ஆசார்யரவர்கள் தனியாக இருக்கும்பொழுது வந்தான். பக்கத்தில் இருந்த சிஷ்யர்களெல்லாம் வெளியிற் போயிருந்தார்கள். அப்பொழுது வந்த காபாலிகன் கத்தி



கபாலிகன் ஸ்ரீ சங்கரரைக் கோல்ல வருதல்.

யை உருவினான். அப்பொழுது பத்மபாதர் எங்கிருந்தோ ஓடிவந்தார். உடனே, ஹா ஹா என்ற சப்தம் கேட்டது. ஸ்ரீ ஆசார்யரவர்கள் கண்ணை விழித்துப் பார்த்தார். காபாலிகனுடைய சரீரம் கிழித்துப்போடப்பட்டிருந்தது. பக்கத்தில் பத்மபாதர் நின்று கொண்டிருந்தார். "என்ன ஸமாசாரம்? இதுயார் பண்ணினது?'' என்று ஸ்ரீ ஆசார்யரவர்கள் கேட்டார்கள்.'' எனக்கு ஒன்றும் தெரியாது. நான்

கங்கையில் இருந்தேன். அப்புறம் ஏதோ ஒரு விதமாக இருந்தது. இப்பொழுதுதான் எனக்குச் சொந்தப் பிரஜ்ஞை வந்தது" என்றார் பத்மபாதர். "உனக்கு ஏதாவது மந்திர உபதேசம் முன்பு உண்டா? என்று ஸ்ரீசங்கரர் கேட்டார். "ஏதோ ஒன்று இருந்தது. ஆனால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. நரஸிம்ம மந்திரத்தை ஜபித்திருக்கிறேன். அவர் என்னை ஏமாற்றிவிட்டு ஒரு வேடனுக்குத் தரிசனம் கொடுத்தார். உனக்கு வேண்டியபொழுது நான் வருகிறேன் என்று சொல்லி இருந்தார். இந்த ஸமயத்தில் அவர் ஆவேசமாகவந்தார் போலிருக்கிறது. இப்படிப் பட்ட ஆபத்தான ஸமயத்தில் அவர் வந்திருந்தாரென்றால் அதைவிட உபயோகமான ஸமயம் வேறில்லை என்று நினைக்கிறேன்" என்று சொன்னார். கங்கையிலிருக்கும் பொழுது நரஸிம்ம ஆவேசம் வந்து ஒரே ஓட்டமாக ஓடி வந்து காபாலிகனைக் கிழித்து விட்டார் என்பதை ஸ்ரீ சங்கரர் அறிந்து கொண்டார்.

ஒரு நாள் ஸ்ரீ சங்கராசார்யர்கள் ஸ்நானத்துக்குப் போனார்கள். அப்பொழுது ஒரு பறையன் வேண்டுமென்று அவர் பக்கத்தில் வந்தான். அவனைப்பார்த்து எட்டிப்போ என்று ஸ்ரீசங்கரர் சொன்னார். அவன் உடனே சில கேள்விகள் கேட்க ஆரம்பித்தான்.

अन्नमयादन्नमयमथवा चैतन्यमेव चैतन्यात् ।
द्विजवर दूरीकर्तुं वाञ्छसि किं ब्रूहि गच्छ गच्छेति ॥

[மனீஷாபஞ்சகம்—பிருஹத் ஸ்தோத்திரம், 165]

"எதையோ போகச் சொல்லுகிறீரே; எதிலிருந்து எதை எட்டிப் போகச் சொல்லுகிறீர். சாதம் சாப்பிட்டு அதனா லுண்டான எலும்பு, மாம்ஸம் முதலியவைகள்





காசியில் ஸ்ரீசங்கரர் சண்டாளனைச் சந்தித்தல்

உள்ள ஒரு கூட்டுக்கு அதே மாதிரி எலும்பு மாம்ஸம் உள்ள ஒரு கூடு தூரத்தில் இருக்கவேண்டும் என்பது உம்முடைய அபிப்பிராயமா? அல்லது அந்தக் கூட்டுக்குள் உள்ள சைதன்யமானது கிட்டவரக் கூடாது என்பது அபிப்பிராயமா? எது உம்முடைய அபிப்பிராயம். ஏ! பிராம்மணோத்தமா! பதில் சொல்லும். எதை தூரப் போகச் சொல்ல அபிப்பிராயப்படுகிறீர்? போபோ என்று சொல்லுகிறீரே" என்று அவன் கேட்டான். அந்தப் பறையன் கேட்டகேள்வி யிது. அதைக் கேட்ட ஸ்ரீ

ஆசாரியரவர்கள், இவன் யாரோ வம்புக்கு வந்திருக்கிறான். முதலிலேயே கேள்வி கேட்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணின் வந்தவ இவன் என்று எண்ணினார். ஆனால் அவன் எல்லா வம்பும் தொலையவந்தவன். இத்தோடு அவன் நின்று விடவில்லை. நின்றிருந்தால் நாம் ஒதுங்கிப்போய் விடுவோமென்று ஸ்ரீ சங்கரர் போயிருந்திருப்பார். அங்கேயும் நெருங்கி வந்தால் கங்கையில் இறங்கிபபோய் இருக்கலாம். அவனே மேலும் அதிகமாகப் பேச ஆரம்பித்தான்.

किं गङ्गाम्बुनि बिम्बितेऽम्बरमणौ चण्डालवाटीपयः-
पूरे चान्तरमस्ति काञ्चनघटीमृत्कुम्भयोर्वाम्बरे ।
प्रत्यग्वस्तुनि निस्तरङ्गसहजानन्दावबोधाम्बुधौ
विप्रोऽयं श्वपचोऽयमित्यपि महान् कोऽयं विभेदभ्रमः ॥

[மனீஷாபஞ்சகம்—பிருஹத் ஸ்தோத்திரம், 165]

என்று அவன் கேட்டான்.

"நீங்கள் என்ன பாடம் சொல்லுகிறீர்கள். வேதாந்தமா? அதில் என்ன சொல்லியிருக்கிறது. அவன் வேறே இவன் வேறே என்று சொல்லியிருக்கிறதோ"

கீதையில் பகவான்

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ॥

[கீதை, V-18]

என்று சொல்லி யிருக்கிறார். அந்த சுலோகத்தில் எந்த விஷயம் சொல்லப் பட்டிருக்கிறதோ அதேதான் அந்தப் பறையன் கேட்ட சுலோகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலுள்ள சிலவார்த்தைகள் அப்படியே இதிலுமிருக்கின்றன.



"விசேஷமான பேதப்ராந்தி உமக்கு எப்படி உண்டாயிற்று? நாமெல்லாம் யார்? ஸ்வாமிதான். 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' 'சிவோஹம்' என்று சொல்லுகிறீரே? அவைகளுக்கு என்ன அர்த்தம்?"

ஸ்வாமி நாமாவதெப்படியென்றால் அது இரண்டு தினுசு. ஸூர்யன் நன்றாகப் பிரகாசமாக இருக்கும்பொழுது தண்ணீரில் கையைத் தோய்த்துக் கீழே தெளித்தால் ஆயிரம் துளிகள் விழுகின்றன. அந்த ஆயிரம் துளிகளிலும் ஆயிரம் ஸூர்யர்கள் தெரிகின்றார்கள். ஒரே ஸூர்யன் அப்படி ஆயிரமாகத் தோற்றுகிறான். அவன் ஏன் நீர்த்துளிகளில் சிறியவனாகத் தெரிகின்றான். எந்தப் பதார்த்தத்தில் தெரிகின்றானோ அதற்குத் தக்கபடி அவனுடைய அளவும் இருக்கின்றது. அந்த விஷயத்தை பிம்பப்ரதிபிம்பவாதம் என்று சொல்லுவார்கள். அந்தத் துளிகளையெல்லாம் அழித்துவிட்டால் அப்பொழுது பிம்பம் ஒன்றும் இராது. நம்முடைய மனவில்தான் பேதமாகத் தோன்றுகிற ப்ரதிபிம்பங்கள் உண்டாகின்றன. யந்திரம் ஓடினால் மின்சாரம் (எலெக்ட்ரிஸிடி) உண்டாகிறது; அதனால் வெளிச்சம் உண்டாகிறது. யந்திரம் நின்றால் எலெக்ட்ரிஸிடி நின்று விடும். வெளிச்சமும் இராது. ஓட்டந்தான் மனஸ். அந்த ஓட்டத்தை நிறுத்திவிட்டால் மனஸ் இல்லாமற் போய்விடும், அப்பொழுது ப்ரதிபிம்பமும் இல்லை.

அவச்சின்னவாதம் என்பது ஒன்று. குளத்தில் நிறைய ஜலம் இருக்கிறது. ஒரு செம்பை முழுக வைத்து இழுத்துக் கொண்டே போகிறோம். செம்புக்குள் இருக்கும் ஜலமும் குளத்தில் இருப்பதும் ஒன்றேதான். இரண்டுக்கும் வித்தியாஸம் இல்லை. ஆனால் செம்பை இழுத்துக்

கொண்டு போகும்பொழுது அதற்குள் இருக்கும் ஜலம் தனியாக வருகிறது போல் இருக்கிறது.

ஒரே ஆகாசம் எங்கும் நிறைந்திருக்கிறது.

**अवकाशस्तु आकाशम्**

எல்லாவற்றிற்கும் அது இடம் கொடுக்கிறது. எங்கும் பரவி இருக்கிற ஆகாசத்திற்குமஹாகாசம் என்று பெயர். குடத்திற்குள் இருக்கிற ஆகாசத்திற்கு கடாகாசம் என்று பெயர். கடம் என்றால் குடம். கடம் போனால் கடாகாசமும் போய் விட்டதாக நினைக்கிறோம். உடையாதபொழுது அந்த ஆகாசம் ஸஞ்சாரம் பண்ணுவது போலவும் சின்னதாகவும் பெரியதாகவும் இருக்கிறது போலவும் நமக்குத் தோன்றுகிறது. அது இருக்கிற இடம் எதுவோ அதற்குத் தகுந்தபடி இப்படிப்பட்ட பேதங்கள் ஏற்படுகின்றன. அதே மாதிரி பரமாத்மா அந்த அந்த மனஸுக்குத் தக்கபடி வித்தியாஸமாகத் தோற்றுகின்றார். செம்பிலிருக்கிற ஜலம் பெரிய செம்பாயிருந்தால் பெரியதாகவும் சின்னச் செம்பாயிருந்தால் சின்னதாகவும் தோற்றுகிறது. செம்பை உடைத்துவிட்டால் அந்த பேதங்களெல்லாம் போய்விடுகின்றன. அதைப் போல மனஸ் போய்விட்டால் பேதபுத்தியும் போய் விடுகிறது. இப்படிச் சொல்லுவதுதான் அவச்சின்ன வாதம் என்பது. இந்த இரண்டு வாதங்களையும் வைத்துக்கொண்டுதான் அந்தப் பறையன் கேட்டான்.

கங்கையிலும் ஸூர்யன் பிரதிபிம்பிக்கிறான்; பறையன் வீட்டுக் குட்டையிலும் பிரதிபிம்பிக்கிறான். இந்த இரண்டிலும் ஏதாவது வித்தியாஸம் உண்டா? தங்கச் செம்பு, மண் பானை என்னும் இரண்டிலும் உள்ள ஆகாசத்திற்குள் வித்தியாஸம் ஏதாவது இருக்கிறதா? சரீரத்திற்குள் ஒரு வஸ்து



இருக்கிறது. அது ஆனந்தமானது. அதில் பேதம் ஏது? அது நிறைந்த வஸ்து. ஸமுத்திரம் போன்றது. ஸமுத்ரத்தைக்கூட அதற்கு உபமானமாகச் சொல்லக்கூடாது. ஏனென்றால் அது எங்கேயும் நிறைந்திருக்கவில்லை. இப்பொழுது இங்கே ஸமுத்திரம் இருக்கிறதோ? இல்லை. அது இருக்கிற இடத்திலேயாவது நிறைந்திருக்கிறதோ. அங்கே கூட ஓரளவுக்கு மேல் இல்லை. அப்படியானால் ஏன் அதை உபமானமாகச் சொல்லவேண்டும்? நமக்கு தெரிந்தவைகளுக்குள் பெரிதாயிருப்பது அது தான். அதனால் அதைத்தான் சொல்லவேண்டும். அந்தப் பறையன் சொன்னது என்ன ஸமுத்திரம்? லோகத்திலுள்ள ஸமுத்திரம் உப்பு, ஜலம் என்னும் இந்த இரண்டையும் உடையது. இதுவோ ஆனந்தம், ஞானம் என்னும் இரண்டையும் உடையது. எல்லையில்லாத இன்பமும் எல்லையில்லாத அறிவும் உடையது. ஸமுத்திரத்தில் அலை உண்டு. இதில் அலை இல்லை. ஏன் இல்லை? லோகத்திலுள்ள ஸமுத்திரத்தைத் தவிர அதற்கு மேலே வேறிடம் இருக்கிறது. அதனால் அலை அடிக்கிறது. இது இல்லாத இடமே இல்லை. எங்கும் நிறைந்திருக்கிறது. அதனால் அலை இல்லை. ஒரு பாத்திரத்தில் ஜலத்தை நிறைய விட்டு இறுக்கி மூடிவிட்டால் அதில் அலை உண்டாகுமா?

இப்படிப்பட்ட வஸ்துவில் வித்தியாஸம் ஏது என்று அந்தப் பறையன் கேட்டான். இந்தக் கேள்விக்குத் தர்ம சாஸ்திர ரீதியாகப்பதில் வருமென்று எல்லாரும் எதிர்பார்க்கலாம். ஆனால் ஸ்ரீ ஆசாரியர்வர்கள் ஞான ரீதியாகப் பதில் சொன்னார்கள். அந்தக் கெள்வியும் ஞான ரீதியாகத்தான் இருக்கிறது. உடனே ஸ்ரீ ஆசாரியர்கள் "தாங்கள் இப்பேர்ப்பட்டவர்களா? இப்படிப்பட்ட ப்ரம்மவித்துக்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தான் எனக்குக் குரு ஸ்தா

னம்'' என்று சொன்னார். நாமும் இப்படிப்பட்டவர்களை நமஸ்கரிக்கத்தயார். எல்லாரும் தயாராக இருக்கவேண்டும். அந்த ஞானம் வந்த நிலையில், சண்டாளன் சண்டாளன் இல்லை. பிராம்மணன் பிராம்மணன் அல்ல, வேதம் வேதம் அல்ல என்று வேதம் சொல்லுகிறது. அதைத் தான் ஸ்ரீ சங்கரரும் இந்தப் பறையனுக்குச் சொன்னார். ஐந்து சுலோகங்கள் பதிலாகச் சோன்னார்.

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी

[மனீஷாபஞ்சகம், 1]

இந்த மாதிரி திருடமானப் பிரஜ்ஞை எவனுக்காவது இருந்தானால், பிரம்மா முதல் எறும்பு வரைக்குள்ள பரப்பிரஹ்ம வஸ்து நானே என்ற திடப்பிரஞ்ஞை இருந்ததானால், 'நான்' என்பது அறியும் அறிவாகையால் அறியப்படுகின்ற வஸ்துக்களெல்லாம் நான் அல்ல என்ற ஞானம் எவனுக்காவது இருக்குமானால், அவன் சண்டாளனாகட்டும் பிராஹ்மணனாகட்டும், அவன் தான் எனக்குக் குரு, என்பது இந்த சுலோகத்தின் தாத்பர்யம். இப்படி ஐந்து சுலோகங்கள் சொன்னார். அவை மனீஷா பஞ்சகம் என்று சொல்லப்படும்.

அந்தப் பறையன் யார்? விச்வேசுவரரே. ஸ்ரீ ஆசாரியர்களைப் பரிசோதனை பண்ணுவதற்காக அப்படி வந்தார். அனுபவத்தில ஞான நிலை இருக்கிறதா இல்லையா என்று அறிய வந்தார். ஸ்ரீ ஆசாரியர்களுடைய மகிமையை இந்த மாதிரி சோதித்துக் காட்டுவதால் லோகத்திற்கு பரமப்



பிரயோஜனம் உண்டாகும என்றெண்ணி அப்படிச் செய்தார். ஒருவர் தம்முடைய மஹிமையைத் தாமே சொன்னால் குறைவு தான் ஏற்படும். தானாக லோகத்திலுள்ளவர்கள் அறிந்து கொள்ளும்படி ஏற்பட்டால் மஹிமை அதிகமாகும், தானே சொல்லிக் கொள்ளுகிறதினால் அஹங்காரி என்ற குறைவுதான் உண்டாகும். அந்த மஹிமை தன் முயற்சி இல்லாமல் ஏற்பட்டால் பிரகாசம் அதிகமாகும்.

ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் சொன்ன சுலோகத்தில் சொல்லப்பட்ட விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம் ஆலோசிக்கலாம். உலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளையும் நாமாக எப்படிப்பார்ப்பது? பேதஞ்ஞானம் எப்பொழுது இருக்கவேண்டும்? அபேதஞ்ஞானம் எப்பொழுது வரும்?

ஜாக்ரத் ஸ்வப்னம், ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தைகளுண்டு. ஸாதாரணமாக விழித்துக் கொண்டிருப்பது ஜாக்ரம், கனாக் காண்பது ஸ்வப்னம், ஒன்றும் தெரியாமல் தூங்குவது ஸுஷுப்தி. இந்த மூன்று அவஸ்தை களிலும் ஒருவனே இருக்கிறான். கனாகண்டவனும் விழித்துக் கொண்டவனும் ஒருவனே, ஆனால், கனாக்கண்டபொழுது நடக்கின்ற வைகளுக்கும், விழித்துக்கொண்டபின் நடக்கின்றவைகளுக்கும் முன்னுக்குப் பின் ஸம்மந்தமே இல்லை. கனவில் வேறேவிதமான நடவடிக்கைகள் இருக்கின்றன. விழித்துக்கொண்டபோது வேறேவிதமான நடவடிக்கைகள் இருக்கின்றன. அவஸ்தை வேறு பட்டபோது மனோபாவம் வேறு பட்டாலும் இரண்டிலும் ஒருவனே இருப்பதுபோல அந்தந்த இடங்களில் இருப்பவனும் நாமே என்று தோன்ற வேண்டும்.

ஒரு அவஸ்தையில் சாந்தகுணம் இருக்கிறது. மற்றோர் அவஸ்தையில் கோபம் இருக்கிறது. ஆனாலும் இரண்டு அவஸ்தையிலும் இருப்பவன் ஒருவனே என்பது அனுபவத்தில் தெரிகிறது. அவஸ்தா பேதங்களில் தேஹங்கூட வேறாக இருக்கிறது. மனஸும் வேறாக இருக்கின்றன. தேஹத்தையும் மனஸையும் அனுஸரிக்கிறபொழுது ஒன்றுக்கொன்று ஸம்பந்த மில்லாமல் வேறாகத்தோன்றுகிறது. நாம் செய்யக்கூடாதென்று நினைத்திருக்கிற காரியங்களையெல்லாம் கனவில் செய்வதாகக் காண்கிறோம். அவஸ்தா பேதங்களில் ஒன்றுக் கொன்று விரோதமான காரியங்களைச் செய்தாலும், வேறு வேறு விதமான தேஹமும் மனஸும் இருந்தாலும் எல்லா அவஸ்தைகளிலும் இருப்பவன் ஒருவனே என்பது தெரிகிறது. நமக்கு ஜன்னி பிறந்தால் அதற்கு முன் நாம் செய்தகாரியங்களுக்கு விரோதமாகச் செய்கிறோம். நாம் ஒரு புஸ்தகம் எழுதி இருந்தால் அதைக்கிழித்து விடுகிறோம். எழுதியவனும் கிழித்தவனும் ஒரே பேர்வழி, அதுபோல் மற்றொருவன் கிழித்தால் அவனும் நாம்தான். ஆனால் வெவ்வேறு தேஹத்தில் இருப்பதனால் இரண்டு காரியங்களும் ஒரேகாலத்தில் நடக்கின்றன. ஒருவன் நம்மை அடித்தால் வேறொருவன் நம்மை அடிப்பதாக நினைப்பதாக நினைப்பது தப்பு. நாமே நம்மை அடித்துக்கொள்ளுகிறோம் என்பதுதான் ஸத்தியம். ஜகத் முழுவதும் இந்தமாதிரிப் பார்க்கும் அனுபவம் வேண்டும். எல்லாம் ஒன்றானால் தானும் பிறரும் வேறு வேறாக இருக்க முடியாது. இந்த நிலையில் ஜகத்தும்கூட அறியப்படுகின்ற வஸ்துவன்று. அறிபவனாகிய நானே அது என்ற அனுபவம் வந்துவிடும். இப்பொழுது கை நாமாகத்தோன்றுகிறது, கால் நாமாகதோன்றுகிறது, உடம்பு நாமாகத்தோன்று



கிறது. அப்படிப்போல எல்லாம் நாமாகத் தோன்ற வேண்டும். அப்படிப்பட்ட ஞானம் ஒருவனுக்கு அனுபவத்தில் வந்தால் அவன் சண்டாளனாயிருந்தாலும் அவன்தான் பண்டிதன். ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் இதேமனிஷா பஞ்சகத்தில் சொன்ன வேறொரு சுலோகத்தைச் சொல்லுகிறேன்.

यत्सौख्याम्बुधिलेशलेशत इमे शक्रादयो निर्वृता
यश्चित्ते नितरां प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः ।
यस्मिन्नित्यसुखाम्बुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मवि-
द्यः कश्चित् स सुरेन्द्रवन्दितपदो नूनं मनीषा मम ॥

(மனீஷாபஞ்சகம் 5.)

வேதம் கீதை முதலியவைகள் இந்த சுலோகத்தில் உள்ளதாத்பரியத்தைத்தான் சொல்லுகின்றன. ஸ்ரீ ஆசார்யர்கள் இரண்டு காரியத்தைச் செய்தார்கள். விரட்டினதும் அவர்களே, பின்பு நமஸ்காரம் பண்ணினதும் அவர்களே.

"நான் முதலில் தங்களை அப்படி நினைக்க வில்லையே தாங்கள் அப்படிப்பட்ட பிரஹ்மவித்தானால் தாங்களே ஸ்ரீ ஆசார்யர்கள்" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார். ஸ்ரீ ஆசார்யர்களின் உண்மையான அபிப்பிராயத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இதை வைத்துக்கொண்டு, தீண்டாமையை ஸ்ரீ ஆசார்யர் ஒழித்துவிட்டார் என்று சிலர் யுக்தி பண்ணுகிறார்கள். நாமும் யுக்தி பண்ணலாம். தீண்டாமையை ஒழிக்கத்தான் தீண்டாமையை வைத்துக்கொண்டார் என்று நமக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட மனோபாவம் நமக்குவர வேண்டும். ஆனால் வரவில்லை. எவ்வளவு பெரிய சீர்திருத்தக்காரராக (Reformer) இருந்தாலும் துவேஷிகள் வந்தால்

அவர்களிடத்தில் கோபம்வருகிறது. தங்களை அநுஸரிக்கிறவர்களிடத்தில் மட்டும் பிரியமிருக்கிறது. தங்களைவிடப் பலசாலிகள் வந்தால் பயப்படுகிறுர்கள். ஒரு தேளைக் கண்டால் மிகவும் பயப்படுகிறுர்கள், எல்லாம் ஒன்று என்ற நிலை வரவேண்டும். எல்லாம் நாம் என்று தோன்றினல் மற்றவஸ்துக்களைக்கண்டு பயப்படுதல், கோபித்தல் முதலியவை இரா. நம்மைகண்டு நாமே பயப்படுகிறேமா? நம்மை நாமே கோபித்துக் கொள்ளுகிறேமா? இல்லையல்லவா? அதைப்போல எல்லாம் நாம் என்கிற உண்மையை அநுபவித்து விட்டால் பயம் முதலியவை போய் விடும். அந்த நிலை வருவதற்காகத்தான் நம்மையே நாம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்திரியங்களால் நமக்குச் சில ஆசைகள் உண்டாகின்றன. தானுக ஒரு ருசி ஏற்படுகிறது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப் படுத்தவேண்டும் பார்க்க வேண்டுமென்ற ஆசையிருக்கிற வரையில் பார்க்கிறவைகளில் சிலவற்றை நிறுத்திக்கொள், தின்னவேண்டு மென்ற ஆசையிருக்கிறவரையில் தின்பவைகளில் சிலவற்றை நிறுத்திக் கொள், தின்னவேண்டும் என்ற ஆசை அற்றுப்போன பொழுது எல்லாவற்றையம் தின்று தொட வேண்டுமென்ற ஆசை இருக்கிற வரையில் சிலவற்றைத் தொடாமல் நிறுத் திக்கொள். ஒன்றைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அற்றுப்போன பொழுது எல்லாவற்றையும் தொடு என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

சுகாசாரியர் ஜனனமான வுடன் பரிவ்ராட் ஆனர். உடனே வீட்டை விட்டு ஓடினர். புத்திர வாத்ஸல்யத்தினல் வியாஸரும் அவரைத் தொடர்ந்து கொண்டுபோனர். ஓர்



இடத்தில் ஸ்த்ரீகள் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார்கள். சுகரைக்கண்டு அவர்களுக்கு லஜ்ஜை தோன்றவில்லை. அடுத்தபடிவியாஸர் வந்தவுடன் லஜ்ஜை உண்டாயிற்று. வியாஸர் பிரஹ்மஸூத்திரம் பண்ணினவர். ஆனுலும் அவருக்கும் சுகருக்கும் வித்தியாஸம் இருந்தது. ஒன்று வேண்டும் என்று தோன்றுகிற வரைக்கும் இப்படிபட்ட வித்தியாஸங்கள் இருக்கத்தான் இருக்கும். அது இருக்கிற வரைக்கும் நமக்குச் சில சாஸ்திரீயமான கட்டுப்பாடுகள் வேண்டும்.

தின்பதில் சில பதார்த்தங்களை விலக்கி வைக்க வேண்டும். அப்படி விலக்கப்பட்ட ஸாமான் வந்தால் நடுங்கவேண்டும். அவ்வளவு பழக்கம் ஏற்படும்படி விலக்க வேண்டும். சுரணை என்பது அவசியமாக இருக்கவேண்டும். அது இப்பொழுது குறைந்து கொண்டுவருகிறது. எல்லாவற்றிலும் கட்டுப்பாடு (Restriction) இருக்கவேண்டும். இன்னஜாதியில்தான் கல்யாணம் செய்யவேண்டும் என்ற வியவஸ்தை இருக்கவெண்டும். மனதுபோனபடி நடக்காமல் ஆசையைப் பலவழிகளில் குறைத்துக் கொள்ளவேண்டும். ஆசையே இல்லாத நிலைமை வருவதற்காக இப்படி இருக்க வேண்டும். எதையும் தீண்டவேண்டும் என்ற ஆசை இல்லாத நிலைமை வந்தகாலத்தில் எல்லோரையும் தொடலாம்.

முதலில் ஸ்ரீ சங்கராசார்யர்கள் லோகரீதிக்காக எட்டிப் போ என்று சொன்னர். அவனுடைய க்ஷேமத்திற்காகவும் அப்படிச் சொன்னர். அவன் அபேத நிலையை அடைந்தவன் என்று தெரிந்து கொண்டதும் இப்படிச்சொன்னர். "தாங்கள் வாஸ்தவமாக இப்படிப்பட்ட நிலையை அடைந்தவர்களானல்," என்று அதற்காகத்தான் சொன்னர்கள்.

இந்த சுலோகத்தை வைத்துக்கொண்டு ஸ்ரீ ஆசார்யர்கள் தீண்டாமையை ஒழித்து விட்டதாக சிலர் அர்த்தம் செய்கிரார்கள். சுலோகம் தீண்டாமையை ஸ்தாபிப்பதாக நமக்குத் தோன்றுகிறது. எந்த ஸித்தாந்தத்தில் ஒருவருக்கு முன்பாக ஆசை இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி அவர்கள் சுலோகங்களுக்கு வேறு அர்த்தம் செய்து கொள்வார்கள். தீண்டாமை க்ஷேமகரமானது என்ற எண்ணம் நமக்கு இருப்பதால் அநாதியாக நாம் இப்படி அதற்கு அர்த்தம் செய்கிறோம். நம்முடைய அர்த்தத்திற்கு ஒரு சிபார்சு இருக்கிறது. இத்தனை நாள் நாம் இப்படித்தான் அர்த்தம் பண்ணிக்கொண்டு வருகிறோம், அனுஷ்டானம் செய்துகொண்டும் வருகிறோம். அவர்கள் புதிதாக அர்த்தம் செய்கிறார்கள். நாம் படித்த கீதையைத் தான் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். அந்தக் கீதையை நாம் தான் காப்பாற்றி வைத்துக்கொடுத்தோம். பரம்பரையாக ஒரு அர்த்தம் சொல்லிக்கொண்டு வருகிறோம். நம்முடைய கீதையை எடுத்துக்கொண்டு நம்முடை அனுஷ்டானம் தப்பு என்று சொல்லுகிறார்கள். மனஸில் எது ஸரி என்று தோன்றுகிறதோ அந்தக்கொள்கைக்கு அனுகூலமானவைகளையே பொறுக்கிக் கொள்ளுகிறார்கள். யஜ்ஞம் பண்ணக் கூடாது என்று ஒருவருக்கு அபிப்பிராயமிருந்தால் அந்த அபிப்பிராயத்துக்கு அனுகூலமான விஷயங்களைப் பல சாஸ்திரங்களிலும் பொறுக்கிக்கொண்டிருப்பார்கள். முன்னும் பின்னும் உள்ள ஸம்பந்தத்தைப் பார்ப்பதில்லை.

இப்படி ஞான நிலையில் ஸ்ரீ ஆசார்யர்களுடைய பெருமையைக் காட்டச் சண்டாள ரூபமாக வந்த விசுவேசுவரர்



கேட்ட கேள்விக்கும் தற்காலத்தில் நடக்கும் லௌகிகமான நடவடிக்கைகளுக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை. நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் எந்த இடத்திலும் சாஸ்திரப்படி தர்மானுஷ்டானம் செய்யவேண்டும் என்று தான் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய ஸ்ரீ ஆசாரியர்கள் அனுஷ்டானத்தை மாற்றவே இல்லை. கர்மானுஷ்டானத்தை எந்த ஸமயத்திலும் மாற்றியதில்லை. ஞானானுக்கிரஹத்தைச் செய்யத் தான் அவர் வந்தார்கள். சாஸ்திரங்களிலுள்ள தர்மாநுஷ்டானங்கள் அதற்கு ஸாதனமென்று உபதேசித்தார்கள்.

ஓவ்வொரு ஜீவனும் கடைத்தேறுவதற்காக படிப்படியாக அனுஷ்டானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஜீவன் உத்தமகதியை அடைவதற்காக அனுஷ்டானங்கள் இருக்கின்றனவே ஒழிய இஹலோக ஸுகத்திற்கு மாத்திரம் அவைகள் இருக்கின்றன என்று தோன்றவில்லை. அனுஷ்டானங்களில் சில கிரமம் உண்டு. எல்லோரும் எல்லாக் காரியமும் செய்வது ஸாத்தியமில்லை. ஒவ்வொரு காரியத்திற்கு ஒவ்வொருவர் இருக்கவேண்டும், அப்பொழுது தான் பொதுவாக எல்லோரும் ஸௌக்கியமாக இருக்க முடியும். ஒருவன் பூமியை வெட்டிக் கொத்திக் கிருஷி செய்யவேண்டும். ஒருவன் வியாபாரம் செய்யவேண்டும். ஒருவன் யுத்தம் செய்யவேண்டும். ஒருவன் படிக்கவேண்டும். இப்படிப்பல காரியங்களைப் பலபேர் செய்தால்தான் நல்லது. இவ்வளவு காரியங்களும் அவசியமாகத்தானிருக்கின்றன. இவைகளில் ஒன்று குறைந்தாலும் கஷ்டம். எல்லோரும் எல்லாவற்றையும் பண்ணமுடியாது. நம்முடைய குடும்பத்தில் உப்பு வேண்டும், கடுகு வேண்டும், வேஷ்டி வேண்டும், புஸ்தகம் வேண்டும், வீடு வேண்டும், கொல்லை வேண்டும்

இன்னும் எவ்வளவோ ஸாமான்கள் வேண்டும். நாமே எல்லாவற்றையும் கவனிக்கலாம், நாமே கடுகு பயிரிடலாம், நாமே உப்பெடுக்கலாம், நாமே நூல் நூற்று வேஷ்டி நெய்து கொள்ளலாம் என்று ஆரம்பித்தால் அது முடியாது. கதர் இந்தக் காலத்துக்கு ஸரிதான். ராஜ்யகாரியங்கள் சரியாகப் போனால் நாமே நூற்க வேண்டும் என்பது அவசியமாகத் தோன்றாது. துணிநெய்யும் ஜாதிக்காரன் எல்லோருக்காகவும் தான் நெய்கிறான். எல்லாம் ஒரு வீட்டில் பண்ணிக்கொள்ளு வதென்பது முடியாத கரரியம். ஆலையில் வெல்லம் எடுப் பவன் அந்தக் காரியத்தை எல்லாருக்காகவும் செய்கிறான், அதனால் அவனுக்கும் ஒரு பிரயோஜனம் இருக்கிறது. அப் படியே நாம் செய்கிற வேலையும் நமக்காகவும் பிறருக்காக வும் ஆகிறது. நமக்கு ஒரு பிரயோஜனம் இருப்பதினால் தான் குழந்தையிடம் நமக்கு ஒரு பிரியம் உண்டா கிறது. அது குழந்தைக்கும் பிரயோஜனமாகிறது. நமக்குத் தான் ஆனந்தமென்று நாம் நினைக்கிறோம். நாம் பிரியம் வைக்காவிட்டால் குழந்தை வளராது. பரஸ்பரம் உள்ள பிரயோஜனத்தை உத்தேசித்தே கர்மானுஷ்டானங்கள் இருக்கின்றன.

லோகத்தில் பலவிதமான காரியங்கள் இருக்கின்றன. அவைகளில் உத்தமமான பல காரியங்களைச் செய்பவனுக்குச் சில அதிகக் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். மாம்ஸத்தைத் தின்னாமல் ஸாத்விகமான ஆஹாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கவேண்டும். சாந்தமாக இருக்கவேண்டும். சில நாள் உபவாஸம் இருக்கவேண்டும். எல்லோரும் அப்படி இருக்க முடியுமா? எல்லோரும் உபவாஸமாக இருந்தால், அப்புறம் தொழிற் சாலையில் (Factory) வேலை நடக்குமா? மரம் வெட்ட முடியுமா? இந்தக் கொள்கை



வேண்டாமென்றால் உலகத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்படும். இவை அவசியம் இருக்க வேண்டும். உலகத்தில் எல்லோரும் மாம்ஸம் சாப்பிடாமல் உபவாஸ நியமமா யிருக்க வேண்டுமென்றால் உலகத்திற்கு கஷ்டமாகி விடும். பத்துப் பேர் கிளம்பிக் கோடி ஜனங்களைப் பரம்பரை யாக மாம்ஸம் தின்னாமல் இருக்கும்படி பிரயத்தனப்பட்டால் பண்ண முடியாது. அரசாங்கத்தாற்கூட அப்படிப் செய்ய முடியாது. மரக்கறிச் சங்கம் (Vegetarian Society) என்று ஏற்படுத்திக்கொண்டு பத்துப் பேர் மாம்ஸம் சாப் பிடாமல் இருக்கலாம். பத்து வருஷம் சாப்பிடாமல் இருப் பார்கள். அப்புறம் சாப்பிடத் தொடங்குவார்கள். இல்லா விட்டால் அவர்களுடைய பிள்ளைகள் சாப்பிடுவார்கள். அநாதிகாலமாக சில ஜாதிகள் நம்முடைய தேசத்தில் பரம் பரையாக மாம்ஸம் தின்னாமல் வந்துகொண்டிருக்கின்றன. இந்தமாதிரி அநுஷ்டானங்களும் உலகத்தில் இருக்க வேண்டியது அவசியம். இவைபோன்ற அனுஷ்டானங்கள் ஒவ்வொரு ஜாதி ஸமூஹத்தினிடையிலும் தனித் தனியாகச் சிறப்புக் கடமையாகப் பரம்பரையாய் வந்துகொண்டிருக் கின்றன. அப்படி யிருப்பவர்கள் எல்லாரோடும் கலந்து தொட்டுப் பழகாமலும் கலந்து உண்ணாமலும் கலந்து விவாஹம் செய்யாமலும் இருந்தால்தான் அந்த அந்த அனுஷ்டான நியமங்களைப் பரம்பரையாகச் சுத்தமாக ரக்ஷித்துக்கொண்டு வரமுடியும். சரீர ஸம்பந்தமான காரியங் கள் செய்பவர்களுக்குப் புத்தியை அதிகமாகப் பயிற்சி செய்ய வேண்டியதில்லை. புத்தியினால் காரியங்களைச் செய்கிற வர்களுக்குச் சரீர போஷணம் அவ்வளவு வேண்டியதில்லை. இவ்விரண்டு காரியங்களும் உலகத்திற்கு மிகவும் அவசிய மானவைகளே. இரண்டையும் கலந்தால் இரண்டும் போய்

இன்னும் எவ்வளவோ ஸாமான்கள் வேண்டும். நாமே எல்லாவற்றையும் கவனிக்கலாம், நாமே கடுகு பயிரிடலாம், நாமே உப்பெடுக்கலாம், நாமே நூல் நூற்று வேஷ்டி நெய்து கொள்ளலாம் என்று ஆரம்பித்தால் அது முடியாது. கதர் இந்தக் காலத்துக்கு ஸரிதான். ராஜ்யகாரியங்கள் சரியாகப் போனால் நாமே நூற்க வேண்டும் என்பது அவசியமாகத் தோன்றாது. துணிநெய்யும் ஜாதிக்காரன் எல்லோருக்காகவும் தான் நெய்கிறான். எல்லாம் ஒரு வீட்டில் பண்ணிக்கொள்ளுவதென்பது முடியாத காரியம். ஆலையில் வெல்லம் எடுப்பவன் அந்தக் காரியத்தை எல்லாருக்காகவும் செய்கிறான், அதனால் அவனுக்கும் ஒரு பிரயோஜனம் இருக்கிறது. அப்படியே நாம் செய்கிற வேலையும் நமக்காகவும் பிறருக்காகவும் ஆகிறது. நமக்கு ஒரு பிரயோஜனம் இருப்பதினால் தான் குழந்தையிடம் நமக்கு ஒரு பிரியம் உண்டாகிறது. அது குழந்தைக்கும் பிரயோஜனமாகிறது. நமக்குத் தான் ஆனந்தமென்று நாம் நினைக்கிறோம். நாம் பிரியம் வைக்காவிட்டால் குழந்தை வளராது. பரஸ்பரம் உள்ள பிரயோஜனத்தை உத்தேசித்தே கர்மானுஷ்டானங்கள் இருக்கின்றன.

லோகத்தில் பலவிதமான காரியங்கள் இருக்கின்றன. அவைகளில் உத்தமமான பல காரியங்களைச் செய்பவனுக்குச் சில அதிகக் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். மாம்ஸத்தைத் தின்னாமல் ஸாத்விகமான ஆஹாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கவேண்டும். சாந்தமாக இருக்கவேண்டும். சில நாள் உபவாஸம் இருக்கவேண்டும். எல்லோரும் அப்படி இருக்க முடியுமா? எல்லோரும் உபவாஸமாக இருந்தால், அப்புறம் தொழிற் சாலையில் (Factory) வேலை நடக்குமா? மரம் வெட்ட முடியுமா? இந்தக் கொள்கை



வேண்டாமென்றால் உலகத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்படும். இவை அவசியம் இருக்கவேண்டும். உலகத்தில் எல்லோரும் மாம்ஸம் சாப்பிடாமல் உபவாஸ நியமமாயிருக்க வேண்டுமென்றால் உலகத்திற்கு கஷ்டமாகிவிடும். பத்துப் பேர் கிளம்பிக் கோடி ஜனங்களைப் பரம்பரையாக மாம்ஸம் தின்னாமல் இருக்கும்படி பிரயத்தினப்பட்டால் பண்ண முடியாது. அரசாங்கத்தாற்கூட அப்படிச் செய்ய முடியாது. மரக்கறிச் சங்கம் (Vegetarian Society) என்று ஏற்படுத்திக்கொண்டு பத்துப் பேர் மாம்ஸம் சாப்பிடாமல் இருக்கலாம். பத்து வருஷம் சாப்பிடாமல் இருப்பார்கள். அப்புறம் சாப்பிடத் தொடங்குவார்கள். இல்லாவிட்டால் அவர்களுடைய பிள்ளைகள் சாப்பிடுவார்கள். அநாதிகாலமாக சில ஜாதிகள் நம்முடைய தேசத்தில் பரம்பரையாக மாம்ஸம் தின்னாமல் வந்துகொண்டிருக்கின்றன. இந்தமாதிரி அநுஷ்டானங்களும் உலகத்தில் இருக்க வேண்டியது அவசியம். இவைபோன்ற அனுஷ்டானங்கள் ஒவ்வொரு ஜாதி ஸமூஹத்தினிடையிலும் தனித் தனியாகச் சிறப்புக் கடமையாகப் பரம்பரையாய் வந்துகொண்டிருக்கின்றன. அப்படியிருப்பவர்கள் எல்லாரோடும் கலந்து தொட்டுப் பழகாமலும் கலந்து உண்ணாமலும் கலந்து விவாஹம் செய்யாமலும் இருந்தால்தான் அந்த அந்த அனுஷ்டான நியமங்களைப் பரம்பரையாகச் சுத்தமாக ரக்ஷித்துக்கொண்டு வரமுடியும். சரீர ஸம்பந்தமான காரியங்கள் செய்பவர்களுக்குப் புத்தியை அதிகமாகப் பயிற்சி செய்ய வேண்டியதில்லை. புத்தியினால் காரியங்களைச் செய்கிறவர்களுக்குச் சரீர போஷணம் அவ்வளவு வேண்டியதில்லை. இவ்விரண்டு காரியங்களும் உலகத்திற்கு மிகவும் அவசியமானவைகளே. இரண்டையும் கலந்தால் இரண்டும் போய்

விடும். இரண்டும் பரமேசுவரனுடைய கைங்கரியங்களே. இரண்டும் கலந்தால் பொதுக்கொள்கை போய்விடும். நாம் உத்தியோகம் பண்ணுகிறோம். உத்தியோக சாலை தனியாக இருக்கிறது. போஜன சாலை தனியாக இருக்கிறது. வித்தியாசாலை தனியாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒன்றாக பண்ணினால் எவ்வளவு கெடுதல் உண்டாகும்?

சில காரியங்கள் செய்கிறவர்களுக்குச் சில ஸௌகரியங்கள் அதிகமாக இருக்கவேண்டும். நாம் நம் வீட்டில் சிராத்தம் பண்ணினால் அன்று ஸ்நானம் பண்ணிச் சுத்தமாக இருக்க வேண்டும். நித்தியம் அப்படியே பண்ண வேண்டும். ஆனால் முடியவில்லை. ஸந்தர்ப்பம் இப்படி வந்துவிட்டது. ஜீவனத்தின்பொருட்டு ஏற்பட்ட விருத்திகளால் நம்முடைய கர்மாநுஷ்டானங்களைச் செய்ய முடிவதில்லை.

காரியங்கள் செய்வதில் ஒருவன் உயர்ந்தவன் ஒருவன் தாழ்ந்தவன் என்பது இல்லை. எல்லோரும் பொதுவான ஒரு காரியத்தை உத்தேசித்துக் கைங்கரியம் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் பிரித்துக்கொண்ட காரியத்துக்குத் தக்கபடி தனித் தனி ஆசார அநுஷ்டானங்கள் ஏற்படுகின்றன. நாம் புதியதாக ஓர் அநுஷ்டானத்தைச் செய்வதைக்காட்டிலும் பரம்பரைக் கிரமமாக வந்தவைகளை அநுஷ்டித்தால் அது நம்முடைய ஆத்ம பரிசுத்தியை ரக்ஷிக்க உபயோகிக்கப்படும். நம்முடைய ஆசார அநுஷ்டானங்கள் இன்ன காலத்தில் தான் ஏற்பட்டன என்று ஆரம்பம் தெரியாதவைகளாக இருக்கின்றன. மற்றவர்களுடையவைகளுக்குத் தெரிகின்றது. ஸ்ருஷ்டி காலம் முதற்கொண்டே பரம்பரையாக இவைகள் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றன. இவைகளை மாற்ற ஆரம்பித்தால் நம்முடைய பொதுக் கொள்கைக்கு நஷ்டம் வந்துவிடும். மனவில் தோன்றியதை யெல்லாம்



செய்ய ஆரம்பித்ததனால்தான் இந்த நிலை வந்துவிட்டது. ஒரு வேலியை உடைத்துவிட்டால் எல்லா வேலியும் காலக் கிரமத்தில் போய்விடும். ஒரு விஷயத்தை மீறும் துணிவு முதலில் ஏற்பட்டால் அதுவே பாக்கி எல்லாவற்றிற்கும் வந்துவிடும்.

ஒரு சீர்திருத்தக்காரர் (Reformer) ஒன்றை உடைத்தால் அடுத்தபடி வருகிறவர் அவர் அதை உடைத்தாரே இதையும் ஏன் நாம் உடைக்கக் கூடாது என்று பாக்கி உள்ளதையும் உடைக்க ஆரம்பிப்பார். நாலைந்து வேலிகள் இருக்கின்றனவே, ஒன்று உடைந்தால் என்ன? அது தானாக உடைந்துபோனால் என்ன பண்ணுவீர்கள்? என்று கேட்கிறார்கள். எல்லாம் உடைந்தால் தான் என்ன பண்ணப்போகிறோம்? நாம் அழப்போகிறதில்லை. உடைக்கக் கூடாதென்று நினைத்து உடையாமல் இருப்பதற்கு வேண்டிய பிரயத்தினம் செய்யவேண்டும். குழந்தைக்கு வியாதி வந்துவிடால் என்ன செய்கிறது. அதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. இனிமேல் வராமலும் அது நிவர்த்தியாகவும் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்யலாமா செய்யக் கூடாதா என்பதை மட்டும் முக்கியமாக ஆலோசிக்க வேண்டும்.

பலவிதமான பிளவுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். காரியம் நடக்க வர்ணாசிரம தர்மங்கள் இருக்கத் தான் வேண்டும். போஜ்யாபோஜ்யம், திருச்யாதிருச்யம் முதலிய நியதிகளும் இருக்கவேண்டும். இன்னதைத்தான் சாப்பிட வேண்டும், இதைத்தான் பார்க்க வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடுகள் எல்லோருக்கும் ஸுகத்தையே கொடுக்கும்.

நாய்களை யெல்லாம் உள்ளே விடுகிறீர்களே மனுஷன் வரக்கூடாதா என்று சிலர் கேட்கிறார்கள். இதைப்போலப்

பல யுக்திகளைப் பலபேர் சொல்லுகிறார்கள். ஒருவன் கோவணங்கட்டிக்கொண்டு எண்ணெய் தேய்த்துக்கொள்ள உட்கார்ந்து கொள்ளுகிறான். யாராவது பெரிய மனுஷர்கள் வந்தால் உடனே வேஷ்டியைக் கட்டிக்கொள்ளுகிறான். ஒரு நாய் வருகிறது. அதைக் கண்டால் வேஷ்டியை கட்டிக்கொள்ளுவதில்லை. நாயைக் கண்டால் கட்டிக்கொள்ளவில்லையே, அவரைக் கண்டால் ஏன் கட்டிக்கொள்ளுகிறாய்? என்று கேட்கலாமா? இம்மாதிரி யுக்திகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.

ஒவ்வொருவருக்கும் விதிநிஷேதங்கள் தனித்தனியாக இருக்கின்றன. அவைகளால் ஆத்ம சிரேயஸ் உண்டாகிறது. பொது சிரேயஸுக்கும் அவை காரணமாக இருக்கின்றன. நமக்கு அர்த்தம் தெரியாமல் இருந்தாலும் ஆசாரத்தைவிடாமல் இருக்கப் பிரயத்தினம் பண்ணி வந்தால் பிற்காலத்தில் நமக்கு அர்த்தம் தெரியுங்கால் நினைவு மூட்ட உபயோகப்படும். இந்தக் காலத்தில் விருத்தி கெட்டுப்போனாலும், பிறகு ஒரு நல்ல காலம் வரும் அப்பொழுது இவைகள் அபிவிருத்தியாகும். எல்லாவற்றையும் விட்டுவிட்டால் மறந்துபோய்விடும். பத்துப் பேராவது ஆசார அநுஷ்டானங்களுடன் இருக்கட்டுமே. எல்லோரும் ஆசாரத்தைக் கைக்கொள்ளப் பிரயத்தினப்பட்டால்தான் பத்துப் பேராவது பூர்ணமாய்ச் சுத்தமாய் இருக்க முடியும். ஒருவன் தன் அநுஷ்டானத்தைத் தானே ரக்ஷித்துக் கொள்ளுவதோடு மற்றவர்களுடைய தர்மத்தையும் ரக்ஷிக்கப்பிரயத்தனம் செய்யவேண்டும். எல்லோரும் தங்கள் தங்களுடைய தர்மத்தை ரக்ஷித்துக்கொள்ளுவதோடு மற்றவர்களும் தங்கள் கடமைகளை ரக்ஷித்துக்கொள்ளுவதில் உதவி செய்யவேண்டும்.



மற்றவர்கள் நம்முடைய தேசத்தில் அடிமைத்தனம் இருக்கிறது என்கிறார்கள். அடிமை வியாபாரம் (Slave trade) போல வர்ணாசிரம தர்மத்தை எண்ணுகிறார்கள். அது தப்பு. அந்த வியாபாரம் லௌகிகத்துக்காக மற்றத் தேசங்களில் இருக்கிறது. இங்கே உள்ள தர்மம் ஆத்மார்த்தமாக இருக்கிறது. நமது தேசத்தில் மற்றவர்கள் தப்புச் செய்தால் அதற்காக நாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிறோம். ஒரு பறையன் இந்த நியமம் தப்பி பக்கத்தில் வந்தால் நாம் ஸ்நானம் செய்கிறோம். இதர தேசங்களில் லௌகிக ஸுகத்திற்காக நியமம் ஏற்பட்டிருப்பதனால் சிக்ஷை அவனுக்கே விதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தேசத்தில் இப்பொழுது பறையர்கள் தாம் அதிக ஆஸ்திகர்களாக இருக்கிறார்கள். பிராம்மணர்களில்தான் தங்களுக்கேற்பட்ட நடைகளை விட்டுப் புது நடைக்காரர்கள் அதிகப் பேர் இருக்கிறார்கள். பறையர்களில் அவ்வளவு இல்லை. கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடைய பேரை வைத்துக்கொண்டு பிரசாரம் செய்கிறார்கள். நம்முடைய தர்மத்தை எடுத்துச் சொன்னால் பிராம்மணனைவிட பறையர்கள்தாம் அதிகமாகக் கேட்பார்கள்.

அரசாங்கத்தார் நம்மை அடக்கிவைப்பதற்குக் காரணம் நாம் பறையர்களை அடிமைகளாக வைத்திருப்பதே என்று சிலர் யுக்தி பண்ணுகிறார்கள். அதைப் போன்ற யுக்திகளில் ஒன்றும் நன்றாக இல்லை. அரசாங்கத்தார் அவர்களைத் தனியாகப் பிரிக்கிறார்களே என்று சொல்லிக்கொண்டு இன்னும் அதர்மமான காரியங்களைச் செய்ய சீர்திருத்தக்காரர்கள் ஆரம்பிக்கிறார்கள். இவ்வளவு காலமாக வந்த அநாதியான கட்டைக் குலைக்கப்பார்க்கிறார்கள். வர்ணாசிரமதர்மங்கள் வேறு வேறாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பலம்

மாத்திரம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அநுஷ்டானக் கிரமங்கள் இருந்தால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொண்டு இருக்கலாம். எல்லாம் ஒன்றானால் மிருக வலிமைதான் அதிகமாகும். ஆத்ம சிரேயஸ் குறையும். அது எல்லாவற்றையும்விட ஒரு பெரிய நஷ்டம். ஆசாரம் நம்முடைய சிரேயஸுக்குக் காரணம். நாம் ஆசார அநுஷ்டானம் செய்வது மற்றவர்களுடைய சிரேயஸுக்கும் காரணம். ஆத்மஞ்ஞானியானால் ஆசார அநுஷ்டானங்களை விட்டுவிடலாம். ஞான நிலையில் கட்டுப்பாடு இல்லையென்று மனுஸ்மிருதியே சொல்லுகிறது. இது ஞான காண்டம். அதே மனுஸ்மிருதிதான் கர்ம காண்டத்தில் அநுஷ்டானங்களின் அவசியத்தைச் சொல்லுகிறது நமக்கு அநுகூலமானவைகளை வைத்துக்கொண்டு மற்றவைகளை யெல்லாம், யாரோ பிற்காலத்தில் எழுதிச் சேர்த்து விட்டார்கள் என்று சொல்லலாமா! மனீஷா பஞ்சகத்தால் தீண்டாமை போயிற்றென்று சொல்லுவது தவறு. நம்மை மீறி ஓர் அதர்மம் உலகில் ஏற்பட்டு வந்துவிட்டால், அதைத் தடுக்க முடியாமலும் போய்விட்டால், அந்தக் காரணத்தைக்கொண்டு அதுதான் நியாயம், அதைத்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுவது தப்பு. நாம் நம்முடைய பரம்பரை தர்மத்தை நம்மால் கூடியவரையில் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மனதிலாவது தீர்மானமாக அதர்மம் அதர்மமே, தர்மம் தர்மமே என்று வைத்துக் கொள்ளவேண்டும். அந்தத் தீர்மானம்மாத்திரமிருந்தால் ஒருநாள் விடிவுகாலம் வரும்.

இப்பொழுதுள்ள சீர்திருத்தக்காரர்கள் நீங்கள் கலப்புக்கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டாம். சேர்ந்து போஜனம் பண்ணவேண்டாம். தீண்டாமையைமட்டும் விட்டு



விடுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லுகிறவர் ஸொந்த அநுஷ்டானத்தில் கல்யாணத்திலும் சாப்பாட்டிலும் பிரத்தியக்ஷமாக மீறி நடப்பவர்களாகவே காணப்படுகிறார்கள். அதனால் அநுஷ்டானம் பண்ணாமல் வாயால்மட்டும் 'போஜனம் வேண்டாம், கல்யாணம் வேண்டாம்' என்று சொல்லுவது கேட்பவர்களுக்கு மனதில் படாது. அடுத்தபடி அதுவும் பரவாயில்லை என்று யாராவது சொன்னால் அதையும் ஸரியென்று சொல்லுவார்கள்.

எவ்வளவோ பணத்தைச் செலவழித்து ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள். சாஸ்திரத்தை நம்பி அப்படிக் கட்டியிருக்கிறார்கள். மண்டபங்களைக் கட்டி, மூர்த்திகளை ப்பிரதிஷ்டை செய்து, கடஸ்தாபனம் பண்ணிக் கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். ஆகம சாஸ்திரங்களில் எந்த விதி சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே நடந்தேவரும் என்ற நம்பிக்கையுடன் அந்தப் பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். அந்தச் சாஸ்திரங்களில் நம்பிக்கை இல்லாதவர்கள் யாருக்கு அவைகளில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களுடைய அநுஷ்டானங்களில் புகுந்து தொந்திரவு கொடுப்பது நியாயமில்லை. கோயில்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபிக்கும் இடங்களல்ல. பக்தி பண்ண ஏற்பட்ட இடங்கள். இப்பொழுதுள்ள கிளர்ச்சிக்காரர்கள் தரிசனத்துக்காகக் கோயிலுக்குப் போகும் சிரத்தையுடையவர்கள் அல்ல. பறையர்களைக் கோயில்களுக்குள் விடும் பாத்யஸ்தாபனத்திற்காகவே இப்பொழுது வருகிறார்கள். ஸகலவர்ணங்களுக்கும் கோயில் பொதுவானதுதான். அதனால் எல்லோரும் எல்லா இடத்திலும் பிரவேசிப்பதென்பது அர்த்தமன்று. கோபுரம் விமானம், மண்டப விசேஷங்கள் முதலியவை ஆலயங்களி

லிருக்கின்றன. ஜாதிபேதங்களில் ஒவ்வொருவர்க்கு ஏற்பட்ட தனித்தனியான ஸ்தானங்களிருக்கின்றன. பிரதிலோமஜாதிகள் கோபுர தரிசனத்தைக்கொண்டு க்ஷேமமடையவேண்டும். ரதோத்ஸவமானது எல்லா ஜாதிகட்கும் சிரேயஸ் உண்டாவதற்காக ஏற்பட்டது. பக்தியில்லாதவர்கள்தாம் சாஸ்திரத்தை மீறிய முறையில் ஆலயப்பிரவேசத்திற்கு முயற்சி செய்கிறார்கள். உண்மையான பக்தியுள்ளவர்கள் சாஸ்திரத்திலும் பக்தியுடையவர்களாயிருப்பார்கள். உள்ளே விடமாட்டேனென்று சொல்லுகிறார்களே யென்று போக முயற்சிப்பவர்கள் பக்திமான்களல்லர். கோபுரம் ஸ்தூலலிங்கம். அதனால் கோபுர சிகரங்களுக்குக் கும்பாபிஷேகம் முதலியவை செய்கிறார்கள்.

உண்மையான அன்புடையவர்கள் எங்கே இருந்தும் தரிசனம் பண்ணிக்கொள்ளுவார்கள். அவர்களுக்குச் சாஸ்திரம் பிரித்துக் கொடுத்தபடி அநுஸரித்து வருவார்கள். நம்முடைய வீடு இருக்கிறது. அதிலே பிரஸவ அறை ஒன்று இருக்கிறது. அதற்குள் நாம் போகக்கூடாது. எனக்கும் அந்த அறை பாத்யமில்லையோ? என்று சொல்லி உள்ளே போகலாமா? அது அன்பாகுமா?

சாஸ்திரத்தை மாற்றுவதென்பது தப்பு. சீர்திருத்தம் சீர்திருத்தம் (Reform) என்று சொல்லுகிறவர்களெல்லாம் உண்மையான சீர்திருத்தம் பண்ணாமல் உருக் குலைக்கிறார்கள் (Deform). உண்மையான சீர்திருத்தம் சாஸ்திர விரோதமான காரியங்கள் நடக்காமல் நிறுத்தவேண்டும். அநாசாரமுள்ளவர்களைக் கோயிலுக்குள் போகாமல் தடுக்கவேண்டும். சாஸ்திரத்தில் நம்பிக்கை யில்லாதவர்களுக்குக் கோயிலில் என்ன காரியம்? முதலில் அவர்களை விடாமல் போனால் பறையன் தானே நின்றுகொள்ளுவான். நாம் ஸத்திய



மாகவும் சாஸ்திரத்தின் படியும் நடக்கிறோமென்று தெரிந்தால் அநாசாரப் பிரசங்கிகளுக்குத்தானாகப் பயம் ஏற்படும். நாம் இப்படிக் கடுமையாக ஆரம்பித்தால்தான் இந்த முயற்சிகளெல்லாம் நின்று போகும்.

ஆகவே ஸ்ரீ சங்கராசாரியரவர்கள் மநீஷாபஞ்சகத்தினால் கர்மானுஷ்டானங்களுக்கு விரோதமான கருத்தைச் சொன்னார் என்று நினைப்பது தப்பு. ஞான அநுபவம் உடையவர்களுக்கு அப்பேர்ப்பட்ட நிலைவரும். ஸ்ரீ ஆசார்யர்களுக்கு ஞானம் அநுபவத்தில் வந்திருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக விசுவேசுவரர் சண்டாளனாக வந்தார். ஆத்மானுபவம் உண்டு என்பதை லோகமெல்லாம் அறிந்துகொள்ளும்படி காட்டினார்.

அப்புறம் வியாஸர் கேட்டுக்கொண்டபடி ஸ்ரீ சங்கராசாரியரவர்கள் திக்விஜயம் பண்ணினார். மூன்றுதரம் பரத கண்டத்தைப் பிரதக்ஷிணம் செய்தார். அப்படிப் பண்ணுங் காலத்திலேதான் முன்பு சொன்ன காபாலிகன் வந்தான்.

# XI.

## மண்டன மிச்ரஜயம்

[8—11—1932.]

**ஸ்ரீ** சங்கராசார்ய ஸ்வாமிகள் காசி க்ஷேத்திரத்திலிருக்கும்பொழுது பாஷ்யம் பண்ணினார். பிறகு வியாஸர் விருத்தராக வந்து, வாதம் செய்து பதினாறு வயஸ் அதிகம் கொடுத்துவிட்டுத் திக்விஜயம் பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு போனார். காசியிலிருக்கும்பொழுதுதான் விசுவேசுவரர் சண்டாளனாகவந்து பரீக்ஷித்ததும் ஸ்ரீ ஆசார்யர்ரவர்கள் மநீஷாபஞ்சகம் பண்ணினதும் நடந்தன. அதற்கு முன்பே பத்மபாதாசாரியர் அந்தப்பெயரை அடைந்தார். இந்த நான்கும் காசியிலிருக்கும்பொழுது நடந்த முக்கியமான காரியங்கள்.

வியாஸர் பிரார்த்தனைப் பிரகாரம் திக்விஜயம் செய்ய கிழக்கு நோக்கிப் புறப்பட்டார். மத்தியில் பிரயாகையில் தான் குமாரிலபட்டர் துஷாக்கினிப்பிரவேசம் பண்ணினது தெரிந்தது. அவரிடம் போய்க் கர்மமார்க்கத்தையே நம்பியிருக்கக்கூடாதென்று சொல்லி அவரை மாற்றினார். அவர் 'லோகமெல்லாம் இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் இப்பொழுது இந்த விஷயத்தை லோகத்திற்குச் சொல்ல அசக்தனாயிருக்கிறேன். மண்டனமிச்ரரிடம் போய் ஞானமார்க்கத்தை ஸ்தாபித்தால் உலகம் அறிந்து கொள்ளும்' என்று அவர் பிரார்த்தித்தார்.



அவருடையவார்த்தைக்கிணங்கி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் மண்டனமிச்ரரிடம் வந்தார்கள்.

மண்டனமிச்ரர் மாஹிஷ்மதீ என்னும் நகரத்தில் இருந்தார். அவருடைய பத்தினியின் பெயர் ஸரஸவாணி என்பது. அவர்கள் இருவரும் பிரஹ்மா, ஸரஸ்வதியின் அவதாரம். மண்டனமிச்ரர், குமாரிலபட்டர், ஜைமினி என்னும் மூன்றுபேரும் ஒரே அபிப்பிராயமுடையவர்கள். வேதத்திலுள்ள கர்மகாண்டத்தையே முக்கிய மார்க்கமாகக் கொண்டு ஏற்பட்ட மதம் பூர்வமீமாம்ஸக மதம். அவர்கள் அதைக் கைக்கொண்டவர்கள்.

அந்த மதத்துக்கொள்கை என்னவென்று சொல்லுகிறேன். ஸ்வாமி இருக்கிறாரா இல்லையா என்ற கவலை வேண்டாம். இருந்தால் இருக்கட்டும், இல்லாவிட்டால் போகட்டும். வேதத்தில் சொன்னபடி கர்மானுஷ்டானங்கள் செய்துவரவேண்டும். அந்தக்கர்மாவே பலன் தரும். காரியம் பண்ணினால் பலன் இல்லையா? நடுவில் ஸ்வாமியென்றொருவர் எதற்கு? காரியமே பலனைத் தருகின்றது. கிருஷி பண்ணுகிறோம். அதனால் நெல் விளைகிறது. வேதம் நமக்குத் தெரியாததைச் சொல்லுகிறது. வேதப்படி காரியம் பண்ணினால் பலனுண்டு. காரியத்துக்கு ஸ்வாமி வேண்டுமென்கிற அவசியமில்லை. ஜகத்தை ஸ்வாமி உண்டுபண்ணியிருக்கவேண்டுமே யென்றால், ஸ்வாமி உண்டு பண்ணுவானேன்? இப்பொழுது இருப்பது போலவே ஜகத் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. திடீரென்று உண்டானதாக ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும்?

न कदाचित् अनीदृशं जगत्

இந்த ஜகத் எப்பொழுதும் இப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. இப்படி இல்லாமல் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்படியே யிருந்தால் ஸ்ருஷ்டி எதற்கு? பிரளயம் எதற்கு? பிராணிகளெல்லாம் உண்டாகிக்கொண்டேயிருக்கின்றன. பிறகு போய்க்கொண்டே யிருக்கின்றன. அப்படியானால் ஸ்வாமி எதற்கு! காரியம் பண்ணு அது பலன் கொடுக்கும். என்ஜினைச் சுற்றினால் மோட்டார் ஓடுகிறது. புத்திக்கு அகப்படாததை வேதம் சொல்லுகிறது. அதன்படி கர்மா பண்ணினால் பலன் உண்டாகிறது. அநாதியாக ஒரு சப்தம் இருக்கிறது. அதுதான் வேதம். புத்தியிருக்கிறது போல வேதமும் இருக்கிறது. அது உண்டாவானேன்? காலம் எப்பொழுது உண்டாயிற்று? ஆகாசம் எப்பொழுதும் இருக்கிறதா? இல்லையா? அதுபோல் வேதமும் இருக்கிறது. வேதம் எதற்கு இருக்கிறதென்றால், நம்முடைய புத்திக்கு எட்டாததை வேதம் சொல்ல இருக்கிறது.

கெட்டது பண்ணினால் கெட்ட பலனும் நல்லது பண்ணினால் நல்ல பலனும் உண்டாகின்றன. காரியம் பலன் கொடுத்துக்கொண்டே யிருக்கிறது. அந்தப் பலனை அநுபவித்துக்கொண்டு சுற்றிக்கொண்டே யிருக்கிறோம். இதற்கு ஸ்வாமி வேண்டாம். வேலை செய்யாமல் நாம் இருக்கக் கூடாது. அப்படி யிருப்பது பாபம். அதனால் நமக்கு நரகம் கிடைக்கும்.

கர்மாவை நிறுத்தினால் பாபம் உண்டாகும். நித்தியமென்றும், நைமித்திகமென்றும், காம்யமென்றும் கர்மாக்கள் மூன்றுவித மிருக்கின்றன. நித்திய கர்மாக்கள் எப்பொழுதும் பண்ணவேண்டியவை. ஒரு நிமித்தத்தில் பண்ணுவது நைமித்திகம். கிரஹணம் வருகிறது. அப்பொழுது



ஸ்நானம் தர்ப்பணம் முதலியவை செய்யவேண்டும். யாராவது பெரியவர் நம் வீட்டிற்கு வந்தால், அவருக்கு உபசாரம் முதலியவை செய்யவேண்டும். இவைகளெல்லாம் நைமித்திகம். ஸந்தர்ப்பம் நேர்ந்தால் பண்ணுவது நைமித்திகம். நித்திய நைமித்திகங்களை எல்லோரும் அவசியம் பண்ணவேண்டும். காம்யமென்பது ஒரு பிரயோஜனத்தை இச்சித்துப் பண்ணுவது. மழை வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. வருண ஜபம் பண்ணுகிறோம். பிள்ளை வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. புத்ரகாமேஷ்டி செய்றோம். ஆயுளை உத்தேசித்து ஆயுஷ்யஹோமம் பண்ணுகிறோம். இவை காம்யம். இவைகளை ஒருவன் பண்ண வேண்டுமென்ற அவசியம் இல்லை. இது அவர்கள் மதஸ்வரூபம். அவர்கள் சொல்லும் யுக்திகள் வேறு இருக்கின்றன.

நித்ய கர்மாவுக்கு லக்ஷணம் சொல்லியிருக்கிறார்கள். நித்தியகர்மாக்கள்

अकरणे प्रत्यवायकजनकम्, करणेऽभ्युदयम्

என்று இரண்டுவகை. செய்யாவிட்டால், உபத்திரவத்தைத் தருவதொன்று. செய்தால் ஸந்தோஷத்தைத் தருவதொன்று. பிரத்யவாயம் என்றால் உபத்திரவம். அப்யுதயம் என்பது ஸந்தோஷத்திற்குக் காரணமான பலன். நல்ல கிருஹம், க்ஷேத்திரம், புத்திரர், கீர்த்தி, ஞானம் இவைகளெல்லாம் அப்யுதயத்தில் சேர்ந்தவை. வேதாந்தத்தில் 'நி:ச்ரேயஸம்' என்று ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த ஸந்தோஷம் பெரிய ஸந்தோஷமோ அதுவே அது. சின்ன ஸந்தோஷத்துக்குக் காரணமானது அப்யுதயம்.

வேலை என்றால் அதற்கு க்கணக்குண்டு. தகுந்த பலனும் உண்டு. இது கர்மமார்க்கம். செய்தால் நல்ல ஸந்தோஷம்

உண்டாவது ஒரு வகை. செய்யாமற் போனால் உபத்திரவம் உண்டாவது ஒரு வகை. நித்யகர்மாவைச் செய்யாவிட்டால் உபத்திரவம் உண்டாகும். ஸந்தியாவந்தனம் பண்ணு என்று இப்பொழுது சொன்னால் அந்தப் பலன் எனக்கு வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். எதற்காக ஸந்தியாவந்தனம் பண்ணவேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு மீமாம்ஸையால் ஸுலபமாகப் பதில் சொல்லிவிடலாம். ஸந்தியாவந்தனம் பண்ணாமற் போனால் உபத்திரவம் உண்டாகும். பண்ணினால் பலன் என்பது நியாயம். பண்ணாவிட்டால் உபத்திரவம் என்பது என்ன நியாயம்? ஸந்தியாவந்தனம் பண்ணாவிட்டால் தோஷம் என்கிறார்கள். பண்ணினால் ஐசுவரியம் வருமென்று சொல்லமாட்டார்கள். செய்யாவிட்டால் உபத்திரவம் என்னும் வகையிற் சேர்ந்தது அது. கோயிலில் அர்ச்சனை, அபிஷேகம், பிராம்மணபோஜனம் முதலியவை பண்ணினால் விசேஷம் உண்டு என்று சொல்லுகிறார்கள். அவை கரணே அப்யுதயம் என்னும் வகையைச் சேர்ந்தவை.

அகரணே ப்ரத்யவாயம் என்பது நியாயமா? லோகத்தில் அதற்கு திருஷ்டாந்தம் உண்டா? உண்டு. நாம் பிச்சைக்காரனுக்கு அரிசி போடுகிறோம். அது போதாமல் இருந்தால் கால் ரூபாய் கொடுக்கிறோம். ஏதாவது ஸொஸைட்டிக்குக் கேட்டால் நூறு அல்லது இருநூறு ரூபாய் போடுகிறோம். பரோபகார புண்ணியம், செய்ய வேண்டிய கடமை என்று பல உபகாரங்களைச் செய்கிறோம். ஏழைகளுக்கு உபகாரம் பண்ணினால் புண்ணியம் உண்டென்று பண்ணுகிறோம். சில ஸமயங்களில் உபகாரம் பண்ண வேண்டாமென்று தோன்றுகிறது. அப்பொழுது புண்



ணியம் வேண்டாமென்று நினைக்கிறோம். இப்பொழுது முடியாது என்று சொல்லிவிடுகிறோம். இவைகளைப் போன்றவைகளைச் செய்யாவிட்டால் தோஷம் ஒன்றும் இல்லை.

ஒருவரிடம் நாம் ரூ. 500 கைமாற்று வாங்கி இருந்தோம். அவனிடம் உனக்கு ரூ. 500 கொடுக்கிற புண்ணியம் எனக்கு வேண்டாம் என்றால் அவன் விட்டுவிடுவானா? நான் புண்ணியத்திற்கு வரவில்லை. கொடுத்ததைக் கேட்கத்தான் வந்தேன் என்று சொல்லுவான். அது அகரணே ப்ரத்யவாயஜனகத்தைச் சேர்ந்தது. அதைப்போலத்தான் ஸந்தியாவந்தனமும். தமிழில் ஸந்தியாவந்தனத்தைக் காலைக்கடன் மாலைக்கடன் என்பார்கள். அந்தப் பெயர்கள் மிகவும் அழகாய் இருக்கின்றன. இப்படி நித்யகர்மா இரண்டு வகைப்படும்.

காம்ய கர்மாபண்ணினால் சிரேயஸ் உண்டாகும். சிரேயஸை உத்தேசித்துப் பண்ணுபவை காம்யகர்மாக்கள்.

நித்தியகர்மாவைக் கடன் என்று சொன்னேன். கடன் வாங்கின திருஷ்டாந்தம் சொன்னால் போதாது; யார் எங்கே கடன் வாங்கினார்கள்? ஸந்தியாவந்தனம் யாரிடம் கடன் வாங்கப்பட்டது என்று சிலர் கேட்கலாம். செய்தால் உண்டாகிற பலன் வேண்டாம் என்ற தர்க்கத்திற்கு முதலில் பதில் சொல்லிவிட்டேன். இப்பொழுது அது எப்படிக் கடனாகும் என்பதை யோசிக்கலாம்.

வேதத்தில் "ஜாயமானோ

जायमानो ह वै ब्राह्मणस्त्रिभिर्ऋणवा जायते । ब्रह्मचर्येण ऋषिभ्यः, यज्ञेन देवेभ्यः, प्रजया पितृभ्यः ।

[தைத்திரீய ஸம்ஹிதை, 6-3]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மணன் மூன்று கடனோடு பிறந்திருக்கிறான். ரிஷிருணம், தேவருணம்,

பிதிர்ருணம் என்று மூன்று கடன்கள் உண்டு என வேதம் சொல்லுகின்றது. கடன் வாங்கினது நமக்குத் தெரியாது. தெரியாததை வேதம் சொல்லியிருக்கிறது. அதைக் கொண்டு நாம் யுக்தி பண்ணிப் பார்க்கவேண்டும். நம்பிக்கையுள்ளவர்களுக்கு அதை அனுஸரித்த யுக்தி தோன்றும். இல்லாதவர்களுக்கு விபரீத யுக்தி தோன்றும்.

இரண்டு ஸஹோதரர்கள் இருக்கிறார்கள். இதில் ஒருவன் மாஜிஸ்திரேட் உத்தியோகம் பார்க்கிறான். மற்றொருவர் வைதிகர். முதல்வனுக்குக் கச்சேரி போகின்ற கடன் ஏற்பட்டிருக்கிறது. அவன் கச்சேரிக்குப் போகாமல் "இரண்டாமவன் போகவில்லையே; நான்மட்டும் எதற்காகப் போகவேண்டும்" என்றால் 'நீதான் மனுப்போட்டாய். வேலை செய்யும்படி உத்திரவு போட்டோம். நீ வருவதாக ஒப்புக் கொண்டாய். ஆகையால் நீதான் வரவேண்டும்', என்று அதிகாரிகள் சொல்லுவார்கள். அதைப்போல நல்லகதிவர வேண்டுமென்று நாம் மனுப் போட்டிருக்கிறோம். அதற்கேற்றபடி கர்மாக்களைச் செய்யவேண்டும் என்று உத்திரவாய் இருக்கிறது. உத்திரவு பண்ணினவர் ஒருவர் இருக்கிறார். இது வேதாந்தியின் மதம். மனுப்போட்ட கர்மாவே நமக்கு பலனைத் தருகிறது என்பது மீமாம்ஸகர்கள் மதம். இப்படித் தொடர்ந்து தானே நடக்கும் (Automatic) என்பது இவர்களுடைய மதம்.

கர்மாவுக்கேற்ற ஜன்மம் நமக்கு வந்திருக்கிறது. இதற்கேற்ற கர்மாக்களை நாம் செய்யவேண்டும். செய்யாவிட்டால் உபத்திரவம் உண்டாகும். எங்கெங்கே பிறந்தோமோ அதற்கேற்பக் கர்மாக்களை அதிகமாகச் செய்ய வேண்டும். லோகத்தில் ஆசார அநுஷ்டானங்கள் முறையாக இருக்கவேண்டும். வேதார்த்தங்களைத் தெரிந்து



கொண்டு, மற்றவர்கள் துக்கப்பட்டால் சாந்தப்படுத்திக் கொண்டு இருக்கவேண்டியது பிராமணன் கடமை. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட கர்மாக்களைச் செய்யவேண்டும். வாணியன் எண்ணெய் ஆட்டித் தர வேண்டும். சக்கிலியன் செருப்புத் தைத்துத் தரவேண்டும். பிராமணன் கண்டவற்றைத் தின்னாமல், தேஹம், மனஸ், ஆத்மா என்பவைகளில் பரிசுத்தனாக இருந்து கொண்டு பரமாத்மத்தியானம் பண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். மற்றவர்களையும் தியானம் பண்ணிக்கொண்டு இருக்கும்படி சொல்லவேண்டும். அதற்குத்தான் மானியம் ஏற்பட்டிருந்தது. பழைய காலத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவனவனுடைய தொழிலைச் செய்வதற்காக மானியம் கொடுத்திருந்தார்கள். அந்தத் தொழிலை நிறுத்திவிட்டால் லௌகிகத்திலும் உபத்திரவம் உண்டாகும். அவனுடைய மானியத்தைப் பிடுங்கி மற்றொருவனுக்குக் கொடுத்து விடுவார்கள். இந்தக் காலத்தில் அந்த நிலத்துக்கு வரி போட்டு விடுவார்கள். ஆகவே கர்மாக்களைப் பண்ணாதவர்களுக்குப் பாவம் உண்டாவதோடு லௌகிக ஸௌகர்யங்களும் இல்லாமற்போய்விடும். அந்தக் கர்மாவைச் செய்வதனால்தான் மரியாதை உண்டாயிற்று. எதற்காக, எப்படி நம்முடைய ஜன்மம் ஏற்பட்டதோ அதை அப்படியே பண்ணாமல் இருப்பதனால்தான் நம்முடைய தேசத்தில் இந்தமாதிரி கஷ்டமான நிலைமை ஏற்பட்டது. அந்த அந்தத் தொழிலாளி அந்த அந்தத் தொழிலைச் செய்து கொண்டு வந்தால், அவனால் மற்றவர்களுக்கும் பிரயோஜனம் உண்டு, அவனுக்கும் லௌகிக ஸௌகர்யங்கள் ஏற்படும். அந்த நிலைமாறி விட்டதினால்தான் இப்பொழுது தரித்திரநிலை வந்து விட்டது. அகரணே ப்ரத்யவாயஜனகமாகிய நித்யகர்

மாக்கள் ஸந்தியாவந்தனம் முதலியவை. நித்யகர்மாவைப் பண்ணாவிட்டால் பாபம் உண்டாகிறது. பண்ணினால், பாபம் இல்லாமையாகிய ஒரு லாபம் உண்டாகிறது. அதற்குமேல் க்ஷேமம் உண்டாகிறது. கடனைத் தவணைப் பிரகாரம் கொடுத்தால் கடன் போய்விடுகிறதாகிய ஒரு லாபமும்; அதற்குமேல் அதிகமாக நாணயமும் உண்டாகும். அந்த நாணயத்தால் வியாபார விருத்தி ஏற்படுகிறது. பத்துத் தரம் கேட்டுக் கொடுத்தால், நாணயம் இல்லாமற் போய்விடும். அதுபோல நித்தியகர்மாவால் பாபம் இல்லாமற் போவது ஒன்று, சிரேயஸ் உண்டாவது இரண்டு, ஆக இரண்டு லாபங்கள் உண்டாகின்றன. அகரணே ப்ரத்யவாயஜநகம், கரணே அப்யுதயம் என்னும் இரண்டும் நமக்கும் (வேதாந்திகளுக்கும்) உண்டு. நாமும் இவைகளை ஒத்துக்கொள்ளுகிறோம்.

இந்த மாதிரி உள்ள கர்மாக்களை எப்பொழுதும் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். அக்நிஹோத்ராதி ச்ரௌதகர்மாக்களையும், ஸ்மார்த்தகர்மாக்களையும் தவறாமல் செய்து வரவேண்டும்.

यावज्जीवमग्निहोत्रं जुहुयात्

என்று வேதம் சொல்லுகிறது. அதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்து கொண்டிருப்பதே போதும் என்பது மீமாம்ஸகர்மதம். ஸந்நியாஸாசிரமத்தில் அவர்களுக்குத் த்வேஷம் உண்டு. ஸந்நியாஸாச்ரமத்தில் கர்மாக்கள் இல்லை. கர்மாக்களைவிட்டால் அது பெரிய தோஷம். புத்திபூர்வகமாகக் கர்மாக்களை விட்டுவிடுவதால் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளுவது அவர்களுக்குக் கிறிஸ்துவனாவதைப் போன்றது. உபநிஷத்



कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँ समाः ।

[ஈசாவாஸ்யோபநிஷத், மந்த்ரம், 2]

वीरहा वा एष देवानां योऽग्निमुद्वासयते

[தைத்திரீயப்ராஹ்மணம்]

கர்மாவைச் செய்துகொண்டு நூறு வருஷம் இருக்கவேண்டும். அக்கிநிஹோத்ர நெருப்பை அணைத்தால் வீரஹத்தி, தோஷம் வருகிறது என்று சொல்லுகிறது. கெட்ட கர்மாவைச் செய்தாலும் பாபம். நித்யகர்மாவைவிட்டாலும் பாபம். ஸந்நியாஸி கர்மப்ரஷ்டன். ஆகையால் அவனைப் பார்த்தாலும் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும் என்பது மீமாம்ஸகர்கள் மதம். பாபியைப் பார்த்தாலும், பேசினாலும், தொட்டாலும், அவனோடு சேர்ந்து பங்க்தி போஜனம் பண்ணினாலும் நமக்கும் பாபம் ஒட்டிக்கொள்ளும். ஆகையினால் ஸந்நியாஸியைப் பார்க்கக்கூடாது என்பது மண்டனமிச்ரர் அபிப்பிராயம்.

வேதத்தில்தானே ஸந்நியாஸம், பரப்ரஹ்மம், மோக்ஷம், ஞானம் என்பவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன? அவைகளைச் சொல்லுவதும் வேதம்தானே? அப்படி இருக்க நீங்கள் அவைகளை வைகிறீர்களே என்று கேட்டால் அவர்கள் சரியான பதில் சொல்லுகிறார்கள். அது என்ன என்பதை இப்பொழுது பார்க்கலாம். ஞானம், பரப்ரஹ்மம் என்பவை உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். வேதம் என்பது என்ன? வேதம் சப்தம். அதாவது வார்த்தை. அது எதற்கு ஏற்பட்டது? தெரியாததைச் சொல்ல ஏற்பட்டது. அது சப்தப்ரமாணம். கண்ணுக்கும் ஊஹத்திற்கும் அகப்படாததைத் தெரிவிப்பது சப்தப்ரமாணம். இந்தியா சட்ட

சபை நடக்கிறது. அங்கே நடப்பதைப் பத்திரிகை மூலம் அறிந்து கொள்ளுகிறோம். இந்த சப்தப்ரமாணம் எதற்காக இருக்கிறது? உபயோக மில்லாத ஒன்றைச் சொல்ல ஏற்பட்டதல்ல. எல்லா வார்த்தைகளுக்கும் இரண்டுவகைப் பிரயோஜனம் உண்டு. அதைச் செய், அல்லது அதைச் செய்யாதே என்பதுதான் சப்தத்தினுடைய பிரயோஜனம்.

प्रवृत्तिर्वा निवृत्तिर्वा नित्येन कृतकेन वा ।
पुंसां येनोपादिश्येत तच्छास्त्रमभिधीयते ॥

என்பது அவர்களுடைய கொள்கை. இல்லாத வஸ்துவை மாத்திரம் சொல்லும் சப்தங்கள் வீண் வம்பைச் சேர்ந்தவை. அவை பிரயோஜன மில்லாதவை. காக்கை பறக்கிறது என்று ஒருவன் சொல்லுகிறான். அதைக் கேட்பதினால் என்ன பிரயோஜனம் உண்டாகிறது? காக்கை கறுப்பு என்கிறான். அதனால் என்ன பிரயோஜனம்? நாளைக்கு ராத்திரி இங்கே உபந்நியாஸம் நடக்கும் என்றால் அதற்கு ஓர் அபிப்பிராயம் உண்டு. எல்லோரும் வரவேண்டுமென்பது அதற்கு அர்த்தம். இது பிரவிருத்திப் பிரயோஜனம். கும்பகோணத்தில் நாளைக்கு உபந்நியாஸம் என்றால் இது வீண் வம்பு. இங்கிருந்து யார் போகப்போகிறார்கள்? பிரயோஜனம் இல்லாமல் எந்த வார்த்தையும் இருக்கக்கூடாது. பிரவிருத்திப் பிரயோஜனமாவது, நிவிருத்திப் பிரயோஜனமாவது இருக்கவேண்டும். மற்றவை வெறுங்கதை. அவைகளை அர்த்தவாதம் என்று சொல்லுகிறார்கள். வேதம் இரண்டு பாகம். விதிநிஷேதங்களைச் சொல்லுவது ஒரு பாகம். மற்றொரு பாகம் கதை சொல்லும். இதற்குப் பிரயோஜனம் விதியிற் சேர்ந்து அர்த்தமாவது. தாதுபுஷ்டி லேஹ்யத்தைப்பற்றி ஒரு விளம்பரம் இருக்கிறது. சிங்கத்தோடு ஒரு



மனுஷ்யன் குஸ்தி போடுவது போல படம் போடப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தை எதற்காகப் போடுகிறான்? நீங்களெல்லோரும் ஏமாந்து பணத்தைக் கொடுங்கள் என்பது தாத்பர்யம். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற கதைக்கு விதிதான் பிரயோஜனம். அர்த்தவாதம் விதிக்குப் பிரயோஜனம் ஆகவேண்டும். பல இடங்களில் நற்சாக்ஷிப் பத்திரம் (Certificate) வாங்கி யிருப்பான். அவைகளை மருந்து விளம்பரத்தில் ஏன் போடுகிறான்? மருந்து வாங்கவேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறான். அர்த்தவாதங்களில் நிஜத்தோடு பொய்யும் கலந்திருக்கிறது. பொய்யைக் குணவாதம் என்று சொல்லுவார்கள். நிஜார்த்தவாதமும் உண்டு. அநுவாதம் என்று ஒன்று சொல்லப்படும். தெரிந்ததையே அநுஸரித்துச் சொல்லுவது அது. நெருப்புச் சுடும் என்பது தெரிந்தது. அதை மறுபடியும் சொல்லுவது அநுவாதம். மருந்தில் இன்ன இன்ன ஔஷதி இருக்கிறது என்று சொல்லுவது பூதார்த்தவாதம்.

குணார்த்தவாதம் என்பது பொய்க்கதையாவது சொல்லி விதிக்குப் பிரயோஜனப்படுவது. கள்குடிக்காதே என்று சொல்லுவது விதி. கள்குடிப்பவன் உடனே தொலைந்தானென்பது அர்த்தவாதம். கள்குடிக்கக் கூடாது என்பதுதான் தாத்பர்யம். கள்குடித்தால் மயக்கம் வருமென்பது அநுவாதம். கதைகளை யெல்லாம் காரியத்திற் சேர்க்கவேண்டும்.

வேதத்தில் ஒரு யஜ்ஞத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஸுவர்ணம் கொடு வெள்ளி கொடுக்காதே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

बर्हिषि रजतं न देयम्         [தைத்திரீயஸம்ஹிதை]

இந்த இடத்தில் ஒரு நீளமான கதையைச் சொல்லி வெள்ளியைக் கொடுக்காதே என்று சொல்லுகிறது. நிஷேதத்தைக் காட்ட இந்தக் கதை சொல்லப்படுகிறது. இந்த அர்த்தவாதத்துக்கு விதியைச் சொல்லுவதில்தான் தாத்பர்யம். தன் சப்தத்தில் தாத்பர்யமில்லை. இந்த விஷத்யத்தைக் கொண்டுதான் மீமாம்ஸகர்கள் முன் சொன்ன ஆக்ஷேபணைக்குப் பதில் சொல்லுகின்றார்கள்.

உபநிஷத் பிரம்ம ஸ்வரூபத்தைப்பற்றித்தான் சொல்லுகிறது. காரியத்தைச் சொல்லுகிறதே யில்லை. வேதம் எப்பொழுது பிரமாணமாகும்? காரியத்தைச் சொன்னால்தான் வேதம் பிரமாணமாகும். ஆகையால் உபநிஷத் அர்த்தவாதம். உள்ள வஸ்துவைப்பற்றி ஒரு பாகம் சொல்லுகிறது. நாம் தெரிந்து கொள்ளவேண்டியது உள்ள வஸ்துவா? செய்யவேண்டிய காரியமா? ஈசுவரன் இருக்கிறார். யாகம் யக்ஞம் முதலியவைகளை நாம் செய்யவேண்டும். நடக்கவேண்டிய கார்யத்தைச் சொல்லத்தான் வேதம் வேண்டும். அதற்குத்தான் சப்தம் இருக்கிறது. இருப்பதை அறியச் சப்தம் வேண்டாம். இருப்பது எப்பொழுதாவது தெரியும். வஸ்துவைச் சொல்லும் வேத பாகம் அர்த்தவாதம். சப்தம் தெரியாததைத்தான் சொல்லவேண்டும். ஆகையினால் உபநிஷத் பிரமாணம் இல்லை. பின் எதற்காக அது இருக்கிறது? யக்ஞம் செய்பவனை உயர்த்திச் சொல்லுவதற்கு அது இருக்கிறது. கர்மாவுக்கு அபேக்ஷிதனான ஜீவனை ஸ்தோத்திரம் பண்ணிக் கர்மாவை அதிகம் பண்ணத்தான் அப்படிச் சொல்லுகிறது. கர்மா செய்யாமல் இருப்பது தப்பு. ஸந்நியாஸியாவது தப்பு.



இத்தகைய கொள்கைகளோடு மண்டன மிச்ரர் மாஹிஷ்மதி நகரத்தில் இருந்தார். வேலை செய்யவேண்டும். கூலி கிடைப்பதை அநுபவிக்கவேண்டும். வேலைதான் கூலி கொடுக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு அவர் இருந்தார். அவரிடம் ஸ்ரீ சங்கராசார்யர்கள் போனார்கள். ‘நித்தியமான ஆநந்தம் இவர்களுக்குக் கிடையாதே. அநித்தியமான ஆநந்தந்தானே இருக்கிறது. திருப்பித் திருப்பி ஜன்மம் என்பதையே இவர்கள் நம்பியிருக்கிறார்களே. இது நன்றாக இல்லை. இவரோடு சண்டைபோட்டு மாற்றவேண்டும்’ என்று நினைத்துக்கொண்டு போனார். மண்டன மிச்ரர் ஸரஸ்வதியின் புருஷர். பௌத்தர்களுக்கு விரோதமாக கிளம்பி மீமாம்ஸக மதத்தைப் பலமாக ஸதாபித்தார்.

ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவரைத் தேடிக்கொண்டு புறப்பட்டுப் போனார்கள். மண்டனமிச்ரர் வீடு எங்கே? என்று கேட்டுக்கொண்டே போனார்கள். பெண்கள் நதியிலிருந்து தீர்த்தம் எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்களைப் பார்த்து மண்டனமிச்ரர் கிருஹம் எங்கே? என்று கேட்டார். அவர்கள் எல்லோரும் நல்ல ஞானம் உடையவர்கள். அவர்கள் சுலோகமாகவே பதில் சொன்னார்கள். ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் வாக்கியமாகக் கேட்டார். அவர்கள் சொன்ன பதில்,

स्वतः प्रमाणं परतः प्रमाणं कीराङ्गना यत्र च संगिरन्ते ।
द्वारस्थनीडान्तरसंनिरुद्धा जानीहि तन्मण्डनपण्डितौकः ॥

[மாதவசங்கரவிஜயம், VIII-6.]

என்பது. இந்த சுலோகத்திற்கு விரிவான அர்த்தம் உண்டு. ‘எந்த வீட்டு வாசலில் உள்ள கிளிகள் ஸ்வத:பிரமாணம் பரத:பிரமாணம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்

றனவோ அந்த வீடுதான் மண்டனமிச்ரருடையது' என்று அவர்கள் சொன்னார்கள். அவருடைய வீட்டில் கிளிகூடச் சாஸ்திரார்த்தம் சொல்லும். அந்த ஊரில் உள்ள பெண்கள்கூட சுலோகம் சொல்லுவார்கள்.

ஸ்வத:பிரமாணம் என்பது என்ன? பரத:பிரமாணம் என்பதற்கு என்ன அர்த்தம்?

தர்க்க சாஸ்திரத்தைக் கணாதர், கௌதமர் என்னும் இரண்டு பேர்கள் செய்திருக்கிறார்கள். அந்த ஸித்தாந்தத்தை அநுஸரித்து கங்கேசமிச்ரோபாத்யாயர் என்பவர் தத்வசிந்தாமணி என்று ஒரு கிரந்தம் செய்திருக்கிறார். அவர் அதில் அறுபத்துநான்கு வாதங்களைச் சொல்லியிருக்கிறார்.

அவர் மஹா அசடாக இருந்தார். அவர் வங்காளத்தில் இருந்தார். அவர் குலீன பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர். குலீனர் என்றால் நல்ல குலத்தில் உண்டானவர்கள் என்று அர்த்தம். நல்ல குலத்தில் பிறந்தவராகையால் மட்டமானப் பிராம்மணப் பெண்களை யெல்லாம் அவருக்கே கல்யாணம் செய்து கொடுத்து விடுவது வழக்கம். ஒருவர் ஐம்பது பேருக்குமேல் கல்யாணம் பண்ணிக்கொள்ளுவார். கங்கேசமிச்ரர் ஒரு பெண்ணைமட்டும் கல்யாணம் பண்ணிக்கொண்டு மாமனார் வீட்டிலேயே இருந்தார். அவர்கள் மத்ஸ்யம் சாப்பிடுவார்கள். வங்காளத்தில் ஆறு மாஸம் தேசமுழுவதும் பிரவாஹமாகவே இருக்கும். கறிகாய் போட இடமிருக்காது. அதனால் இந்த மாஸத்தில் இந்த ஸாமானை அவர்கள் உபயோகப்படுத்துவார்கள். கிழக்கு வங்காள தேசத்தார் அதை ஜலபுஷ்பம் என்று சொல்லுவார்கள்.

கங்கேசனுடைய மாமனார் வீட்டில் அந்த ஸாமான் சமைப்பது வழக்கம். கங்கேசரைக் கங்கா என்று எல்லாரும்



கூப்பிடுவார்கள். அவர் அசடு என்று நினைத்து அவர் இலையில் எலும்பைப் பரிமாறுவார்கள். மற்ற இலையில் ஸத்தைப் பரிமாறுவார்கள். பின்பு அவரை எல்லோரும் பரிஹாஸம் செய்வார்கள். அது அவருக்குப் பொறுக்கவில்லை. ஒரு நாள் ஒருவரிடமும் சொல்லாமல் காசிக்குப் போய்விட்டார். அங்குப் போய்ப் பத்து வருஷம் படித்தார். வீட்டிலுள்ளவர்கள் அசடு எங்கேயோ போய்விட்டதென்று இருந்துவிட்டார்கள். அவர் படித்துவிட்டு வீட்டுக்கு வந்தார். எங்கேயோ சுற்றி அலைந்துவந்திருக்கிறது என்று எல்லோரும் நினைத்தார்கள். அவர் இலையில் வந்து உட்கார்ந்தார். வழக்கப்படி அஸ்தியைப் பரிமாறினார்கள். அப்பொழுது அவர் ஒரு சுலோகம் சொன்னார்.

**नाहं गङ्गा किं तु गङ्गेशमिश्रः**

'நான் கங்கா அல்ல; கங்கேசமிச்ரன். கங்காவாக இருந்தால் அஸ்திபோடுவது நியாயந்தான்' என்று சொன்னார்.

அந்தக் கங்கேசமிச்ரர் தத்வசிந்தாமணியை எழுதினார். அதற்குப் பலபேர் வியாக்கியானங்களை எழுதியிருக்கிறார்கள். ரகுநாதசிரோமணி என்பவர் தீதிதி என்று ஒரு வியாக்கியானம் எழுதி இருக்கிறார். அவர் காலத்திற்குப் பின்புதான் சிரோமணி என்னும் பட்டம் வழக்கத்தில் வந்தது. கதாதரர் அதற்கு வியாக்கியானம் செய்தார். அதில் 10 வாக்கியத்திற்கு வியாக்கியானம் ஒரு பெரிய புஸ்தக ரூபமாக எழுதியிருக்கிறார். ஆனாலும் ஒரு வாக்கியங்கூட அதிகமாகத் தோன்றாது. கதாதரியில் ஐந்து வாதம் வாசித்தால் அவன் புத்திசாலியாவான். பத்து வாதங்கள் வாசித்தால் இன்னும் கெட்டிக்காரன் ஆவான். பாதாந்தம் அதாவது பதினாறு வாதங்களை வாசித்தால் அவன் இன்னும் கெட்டிக்

காரணாகிறான். அப்புறம் பிராமாண்யவாதம் என்று ஒன்று இருக்கிறது. அதை வாசித்தவன் எல்லாரையும்விடக் கெட்டிக்காரன் ஆகிறான். சிந்தாமணி என்று ஒரு தர்க்க கிரந்தம் இருக்கிறது. அது இந்தத் தேசத்தில் இல்லை. அதற்கு ஜாகதீசீ என்று ஒரு வியாக்கியானம் இருக்கிறது. தர்மராஜ தீக்ஷிதர் என்பவர் ஒரு வியாக்கியானம் எழுதி இருக்கிறார். மதுராநாத் என்பவர் எழுதிய மற்றொரு வியாக்கியானம் இருக்கிறது. ஆனால் கதாதரியைத்தான் எல்லோரும் வாசிக்கிறார்கள்.

பிராமாண்யவாதம் என்பது அதில் சொல்லப்பட்ட வாதங்களுள் ஒன்று. நம் தேசத்தவர்களுள் ஒருவர் தர்க்கம் வாசிக்கலாமென்று நவத்வீபத்துக்கு (Nadiad)ப் போனார். அங்கே தர்க்கம் வாசித்தவர்கள் அதிகம். இங்கிருந்து போனவர் மஹாகவி. தம்முடைய கவித்வத்தினால் இங்கே நிறையப் பணம் ஸம்பாதித்தார். பின்பு பிராமாண்ய வாதத்தை நவத்வீபத்திற்கு நேரே போய் வாசிக்கலாமென்று போனார். வாசித்தார். ஒன்றும் ஏறவில்லை. மேலும் பிரயத்தினம் பண்ணிப் பார்த்தார். அவருக்கிருந்த கவித்வ தாரை போய்விட்டது. தர்க்கத்தில் போய் முட்டிக்கொண்டதில் இருந்த கவித்வமும் போய்விட்டது. பணமும் போய்விட்டது. கவித்வமாவது இருந்தால் பணம் ஸம்பாதித்துக் கொள்ளலாம். அதுவும் போய்விடவே மிகவும் வருத்தப்பட்டார். பிராமாண்யவாதமும் வரவில்லை. சுலோகம் பண்ணும் சக்தி கொஞ்சம் இருந்தது.

नमः प्रामाण्यवादाय मत्कवित्वापहारिणे

'என்னுடைய கவிதா சக்தியை அபஹரித்த பிராமாண்ய வாதத்திற்கு ஒரு நமஸ்காரம்' என்பது அதனுடைய அர்த்தம்.



அந்தப் பிராமாண்யவாதத்தை மண்டனமிச்ரர் வீட்டுக் கிளிகள் பேசிக்கொண்டு இருந்தன. அந்த வாதத்தைப் பற்றி நாம் கொஞ்சம் விசாரிப்போம். ஞானம் ஒரு ஸாமானைப் பார்த்தால் உண்டாகிறது. சில ஞானங்கள் சரியாய் இருக்கின்றன. சில தப்பாய் இருக்கின்றன. படிகத்தைக் கற்கண்டு என்று நினைக்கிறோம். அது தப்பான ஞானம். கற்கண்டைக் கற்கண்டாக நினைப்பது சரியான ஞானம். சரியான ஞானத்தைப் பிரமாணம் (प्रमाण) என்பார்கள். தப்பைப் பிரமம் (भ्रमः) என்று சொல்லுவார்கள். ஸம்சயஞானம் என்றும் நிச்சயஞானம் என்றும் இரண்டு விதம். தப்பாகத் தோன்றினாலும் அப்போது அது நிஜமாகத்தான் தோன்றுகிறது. அப்பொழுது இந்த ஞானம் பிரமாணம்தான் என்று தோன்றுகிறது. சில ஞானங்கள் தோன்றும்பொழுதே பொய்யாகத் தோன்றுகின்றன. குளத்திற்குள் தோன்றுகிற மரத்தின் நிழல் தோன்றும்பொழுதே அப்பிரமாணம் என்று தோன்றுகிறது. ஞானம் வரும்பொழுதே பிரமாணம் என்று தோன்றுவதும் அப்பிரமாணம் என்று தோன்றுவதும் ஆக இரண்டுவகை. வரும் காலத்திலே இது நிஜந்தான் என்று வருகிற ஞானம் பிராமாண்யக்ரஹஞானம் தோன்றும்பொழுதே அப்பிரமாணம் என்று தோன்றுவது அப்பிராமாண்யக்ரஹ-ஆஸ்கந்திதஞானம் பிரமை(प्रमा)யிலும் பிரம(भ्रम)த்திலும் பிரமாணஞானம் உண்டு. அதாவது படிகத்தைக் கற்கண்டாக நினைக்கும்பொழுதும் கற்கண்டைக் கற்கண்டாக நினைக்கும்பொழுதும் நமக்குத் தோன்றுவது பிரமாணமாகத் தோன்றுகிறது. இது விளக்கு என்று ஒரு ஞானம் தோன்றினால் அப்படித் தோன்றுவது நிஜம் என்று மற்றொரு ஞானம் தோன்றுகிறது. இது வாழை

மரம். இது நிஜம் என்று இரண்டுவகை ஞானங்கள் தோன்றுகின்றன. வாழைமரம் என்று தோன்றும்பொழுதே அது நிஜம் என்பதும் தோன்றுகிறதா? அல்லது வேறொன்றில் இருந்து அந்த ஞானம் உண்டாகிறதா? தோன்றும் பொழுதே இது அப்ரமாணம் என்பதும், தோன்றுவது என்பது ஸ்வத:ப்ரமாணம் என்பவர் கக்ஷி. பரத:ப்ரமாணம் என்று சொல்லும் கக்ஷிக்காரர்கள் எல்லோரும் மற்றதால் ஏற்படவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட கக்ஷிகளை மண்டனமிச்ரர் வீட்டுக் கிளிகள் சொல்லிக்கொண்டு இருந்தன. அவர் வீட்டுக்கு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் போனார்கள். அன்றைக்கு மண்டனமிச்ரர் ஒரு சிராத்தம் பண்ணவேண்டி இருந்தது. அவர் நிறைந்த ஐசுவரியவான். பல ஸோமயாகங்கள் பண்ணினவர்.

ஸோமயாகத்திற்கு ஜ்யோதிஷ்டோமம் என்று பெயர். அதை ஒவ்வொரு வஸந்தத்திலும் பண்ணுபவர்கள் இருந்தார்கள். யஜ்ஞத்துக்குப் பணம், ஸாமர்த்தியம், ஞானம் என்ற மூன்றும் வேண்டும். ஒரு வருஷத்தில் உற்பத்தியாகும் தானியம் மூன்று வருஷம் வைத்துக்கொண்டு சாப்பிடக்கூடிய செல்வமுடையவர்கள் ஒவ்வொரு வஸந்த காலத்திலும் யாகம் செய்யவேண்டும். அவர்களுக்குப் பிரதி வஸந்த ஸோமயாஜிகள் என்று பெயர். இப்பொழுது யாசகம் வாங்கி யாகம் பண்ணுகிறார்கள். பணக்காரர்கள் கலியாணத்தில் அனாவசியமாகச் செலவழிக்கிறார்கள்.

மண்டனமிச்ரர் அதிகச் சொத்துடையவர் ஆகையால் மிகவும் நன்றாக சிராத்தம் பண்ண ஆரம்பித்தார்.

அவர் வீட்டுவாசல் சாத்தப்பட்டிருந்தது. ஸ்ரீசங்கராசார்யர்கள் உள்ளே போனதைப்பற்றிக் கர்ணபரம்பரையாக



ஒரு கதை வழங்கி வருகிறது. அந்தக் காலத்தில் சாணானுக்கு ஒரு வித்தை தெரியும். தென்னை மரத்தின் கீழே இருந்து அடிப்பாகத்தை ஒரு மந்திரத்தைச் சொல்லி அடிப்பான். அப்பொழுது அது துவண்டு வளையும். மறுபடியும் ஒரு மந்திரம் போடுவான். அது நிமிர்ந்துவிடும். ஸ்ரீ சங்கராசார்யர்கள் ஒரு சாணானிடம் போனார். எனக்கு இந்த வித்தையைச் சொல்லிக் கொடு என்று கேட்டுக் கற்றுக்கொண்டார். மண்டனமிச்ரர் வீட்டுக்கு வெளியில் ஒரு தென்னைமரம் இருந்தது. அதன் மேலே ஏறி மந்திரத்தைச் சொன்னார். அது வளைந்து ஸ்ரீ சங்கரரை மண்டனமிச்ரர் வீட்டு உள்பக்கத்தில் விட்டது. இந்தக் கதை சங்கராவிஜயத்தில் சொல்லப்படவில்லை. யோகசக்தியால் உள்ளே போனார் என்று அது சொல்லும். உள்ளே வியாஸர் ஜைமினி ஆகிய இருவரும் பிராம்மணார்த்தத்திற்காக வந்திருந்தார்கள். பரீக்ஷித்தினிடம் எலுமிச்சம் பழத்தில் தக்ஷகன் போனதுபோல, அதிகமான பந்தோபஸ்து இருக்கும்பொழுது ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் போய்விட்டார். அவரைக் கண்டவுடன் மண்டனமிச்ரருக்கு அதிகக் கோபம் உண்டாயிற்று. அப்பொழுது இரண்டு பேருக்கும் வாக்குவாதம் நடந்ததாகப் பல கதைகள் வழங்குகின்றன. மண்டனமிச்ரர் "எங்கிருந்து முண்டி" என்று கேட்டார்? (எங்கிருந்து வருகிறாய்?). 'கழுத்திலிருந்து முண்டி' என்று வேடிக்கையாகப் பதில் சொன்னார். முண்டனம் செய்து கொண்டவன் முண்டி. ஸந்நியாஸிகள் கழுத்துக்குக் கீழே முண்டனம் செய்து கொள்ளக்கூடாது. ஜைமினியும் வியாஸரும் இருவரையும் ஸமாதானம் செய்தார்கள். மண்டனமிச்ரரைப் பார்த்து ஸந்நியாஸிகளையே பிராம்மணார்த்தம் சொல்ல வேண்டுமென்பது சாஸ்திரம். அதனால் அவரை விஷ்ணு

இலையில் உட்காரவைத்துவிடு என்று அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு பெரியவர்கள் சொல்லும்பொழுது என்ன செய்வது. அவர்கள் பிராம்மணார்த்தத்திற்கு வந்திருக்கிறார்கள். பிராம்மணார்த்தப் பிராமணர்கள் சொன்னதை எல்லாம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம். அதனால் மண்டனமிச்ரர் உடனே சங்கராசாரியர்களை நமஸ்காரம் பண்ணினார். பிக்ஷைக்கு வரவேண்டும் என்று பிரார்த்தித்



பெரிய மீமாம்ஸகரான மண்டனமிச்ரருடன் வாதஞ்செய்தல்.

தார். நான் வாதபிக்ஷைக்கு வந்திருக்கிறேன் என்று ஸ்ரீ சங்கராசாரியர்கள் சொன்னார்கள்.

வாதம் என்றால் சண்டை என்று இப்பொழுது எல்லோரும் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அது ஜல்பம்



என்று சொல்லப்படும். வாதம் என்பது தெரியாததைத் தெரிந்துகொள்ள ஒருவருக்கொவர் பேசிக்கொள்ளுவது (Exchange of Thoughts). தத்துவத்தை அறிந்துகொள்ளுவதற்காகப் பேசுவது வாதம் எனப்படும் நமக்குத் தெரியும் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டு மற்றவன் சொல்லுவது தப்பு என்ற நிச்சயத்தோடு பண்ணுவது ஜல்பம். இந்த இரண்டைத் தவிர மூன்றாவது ஒன்று இருக்கிறது. தனக்கென்று ஒரு கக்ஷி வைத்துக்கொள்ளாமல் எதிரி எதைச் சொன்னாலும் இல்லை என்பதுதான் அது. அதுதான் விதண்டாவாதம.

ஸ்ரீ ஆசாரியர்கள் வாதபிக்ஷை கேட்டவுடன் இந்தப் பிக்ஷை ஆகட்டும், அப்புறம் அது செய்யலாம் என்று சொன்னார். சிரார்த்தம் முடிந்தவுடன் வாதம் செய்ய ஆரம்பித்தார்கள். மத்தியஸ்தமாக யாரை வைப்பது என்று யோசித்தார்கள். ஸரஸ்வதி அவதாரமாகிய மண்டனமிச்ரர் மனைவி ஸரஸவாணியையே மத்யஸ்தையாக வைத்தார்கள். அவள் யார் பக்ஷம் பேசுவது. ஒருவர் ஸந்நியாஸி. மற்றொருவர் பர்த்தா. இரண்டு பேர்களில் யார் தோற்றாலும் சொல்லுவது தர்மஸங்கடமாக இருக்கும். அதற்காக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாலை போட்டு யார் மாலை வாடுகிறதோ அவர்கள் அடஜயம் அடைபவர் என்று சொன்னாள். வாதம் ஆரம்பிப்பதற்கு முன்பு. இரண்டு பேரும் ஒந நிபந்தனை செய்துகொண்டார்கள் சங்கரர் ‘நான் ஜயித்தால் நீர் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும். நீர் ஜயித்தால் நான் பிராயச்சித்தம் செய்துகொண்டு மறுபடியும் கிருஹஸ்தனாகிறேன், அல்லது மரணாந்தப் பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிறேன்’ என்று சொன்னார். இந்த ஸங்கல்பத்தை ஸரஸவாணி தெரிந்து

கொண்டாள். 21 நாள் வாதம் நடந்தது. 21-ம் நாள் மண்டனமிச்ரர் கழுத்திலுள்ள மாலை வாடிற்று. உடனே ஸரஸவாணி இரண்டு பேரையும் நமஸ்காரம் பண்ணி இரண்டு பேரும் பிக்ஷைக்கு எழுந்திருக்கவேண்டும் என்று சொன்னாள். உடனே மண்டமிச்ரர் ஸந்நியாஸம் பெற்றுக் கொண்டார். அப்பொழுது ஸுரேசுவராச்சார்யர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. உடனே நைஷ்கர்ம்யஸித்தி என்று ஒரு புஸ்தகம் எழுதினார். கர்மபலன் அல்லாத ஒரு ஆனந்தம் வேதத்தால் ஏற்படுகிறது என்று அதில் ஸித்தாந்தம் செய்தார்.

ஸ்ரீ ஆசாரியர்கள் மண்டனமிச்ரரை எப்படி ஜயித்தார்?

சப்தம் சொன்னால் அது காரியத்தில் பிரயோஜனம் ஆகவேண்டும். காரியம் பிரயோஜனமாய் இருக்கிறது என்பதால் சப்தத்தை அங்கீகரிக்கிறோம். ஆகவே பிரயோஜனம் சப்ததாத்பரியம். வேலை இல்லாமல் இருப்பதே பிரயோஜனமாக இருந்தால், அப்பொழுது சப்தத்தை அங்கீகரிக்கலாமல்லவா? வேலை என்பது சப்தத்தினுடைய பிரயோஜனம். வேலை இல்லாதிருப்பதே பிரயோஜனமானால் அதுவும் சப்தத்தினுடைய தாத்பர்யந்தான். ஆகவே சப்தத்தினுடைய தாத்பரியம் ஒரு பிரயோஜனமேயன்றி வேலை அல்ல. ஸுராபானம் பண்ணக்கூடாது என்று சொல்லி இருக்கிறது. அதைக் கேட்டவுடன் என்ன செய்கிறாய்? ஒன்றும் செய்வதில்லை. இப்பொழுது அந்த சப்தத்துக்குத் தாத்பரியம் இல்லையா? ஒன்றும் இல்லாமல் இருப்பதுதான் அதற்குத் தாத்பரியம். ஒன்றும் இல்லாமல் இருப்பதை 'அபாவம்' என்பார்கள். நிஷேதங்களுக்கு எல்லாம் அபாவம்தான் தாத்பரியம்.



ஒரு காரியம் செய்யாமல் இருப்பது ஒரு பிரயோஜனமாக இருக்க முடியுமானால் எந்தக் காரியமும் இல்லாமல் இருப்பது ஒரு பெரிய பிரயோஜனமாக இருக்கவேண்டும். காரியம் ஒன்றுமே இல்லாத பரம பிரயோஜனமாக இருப்பதனால் வேதாந்த சப்தங்கள் மிகவும் உபயோகம் உள்ளவை.

सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते

[கீதை, IV, 33,]

என்று பகவான் கீதையில் சொல்லி இருக்கிறார். எல்லாக் கர்மாவும் பரமேசுவரனிடம் விநியோகம் ஆகவேண்டும். கார்யமே இல்லாமல் இருப்பதுதான் பரம பிரயோஜனம், அதுதான் பிரம்மானந்தம். அதனால் ஜன்மமே இல்லாமல் போய்விடும். வேதத்திர்குப் பரமதாத்பரியம் அதுதான். கர்மகாண்டம் எல்லாம் ஞானகாண்டத்தில் போய் அன்வயிக்கவேண்டும். அப்பொழுதுதான் அதர்குப் பிரயோஜனம் உண்டு. இந்தக் கருத்தை ஸ்ரீ சங்கராசார்யர்கள் மண்டனமிச்ரரிடம் சொல்லி ஸ்தாபித்தார்.

மண்டனமிச்ரர் சிஷ்யரானவுடன், இனி எனக்கு என்ன வேலை என்று சரஸ்வதி போக ஆரம்பித்தாள். அப்பொழுது சங்கரர் நீயும் இங்கே இருக்கவேண்டும். சாரதா பீடமாக நீ இருப்பாயாக என்று சொல்லி ஒரு பீடத்தை ஸ்தாபித்து ஸரஸ்வதியை அதில் ஆவாஹனம் செய்தார்.

# XII.

## யந்த்ரஸ்தாபனம்

[9—11—1932]

வேத வாக்யங்கள் பரமாத்ம ஸ்வரூபத்தைச் சொல்லவில்லை. கர்மாவைச் செய்வதுதான் பிரயோஜனம், பரமாத்மாவைப்பற்றிச் சொல்லுவதற்குத் தாத்பரியம் கிடையாது என்பது மண்டனமிச்ரருடைய அபிப்பிராயம்.

காரியத்தில் ஏன் தாத்பரியம்? ஒரு காரியத்தைச் சொன்னால்தான் பிரபோஜனம் உண்டு. பிரயோஜனம் இருப்பதனால் காரியத்தைச் சொல்லுகிறது. காரியம் பண்ணினால் எந்தப் பிரயோஜனமோ அதைக்காட்டிலும் கோடி கோடி பிரயோஜனம் காரியம் இல்லாததிலிருந்தால் அது நிறைந்த தாத்பரியம் ஆகும். இது ஸ்ரீ ஆசாரியர்களுடைய அபிப்பிராயம். அதனால் கர்மாவைப் பற்றிச் சொல்லுகிற பாகங்கங்களெல்லாம் ஈசுவரனிடத்தில் தாத்பரியம் உடையனவாக இருக்கின்றன. வறட்டுக் கர்மாவினால் மட்டும் பிரயோஜனமில்லை. பரமாத்ம ஸ்வரூபமாகவே இருக்கும் ஓர் ஆச்ரமத்தின் பெருமையை வேதம் சொல்லுகிறது. அதை அடையவேண்டும்.'' என்று ஸ்ரீ ஆசாரியார் சொல்லி மண்டனமிச்ரருக்கு ஸந்நியாஸம் கொடுத்தார்கள். ஸந்நியாஸம் பெற்றுக்கொண்ட மண்டனமிச்ரர் ஸுரேச்வராசாரியர் என்னும் பெயரை அடைந்தார். அப்புறம். நைஷ்கர்ம்ய ஸித்தி என்ற கிரந்தத்தை இயற்றினர். அது ஒரு காரியமும் இல்லாமல் பரமாத்மாவை அடைவதைப்பற்றிச்



சொல்லுவது. பரமாத்மஸ்வரூபம் அன்புமயமாகவும் ஆநந்தமயமாகவும், இருக்கிறது.

आनन्दो ब्रह्मेति व्यजानात्

என்று வேதம் சொல்லுகிறது. ஆநந்தந்தான் பிரம்மம் என்பதை அவர் அறிந்தார்.

நமக்கு ஒரு மனிதனிடத்தில் ஒருவகையான அன்பு, அல்லது பிரீதி உண்டாகிறது. உத்தமம், மத்திமம், அதமம் என்று அந்த அன்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவைகளையே குணத்தை அநுஸரித்துச் சொன்னால், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று சொல்லலாம். அந்த மூன்று என்ன? மஹான்கள், யோக்யர்கள், ஸத்தியஸந்தர்கள், பரோபகாரிகள், ஞானிகள், தங்கள் அநுக்கிரஹ சக்தியால் கடைத்தேற வைக்கிறவர்கள், முதலியவர்களிடத்தில் ஒருவகை அன்புண்டாகிறது. இது அவர்களுடைய குணத்திற்காக ஏற்படுகிறது. இது ஒருவகை. குணம் குறைவாயிருந்தாலும் சேர்ந்து பழகுவதால் நம்மையறியாமல் ஒருவித அன்பு உண்டாகிறது. தெரிந்த ஸ்நேகிதர்களைவிட உத்தமமானவர்களிருக்கலாம். ஆனால், பழக்கத்தால் சில பேர்களிடமே அன்பு ஏற்படுகிறது. குழந்தை, தாயார், ஸஹோதரர் என்பவர்களிடத்தில் ஏற்படும் அன்பு, பழக்கத்தால் ஏற்பட்டதாகும். நம்மை, தாயார் அல்லாத ஒருவர் வளர்த்தால், அவளிடத்தில் ஏற்படுகின்ற அன்பு, வாஸ்தவமான தாயாரிடத்தில்கூட உண்டாகாது. இதைப் போனறவை யெல்லாம் பழக்கத்தாலேற்பட்ட அன்பாகும். மூன்றாவதாக, கார்யத்துக்காக ஓர் அன்பு ஏற்படுகிறது. ஒரு பெரிய வியாபாரியிடம் ஸ்நேகமாக இருப்பது அவர் வியாபாரத்தில் ஸஹாயம் பண்ணுவார் என்பதற்காக. இது

கார்யத்துக்காக ஏற்பட்ட அன்பு. இந்த மூன்று விதமான அன்பும் மூன்று குணங்களால் ஏற்படுபவை. முதலில் சொன்ன அன்பு ஸாத்விகத்தால் ஏற்பட்டது. இரண்டாவது சொன்ன பழக்கத்தால் ஏற்பட்ட அன்பிற்கு நியாயம் கிடையாது. நியாயத்தை மீறியிருக்கிற அன்பு அது. அது ராஜஸமான அன்பு. தாமஸ அன்பு காரியத்திற்காக யஜமானனிடத்தில் ஏற்படும் விசுவாஸம். இப்படி மூன்று விதமாக இருக்கும் அன்பும் போய்விடும். உத்தம புருஷர், ஸத்யஸந்தர் முதலியவர்கள்மேல் வைக்கும், ஸாத்விகமான அன்புகூடவா போய்விடும். அதுவும் அசட்டு அன்புதான். அது குணத்திற்காக வைப்பது. குணம் போனால் அதுவும் போய்விடும். பழக்கத்தில் ஏற்படும் அன்பு காலமானால் போய்விடும். பழக்கம் போனால் போய்விடும். நமக்குப் பழக்கமானவர் செத்துப் போனால் அழுகிறோம். பழக்கம் அதிகமாக அதிகமாக அதிக அழுகை உண்டாகிறது. அப்படி அழுவது மிகவும் தப்பு. அழவே கூடாது. அன்புடையவர்கள் பிரிவினால் அழுவது நல்லதானால் அப்பொழுது அழுவதற்குக் காரணம் பிரிவுதான். ஆனால் எப்பொழுது எப்பொழுது பிரிந்திருக்கிறோமோ அப்பொழுதெல்லாம் அழவேண்டுமே. இருபது வருஷங்கள் கழித்தும் அழவேண்டும். அப்படியிருந்தால் இப்பொழுதும் அழலாம். இல்லாவிட்டால் அழக்கூடாது. குழந்தை பிறந்து செத்துப்போனால் அப்பொழுது அழுகிறோம். அறுபது வருஷங்கழித்து அழுகிறோமா ? இல்லை. இப்பொழுது அழுவதற்கு இருக்கும் காரணம் அப்பொழுதும் இருக்கிறது. ஆனால் அப்பொழுது அழுகிறதில்லை. இப்பொழுது அழுகிறவன் அப்பொழுதும் அழலாம். இவையெல்லாம் உபயோகமில்லாத அன்பு. பழக்கத்



தால் ஏற்பட்டது. அது மத்யமமான அன்பு. ஸாத்விகமான அன்பும் நிஜமானதல்ல. ஓர் உத்தம குணத்துக்காகப்பிரியம் உண்டாகிறது. அந்தக் குணம் ஒரு நாள் இல்லையென்று தோன்றுகிறது. அப்பொழுது அந்த அன்பு இல்லாமற்போய்விடும். நம்மை க்ருதார்த்தர்களாக ஆக்குவார்களென்று பெரியவர்களிடத்தில் நமக்கு அன்பு உண்டாகிறது. அதற்கு நம்முடைய கார்யமே காரணமாக இருக்கிறது. ஸத்யஸந்தர்களிடத்தில் அவர்களிடத்தில் உள்ள ஸத்யத்துக்காக அன்பு ஏற்படுகிறது. அவர்களுக்காக ஏற்படுவதில்லை. யஜமானனிடத்தில் ஓர் அன்பு உண்டாகிறது. இது அவன் சம்பளம் கொடுத்துக்கொண்டு வரும் வரைக்கும் இருக்கும். நீ போய்விடு என்றால் அந்த அன்பும் போய்விடும். இந்த மூன்று அன்பும் பரமசிவ அன்பின் ஆபாஸம். இந்த அன்பு மூன்றில் ஒன்று குணத்திற்காகவும், ஒன்று பழக்கத்திற்காகவும், ஒன்று காரியத்திற்காகவும் ஏற்படுகின்றது. எந்த அன்பு ஈசுவர ஸ்வரூபமானது? எந்த அன்பு வேதாந்தத்தில் சொல்லியிருப்பது? என்பதை ஸ்ரீ ஆசார்யர்கள் மண்டனமிச்ரருக்குச் சொன்னார்கள். இந்த அன்பு நிர்வ்யாஜமாக உண்டாகிற அன்பாகும். முன்பு சொன்னவைகளெல்லாம் ஒவ்வொரு வியாஜத்தின் மேல் ஏற்பட்ட அன்பாகும். அவைகளுக்குக் காரணம் உண்டு. ராமனிடம் அதிகப்பிரியம் நமக்கு ஏற்படுகிறது? ஏன்? அவர் மஹாஸாது, தீனரக்ஷகர், ஸத்யஸந்தர், ஏகபத்நீவ்ரதர் என்று பல குணங்களை அவர்மேல் ஏற்றிவைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் குணங்களுக்காகத்தான் பிரியம் உண்டாகிறது. இது வியாஜமுள்ள அன்பு, ஈசுவர ஸ்வரூபமான அன்பு அவ்யாஜமானது. இது யாரிடம் இருக்கிறது? ஸ்வாமிக்கு நம்மிடம் இருக்கிறது. ஒரு கார

ணமும் இல்லாமல் அவர் நம்மிடத்தில் அன்பு வைத்திருக்கிறார். காரணத்தை அவர் பாராட்டுவதாக இருந்தால் ஒரு வேளைகூட நமக்குச் சோறு போடக்கூடாது. இவ்வளவு அழகான குணங்கள் நம்மிடம் இருக்கின்றன! இந்தமாதிரி ஒருவரிடம் ஒரு பிரேமை இருந்தால் அவர் நூறு வருஷம் பார்க்காமற் போனாலும், பார்த்தாலும், அயோக்கியரானாலும் அவரால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாவிட்டாலும், இந்த அன்பு குறையாமல் இருக்கும். குணத்தால் பிரியம் ஏற்பட்டால் குணம் மாறினால் பிரியமும் போய்விடும். பழக்கத்தால் ஏற்பட்டால் அயோக்கியனையும் குணவானாக வைத்துக் கொள்ளுகிறோம். காரியத்திலும் குணத்திலும் எப்படிப் பிரியம் இருக்கிறதோ அது போல மனுஷ்யனிடத்தில் இருக்க வேண்டும். ஸத்தியத்தில் பிரியம் இருப்பதனால் ராமனிடத்தில் பிரியம் இருக்கிறது என்பது இல்லாமல் ராமனுக்காகவே ராமனிடத்தில் பிரியம் இருக்கவேண்டும். நாம் தப்பு அஸத்தியம் முதலியவைகளைச் செய்தால் நம்மை நாமே உதறித்தள்ளுகிறோமா? இல்லை. நம்மை நல்லவர்களாக்கிக் கொள்ள ஆயுள் முழுவதும் முயற்சி செய்கிறோம். அப்படியே மற்றவர்களிடத்திலும் இருக்கவேண்டும். பாபி என்று ஒருவனை வெறுக்கக்கூடாது. எல்லோரையும் நல்லவர்களாக்க முயலவேண்டும். காரியத்துக்காக பிரியம் இருக்கக்கூடாது. அவ்யாஜமான பிரியம் பரமேசுவரனுக்கு இருக்கிறது. நாமும் அப்படி இருக்கவேண்டும். அது தான் பக்தி. நாம் ஒருவரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பண்ணிக்கொள்ளுகிறோம். பின்னால் ஸந்தேஹப்படக் கூடாதவரிடத்தில் பண்ணிக்கொண்டால் அவர்பாலுள்ள பக்திக் குறைவதில்லை. அதற்காக அடிக்கடி பழகாதவரிடத்தில் உபதேசம் செய்து கொண்டால் அவரைப்பற்றி



அடிக்கடி தெரிந்துகொள்ளவும் ஸந்தேஹம் உண்டாகவும் இடமிராது. அப்படி ஸந்தேஹம் வந்தால் பக்தி போய் விடுமென்று இருக்கக்கூடாது. அப்பொழுது அது பக்தியன்று. இந்த அவ்யாஜமான பக்தியானது எங்கும் பரவ வேண்டுமானால் குரு பக்தியில் ஆரம்பிக்கவேண்டும். பின்பு லோகமுழுவதும் குருவாக நினைத்து ஸமஸ்தப்பிராணிகளிடத்தும் காரணமில்லாத ஓரன்பு உண்டாகவேண்டும். வேறொருவர் தப்புப் பண்ணினால், 'நாம் தப்புப் பண்ணுகிறோம். அது போல அவரும் பண்ணுகிறார்; அந்த மனஸ் அப்படி பண்ணச்சொல்லுகிறது' என்று நினைத்து அவரிடம் வெறுப்புக் கொள்ளாமல் அந்த மனஸை நல்லதாக்க முயற்சி செய்யவேண்டும். அப்படிப் பண்ணுவதற்கு எங்கும் ஸமமான அன்பு இருக்கவேண்டும். எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமானமான அன்பு இருந்தால் அந்த மாதிரி எண்ணம் வரும். கார்யம் செய்பவனிடத்திலும் செய்யாதவனிடத்திலும் அன்பு இருக்கவேண்டும். தோஷத்தையும் குணத்தையும் கண்டால் நம்மிடம் இருப்பது போல எண்ணித் தோஷத்தை நிவர்த்திக்கப் பிரயத்னம் பண்ண வேண்டும். அத்தகைய அன்பை லோகம் முழுதும் நிரக்க வேண்டும். அப்பொழுது ஆனந்தம் உண்டாகும். இது தான் பரிபூர்ண நிலை. பிரம்மானந்த நிலை இதுவே என்று ஸ்ரீ ஆசார்யர்கள் மண்டனமிச்ரருக்கு உபதேசம் பண்ணினார்.

अभयं सर्वभूतेभ्यो मत्तः स्वाहा [ப்ரைஷோச்சாரணம்]

என்று சொல்லிக்கொண்டு ஸந்நியாஸாஶ்ரமத்தை ஒருவன் பெற்றுக்கொள்ளுகிறான். அவனைக்கண்டால் ஒரு பிராணியும் பயப்படக்கூடாது. எல்லா ஜனங்களுக்கும் அவனைப் பார்க்கிறபோது ஓர் ஆனந்தம் இருக்கவேண்டும். அதற்காகத்

தான் அஹிம்ஸா தர்மம் முக்கியமாக ஸந்நியாஸிக் கேற்படுத்தப்பட்டிருக்கிறது. பௌத்தமதம் எல்லோருக்கும் அஹிம்ஸா தர்மம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறது. நம்முடைய சாஸ்திரம் பூர்ண அஹிம்ஸை ஸந்நியாஸிக்கு இருக்கவேண்டும் என்று சொல்லுகிறது. கிருஹஸ்தன் சில பேரைப் போஷிக்கவேண்டியிருப்பதால் தானியம் கொண்டு வரவேண்டும். காய் கறி கொண்டுவரவேண்டும். இந்த மாதிரி உள்ள கார்யங்களில் கொஞ்சம் ஹிம்ஸை ஏற்படுகிறது. ஸந்நியாஸி இலையைப் பறிக்கக் கூடாது. தானே எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் உலர்ந்து விழுந்து போன இலைகளைத்தான் எடுக்கவேண்டும். சமையல் பண்ணக்கூடாது. பண்ணினால் ஹிம்ஸை உண்டாகும். எல்லோரிடத்திலும் அன்பு இருக்கவேண்டும். அன்பு பூர்ணமானால் அவனுக்குச் சிவோஹம் பாவனை உண்டாகும்.

மஹா பெரியவர்களென்று அவர்களிடத்தில்மட்டும் அன்பு இருப்பது விசேஷமில்லை. மஹாபாபியினிடத்திலும் அந்த அன்பு இருக்கவேண்டும். அவனிடத்தில்தான் நிறைய இருக்கவேண்டும். ஈசுவரகிருபையால் அநுக்கிரஹ சக்தி இருந்தால் அனிடத்திலுள்ள பாபங்களை நிவர்த்தி பண்ண வேண்டும். இதற்கு வழி குருபக்தியிலிருந்து தொடங்க வேண்டும். லோகம் முழுதும் அந்த அன்பு நிறைந்து விட்டால் அப்பொழுது பரிபூர்ணமான சாந்தி உண்டாகும்.

இந்த மாதிரி அன்பு நிறைந்துள்ள ஸந்நியாஸாஶ்ரமத்தை ஸ்ரீ ஆசார்யர்கள் பண்டனமிச்ரருக்கு அநுக்கிரஹம் பண்ணினார். அவரையும் அழைத்துக்கொண்டு போய்க் கைலாஸம் போனார். அங்கிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் கொண்டுவந்தார். ஸ்ரீ ஆசார்யர்களே ஈசுவரன். ஆகவே வாங்குகிறவர், கொடுக்கிறவர், கொடுக்கப்பட்டவை



எல்லாம் சிவம். வேதாந்தத்தில் த்ரிபுடி என்று ஒன்று சொல்லப்படுகிறது. பார்க்கிறவன், அது பார்க்கப்படும் வஸ்து, பார்வை என்ற மூன்றுமாம். நினைக்கிறவன், நினைக்கப்படுபவன், நினைவு என்பவையும் அது. ஒரே பரமாத்மா தான் இவை மூன்றுமாக ஆயிருக்கிறது என்பது வேதாந்தத்தின் கொள்கை. அந்தக் கொள்கையைத் தெரிவிக்கத் தான் ஸ்படிகலிங்கங்களை ஸ்ரீ ஆசார்யர்கள் ஈசுவரனிடத்திலிருந்து வாங்கினார் என்று தோற்றுகிறது.

பின்பு ஸ்ரீ ஆசார்யர்கள் பதரி கேதாரம் வந்தார்கள். அங்கே கௌடபாதரைத் தரிசனம் செய்தார். வழியில் கோவிந்த பகவத்பாதர்கள் இருந்தார்கள். அவரைத் தக்ஷிணா மூர்த்தி அஷ்டகம் சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

பின்பு ஒவ்வொரு தேசமாக ஸஞ்சாரம் செய்து திக் விஜயம் பண்ணினார். ஒவ்வொரு தேசத்திற்கும் போய் அங்கேயுள்ள வித்வான்களைக் கூப்பிட்டேனும் அவர்களிருக்குமிடத்திற்குப் போயேனும் அவர்களை ஸந்தித்து, அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்டு, வேதத்திற்கு இன்ன இன்ன விஷயங்கள் விரோதம் என்று சொல்லி அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார், வித்வான்கள் ஒப்புக்கொண்டதினால் லோகமும் ஒப்புக் கொண்டது.

மூன்றுதரம் ஆஸேது ஹிமாசலம் பிரதக்ஷிணம் செய்தார். கோகர்ணம், ஸ்ரீசைலம், ராமேசுவரம், திருப்பதி, ஜம்புகேசுவரம், ஜகந்நாதம், துவாரகை, சிருங்ககிரி முதலிய பல க்ஷேத்திரங்களுக்குப் போனார்கள். நாலு இடங்களில் மடங்களை ஸ்தாபித்தார்கள். சார்தாம் என்று பைராகிகள் சொல்லுவார்கள். பதரிநாத், ராம்நாத், த்வாரகாநாத், ஜகந்நாத் ஆகிய நான்கு ஊர்களையும் ஒரு பைராகி சுற்று

வான். அதுதான் சார்தாம். அந்த நான்கும் நான்கு திக்குகளில் இருக்கின்றன. அதுபோல் நான்கு திக்குகளிலும் நான்கு மடங்களை ஸ்ரீமத் ஆசார்யர்கள் ஸ்தாபித்தார்கள்.

ஸ்ரீ ஆசார்யர்கள் காஞ்சீபுரத்தில் ஸ்ரீசக்கிரஸ்தாபனம் செய்தார்கள். அதற்கு முன்பிருந்த உக்கிரகளையை மாற்றிச் சாந்தகளையை ஏற்படுத்தினார். திருப்பதியில் தனாகர்ஷண யந்திரத்தையும் ஸ்ரீரங்கத்தில் ஜனாகர்ஷண யந்திரத்தையும் ஸ்தாபித்தார். திருவொற்றியூரில் ஒரு துஷ்ட கிரஹத்தைக் கிணற்றிலடக்கி வருஷத்திற்கு ஒரு நாள் பூஜை பண்ணும்படியும் செய்தார். மூகாம்பிகா க்ஷேத்திரத்தில் ஸ்ரீசக்கிர ப்ரதிஷ்டை பண்ணினார். ஜம்புகேசுவரத்தில் அகிலாண்டேசுவரி உக்கிரகளையோடிருந்ததினால் சிவசக்கிரம் ஸ்ரீசக்கிரம் இவைகளைத் தாடங்கமாகப் பிரதிஷ்டை செய்து களையைச் சாந்தப்படுத்தினார். ஆங்காங்கே ஸ்ரீ ஆசார்யர்கள் செய்தனவாகப் பல விஷயங்கள் அந்த அந்த ஊர்களில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சங்காவிஜயத்தில் அவைகள் சொல்லப்படவில்லை.

இப்படியிருக்கும்பொழுது ஸ்ரீ ஆசார்யர்கள் தாயார் அவர்களை நிர்யாணஸமயத்தில் நினைத்தாள். தம்முடைய பிரதிஜ்ஞையின்படி அவர் அங்கே போனார். அவருடைய தாயாருக்கு நிர்யாணகாலம் வந்தது தெரிந்தது. அப்பொழுது அத்வைதமான ஸ்தோத்திரத்தைச் சொன்னார். அது பிடிபடவில்லை. சிவஸ்துதி பண்ணினார். பிரமத கணங்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டு பயமாயிருக்கிறதென்று சொன்னாள். உடனே விஷ்ணுவை ஸ்தோத்திரம் பண்ணினார். ஸுகுமாரமான கணங்கள் வந்தார்கள். அவர்கள் தாயாரின் ஆத்மாவை எடுத்தச் சென்றார்கள். பின்பு அந்தச் சரீரத்தைத் தஹனம் பண்ணுவதற்கு எண்ணினார்.



அரைகுறையாகத் தெரிந்துகொண்ட அங்குள்ள தர்ம சாஸ்திரிகள் ஸந்நியாஸி ஸம்ஸ்காரம் பண்ணுவது தப்பு என்று சொன்னார்கள். அவர்கள் உதவிக்கு வரவில்லை. அதனால் தாயாருடைய சரீரத்தைச் சேதித்து வீட்டுக் கொல்லையிலே வைத்துத் தஹனம் பண்ணிவிட்டார். இன்றைக்கும் மலையாளத்தில் அந்த ஸம்பிரதாயமே நடந்து வருகிறது.

பின்பு ஒரு ஸமயம் பத்மபாதாசாரியர் ராமேசுவரம் போக உத்தரவு கேட்டார். ஸ்ரீ ஆசார்யர்கள் உத்தரவு கொடுத்தார். அப்படிப் போகும்பொழுது அவர் ஸ்ரீ ஆசார்யர்களுடைய பாஷ்யத்திற்குத் தாம் செய்த வியாக்கியானப் புஸ்தகத்தையும் கையிலே எடுத்துக்கொண்டு போனார். திருவானைக்காவலில் அவருடைய மாமா வீட்டில் அதை வைத்துவிட்டுப் போனார். அவருடைய மாமா கர்மமார்க்கத்தில் மிக அபிமானி. அவர் 'இந்தப் புஸ்தகம் நமக்கு விரோதமானதாயிற்றே. இதை எரித்து விடவேண்டும்' என்று நினைத்தார். அவருக்கு இரண்டு வீடுகள் இருந்தன. ஒரு வீட்டுச் சாமான்களையெல்லாம் மற்றொரு வீட்டில் கொண்டு வந்து சேர்த்து விட்டு அந்த வீட்டிற்கு நெருப்பு வைத்து விட்டார். பத்மபாதர் ராமேசுவரத்திற்குப் போய் விட்டு வந்தார். புஸ்தகமெங்கே என்று கேட்டார். மாமா அது வீட்டோடு எரிந்துபோய்விட்டதென்று சொல்லிக் கையை விரித்துவிட்டார். பத்மபாதர் ஸ்ரீ ஆசார்யர்களிடம் வந்து அந்த ஸமாசாரத்தைச் சொன்னார். அந்தப் புஸ்தகத்தில் நாலு அத்தியாயங்களிருந்தன. ஒவ்வொன்றும் நான்கு பாதங்களை உடையனவாக இருந்தன. ஸ்ரீ ஆசார்யார்கள் முதல் அத்தியாயத்தையும் இரண்டாம் அத்தியாயத்தில் ஒரு பாகத்தையும் நீ வாசித்துக் கேட்ட ஞாபகமிருக்கிறது; அதற்கப்புறம் நீ வாசிக்கவில்லை என்று சொல்லி அந்த ஐந்து

பாதங்களையும் அப்படியே சொன்னார். அந்தப் புஸ்தகம் பஞ்சபாதிகா என்னும் பெயரால் இப்பொழுது விளங்குகிறது. அதற்கு வியாக்கியானம் விவரணம் என்பது. அதற்கு வியாக்கியானம் தத்வதீபனம்.

இதற்கு முன்பு ஸ்ரீ ஆசார்யர்களுடைய சிஷ்யர்களுக்குள் ஸுரேசுவராசார்யர், பத்மபாதர் என்னுமிருவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அந்த இருவர்களைத் தவிர ஹஸ்தாமலகர், தோடகாசார்யர் என்ற இரண்டு பேர்கள் உண்டு. ஹஸ்தாமலகர் மேற்கு ஸமுத்திரக்கரையில் கர்நாடக தேசத்தில் பிறந்தவர். ஸ்ரீ ஆசார்யர்கள் அந்த தேசத்திற்குப் போயிருந்தபொழுது அவரிடம் ஒரு பிராம்மணன் வந்தான். வந்து, 'என் பிள்ளை பிறந்தது முதல் பேசவில்லை. நீங்கள்தான் பேசவைக்கவேண்டும்' என்று சொல்லி நமஸ்காரம் செய்தான். அந்தப் பிள்ளையைப் பார்த்து ஸ்ரீ ஆசார்யர்கள் 'நீ யாரப்பா?' என்று கேட்டார். உடனே அந்தப் பிள்ளை, 'பூமியில்லை, ஆகாசம் இல்லை, ஸ்திரீ இல்லை, ஆணில்லை, அறிவுதான் நான்' என்றான். பிள்ளை பேசிற்றென்று தகப்பனுக்கு நிரம்ப ஸந்தோஷம் உண்டாயிற்று. உடனே நமஸ்காரம் பண்ணச் சொல்லி வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே போனதும் பிள்ளை பேசவில்லை. திரும்பி வந்தார். ஸ்ரீ ஆசார்யர்களுக்கு முன்பு வந்தவுடன் பிள்ளை பேசிற்று. அந்தப்பிள்ளையின் தகப்பன் 'சரி இது எங்கள் பிள்ளையல்ல, உங்கள் பிள்ளைதான்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அந்தப் பிள்ளைதான் ஹஸ்தாமலகர். அவர் செய்த சுலோகத்திற்கு ஸ்ரீ ஆசார்யர்கள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். அதற்கு ஹஸ்தாமலகீயபாஷ்யம் என்று பெயர்.

தோடகமென்னும் விருத்தத்தில் ஒரு புஸ்தகத்தைச் செய்ததால் ஒரு சிஷ்யர் தோடகாசார்யர் என்னும்



பெயரைப் பெற்றார். கிரி என்பது அவருடைய முதற் பெயர். அவர் பூஜைக்கு வில்வம், புஷ்பம் முதலியன எடுத்துக்கொண்டுவருவார். வேஷ்டி துவைத்துப்போடுவார். அவரைப் பார்த்தால் அசடுபோலத் தோன்றும். ஒருநாள் பாடம் சொல்ல ஸ்ரீ ஆசார்யர்கள் உட்கார்ந்தார். ஆறாயிரம் சிஷ்யர்கள் ஸ்ரீ ஆசார்யர்களிடம் பாஷ்ய பாடம் கேட்டு வந்தார்கள். அப்பொழுது கிரி வரவில்லை. அவர் வரவில்லையே என்று ஸ்ரீ ஆசார்யர்கள் காத்திருந்தார்கள். 'இவருக்காக எதற்குக் காக்கவேண்டும்? வந்தாலும் வராவிட்டாலும் ஒன்றுதான்' என்று மற்றவர்கள் எண்ணினார்கள். அதை ஸ்ரீ ஆசார்யர்கள் அறிந்துகொண்டார்கள். 'சரி, இவர்களுக்கு இப்படியா தோன்றுகிறது? இவர்கள் அஸூயையை நிவர்த்தி பண்ணவேண்டும் என்று நினைத்தார். வெளியில் போயிருந்த சிஷ்யர் ஆனந்தத்தோடு நர்த்தனம் பண்ணிக்கொண்டே வந்தார். வரும்பொழுது தோடக விருத்தத்தால் ஸ்ரீ ஆசார்யஸ்துதி செய்துகொண்டு வந்தார். அவர் சொன்ன சுலோகங்களில் ஒன்றைச் சொல்லுகிறேன்.

विदिताखिलशास्त्रसुधाजलधे महितोपनिषत्कथितार्थनिधे ।
हृदये कलये विमलं चरणं भव शंकरदेशिक मे शरणम् ॥

அந்த சுலோகங்களைக் கேட்டும் அவருடைய ஆநந்தாநுபவத்தைக் கண்டும் மற்ற சிஷ்யர்களெல்லாம் அவருடைய பெருமையைத் தெரிந்துகொண்டார்கள்.

ஸ்ரீ ஆசார்யார்கள் இவ்வாறு லோகஸஞ்சாரம் செய்து துர்மதநிவாரணம் பண்ணி, நான்கு மடஸ்தாபனம் செய்து, பின்பு, உபாஸனாக்கிரமத்திற்காக ஷண்மதஸ்தாபனம் செய்

தார்கள். அந்த ஆறுக்கும் சிகரமாக அத்வைத ஸ்தாபனம் செய்தார். பின்பு, ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தார்கள். அரசன் லோகஜயம் பண்ணின பின்பு ஸர்வஜ்ஞபீடாரோஹணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, ஸ்ரீ ஆசார்யர்கள், காஞ்சிக்ஷேத்திரத்தில் பல பண்டிதர்களுடன் மறுபடியும் வாதம் செய்து ஜயித்து, ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தார்கள். அப்பொழுது ஏழுவயஸுக் குழந்தை யொன்று ஏழு நாள் வாதம் பண்ணிற்றும். ஸ்ரீஆசார்ய சரித்திரத்தில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தது கடைசி விஷயம். அது ராமபட்டாபிஷேகத்தைப் போன்றது.

ஸ்ரீ ஆசார்யர்கள் பண்ணின புஸ்தகங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளுள் சாஸ்திரம் படித்துத் தெரிய வேண்டியவைகள் பல இருக்கின்றன. குழந்தைகளுக்கும் உபபோகமாகக்கூடிய கோவிந்தாஷ்டகம், சந்திரசேகராஷ்டகம், பஜகோவிந்தம் என்பவைகளைப் போலப் பல ஸ்தோத்திரங்களிருக்கின்றன. விவேகசூடாமணி, உபதேச ஸாஹஸ்ரீ, ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரஸங்கிரஹம் முதலிய ஸுலபமான கிரந்தங்களுமிருக்கின்றன. அதிகமாக ஞானத்தைச் சொல்லுகிற புஸ்தங்களைப் படிக்கவேண்டுமென்பது அவசியம் இல்லை. ஸ்ரீ ஆசார்யர்கள் செய்த புஸ்தங்களுள் எதையாவது ஒன்றைப் படிக்கவேண்டும். அவருடைய புஸ்தகத்தைப் படித்தால் அவரோடு நேரே பேசினது போல ஆகும். லக்ஷ்மீநரஸிம்ஹஸ்தோத்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலிருந்து ஒரு சுலோகம்

त्वत्प्रभुजीवप्रियमिच्छसि चेन्नरहरिपूजां कुरु सततं
प्रतिबिम्बालंकृतिधृतिकुशलो बिम्बालंकृतिमातनुते ।



चेतोभृङ्ग भ्रमसि वृथा भव मरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥

[லக்ஷ்மீநரஸிம்ஹ பஞ்சரத்னம், சுலோகம் 1.]

'லக்ஷ்மீநரஸிம்ஹனுடைய பாபமில்லாத பாதாம்புஜத்திலுள்ள மதுரமான தேனை, சித்தமாகிற வண்டே, அடைவாயாக! ஸம்ஸாரமாகிய பாலைவனத்தில் சுற்றுகிறாயே' என்ற கருத்து இதில் சொல்லப்பட்டிருக்கிறது. மனஸுக்குப் பிரபு ஜீவன். ஜீவனுக்கு ஒரு பிரியம் உண்டாகவேண்டுமானால் லக்ஷ்மீநரஸிம்ஹனுடைய பாதத்தை யடையவேண்டும்.

ஒரு கண்ணாடி இருக்கிறது. அதற்குள் நம்மைப்போல ஒரு பிரதிபிம்பம் தோன்றுகிறது. அந்தப் பிரதிபிம்பத்திற்கு ஒரு பொட்டிடவேண்டும். அதற்குப் பொட்டு வைத்தால் கண்ணாடிதான் கறுப்பாகும். நமக்கு சிரேயஸ் வேண்டும் என்று நமக்கே ஸௌக்கியத்தை உண்டாக்கிக் கொள்ளுவது அதைப் போலத்தான். இஸ்திரி பண்ணின வேஷ்டியைப் போட்டுக்கொண்டு வெளியிலே போகிறோம். அதைப் பார்த்து எல்லோரும் ஆநந்தப்படவேண்டுமென்பது நமது அபிப்பிராயம். பார்த்தவர்கள் 'இன்று இஸ்திரி ஏறிவிட்டது போலிருக்கிறது' என்று அவமதிக்கிறார்கள். நாம் எண்ணியபடி அவர்களுக்கு ஆநந்தம் உண்டாவதில்லை. அதுபோல நமக்கு வேண்டுமென்று நமக்கே பண்ணிக்கொண்டால் அது கரி தீற்றுகிறது மாதிரிதான். அலங்காரமெல்லாம் இப்படித்தான். ஆகையால் நமக்கு அலங்காரம் பண்ணிக்கொள்ளுவதில் பிரயோஜனம் இல்லை.

ஒவ்வோர் அந்தக்கரணத்திலும் பரமாத்மசைதன்னியத்தினுடைய பிரதிபிம்பம் இருக்கிறது. அந்தப் பிரதி

பிம்பத்துக்குக் கொஞ்சம் சக்தி இருக்கிறது. பெரிய ஸூர்யன் ஊர் முழுவதற்கும் வெளிச்சம் கொடுக்கிறான். பிரதிபிம்ப ஸூர்யனுக்கும் கொஞ்சம் வெளிச்சம் இருக்கிறது. அது போல் ஜீவனுக்குக் கொஞ்சம் ஞானம் இருக்கிறது. கண்ணாடிக்குள்ளே தோன்றுகின்ற பிரதிபிம்பத்திற்குப் பொட்டு வைக்க வேண்டு மென்றால் வெளியில் உள்ள பிம்பத்திற்குப் பொட்டு வைக்கவேண்டும். பரமாத்மாவிடம் ஒன்று பண்ணினால் அது ஸகலப்பிராணிகளுக்கும் ஆகும். பண்ணுகிற ஜீவனுக்கும் ஆகும். பிரதி பிம்பத்திற்கு அலங்காரம் பண்ணுகிற நோக்கம் உடையவன் பிம்பத்துக்கு அலங்காரம் பண்ணுவான். அவன்தான் கெட்டிக்காரன். அதைப்போல ஜீவனுக்கு ஆநந்தம் வேண்டுமென்றால் பரமாத்மாவினுடைய சரணத்தை அடையவேண்டும் என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லுகிறார்கள். மற்றவைகளெல்லாம் விருதா.

விருதா என்ற பதத்தை அடிக்கடி ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லுவார்கள்.

घटो वा मृत्पिण्डोऽप्यणुरपि च धूमोऽग्निरचलः
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् ।
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधीः ॥

[சிவானந்தலஹரீ, சுலோகம் 6.]

என்று சிவானந்தலஹரியில் ஒரு சுலோகம் இருக்கிறது. என்ன என்ன ஸையன்ஸ், சாஸ்திரம் முதலியவைகளைப் படிக்கிறோம். தர்க்கம், வியாகரணம் படிக்கிறோம். இவைகளையெல்லாம் படித்து என்ன பிரயோஜனம்? குடம்



மண்ணிலிருந்து உண்டாயிற்று. புகை நெருப்பிலிருந்து உண்டாயிற்று; வேஷ்டி நூலிலிருந்து உண்டாயிற்று என்று சொல்லுகிறோம். இவைகளெல்லாம் கடைசி காலத்தில் நம்மை இழுக்க வருபவனைத் தடுக்குமா? வேகமாகப் பேசுவதால் என்ன பிரயோஜனம்? அது அவனைத் தடுக்குமா? பின் எதுதான் அவன் வந்தால் நில்லென்று சொல்லும்; சிவனுடைய பாதாம்புஜத்தைச் சொல். அது பரம ஸௌக்கியத்தை உண்டாக்கும். நீ புத்திசாலியாயிருந்தால் இவைகளையெல்லாம் பேசுவதில் பயனில்லை. இவைகளெல்லாம் வீண்தான்.

संप्राप्ते सन्निहिते काले न हि न हि रक्षति डुकृञ्करणे

என்று பஜகோவிந்தத்தில் சொல்லியிருக்கிறார்கள். யமன் கிட்டவந்தால் வியாகரணம் உபயோகப்படாது. இது விஷ்ணுஸ்துதி, முன் சொன்னது சிவஸ்துதி. இது வியாகரணம், அது தர்க்கம். உபயோகமில்லாததில் இந்த இரண்டும் ஒன்றுதான். உபயோகமுள்ள ஸ்துதிகள் இரண்டும் ஒன்றுதான்; இரண்டும் ஒரே கருத்தோடு சொன்னவை. எல்லா சாஸ்திரங்களுக்கும் பிரயோஜனம் பக்தி பண்ணுவதுதான்.

யமன் ஒரு க்ஷணங்கூட வீணாக இருப்பதில்லை. அவன் வந்துகொண்டே இருக்கிறான். எத்தனை நாளாயிற்றோ அவ்வளவு தூரம் கிட்டவந்துவிடுவான். பிரதிக்ஷணமும் வந்துகொண்டேயிருக்கிறான். அவன் எப்பொழுது வருவான் என்பது தெரியாது. வந்தாலும் வராவிட்டாலும் காலனுக்கு யமனாக உள்ளவனுடைய காலைப் பிடித்துக் கொண்டால் கவலையில்லை.

कालकालं प्रपन्नानां कालः किं नु करिष्यति

[நீ. தீ. ஸபாரஞ்ஜனசதகம்.]

வேதாந்த சாஸ்திரங்களைச் சொன்னவர்கள் ஸ்ரீ ஆசார்யர்கள். அவரே ஒன்றும் தெரியாவிட்டால் கோவிந்தா கோவிந்தா என்றாவது சொல் என்று சொல்லியிருக்கிறார். போஜன காலத்தில் கோவிந்தா என்று சொல்லவேண்டும். மௌனமாகச் சாப்பிடவேண்டும். ஸந்தியாவந்தனம் பண்ணும் பொழுதுகூட மௌனமாகத்தானிருக்க வேண்டும். சாப்பிடும்போது கோவிந்தா என்று சொன்னால் அந்த மனோபாவத்தோடு அன்னம் உள்ளே போனால் அது பரமாத்மத் தியானம் உண்டாக அநுகூலம் செய்யும். அந்த அன்னஸாரம் உடம்பில் சேரச்சேர ஈசுவர ஞாபகம் உண்டாகும். முதலில் பஜகோவிந்தத்தில் ஆரம்பித்துப் பரமாத்ம தத்வத்தில் முடிவது ஸ்ரீ ஆசார்யர்களுடைய உபதேசம். தினந்தோறும் போஜனம் பண்ணும்பொழுது கோவிந்தா என்ற நாமாவைச் சொல்லவேண்டும். நாம் என்றைக்கும் போஜனத்தை நிறுத்தப்போவதில்லை. இந்த அப்பியாஸத்தினால் கோவிந்தநாமோச்சாரணம் நிற்காது.

ஸந்தியாகாலத்தில் பரமேசுவரனுடைய சரணாரவிந்தங்களைத் தியானம் பண்ணவேண்டும். எல்லோரும் ஏகாதசி உபவாஸம் இருக்கவேண்டும். ஸ்ரீ ஆசார்யர்களுடைய திக்விஜயம் கேட்டதற்குப் பிரயோஜனமாக மனத்திலுள்ள அசட்டுத்தனங்களைப் போக்கித் திக்விஜயம் பண்ணவேண்டும். அவருடைய உபதேசப்பிரகாரம் பரமேசுவரத் தியானத்தை என்றைக்கும் மறக்கக்கூடாது. ஸ்ரீ ஆசார்யர்களை ஆதரிக்க வேண்டும். கோகுலாஷ்டமி, நவராத்திரி முதலிய உத்ஸவங்கள் பண்ணுவது போல வைசாக சுத்த பஞ்சமியில் ஸ்ரீ ஆசார்ய ஜயந்தியைக் கொண்டாடவேண்டும்.



நவராத்திரி உத்ஸவம் கோயிலில் விசேஷமாக நடப்பது போலப் பலபேர் சேர்ந்து ஸ்ரீ சங்கராசார்யஜயந்தியை விசேஷமாகக் கொண்டாடலாம். ஸ்ரீ ஆசார்யபாதுகையைப் பூஜை செய்யவேண்டும். அப்படிச் செய்து வந்தால் ஸ்ரீ ஆசார்யர்களுடைய அநுக்கிரஹம் கிடைத்து நமக்கு எல்லாவித நன்மைகளும் உண்டாகும்.

## श्रीतोटकाचार्यकृतजगद्गुर्वष्टकम्

विदिताखिलशास्त्रसुधाजलधे महितोपनिषत्कथितार्थनिधे ।
हृदये कलये विमलं चरणं भव शंकरदेशिक मे शरणम् ॥ १

करुणावरुणालय पालय मां भवसागरदुःखविदूनहृदम् ।
रचयाखिलदर्शनतत्त्वविदं भव शंकरदेशिक मे शरणम् ॥ २

भवता जनता सुहिता भविता निजबोधविचारणचारुमते ।
कलयेश्वरजीवविवेकविदं भव शंकरदेशिक मे शरणम् ॥ ३

भव एव भवानिति मे नितरां सयजायत चेतसि कौतुकिता ।
मम वारय मोहमहाजलधिं भव शंकरदेशिक मे शरणम् ॥ ४

सुकृतेऽधिकृते बहुधा भवतो भविता समदर्शनलालसता ।
अतिदीनमिमं परिपालय मां भव शंकरदेशिक मे शरणम् ॥ ५

जगतीमवितुं कलिताकृतयो विचरन्ति महामहसश्छलतः ।
अहिमांशुरिवात्र विभासि गुरो भव शंकरदेशिक मे शरणम् ॥

गुरुपुङ्गव पुङ्गवकेतन ते समतामयतां न हि कोऽपि सुधीः ।
शरणागतवत्सल तत्त्वनिधे भव शंकरदेशिक मे शरणम् ॥

विदिता न मया विशदैककला न च किञ्चन काञ्चनमस्ति गुरो ।
द्रुतमेव विधेहि कृपां सहजां भव शंकरदेशिक मे शरणम् ॥

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.